V 2ll, 31 N80
1 37.485
123C4C

வெளியீடு—16-6-1980]

211/80

[Issued—16-6-1980

DIRECTOR OF ARCHIVES
TAMIL NADU ARCHIVES
2 . 1980
1467
EGMORE, MADRAS-600 008.

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1980 பிப்ரவரி 5-தொகுதி XXXVII-எண் 4

Tuesday 5th Feburary 1980—Volume XXXVII—No, 4

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department. Fort St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்]

[Price 1-50 Paise

D
V211,31 N80
N80-37. 4 சீ5
123040

உள்ளடக்கம்

5—2—1980

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 457—495

2. தகவல் கோரல்—
(அ) மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப் பெறுவது குறித்து .. .. .. .. 496
(ஆ) பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப் பெறும் சலுகை குறித்து .. .. .. 496—497
(இ) பதவி விலகிய திரு. பெ.சௌந்தரபாண்டியனுக்கு ஒதுக்கப் பெற்றுள்ள இடம் குறித்து. 553—554

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—
(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1980 .. .. .. 497
(ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. 498
(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980. 498
(ஈ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. 498—499
(உ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைபடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980. 499

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—
பொதுவிவாதம்—(தொடர்ச்சி) .. .. 499—554, 556—567

திரு. எம். ஏ. லத்திப் .. .. .. 499—516
மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் .. 501,515
மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது .. 507,510,511
திரு. துரை முத்துசாமி .. .. .. 517—520

| | பக்கங்கள். |
|---|---|
| மாண்புமிகு திரு. ப். குழந்தைவேலு .. .. | 524 |
| திரு. க. மருதாசலம் .. .. .. | 525—531 |
| திரு. எஸ். ஆண்டிதேவர் .. .. .. | 531—537 |
| திரு. எஸ். வி. இராமசாமி .. .. .. | 537—540 |
| திரு. கு. ரமணி .. .. .. .. | 542—554 |
| திரு. பொ. விஜயராகவன் .. .. .. | 556—562 |
| திரு. செ. சிவசாமி .. .. .. .. | 562—567 |
| **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 567—568 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1980 பிப்ரவரி 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

Supply of text-books to Children of low-paid Government Servants.

* Q. No. 41—Thiru N. Kittappa : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether Text Books are supplted free to children of the low-paid Government Servants in this State; and

(b) if so, the details Thereof?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) ஆம்.

(ஆ) ஆங்கிலோ—இந்தியப் பள்ளிகள், மத்தியப் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட பள்ளிகளில் (I முதல் X வகுப்பு வரை) பயிலும், மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய்க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்களின் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படலாம் என நிதித்துறையின் (படிகள்—1) 29—7—1978 நாளிட்ட 761 ஆம் எண்ணில் ஆணையிடப்பட்டது. மூன்றாவது சம்பளக் குழுவின் பரிவுரைகளைச் செயல் படுத்தியதால் கடைநிலைப் பணியாளர்களின் சம்பள வீதம் ரூ. 130—3—160—4—180—5—195 என்பதிலிருந்து ரூ.250—5—330—10—400 எனவும், பதிவேட்டு எழுத்தரின் சம்பள வீதம் ரூ. 140—3—155—4 175—5—210 என்பதிலிருந்து ரூ. 265—5—325—10—425 எனவும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற் சொன்ன அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை ஓரளவு திருத்தி, நிதித் துறையின் (படிகள் 1) 27—3—1979 நாளிட்ட 447 ஆம் எண் அரசாணையில் பாடப் புத்தகங்களை இலவசமாக அளிப்பதற்கான சம்பள அளவு 200 ரூபாய்க்கு குறைந்த சம்பளம்

என்பதிலிருந்து 350 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் என உயர்த்தப்பட்டது. கடைநிலைப் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் எவ்வளவாயிருப்பினும், அவர்கள் அனைவரும் இத் திட்டத்தின் கீழ் பயனடைய வேண்டும் என்று அரசு சிறப்பு ஏற்பாடாக நிதித் துறையின் (படிகள்—1) 27—3—1979 நாளிட்ட 447 ஆம் எண்ணில் ஆணை பிறப்பித்தது.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, எந்தெந்த வகையான பள்ளிகளில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு இச் சலுகை வழங்கப்படுகிறது? குறைந்த ஊதியம் பெறும் அரசுப் பணியாளர்களின் குழந்தைகள் என்ற வரிசையில் குறைந்த ஊதியம் நிர்ணயிக்கப்படுவதைப் பொறுத்தவரையில் அதனை இன்னும் கொஞ்சம் குறைத்து, மேலும் அதிகமான மக்கள் பயன் அடையத்தக்க அளவுக்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புவதோடு, அரிசன நலத்துறை மூலமாக சீருடைகள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போல இத்தகைய மாணவர்களுக்கும், அதாவது நிதி வசதியற்ற மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— பேரவைத் தலைவரவர்களே, அரசின் அங்கீகாரம் பெற்ற எந்தப் பள்ளியில் பயின்றாலும், அதாவது ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள், மத்திய பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட பள்ளிகளில் பயிலும் குறைந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்களின் குழந்தைகள் இந்தப் பலனை அடைகிறார்கள். கடைநிலைப் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் எவ்வளவாயிருப்பினும், அவர்கள் அனைவரும் இத் திட்டத்தின் கீழ் பயனடைய வேண்டும் என்று அரசு சிறப்பு ஏற்பாடாக நிதித்துறையின் (படிகள்—1) 27—3—1979 நாளிட்ட 447 ஆம் எண்ணில் ஆணை பிறப்பித்தது. ஆகவே, அடிப்படை ஊழியர்கள் அத்தனை பேருக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் (செயலர்) அவர்கள் மிகத் தெளிவாக இங்கே அறிவித்தார்கள். இருந்தாலும், குறைந்த ஊதியம் பெறக்குடிய அரசுப் பணியாளர்களின் குழந்தைகளுக்குப் பாட புத்தகங்கள் இலவசமாக வழங்குகிற இந்த நிலை மிகக் குறைந்த வேகத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. உரிய நேரத்தில் அந்தப் பாட புத்தகங்களைக் கொடுக்கவில்லை என்ற நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிற காரணத்தினால், அந்த நிலையை மாற்றி அமைத்து உரிய நேரத்தில் அத்தகைய பாடப் புத்தகங்களை அவர்கள் பெற அரசு அவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் :



திரு. எம் வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மின்னல் வேகத்தில் தான் பணி நடை பெற்றுக் கொண்டு வருவதாக அரசுக்குத் தகவல். குறை ஏதேனும் இருப்பின், அரசு அதை தனியாகப் பரிசீலிக்கும்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடை நிலை ஊழியர்களுடைய சம்பளம் ரூ.350 ஐத் தாண்டினாலும் அவர்களுக்கு இந்தத் திட்டத்தினால் பலன் ஏற்படுகிற ஒரு நிலையை அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைத் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, கடை நிலை ஊழியர்கள் அத்தனை பேருக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. ரூ. 350 ஐத் தாண்டினாலும் அவர்கள் அந்தச் சலுகையை பெறுவார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1 முதல் 10 வரையில் இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படுவதாக கனம் அமைச்சர் அவர்களுடைய செயலாளர் கூறியிருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கக்கூடிய அந்தப் புத்தகங்கள் பாடசாலைகளைத் திறந்தவுடனே கொடுக்கப்படுவதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி கொடுக்கவில்லை என்று சொன்னால் கல்வியினுடைய தரம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்பது தெரியுமா ? ஆகவே, இனிமேலாவது பாடசாலைகளைத் திறந்தவுடனே அந்தப் புத்தகங்களை வழங்குவதற்கான ஏற்பாடு செய்ய முன்வருமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர் ): பேரவைத் தலைவர் அவர்களே, பாடசாலைகளைத் திறந்தவுடனேயே அது வழங்கப்படுவதாகத்தான் அரசுக்குத் தெரியும். குறை ஏதும் இருக்குமேயானால், குறிப்பிட்டுக் கூறுவார்களேயானால் அதை இந்த அரசு தனியாக தீவிரமாகப் பரிசிலித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆணை எந்த ஆட்சியில் பிறப்பிக்கப்பட்டது என்று அறிந்து கொள்ள விரும்புவதோடு, 'என்று பிறப்பிக்கப்பட்டது', எப்பொழுது முதல் அமுலுக்கு வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன் .

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர் ): பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆணை இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் பிறப்பிக்கப்பட்டது. 29—7—1978 அன்று ஜி. ஓ. எம். எஸ். 761-ல் பிறப்பிக்கப்பட்டது. அந்த வருடத்திலிருந்தே அமுல் நடத்தப்பட்டு வந்தது.

[1980 பிப்ரவரி 5

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சலுகை அரசு அலுவலகங்களில் பணி புரிவோரைத் தவிர போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், அது போல் நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கும் பொருந்துமா? இல்லையென்றால், அவர்களுக்கும் அமுல் படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கடை நிலை ஊழியர்கள் என்று யார் யார் கருதப்படுகிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் இது பயன்படும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தக சாலைகள் திறக்கப்படுவது என்பது பள்ளிகள் திறப்பதற்குப் பின்னால் வருகிற காரணங்களால். நேரத்தோடு இந்தப் பாட புத்தகங்களை கொடுக்க முடியவில்லை என்பதை அரசு அறியுமா? இனிமேலாவது பள்ளி திறப்பதற்கு முன்னாலேயே புத்தகசாலைகளைத் திறந்து, பள்ளிகள் திறந்தவுடன் புத்தகங்களை கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. செல்வராஜ்: தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கிற பணியாளர்களின் குழந்தைகளுக்கு, அவர்கள் அரசிலே பணியாற்றுகிறார்களா என்பதைக்கூட அறிய முடியாமல், எங்களிடம் இருந்து நற்சாட்சிப் பத்திரங்கள் வாங்கி வரச் சொல்லி அவர்கள் உத்தரவிடுகிறார்கள். ஆகவே, மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்களின் குழந்தைகளுக்கு இலவச புத்தகங்கள் வழங்க அப்படிப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்கள் தேவை இல்லை என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இது நிதித்துறை சம்பந்தமான கேள்வி அல்ல.



1980 பிப்ரவரி 5]

## கூடலூர் பகுதியில் நில ஆக்கிரமிப்பு.

* வினா எண் 42— திரு. கே. உச்சி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியிலுள்ள நில ஆக்கிரமிப்பாளர்கள் எத்தனை பேர்கள்?

(ஆ) அவர்களில் தலா மூன்று ஏக்கரோ அதற்கு அதிகமாகவோ வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்களுக்குப் பட்டா வழங்கி உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) கூடலூர் வட்டத்தில் ஆக்கிரமிப்பாளர் எண்ணிக்கை

(1) எண்ணிக்கை .. .. .. 3,895

(2) பரப்பளவு .. .. .. 8,360.9 ஏக்கர்

(ஆ) மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகளில் 3·00 ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்கள் —

(1) எண்ணிக்கை .. .. .. 84

(2) பரப்பளவு .. .. .. 319.85 ஏக்கர்

மூன்று ஏக்கருக்கும் அதிகமாக உள்ளவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்ட எண்ணிக்கை விவரம் (பந்தலூர் நில ஒப்படைத் திட்டம்) —

(1) எண்ணிக்கை .. .. .. 2

(2) பரப்பளவு .. .. .. 8.49 ஏக்கர்

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே இன்னும் நிறைய பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை. அதனால் எல்லோருக்கும், மூன்று ஏக்கருக்கு மேலாக உள்ளவர்களுக்கும் பட்டா கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பதிவு செய்யப் புதிதாக இப்போது அங்கே ஒரு துணை தாசில்தாரை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17 ஆம் நாளில் இருந்து 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் வரை அந்த வேலையில் இருப்பார்கள். விடுபட்டதையெல்லாம் விரைவாகச் செய்ய ஆவன செய்வார்கள்.

[1980 பிப்ரவரி 5

திரு. கே. உச்சி : கணக்கெடுப்பு வேலைகள் மிகவும் தாமதப் படுத்தப்பட்டிருக்கிறது. வரக்கூடிய விண்ணப்பங்கள் உடனடி யாகப் பரிசீலனைக்கு வருவதில்லை யென்று பொது மக்கள் குறை கூறுகிறார்கள். ஆகவே, அந்தப் பணிகளை சற்று முடுக்கிவிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அது அரசாங் கத்தின் கவனத்திற்கு வந்த பிறகுதான தனியாக அதிகாரி நிய மிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. என். கிட்டப்பா : நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தொகுதியில் நில ஆக்கிரமிப்பாளர்கள் எவ்வளவு பேர்கள் எ்பது பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆக்கிர மிப்பாளர்களில் தமிழ்நாட்டைச் சாரர்தவர்கள், இதையொட்டி யிருக்கிற பிற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் யாராவது ூருக்கி றார்களா ? அப்படியிருந்தால் அவர்கள் ஆக்கிரமித்துள்ள நிலப் பரப்பு எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ? அப்படியிருக்கு மானால், அதைத் தவிர்க்க அரசு ஏதாவது நடவடிக்கை டுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதைப் பிரித் துப் பார்ப்பது பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக் கிறது.

திரு. கு. ரமணி ; இந்திய நாட்டில் பிறந்து வளர்ந்துள்ள எந்த ஒரு பிரஜையும், இந்த நாட்டில் உள்ள எந்தப் பகுதியிலும் போய் குடியேறலாம், வியாபாரம் செய்யலாம் என்ற அரசியல் சட்ட உரிமைக்குட்பட்டு வேறு எந்த மாநிலத்திலிருந்தாவது கூடலூர் தாலூகாவிற்கு வந்திருந் தால், அவர்கள் அங்கு சாலை போட்டுக் குடியிருந்தால் அல்லது விவசாயம் செய்திருந்தால் அந்த நிலத்தை அவர்களுக்குச் சொந்த மாக்குவது தவறா . அரசாங்கத்தின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எல்லோரும் இந்த நாட்டினுடைய குடிமகன்கள் என்று இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது.

## வெள்ளியணை கிராம முன்சீப்.

*வினா எண் 43 — திரு. க. சுப்பு : மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், வெள்ளி யணை கிராமம் (வடக்குப் பகுதி) கிராம முன்சீப் மீது கையாடல் குற்றத்திற்காக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், தற்போது அந்த வழக்கு எந்தநிலையில் உள்ளது ?



1980 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) கையாடல் குற்றம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## சிங்கோனா தோட்டத் தொழிலாளர்கள்.

*வினா எண். 44— திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் உள்ள சின்கோனா தோட்டங்களில் மொத்தமுள்ள தொழிலாளர்கள் எவ்வளவு பேர் ?

(ஆ) அவர்களில் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ? கேஷுவல் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் ?

(இ) அவர்கள் யாவருக்கும் பிராவிடண்ட் நிதி பிடிக்கப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) நீலகிரியிலுள்ள அரசின் சின்கோனா தோட்டங்களில் 1,472 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

(ஆ) 1,472 தொழிலாளர்களில் 745 பேர் நிரந்தரத் தொழி லாளர்கள். எஞ்சிய 727 பேர் தற்காலிகத் தொழிலாளர்கள்.

(இ) மொத்தமுள்ள 745 நிரந்தரத் தொழிலாளர்களில், 715 பேர் தமிழ்நாடு தொழிலாளர் வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஏனைய தொழி லாளர்களும் 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றி இந்த வருங் கால வைப்பு நிதித் திட்டத்தில் சேருவதற்குத்தகுதி பெறும்போது சேர்க்கப்படுவார்கள்.

திரு. கு. ரமணி : அரசாங்கத்தின் நேரடித் தலைமையில் உள்ள இந்த சின்கோனா தோட்டத் தொழிலாளர்களில், தனி யார் தோட்டங்களில் இருக்கிற தொழிலாளர்களைப் போல் கஷ் டப்பட்டு வேலை செய்யக்கூடிய இந்தத் தொழிலாளர்களில் பாதிப்பேர்களுக்கு மேல் 700 பேர்களுக்கு மேல் நிரந்தரமல்லாத தொழிலாளர்களாக வைத்திருப்பது சரிதானா ? ஆகவே, உட னடியாக அவர்களில், 240 நாட்கள் சர்வீஸானவர்களை நிரந்தர மாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றியிருப்பார்களேயானால் அவர்களை நிரந் தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு பரிசீலிக்கும்.

திரு. கு. ரமணி : அரசாங்கம் இந்த விஷயத்தை எவ்வளவு காலத்திற்குள் முடிக்க முடியும்? ஏற்கெனவே பல வருடங்களாக சர்வீஸ் ஆனவர்கள்—சின்கோனா டைரக்டரிடமிருந்து ஒரு ரிப்போர்ட் கிடைத்தால் அரசு நிரந்தரமாக்க முடியும். லேபர் டிபார்ட்மென்ட்டிலிருந்தே 240 நாட்கள் சர்வீஸானவர்களுக்கு நிரந்தரத் தொழிலாளர்களுக்கு உள்ளது போன்ற சலுகைகள் கொடுப்பதுபோல், இவர்களுக்குப் பூர்ணமாகக் கொடுப்பதுடன், எவ்வளவு காலத்திற்குள் இவர்களை நிரந்தரமாக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1975 ஆம் ஆண்டு ஒரு அரசாணைப்படி நிரந்தரமாக தொழிலாளர்களை நியமிப்பது வேண்டாம் என்று தடுக்கப்பட்டிருக்கிறது. அது என்ன காரணத்தால் என்று தெரியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையின்படி மிக விரைவில் அதற்குத் தகுதியானவர்களை நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய முயற்சிகளில் அரசு ஈடுபடும்..

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளிகளுக்கு அங்கே அநேக நாட்கள் வேலை கொடுப்பதற்கு வேலை இருந்தும், வேலை கொடுத்தால் அவர்களை நிரந்தரமாக்குகின்ற சூழ் நிலை உருவாகும் என்று வேலை கொடுப்பதில்லை அங்கு கூலிக்கு வேலை செய்கின்ற மக்கள் சொல்கிறார்கள். இது உண்மையா ? உண்மையானால், அதை நீக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுமே என்ற காரணத்தைக் காட்டி, நிச்சயமாக வேலை மறுக்கின்ற நிலைமையை இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சின்கோனா பிரிவு அதிகமான வருவாயைத் தருகின்ற, அந்நிய செலவாணியை ஈட்டித் தருகின்ற காரணத்தினால், மேலும் ஊக்கம் அளிக்கின்ற வகையில் தனியாக அதற்கு ஒரு '' சின்கோனா வாரியம் '' அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது அதிகமான வருவாயை அரசுக்கு ஈட்டித் தரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏதோ வருவாய் வருகின்றது. அதிலும் கடந்த 3 ஆண்டுகளாக மத்திய அரசு விலையை நிர்ணயிக்கின்ற காரணத்தினால், வருவாய் குறைந்து வந்திருக்கின்றது



ஆனால், இது வருவாயின் அடிப்படையில் நடத்துகின்ற தொழில் அல்ல. இது நாட்டு மக்களுக்கு மிகவும் தேவையான மருந்தைத் தயாரிக்கின்ற அடிப்படையில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், இதற்காக அரசு ஒரு தனியான துறையை அமைத்து நடத்திக் கொண்டு வருகின்றது. வாரியம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

*வினா எண். 45—திரு. கு. ரமணி ; மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் சின்கோனாத் தொழிலாளர்களுக்கு மோயார் டிவிஷனில் 1977 டிசம்பரில் புதிய வீடுகள் கட்ட ஆரம்பித்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ?

(இ) சின்கோனா தோட்ட டிவிஷன்களில் உள்ள தொழிலாளர் வீடுகளுக்கு மின் விளக்குகள் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) 1977 ஆம் ஆண்டில் இருபது வீடுகள் கட்டும் வேலை எடுத்துக் கொண்டதில், 10 வீடுகள் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளன.

(இ) இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சின்கோனா பகுதியிலே மோயார் டிவிஷன் மிகவும் நல்லதொரு நிலைமையில் இல்லாமல், கஷ்டமான, பாறைகள் மிகுந்த இடமாக அமைந்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கே பெருவாரியான தொழிலாளர்களுக்கு வீடுகள் கிடையாது. அங்கே ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் வீடுகள் கட்ட முடியாமல் இருக்கின்றது. அதற்கான தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமல், 1977லிருந்து 1980 வரைக்கும் மிகவும் குறைந்த எண்ணிக்கையான வீடுகளே அங்கே கட்டப்பட்டிருக்கின்றன என்பதை கணக்கில் கொண்டு, இதைத் துரிதப்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முடிய சுமார் 400 வீடுகள் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு, காரியங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், இந்த மோயார் டிவிஷன் பகுதி மிகவும் கடுமையான பாறைகள் மிகுந்த மலைப் பகுதி என்பது. அந்தக் காரணத்தினால், வீடுகள் கட்டுவதற்கு வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்கள் வர மாட்டேன் என்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக, பெரு மழை, வெள்ளம் வந்த காரணத்தினால், வேலைகள் தடைபட்டு வந்திருக்கின்றன. இவைகளை யெல்லாம் மனதில்கொண்டு மிக விரைவில் வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று துறைக்கு அரசாங்கம் அறிவுறுத்தியிருக்கின்றது.

திரு. கு. ரமணி ; தலைவர் அவர்களே, 1977லே கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டும், அங்கே வீடுகள் கட்ட முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம், அந்த கான்ட்ராக்ட்காரர் வீடுகள் கட்டுவதற்கு மரம் தேவை என்று அரசினிடம் அனுமதி பெற்று, அந்த மரங்களை வேறு இடத்திற்கு கடத்திக் கொண்டு போய்விடுகிறார். அதுதான் காரணம். அதன்மீது நானும் அரசுக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறேன். அதனால்தான் தாமதம் ஏற்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட கான்ட்ராக்ட்காரர்களுக்குக் கொடுக்காமல், பி.டபிள்யூ.டி. மூலமாக வீடுகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகின்ற தகவல் மிகவும் கடுமையானது. உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உரியது. அதன்மீது அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

## பத்திரிகைகளில் அரசு விளம்பரங்கள்.

*வினா எண். 46—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்களை தனியார் ஏஜெண்டுகள் மூலம் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்து வருகிறதா ?

(ஆ) அதனால் தனியார் கம்பெனிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு கமிஷன் தொகை எவ்வளவு ஆகிறது ?

(இ) அதை அரசே, நேரடியாக எடுத்து நடத்த திட்டம் ஏதாவது அரசின் ஆலோசனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) விளம்பர நிறுவனங்களுக்கு அரசு கமிஷன் தொகை எதுவும் கொடுப்பதில்லை.

(இ) இல்லை.





திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்கள் குறிப்பாக சில தனிபபட்ட பத்திரிகைகளுக்கு ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த நிலை இருக்குமானால், அதைத் தவிர்த்திட அரசு முன் வருமா? அது அன்னியில், தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்களை அரசே ஏற்று நடத்த முன்வரவேண்டுமென்ற கோரிக்கைக்கு இணங்க, அந்தத் துறையை தானே மேற்கொண்டு, அதற்காகச் செலவாகின்ற பணத்தைக் குறைப்பதற்காக, ஏஜெண்டுகளுக்கு ஆகின்ற செலவுகளைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ? அதைப்போலவே, தமிழக அரசு கொடுக்கும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

[முற்பகல் 9—20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின் முதல் பகுதிக்குக்கு தனியாக கேள்வி கேட்க வேண்டும். இறுதிப் பகுதிக்கும் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்க முடியும். இடையில் இருக்கும் பகுதி இந்தக் கேள்வியோடு தொடர்புடையது. இப்பொழுது ஏஜன்சி மூலம் கொடுப்பதால் அரசாங்கத்திற்கு அதிகமான எந்தச் செலவும் கிடையாது. அரசாங்கமே இந்த விளம்பரங்களைத் தயாரித்துக் கொடுக்கும் முறை இருந்தால் அதற்கான துறையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான அலுவலகத்தை நிர்வகிக்க வேண்டும். அதனால் அதிகச் செலவாகும் என்ற காரணத்தால் முன்னாலே இருந்த அரசுகள் அதைப் பரிசீலித்து இந்த முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தது. அதை இந்த அரசும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

திரு. க. மருதாசலம் : தமிழக அரசு எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் தந்து வருகின்றன. அதற்குரிய செலவு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினா திரு. கிட்டப்பா அவர்கள் கேட்ட கேள்வியையே மாண்புமிகு உறுப்பினர் திரு. மருதாசலம் கேட்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் கேட்ட கேள்வியையே இன்னொரு உறுப்பினர் கேட்டு அவையின் நேரத்தை வீணாக்கக் கூடாது.

திரு. மா. மணிமாறன் : அரசு ஏஜென்டை அமர்த்தி செய்தித்தாள்களுக்கு விளம்பரம் கொடுப்பதன் மூலம் அந்தப் பத்திரிகைகள் கொடுக்கும் கமிஷனை அந்த ஏஜன்சிகள் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, அரசே நேரடியாகப் பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டு இந்த விளம்பரங்களைக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஏஜன்சிகளுக்குக் கமிஷன் கொடுப்பது என்பது ஒன்று. அது அகில இந்தியாவிலும் ஏற்றுக் கொண்டிருக்கும் முறை. அந்தக் கமிஷனுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. அரசாங்கமே நேரடியாக அந்தப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்தால் அந்தக் கமிஷனை அரசாங்கத்திற்குத் தர மாட்டார்கள். கமிஷனை ஏஜன்சிக்கு மட்டும் கொடுக்க வேண்டுமென்பது அவர்கள் வைத்திருக்கும் முறை. ஏஜன்சிகளுக்குத்தான் அவர்கள் கமிஷன் தருவார்கள். நமக்கு தரமாட்டார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ஏஜன்சிகள் தமிழ்நாடு பூராவும் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். மாவட்ட வாரியாக எவ்வளவு? பெரிய பெரிய பத்திரிகைகளுக்கு மாத்திரம் ஏஜன்சி முறையா அலலது சிறு சிறு பத்திரிகைகளுக்கும் அந்த முறை உண்டா ? எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு ?

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன் : ஏஜெனசிகள் என்பது இன்ன குறிப்பிட்ட பத்திரிகைகளுக்கு என்று அல்ல. அவர்கள் இதை ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு நடத்துகிறார்கள். அந்த ஏஜென்சிகள் எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரத்தைக் கொடுப்பார்கள். பல பத்திரிகைகள் அவர்களைச் சில நிபந்தனைகளின் பேரில் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. சில அகில இந்திய விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு கமிஷனைத் தருகிறார்கள். அந்தக் கமிஷனில் வித்தியாசங்கள் அவர்களுக்குள்ளாக இருக்கலாம். தனிப்பட்ட பத்திரிகைகளுக்கு ஏஜென்சி என்று கிடையாது.

திரு. சி. ஆறுமுகம் : நாட்டில் இடைத் தரகர்கள் வேண்டாமென்று நினைக்கிறபோது பத்திரிகைக்கு விளம்பரம் கொடுப்பதில் இடைத்தரகர்கள் அவசியமா ? அரசாங்கம் எதற்காக விளம்பரம் கொடுக்க வேண்டும் ? அரசாங்கம் வியாபாரமா செய்கிறது விளம்பரம் கொடுப்பதற்கு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதிலே இடைத் தரகர்கள் என்ற பிரச்சினையே எழவில்லை. ''ஏஜென்சி'' என்பவர்கள் ஒரு காரியத்தைச் செய்கிறார்கள். அந்தப் பணிக்குரிய விகிதத்தை, ஊதியத்தை அவர்கள் ஒரிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். இரண்டாவது பகுதி, விளம்பரம் செய்வது முக்கியமா என்பது. இந்த அரசு வந்து இந்த விளம்பர முறையை உருவாக்கவில்லை. பரம்பரையாக நடந்து வரும் முறை. அதைத்தான் இந்த அரசும் பின்பற்றிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து இது தேவை என்பது தெரிகிறது.



## கோவை மத்திய சிறைச்சாலை.

*வினா எண் 47— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: திரு. கு ரமணி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள மத்திய சிறையை, வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) கோவை நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள மத்திய சிறையை வேறு இடத்திற்கு மாற்றுகிற உத்தேசம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவை நகரத்தின் மத்தியிலே உள்ள அந்தச் சிறை அநத நகரத்தின் மத்தியில் இருந்தால் இடைஞ்சலாக இருக்கிறது என்பதால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்கிற போது அப்படி உத்தேசமில்லை என்று சொல்கிறார்கள். மறுபடியும் அதைப்பற்றி புனராலோசனை செய்ய அரசு முன்வருமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, அந்தச் சிறையை மாற்ற வேண்டுமென்றால் அதற்காக 400 ஏக்கர் இடம் தேவை. அது மட்டுமல்ல, அதை மாற்றுவதற்கு நிறைய நிதி தேவைப்படுகிறது. சென்னையிலே உள்ள சிறைச்சாலையை புழல் கிராமத்திற்கு மாற்றுவதற்காக 11 கோடி ரூபாய் செலவாகும் என்று உத்தேசிக்கப்பட்டு அது பரிசீலனையில் இருக்கிற காரணத்தினால் கோவை சிறையை வேறு இடத்திற்கு மாற்றினால் அதிகமான செலவு ஏற்படும் என்பதால் இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சருடைய பேரவைச செயலர் அதை மாற்றுவதற்கு யோசனை இல்லை என்று சொன்னார். ஆனால் நடைமுறையில் அந்தச்சிறையை அங்கே வைத்திருக்க முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. அதைச் சுற்றிலும் இருக்கிற மதில் உடைக்கப்பட்டு விட்டது. அங்கே இருக்கிற காலியிடங்களில் ஏராளமான கட்டடங்கள் அரசின் சார்பிலே கட்டப்படுகின்றன. நகரத்தின் இருதயம்

போன்ற அந்த இடத்தில இருக்கின்ற அந்தச் சிறையை மருத மலைக்கோ அல்லது வேறு இடத்திற்கோ மாற்றுவது நல்ல தல்லவா ? அதை அரசு செய்ய முன்வருமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, அந்த ச் சிறைக்குத் தேவையான இடம் போக மீதமுள்ள இடத்தைத்தான் சிறைத்துறையே முன் வந்து மற்ற துறைகளுக்கு அளித்திருக்கிறது. அங்கே இருக்கின்ற அந்தச் சிறையே ஒரு இருதயம் போன்றதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, கோவை மத்திய சிறையை மாற்றி வேறு இடத்தில் வைப்பதற்காக என்னுடைய தொகுதியிலே பாரஸ்ட் இலாகாவைச் சேர்ந்த இடங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்தச் சிறைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கே வந்து பார்த்து ஆய்வு நடத்திச் சென்றார்கள், அங்கே மாற்றப் போவதாகத் தகவல் கிடைத்தது. 400 ஏக்கர் அல்ல, 500 ஏக்கர் பூமி கூட அங்கே அதற்காக இருக்கிறது, ஆகவே அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா ?

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, சென்னை சிறையை மாற்றுகிற திட்டம் நிறைவேறிய பிறகு அதை அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : தலைவர் அவர்களே, சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர் பதிலளிக்கும் போது சென்னை சிறையை புழல் கிராமத்திற்கு மாற்றப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களிடமிருந்து அது குறித்து மறுப்புகள் வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் எந்தக் கேள்வி மூலக் கேள்வியோ அது சம்பந்தமாகத் துணைக் கேள்வி கேட்க வேண்டும்,

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சரின் பேரவைச் செயலர் முதலிலே சொல்லும் போது அந்தச் சிறையை மாற்றுவதற்கு எந்தவிதமான ஆலோசனையும் இல்லை என்று சொன்னார். அதற்குப் பிறகு திரு. சின்னச்சாமி கேள்வியில், அவருடைய தொகுதிக்கு அதை மாற்றுவதற்காக் அதிகாரிகள் வந்து பார்த்தார்கள் என்று சொன்னார். எனவே முதலிலே அமைச்சரின் பேரவைச் செயலர் சொன்ன தகவல் சரியா ? அல்லது திரு. சின்னச்சாமி அவர்கள் சொன்ன தகவல் மறைக்கப் படுகிறதா, எந்தத் தகவல சரியானது என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே. அதிகாரிகள் வந்து பார்த்தார்கள் என்று சொல்லப்படுகிற குறிப்பு என்னிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆட்சி மொழி (சட்டமியற்றல்) ஆணையம்

*வினா எண். 48—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆங்கிலத்திலுள்ள சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப் பதற்கு அமைக்கப்பட்ட மகராஜன் குழு தனது பணியை எந்த அளவிற்கு முடித்திருக்கிறது ?

திரு.எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, இதுவரையிலும் மொத்தம் 146 சட்டங்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நீதி மன்றத்திலே தமிழிலே தீர்ப்பு வழங்க வேண்டுமென்றால் விரைவிலே அந்தச் சட்டங்கள் எல்லாம் தமிழிலே மொழி பெயர்க்சப்பட வேண்டும். அவசர நிலைப் பிரகடனத்தின் போது கால நிர்ணயம் செய்தது போல, அந்தக் குழுவிற்கும் கால நிர்ணயம் செய்து விரைவில் அந்தப் பணிகளை முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இப்போது இருக்கின்ற ''மகராஜன்'' குழுவே விரைவிலே எல்லாச் சட்டங்களையும் மொழி பெயர்த்துவிட முடியாது, ஆகவே அதற்கு ஒரு சப் கமிட்டி போட்டு அந்தப் பணியை விரைவிலே முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

திரு. எம்.ஏ.ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவில் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் தான் தற்போது அந்த மகராஜன் குழு செயல்பட்டு வருகிறது. ஆனால் மொழி பெயர்க்கப்பட வேண்டிய பக்கங்கள் 25 ஆயிரம் இருக்கின்றன இது வரையில் 5895 பக்கங்கள் தான் மொழி பெயர்க்கப்பட்டிருக் கின்றன. இன்னும் 19,105 பக்கங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அப்படியென்றால் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாவது ஆகும் என்று உத்தேசிக்கப்படுகிறது. அதே நேரத்திலே நிதி நிலைமை அதற்கு ஒத்து வராத காரணத்தால் முழுமையாக வெகு விரைவில் முடிக்கப்படாமல் இருக்கிறது எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1980 பிப்ரவரி 5

[முற்பகல் 9—30]

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ் ஆட்சி மொழியாக ஆக இன்னும் பத்தாண்டுக் காலம் ஆகலாம் என்று (குறுக்கீடு) ஜுடீஷியரியில்தான் சொல்கிறேன். பூரணமாகத் தமிழ் ஆட்சி மொழியாக ஆக சட்டமன்றத்தில் மட்டுமல்ல நீதிமன்றத்திலும் கூட ஆவதற்கு —அதுதானே பிரச்சினை பத்தாண்டுகள் ஆகும் என்பதால் அதிகமான பக்கங்களை மொழி பெயர்க்க அதிகமான ஆட்களை நியமித்துச் சீக்கிரமாக மொழி பெயர்க்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா இல்லையென்றால் பத்தாண்டுக்காலம் என்று சொல்லி எப்பொழுது வேண்டுமானாலும் தமிழ் நீதிமன்றத்துக்கு வரலாம் என்று இந்தஅரசு அசட்டை செய்யப் போகிறதா?

திரு எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்க இந்த அரசு ஆவன செய்யும். அதே நேரத்திலே மத்திய அரசின் ஒப்புதலையும் பெற வேண்டியிருப்பதால், கொஞ்சம் காலத்தை நீட்டிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால்தான் இந்த தாமதத்தைப்பற்றி இங்கே கூறினேன்.

திரு சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, 25,000 பக்கங்கள் என்று பக்கங்களை நாம் கணக்கெடுப்பதை விட எந்தெந்தச் சட்டங்கள் முக்கியமோ அவைகளை விரைவில் மொழி பெயர்க்க சப் கமிட்டி போடப்படுமா, அப்படிப் போட்டு உடனடியாகத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, முக்கியமான சட்டங்கள் எல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன. குறிப்பாக குற்றவியலிலே இருக்கின்ற எல்லாச் சட்டங்களும் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. இப்பொழுது மற்ற சிவில் வழக்குகள் சம்பந்தப்பட்ட சட்டங்களை மொழி பெயர்த்து வருகிறார்கள். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இப்பொழுதே இன்டியன் பீனல் கோடு, கிரிமினல் புரோசீஜர் கோடு, இன்டியன் எவிடென்ஸ் ஆக்ட் ஆகிய சட்டங்களை மொழிபெயர்த்துவிட்டார்கள். இப்பொழுது செஷன்ஸ் கோர்ட்டிலே தமிழிலே வாதம் செய்வது அனுமதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா, சிவில் வழக்குகள் ஆனாலும், கிரிமினல் வழக்குகள் ஆனாலும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் செஷன்ஸ் கோர்ட் போன்ற நீதிமன்றங்களிலே தமிழிலேயே கேள்விகள் கேட்கவும், வாதங்கள் செய்யவும் அனுமதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?



1980 பிப்ரவரி 5]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அரசுக்கு தமிழிலே வாதிக்கவும், கேள்விகள் கேட்கவும் உரிமை உண்டு என்பது தெரியும். குறிப்பாக குற்றவியலில் வழக்குகளிலே. ஆனால் அப்படிப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியாது. அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதால் அரசு மேற்கொண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே; சுப்ரீம் கோர்ட்டைத்தவிர, ஹைக்கோர்ட்டைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாநிலமும் தங்களுடைய வட்டார மொழியில் வைத்துக் கொள்ள கொள்கையளவில், அகில இந்தியஅளவில் முடிவெடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு இந்த முடிவை எடுத்து ஏற்கனவே தாக்கீது அனுப்பியிருப்பதாக அறிகிறேன்.

அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டுமென்று சொன்னார்கள்; எந்த அடிப்படையில் அவ்வாறு சொல்கிறார்கள் ஏதாவது ஜீ. ஓ. இருக்கிறதா? அப்படிப் பெற வேண்டுமென்று மத்திய அரசு ஆணையிட்டிருக்கிறதா, இருக்கிறது என்றால் எப்போது?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, மொழி பெயர்த்தல் சம்பந்தப்பட்ட வரையில்தான் மத்திய அரசினிடத்தில் ஒப்புதல் பெற வேண்டும், நிதி உதவி பெறவேண்டியிருக்கிறது என்று கூறினேனே தவிர, ஆட்சி மொழியாக நீதிமன்றங்களில் ஆவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டுமென்று நான் சொல்ல வில்லை.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, மகராஜன் தலைமையில் இயங்கும் லாங்வேஜ் கமிஷன், ஏற்கனவே வேலை செய்ய முடியாது என்று ஓய்வு பெற்றவர்கள், அவர்களைக் கொண்டு வந்து இந்தக் கமிஷனில் போட்டால்—காலையில் 11—30 மணிக்கு வருகிறார்கள், மாலை 4—30 மணிக்கு இறங்கிப்போய்விடுகிறார்கள். இதை நான் பார்த்திருக்கிறேன். எனவே, இளம் வயதிலுள்ளவர்களைப் போட்டு சட்டங்களை மொழி பெயர்க்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, ஓய்வு பெற்ற நீதிபதியைத்தான் இதுவரை நியமித்து வந்திருக்கிறார்கள். மேலும் இதில் முழு நேர ஊழியராகத் தற்பொழுது வேலையில் இருக்கும் ஜில்லா நீதிபதி அந்தஸ்தில் உள்ளவர், செயலாளராகப் பணியாற்றி வருகிறார். மற்றவர்களும் முழுநேர ஊழியர்களாகப் பணியாற்றி

வருகிறார்கள். கிட்டத்தட்ட தலைமைப் பதவி மேற்பார்வை செய்யும் பதவியாக இருப்பதால் அதை மாற்றுவதற்கான உத்தேசம் இல்லை. உசிதம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, மொழி பெயர்ப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் ஏன் பெற வேண்டும்.? நிதி என்றாலும் கூட மத்திய அரசின் நிதியை வற்புறுத்துவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் நாமே தமிழிலே இதைக் கொண்டு வருவதற்கு நம்முடைய நிதியைச் செலவழிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மத்திய சட்டங்கள் நிறைய இருக்கின்றன. மாநில சட்டங்களைப் பொறுத்த வரையில் மாநில அரசு மொழி பெயர்த்து வருகிறது. மத்திய சட்டங்களை மொழி பெயர்க்க வேண்டுமென்றால் அதன் நகலை அவர்களுக்கு அனுப்பி, அவர்கள் பரிசீலித்து ஒப்புதல் அளிக்க வேண்டும். குறிப்பாக மத்திய சட்டங்களைப் பொறுத்த வரையில்தான் மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டி இருக்கிறது.

## திருமலையம்பாளையம் பேரூராட்சியில் நீர்த்தேக்கத் தொட்டி.

*வினா எண் 49. — திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) மதுக்கரை ஒன்றியம், திருமலையம்பாளைம் பேரூராட்சி தெப்பக்குளத்துப் பாறை குடிநீர் கிணற்றில் நிலமட்டத் தொட்டி கட்ட ஒன்றியத்திற்குப் பங்குத் தொகை செலுத்தப் பட்டதா ?

(ஆ) எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது?

(இ) நிலமட்டத் தொட்டி எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம். (ஆ) ரூ. 2,500.

(இ) இப் பகுதி தண்ணீர் பற்றாக்குறை இனம் 3 இல் வருவதால் மேற்படி இடத்தில் நிலமட்டத் தொட்டிகட்ட கோவை குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளரிடம் கோரப் பட்டுள்ளது.



## திருப்பாலைக்குடிக்குத் தண்ணீர் வழங்கல்.

*வினா எண். 50— திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு முகவை மாவட்டம், திருவாடானை தாலுகா, திருப்பாலைக்குடிக்கு ரூ. 16,000 செலவில் ஆர். எஸ். மங்கலம் பாண்டியன் கிணற்றிலிருந்து சப்ளை 20—12—1978 ல் விடப்பட்டு மீண்டும் 24—12—1978 தேதி நிறுத்தப்பட்டதா?

(ஆ) மீண்டும் தண்ணீர் விட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) உடைந்து போயிருந்த பைப்லைனின் பகுதி பழுது பார்க்கப்பட்டு 24—7—79-ம் தேதியிலிருந்து தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் திருவாடானை தாலூகாவில் 20—12—78 ல் அன்று விடப்பட்டு 24—12—78 அன்று நிறுத்தியதற்குக் காரணம் என்ன? எதன் மூலம் மீண்டும் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் மூலக் கேள்வியின் பதிலிலே குறிப்பிட்டதுபோல மங்கலம் கிராமத்திற்குப் பக்கத்தில் பைப்லைன் உடைந்து போய் இருந்தது என்றும் அது பழுது பார்க்கப்பட்டு திருப்பாலைக் குடிக்குத் தண்ணீர் விடப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

## சிவகாசி நகரைச் சுற்றி புதிய தொழிற்சாலைகள்.

*வினா எண் 51— திரு. கோ. இராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசி நகரைச் சுற்றி 5 கிலோமீட்டர் வரை தொழிற்சாலை விஸ்தரிப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் இதனால் சுற்றுப்புற கிராமங்கள் பாதிக்கப் பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(இ) இந்த விதிகளைத் தளர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சிவகாசி நகராட்சி எல்லையிலிருந்து 5 கிலோமீட்டர் வட்டாரத்திற்குள் புதிதாக தீப்பெட்டி மற்றும் வாண வெடி தொழிற்சாலைகள் நிறுவ உரிமங்கள் வழங்கப்படக் கூடாது என இராமநாதபுரம் ஆட்சியருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிவகாசி நகரத்தை ஒட்டி 5 கிலோ மீட்டர் தூரத்துக்குள்ளே கிராமங்களிலே புதிதாக விவசாயம் கட்டுபடியாகவில்லை என்று பல பேர்கள் தீப்பெட்டி தொழிலை அமைக்க உரிமங்கள் கேட்டு பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா. சிறுசிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிப்பதற்குப் பதிலாக அந்த நகரத்தை ஒட்டி அல்லது அந்த நகரத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தடைபோடுவதை மறுபரிசீலனை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமம் வழங்கி சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, திரு. ஹர்பான்சிங் அவர்களின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு தீப்பெட்டி, வாணவெடி மற்றும் அச்சகங்கள் ஆகிய தொழிற்சாலை உரிமையாளர்களின் தலைவர்கள், செயலாளர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் கூட்டினார். சிவகாசியில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால்தான் புதிய தீப்பெட்டி, வாணவெடித் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டை செயல்படுத்துவதில், முதல் கட்டமாக சிவகாசி நகராட்சி எல்லையிலிருந்து 5 கிலோ மீட்டர் வட்டாரத்திற்குள் மேற்கொண்ட தொழிற்சாலைகள் புதிதாக நிறுவப்படுவதற்கு அனுமதி வழங்கப்படல் கூடாது என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

எனவே எல்லோரையும் கலந்துதான் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலே தான் உரிமம் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் கிராம மக்களுக்கு வேலை கிடைக்காத நிலை இல்லை. ஏற்கனவே சிவகாசியில் இயங்கி வருகின்ற தீப்பெட்டி, வாணவெடி தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் சிவகாசியில் கிடைப்பதில்லை. அண்டை ஊர்களில் இருந்து சிறுவர்களை வண்டிகளில் ஏற்றிச் செல்வது அன்றாட வழக்கமாக இருக்கிறது. இப்படி சிவகாசியை விட்டுத்தள்ளி தொழிற்சாலைகளை அமைப்பதால் சிவகாசியில் நெரிசல் குறையும், கிராமப்புற வளர்ச்சிக்கு வகை செய்யும்.



திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடிய பதிலில் முரண்பாடு இருக்கிறது என்று தெரியும். நெரிசல் குறைய வேண்டும் என்று சொன்னால் கிராமங்களிலே அந்தத் தொழில்களை அமைத்தால்தான் அந்தந்த கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தர முடியும். பஸ்ஸின் மூலம் கொண்டு வரும்போது நடந்த விபத்துக்கள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, ஆங்காங்கே சிறு சிறு தொழில்களை அமைத்து பரவலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உரிமங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இப்போது தொழில் வைத்திருக்கக்கூடியவர்கள் தங்கள் தொழில் பாதிக்கப்படும் என்பதற்காக, புதிதாக லைசன்சு கொடுக்கக் கூடாது என்று சொல்லுவதாகத் தெரிகிறது. எனவே, சிறுசிறு தொழில்களுக்கு அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 5 கிலோ மீட்டருக்குள் கொடுக்கக் கூடாது என சொல்லும் போது, 5 கிலோ மீட்டருக்கு வெளியே கொடுக்கலாம் என்பதால், அப்படிக் கொடுக்கிறபோது, சுற்றுப்புறங்களில் புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கே சிவகாசியை ஒட்டி நிறுவ முடியும். அதனால் 5 கிலோ மீட்டருக்கு வெளியே இருக்கும் சுற்றுப்புறங்கள் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அர்பான்சிங் கமிட்டியின் பரிந்துரைகள் என்னென்ன? அவற்றில் எந்தெந்த பரிந்துரைகள் இப்போது அமலாக்கப்பட்டு இருக்கின்றன. அதில் குறிப்பாக சிறுவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்ற பரிந்துரை அமலாக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அர்பான்சிங் கமிட்டியின் பரிந்துரைகளை அரசு கூடி ஒரு முடிவு எடுத்து இருக்கிறது. அவைகள் என்னென்ன என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

மேச்சேரி ஒன்றியத்திற்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண். 52—திரு. ரா. நாராயணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

(ஆ) இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு வாரியத்தால் தயாரிக்கப்பட்ட பின்னர் அரசு ஒப்புதல் பெற்று திட்டம் நிறைவேற்றப்படும்.

<u>திரு. ரா. நாராயணன் :</u> தலைவர் அவர்களே, ஏற்கனவே மேய்ச்சேரி பேரூராட்சிக்கு தொப்பையாறு என்ற இடத்தில் இருந்து குடிநீர் வசதி செய்து கொடுக்க திட்டமிடப்பட்டது. பிறகு அந்த ஸ்கீம் சரியல்ல என்று கைவிடப்பட்டு, தற்போது மேட்டூரில் இருந்து மேய்ச்சேரிக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் திட்டத்தை மேய்ச்சேரி ஓமலூர் வரைக்கும் ஒரு பகுதியாக வைத்து, குடிநீர் வசதி செய்து கொடுக்க, தனித் திட்டமாக முதலில் நிறைவேற்றப்படுமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவர் அவர்களே, மேய்ச்சேரி ஒன்றியத்தின் பொருளாதார நிலையை மனதில் கொண்டு, அந்த ஒன்றியத்திற்கு மட்டும் குடிநீர் திட்டம் கொண்டு வருவது ஒன்றியத்தின் நிதிநிலைக்கு ஒவ்வாது என்ற கருத்தின் அடிப்படையில் அந்த ஒன்றியம் கூட்டு குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதன் பேரில் மேட்டூருக்கு அருகில் காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு, மேய்ச்சேரி, ஓமலூர், சூரமங்கலம், ஜாரிகொண்டலாம்பட்டி, சேலம், ஆத்தூர் மற்றும் இவற்றிற்கிடையே உள்ள வழியோர கிராமங்களுக்கும் சேர்த்து கூட்டு குடிநீர்த்திட்டம் ஒன்று தோராயமாக ரூ. 23.00 கோடி செலவில் உத்தேச மதிப்பீடு போட்டு, அது அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்ற பிறகு நிறைவேற்றப்படும் என்று தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.

<u>திரு. ரா. நாராயணன் :</u> தலைவர் அவர்களே, இந்த 23 கோடி ரூபாய் செலவிலான திட்டத்தை இரண்டு திட்டங்களாகப் பிரித்து ஓமலூர் வரை ஒரு திட்டமாக அதைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்ய அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவர் அவர்களே, பொருளாதார ரீதியில் அது சரியாக இருக்காது என்ற காரணத்தால்தான் கூட்டு குடிநீர் திட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





## <u>திருப்பத்தூர்—சென்னை விரைவுப் பேருந்துப் பணி</u>

*வினா எண். 53—<u>திரு. ப. சுந்தரம் :</u> மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு இரவு நேரங்களில் பல்லவன் போக்குவரத்து விரைவு வண்டி விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது முதல் செயல்படும் ?

<u>திரு. ப. கோ. கிட்டு</u> (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. ப. சுந்தரம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரம் பெரிய வியாபார ஸ்தலம். அந்த வியாபாரத்திற்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்கு வியாபாரிகள் தினமும் சென்னைக்கு வந்து போக வேண்டிய நிலை இருப்பதால் அங்கேயிருந்து இரவு நேரங்களில் புறப்பட்டு சென்னைக்கு வர விரைவு வண்டி வசதி இல்லாத காரணத்தால்—ரயிலில் வரவேண்டும் என்று நினைத்தாலும் 10 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியிருக்கிறது. அப்படிப் போனாலும் அங்கேயும் இடவசதி கிடைப்பது இல்லை—இது குறித்து பரிசிலித்து, அங்கேயிருந்து விரைவு வண்டி விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

<u>திரு. ப. கோ. கிட்டு</u> (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் இருந்து நேரடியாக சென்னைக்கு இரண்டு பேருந்துகள் தினசரி பிற்பகல் 3.55 மணிக்கு ஒன்றும், இரவு 11.24 மணிக்கு ஒன்றும் இருப்பதால் மேற்கொண்டு பேருந்துகள் விட சௌகரியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ப. சுந்தரம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இரவு 11 மணிக்கு வருகிற வண்டி மேட்டூரிலிருந்து வருகிற காரணத்தால் அந்த வண்டியில் இடம் கிடைப்பது இல்லை. ஆகவே, திருப்பத்தூரிலிருந்து புறப்படுவதற்கு மறுபரிசீலனை செய்யப்படுமா ?

<u>திரு. ப. கோ. கிட்டு</u> (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அரசு மறுபரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1980 பிப்ரவரி 5

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்பத்தூர் வழியாக வருகின்ற பேருந்துகளில் எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட ஏற முடியவில்லை. காரணம் அங்கே பஸ்களை நிறுத்தாமல் வந்து விடுகிறார்கள். இந்தக் குறையைப் போக்க, அங்குள்ள மக்கள் வசதியை முன்னிட்டு, புதிதாக அங்கிருந்து பேருந்து விட அரசு ஏற்பாடு செய்யுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களை ஏற்றிக் கொள்ளாமல் செல்கிறார்கள் என்ற புகாரை எழுத்துமூலமாகக் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே, திருப்பத்தூரில் இருந்து புறப்படும் பேருந்துகள் அங்கிருந்து நேரடியாக சென்னைக்கு வருவதில்லை. வாணியம்பாடி, ஆம்பூர் வழியாக வருகின்றன. ஆகையால் அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் அவர்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு பஸ்கள் விட்டால் நன்றாக இருக்கும். திருப்பத்தூரிலேயே பஸ் நிறைய பயணிகள் சேர்ந்துவிடுவதால் வாணியம்பாடி, ஆம்பூர், வேலூர் பயணிகள் ஏறுவதற்கு இடமில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, மேற்கொண்டு புதிய பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதே கேள்விக்குப் பதில் அளித்ததைப்போல் இந்தக் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## இரவு நேரப் பேருந்துகளில் கட்டணங்கள்

*வினா எண். 54—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரவு நேரங்களில் ஓடும் பஸ்களில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் விடுகின்ற பேருந்துகள் சினிமாவுக்குச் சென்று திரும்புகின்றவர்களுக்குத்தான் வசதியாக இருக்கின்றன : தொழிற்



1980 பிப்ரவரி 5]

சாலைகளிலே வேலை செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்புகின்ற தொழிலாளர்களுக்கு வசதியாக இல்லை. சினிமாவுக்குச் செல்கிறவர்களுக்கு அதிக வசதி செய்து கொடுக்கும் இந்த அரசு அந்தக் கட்டணத்தைக் குறைக்க ஏற்பாடு செய்யுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இரவு நேரங்களிலே விடுகின்ற பஸ்கள் லாபகரமாக செயல்பட முடியாது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். காரணம் இரவு நேரங்களில் அதிகமாகப் பயணிகள் பேருந்துகளில் செல்கின்ற வாய்ப்பு இல்லை. ஆகவேதான் கட்டணம் கொஞ்சம் கூட்டப்பட்டிருக்கிறது. செலவுகள் அதிகமாக இருப்பதால், பகலிலே ஓடுகின்ற பஸ்களில் உள்ள கட்டணத்தைப் போல் ஒன்றரை மடங்கு வசூல் செய்யப்படுகிறது. அந்தக் கட்டணத்தைக் குறைக்க எந்தவிதமான பரிசீலனையும் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இரவு நேரங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் குறிப்பாக விரைவுப் பேருந்துகளில்—நான் அடிக்கடி இந்த அவையிலே சொல்வதைப்போல—ஜாக்கிகள் இருப்பதில்லை. ஸ்டெப்னிகள் சரியாக இருப்பதில்லை. அதனால் என்னென்ன இடையூறுகள் ஏற்பட்டன என்பதைப் பற்றி நான் தேதிவாரியாகக் குறிப்பிட்டு வைத்திருக்கிறேன். அவை இல்லாத காரணத்தால் சிறு தடங்கல் ஏற்பட்டாலும் பஸ்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு விடுகின்றன. கட்டணம் அதிகமாக வசூல் செய்வது தவறு என்று நான் சொல்ல வரவில்லை. அப்படி வசூல் செய்யும்போது அவர்களுடைய பயணத்திற்கு இடையூறு இருக்கக் கூடாது. பழுதுபார்ப்பதற்காக ஜாக்கி வேண்டுமென்று திருவள்ளுவரை கேட்டால் பல்லவனுக்குத் தரமுடியாது என்கிறார்கள். அதைப்போல பல்லவன் "பெரியாரை" கேட்டால் பெரியார் கொடுக்க மறுக்கிறார். இப்படி.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிட்டப்பா அவர்கள் இந்தக் கேள்வியை எப்படியாவது கேட்டு, பதில் பெற வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். கேள்வி, பேருந்துகள் ஓடுவதில் ஏற்படுகின்ற தடங்கல்கள் பற்றியதல்ல; கட்டணம் அதிகமாக வசூல் செய்யப்படுவதைப் பற்றியது. அதை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்கள் மன்னிக்க வேண்டும். கட்டணம் அதிகமாக வசூல் செய்யப்படுகிறபோது இம்மாதிரி நடைபெறக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். இம்மாதிரி குறைகளைப் போக்க என்ன ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன?

(பதில் இல்லை)

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் பஸ் விடுவதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தொழிற்சாலைகள் நிறைந்

திருக்கிற அம்பத்தூர், திருவொற்றியூர் பகுதிகளில் ஒழுங்காக பஸ்கள் ஓடுகின்றனவா? எத்தனை பஸ்கள் விடப்படுகின்றன என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, பல்லவன் பெருநகர் பிரிவில் 22 பேருந்து வழித்தடங்கள் இருக்கின்றன; 26 பேருந்துகள் விடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : சார், நான் கேட்டது தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள் பற்றி. அதற்குச் சரியான பதில் வரவில்லை.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் ஜனங்கள் இரவு 12 மணி வரையில் போய் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தற்போது10 1/2 மணி வரையில்தான் பஸ்கள் விடப்படுகின்றன; இரவு 12 மணி வரையில் பஸ்கள் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, இந்த யோசனையை அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9–50]

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க மாண்புமிகு அமைச்சுச் செயலர் அவர்கள் அதற்கு பதிலளிக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, அக்கேள்வியினைத் திரும்பக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை. ஆகவே, மன்னிக்கக் கோருகிறேன். இரவு நேரங்களில் ஓடக்கூடிய பேருந்துகளில் குறிப்பாக ''பல்லவன்'', ''திருவள்ளுவர்'' போன்ற கழகங்களின் பேருந்துகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதைப் பற்றி இங்கே கேள்வி வந்திருக்கின்றது. அதையொட்டியே நானும் கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்தப் பேருந்துகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிற அதே நேரத்தில் பல பேருந்துகளில் ஜாக்கிகள் இல்லை, ஸ்பானர்கள் இல்லை, ஸ்டெப்னி சரியாக இல்லை. நான் உண்மையைத்தான் சொல்கிறேன். தேதி வாரியாக குறித்து வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேதிவாரியாகக் குறித்து வைத்திருப்பதைப்பற்றியெல்லாம் இப்படி கேள்வியாகக் கேட்கக் கூடாது. அவற்றைப் புகாராகப் பிறகு கூறுங்கள்.





திரு. என். கிட்டப்பா : அதேநேரத்தில் திருவள்ளுவர் என்று ஒரு பெயரை இட்டு புதிதாகப் பேருந்து வழித்தடத்தை உருவாக்கியிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பேருந்துகளின் கட்டணம் பற்றிய கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் புரிந்துகொள்ளுகின்ற ஆற்றல் எனக்கு இல்லையோ என்று சந்தேகப்படுகிறேன். அவர்கள் பல கேள்விகளை ஒரே கேள்வியிலேயே கேட்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த அளவுக்கு, புரிந்த அளவுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்துப் பேருந்துகளில் கட்டணம் உயர்த்தப்படவில்லை. முன்பு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ''எக்ஸ்பிரஸ் பிரிவு'' என்று இருந்த பிரிவுதான் இவ்வாறு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே எந்தவிதமான கட்டண மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் கிலோ மீட்டருக்கு 6 பைசா என்கிற கட்டணத்தைக் கூட இந்த அரசு 5 பைசாவாகக் குறைத்துத்தான் இருக்கிறது. அதே அளவு இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. இரவு நேரப் பேருந்துகளில் அதுவும் நகரப் பேருந்துகளில் மட்டும்தான் 1 1/2 மடங்குஎன கட்டணம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ரூட் பேருந்துகளில் ஸ்டெப்னி சரியில்லை, ஸ்பானர்கள் இல்லை, ஜாக்கி இல்லை என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தமாதிரி குறைகள் எல்லாம் விரைவிலேயே நிவர்த்திக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## செய்யாற்றின் குறுக்கே அணை.

* வினா எண் 55— திரு. தா. சாமிக்கண்ணு : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குப்பநத்தத்தில் செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டமொன்று அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) செங்கம் தொகுதியில் செய்யாற்றின் குறுக்கே குப்பநத்தம் கிராமம் அருகே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது. அதன் மதிப்பீடு 2 கோடியே 13 இலட்சம் ரூபாய்.

(ஆ) ஆய்வு முடிவுற்று, செயல்படுத்துவதற்கான சாத்திய கூறுகள்பற்றி அறிக்கை கிடைத்த பின்னர், அரசு முடிவு எடுக்கும்.

திரு. தா. சாமிக்கண்ணு : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் எவ்வளவு செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது எத்தனை ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கும் என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் 2,485 ஏக்கர் உறுதிப் பாசனமும், 1,877 ஏக்கர் இரண்டாவது பாசனமும் அளிக்கும் வகையில் அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவரவர்களே, செய்யாற்றின் உபநதிகளில் ஒன்றான கமண்டலா நதியில் செண்பகத்தோப்பு அருகே ஒரு அணை கட்டப்படும் என்று ஆளுநர் அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு பின்னர் செய்யாற்றிலே உள்ள செய்யாறு அணைக்கட்டு, தண்டரை அணைக்கட்டு, உத்திர மேரூர் அணைக்கட்டு ஆகிய மூன்று அணைக்கட்டுகளையும் சேர்ந்த ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுகின்றன என்று அந்த ஆயக்கட்டுதாரர்கள் இந்த அணை கட்டினால் தங்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று அரசுக்கு முறையிட்ட காரணத்தாலே அந்தத் திட்டம் ஓரளவுக்கு மறு ஆய்வுக்கு விடப்பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? அதேபோன்றுதான் இந்த குப்பநத்தத்திலே நீர்த்தேக்கம் கட்டினாலும் நான் முன்பு கூறிய படி செய்யாறு, தண்டரை, உத்திரமேரூர் ஆகிய மூன்று அணைக் கட்டுகளையும் சேர்ந்த ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தாலே மேலே நீர்த்தேக்கம் கட்டுகின்ற இந்தத் திட்டத்தை அரசு கைவிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கமண்டலா ஆற்றின் குறுக்கே செண்பகத்தோப்பு அணைக்கட்டுத் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே ஆளுநர் அவர்கள் உரையிலே அறிவிக்கப்பட்டது. அதற்காக (ஹைட்ராலஜி) நீர் வரத்து எவ்வளவு இருக்கிறது என்று அறிய ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அந்த அணைக்கட்டுத் திட்டம் எந்த இடத்தில் கட்டப்பட வேண்டும் என்று இங்கிருக்கிற உறுப்பினர் அவர்கள் நினைக்கின்றார்களோ அந்த இடத்தை நானும் போய் பார்த்தேன். நீர் வரத்து இருக்கிறது என்று எனக்கே கண்கூடாகத் தெரிகிறது. ஆகவே, அங்கே இருக்கக் கூடிய தல அதிகாரிகளையெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.





ஆய்வுப் பணிகளை முடித்த பின்னாலே அந்த அணை கட்டும் திட்டம் உடனடியாக நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே. அந்த ஒரு இடம் மட்டும் அல்ல. செண்பகத்தோப்பு குப்பநத்தத்தைப் போலவே அம்ரிதி என்று ஒரு இடத்திலும் அணை கட்ட வேண்டும் என்ற ஒரு திட்டம் நீண்ட நாளாகச் சொல்லப்பட்டு வரும் திட்டம். அந்த இடத்தை அமைச்சர் அவர்கள் பார்த்தேன் என்று சொன்னார்கள். அந்த இடத்தை நானும் பலமுறை பார்த்திருக்கிறேன். மூன்று இடங்களையும் பார்த்திருக்கிறேன். அந்த மூன்று இடங்களிலேயும், இந்த நீர்த்தேக்கம் கட்டினால் நிச்சயமாகச் சொல்கிறேன், எப்படி காவிரி ஆற்றின் மீது அணைக்கட்டு கட்டினால் நம்முடைய தஞ்சை ஜில்லா பாதிக்கப்படும் என்று சொல்கிறோமோ அப்படியே இந்த மூன்று இடங்களில் அணை கட்டினால் நிச்சயமாக வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற செய்யாறு வட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற இந்த மூன்று அணைக்கட்டுகளின் ஆயக்கட்டும் பாதிக்கப்படும். அதை நாங்கள் பல முறை எடுத்துச் சொன்ன காரணத்தினாலேதான் ஆளுநர் உரையிலே சொல்லி, அதற்கான நிதி ஒதுக்கீடு பெற்றும் கூட மறு ஆய்வு செய்யக் கூடிய நிலைமை இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தண்ணீர் வருகிறது என்ற காரணத்தைக் காட்டி கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்களைப் பாதிக்கக்கூடிய ஒரு நிலைமையை மேற்கொள்வது நல்லதல்ல. ஆகவே, அந்தத் திட்டத்தைக் கைவிட அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லை, அரசு புரிந்து செய்தது என்று சொன்னால் கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்கள் தங்களுக்கு வேறு பரிகாரம் தேட வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதை அரசு உணருமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நீண்ட நெடிய கேள்வியாக நமது முன்பு இருந்த சபாநாயகர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இதற்குப் பதில் கூற வேண்டும் என்று சொன்னால் குறைந்தது நானும் 10 நிமிடமாவது அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டி வரும் என்று நினைக்கிறேன். ஆனால் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் கொள்கை அளவில் பல திட்டங்களைப் போட்டு அடிக்கல்லை நாட்டினார்கள். அந்தத் திட்டங்கள் எல்லாம் பொருளாதார ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய திட்டங்களா என்று ஆய்ந்து பார்த்ததில், பல திட்டங்கள் எல்லாம், ஏற்றுக் கொள்ளப்பட முடியாத பல திட்டங்கள். எல்லாம், ஏதோ தேர்தல் காலத்திலே அவைகளையெல்லாம் அள்ளித் தெளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பல திட்டங்கள்......................

[1980 பிப்ரவரி 5

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேள்வி ஒரு அரசியல் பிரச்சாரம் செய்வதற்காகக் கேட்கப்பட்டகேள்வி அல்ல. புலவர் கோவிந்தன் அவர்கள் அவர்களுடைய தொகுதியில் அல்லது மாவட்டத்தில் நடைபெற வேண்டிய ஒரு திட்டத்தைப் பற்றிக் கேட்டார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசியல் பிரச்சாரங்கள் செய்தார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் காலத்தில், தேர்தல் நேரத்திற்காக கொள்கை அளவில் யாரும் ஏற்றுக் கொள்ள முடியாத திட்டங்களையெல்லாம் நிறைவேற்றினார்கள். அதனால் அவைகள் கைவிடப்பட்டன என்பது போலக் கூறினார்கள். இவைகள் எல்லாம் சரியானதுதானா பொருத்தமானதுதானா என்பதைத் தாங்கள் தான் அருள் கூர்ந்து அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கு நான் சொன்னது, தனிப்பட்ட உறுப்பினர்களையோ, தனிப்பட்டவர்களையோ குறிப்பிட்டு எதுவும் சொல்லக்கூடாது என்பது. ஒரு அமைப்பைச் சொல்லலாம் என்று சொன்னேன். அவர்கள் சொன்னதற்கு அடுத்து ஒன்றைச் சொல்லலாம், ஆனாலும், அமைச்சர் அவர்கள் ஒரு அமைப்பு என்ற முறையில் ஒரு அமைப்பின்கீழ் பழைய அரசு செய்ததைப் பற்றிச் சொல்வதை நான் எப்படி....

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் உறுப்பினர்கள் கேட்கிற, எடுத்து வைக்கிற ஐயப்பாடுகளுக்கும், சந்தேகங்களுக்கும் பதில் அளிக்கிற வகையில் விளக்கம் அளிக்க அமைச்சர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்னொரு கட்சியை, இன்னொரு அரசை குற்றம் சாட்டிப் பேசினால் அதற்குப் பதில் அளிக்க வேண்டிய அவசியம் கேள்வி நேரத்திலே எங்களுக்கு அளிக்கப்படுமேயானால் நாங்கள் இவைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே கூடுமானவரை அப்படிப்பட்டவைகளைத் தவிர்ப்பது நல்லது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, தவிர்ப்பது நல்லது மாத்திரம் அல்ல, விதிப்படியே கேள்வி நேரத்திலே தகவல்தான் கேட்கிறோம், தகவலைச் சொல்லலாம், ஆனால் accusations and imputations are prohibited.
அவர்கள் அப்படிச் சொல்வது என்று ஆரம்பித்தால் எங்களுக்கும் தெரியும்; நாங்களும் சொல்வோம்.



1980 பிப்ரவரி 5]

[முற்பகல் 10-00]

திரு. சி. ஆறுமுகம்: குப்ப நத்தத்தில் அணை கமண்டலாற்றில் அணை கட்டினால் செய்யாறு தாலுகா, வந்தவாசி தாலுகா, மதுராந்தகம் தாலுகா, காஞ்சிபுரத்தில் ஒரு பகுதி போன்ற இடங்களிலுள்ள விவசாய மக்கள் பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவிடுவார்கள். ஆகவே தயவுசெய்து இந்தத் திட்டத்தை கைவிட அரசுக்கு உத்தேசமுண்டா? இல்லை என்றால் வேறு வழி இல்லை, நீதிமன்றத்திற்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே இதுகுறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் சொல்வதுபோல் பிச்சை எடுக்கிற சூழ்நிலை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்படாது என்பதையும் அதற்காகத்தான் அரிசி எல்லோருக்கும் கிடைக்கிற சூழ்நிலையை இந்த ஆட்சியில் நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளின் நன்மையைக் கருதித்தான் ஒரு அணைக் கட்டுத்திட்டத்தை ஒரு நீர்தேக்கத்தை ஏற்படுத்துகிறோமே தவிர விவசாயிகளைப் பாதிப்பதற்காக அல்ல என்பதை நான் மீண்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : என் க்வஸ்டினுக்கு ஸ்ட்ரெயிட்டான ரிப்ளை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்ட கேள்வி எனக்கே புரியவில்லை. அந்த அணைக்கட்டு வேண்டுமென்று சொல்கிறீர்களா வேண்டாம் என்று சொல்கிறீர்களா ?

திரு. துரை முருகன் : யாவருக்கும் அரிசி போடுகிறோம் என்றால் பிச்சை எடுப்பவர்களுக்குத்தான் அரிசி போடுவார்கள். உங்கள் ஆட்சியில் பிச்சை எடுக்கிற நிலைக்கு வந்துவிட்டார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுக்குப் போய் சொல்லித்தர வேண்டிய நிலை இருக்கக்கூடாது. முதலில் இவர் பிச்சை என்று சொன்னார்கள், அதற்கு அவர்களும் பிச்சை என்று சொன்னார்கள். அந்த உறுப்பினர் மேலும் கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. அப்போது அதற்கு வேண்டியதை அவர்கள் கேட்டுக்கொள்ளட்டும்.

திரு. மு. கருணாநிதி : நான் தங்களிடம் தெரிந்து கொள்ளத்தான் விரும்புகிறேன். அருள்கூர்ந்து அதைத் தாங்கள் கவனித்து ஒரு தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலை

வர் என்ற முறையில் இதை நான் தங்களிடம் கூற விரும்புகிறேன். கேட்ட கேள்வி ஒரு அணை கட்டுவது சரியா இல்லையா என்பதுதான். அதற்கு அமைச்சர் அவர்கள் எடுத்து வைக்கவேண்டிய விளக்கம் — திரு. ஆறுமுகம் கேட்ட கேள்வி அல்லது அவர்கள் சொன்னது தவறாகக் கூட இருக்கலாம் — திரு ஆறுமுகம் அவர்கள் கேட்ட கேள்வி குறிப்பிட்ட அந்த அணையைக் கட்டினால் அதன் கீழ்ப்பகுதியில் இருக்கிற மக்கள் அல்லலுக்கு ஆளாக நேரிடும் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும், பிச்சை எடுக்கக்கூடிய ஒரு நிலைக்குப்போய் விடுவார்கள், ஆகவே அந்த அணைக்கட்டு கட்டுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்குக் கூறவேண்டிய பதில், அந்த அணை கட்டினால் அந்த நிலை ஏற்படாது என்பதாகத்தான் இருக்க வேண்டுமே தவிர நாங்கள் அரிசி போடுகிறோம் ஆகவே பிச்சை எடுக்கவேண்டிய நிலை ஏற்படாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னதால்தான் மற்றவர்கள் அதைப்பற்றி விளக்கவேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். எந்தக் கேள்வியை எப்படிக் கேட்கிறார்களோ அதற்கேற்ற பதில் சொல்வதுதான் சாலச்சிறந்தது. அந்தக் கேள்விக்கான பதிலைத் தந்தால் அவைக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும். அதற்காகத்தான் கேள்வி நேரத்தை மிக முக்கியமாக நாம் இந்த அவையில் வைத்திருக்கிறோம். அவர்கள் கேட்டது, இந்த அணையைக் கட்டப் போகிறீர்களா, கட்டினால் இவ்வளவு ஆபத்து, கட்ட வேண்டாம் என்று சொன்னார்கள், அதற்கு நேரடி விளக்கம் தந்திருந்தால் மேற்கொண்டு பிரச்னை வளராமல் இருக்கும். அமைச்சர் அவர்கள் அதற்கான பதில் தந்தால் மட்டும் போதும்.

<u>புலவர் கா. கோவிந்தன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிச்சை எடுக்க வேண்டிய நிலை ஏற்படாது என்று சொன்னார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

<u>புலவர் கா. கோவிந்தன் :</u> வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏற்கனவே மைசூர் மாநிலத்தில் அணை கட்டிய காரணத்தால் பாலாற்று அணைக்கட்டிலிருந்து செய்யாறு வட்டத்திற்கு வேண்டிய தண்ணீர் வருவதில்லை. ஆயக்கட்டு இருக்கிறது. அணைக்கட்டு இருக்கிறது. கால்வாய்கள் இருக்கின்றன. ஆனால் ஏரி நிரம்புவதில்லை. எந்த ஏரிக்கும் தண்ணீர் வருவதில்லை. வறண்டு போய் விட்டது பாலாறு. அதே போல் செய்யாற்றின் மேல் மூன்று இடங்களில் அணைக்



கட்டினால் செய்யாறு வறண்டுவிடும். செய்யாறு அணைக்கட்டு தண்டரை அணைக்கட்டு, உத்தரமேரூர் அணைக்கட்டு இந்த மூன்று அணைக்கட்டுகளில் உள்ள ஆயக்கட்டுகள் நிச்சயமாக பாதிக்கப்பட்டுவிடும். இதிலே மறுப்பு இருக்க முடியாது. இது நிச்சயமாக எங்களைப் பாதிக்கிறது. இதை நான் இந்த ஆட்சி வந்த பிறகு சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோதே கூறியிருக்கிறேன். எங்கள் ஆயக்கட்டுகளின் உரிமையை காப்பாற்றிக் கொள்ள நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே இதை மனதில் வைத்து மறுஆய்வு செய்யக்கூடிய நிலையை உருவாக்கி இத் திட்டத்தைக் கைவிட அரசு முன் வருமா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர்களே, கீழே இருக்கக்கூடிய பகுதிகள் பாதிக்கப்படாத வண்ணம்தான் இந்த அணைக்கட்டு திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இந்த ஆயக்கட்டுகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை கண்டிப்பாக ஏற்படாது என்பதை நான் மீண்டும் உறுதி கூறுகிறேன்.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு அல்லது செண்பகத்தோப்பு அணைக்கட்டு, அமிர்தியில் உற்பத்தியாகும் ஆறுகள் எல்லாம் வட ஆற்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலே உற்பத்தியாகின்றன. மழைக் காலங்களில் பெய்கின்ற மழைத் தண்ணீரை தேக்கி வைக்க வசதி இல்லாமல் இருக்கிறது. பாசனத்திற்கும் வசதி இல்லை. அதனால் அங்கே பெரும்பாலான பகுதிகள் கிணற்றுப் பாசனத்தையே நம்பியிருக்கிறது. எனவே, குப்பநத்தம், செண்பகத்தோப்பு அணைக்கட்டுகள் கட்டப்பட வேண்டும் என்பது நியாயம் என்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. அதனால், அரசாங்கம் அந்தப் பகுதி மக்களை ஏமாற்றாமல், விரைவாக நடவடிக்கை எடுத்து, அந்த அணைக்கட்டுகளைக் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர்களே, மக்களை ஏமாற்ற வேண்டுமென்றோ, எப்படியாவது வாக்குகளைப் பெறவேண்டுமென்கின்ற எண்ணமோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில் இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த அளவில் ஆளுநர் அவர்கள் உரையிலே எடுத்துச்

சொல்லப்பட்டாலும் அப்படி எடுத்துச் சொல்லப்பட்ட பின்னரும் அதை எடுத்துக் கொள்ள முடியாத ஒரு நிலை இருக்கிறது என்று அதிகாரிகள் தெரிவித்த பின்னரும், அமைச்சராக இருக்கக் கூடிய நான், அந்த இடத்திற்குச் சென்று அந்த அணை கட்டப் படத்தான் வேண்டும் என்கிற சூழ்நிலையை இன்று உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். காரணம், அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், இந்த அணைக்கட்டுத் திட்டத்தின் மூலமாகத்தான் பாசன வசதியைப்பெற முடியுமே தவிர, வேறு பாசன வசதி செய்து கொடுக்க முடியாத நிலை இருக்கின்ற காரணத்தினால், அது ஒரு பிற்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த நிலைமைகளை எல்லாம் அனுசரித்துத் தான், இந்த அணையைக் கட்டுவதற்கு உண்டான ஆய்வு நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லுகின்றபோது, கட்டித்தான் தீரவேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்துவிட்டதாக நான் அறிகிறேன். அப்படி அந்த அணைக்கட்டைக்கட்டுவதற்கு முன்வந்தால், எங்கள் ரத்தத்தின்மீது நடந்து போக வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம்

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அளிக்கின்ற பதிலிலே பெரிய ஆபத்து இருக்கின்றது என்பதை உணர்ந்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் அறிவித்து விட்டார்கள். அப்படி அறிவித்து விட்ட பிறகு, அதிகாரிகள் அதைக் கட்டுவது முறையல்ல என்று கருத்து தெரிவித்த பின்னரும், அமைச்சர் அவர்கள் தான் நேரிலே போய்ப் பார்த்து கட்டலாம் என்று சொன்னேன் என்று சொன்னார்கள். அதிகாரிகள் கருத்தைச் சொல்லிவிட்ட பிறகு, அதை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்வது அவ்வளவு முறையல்ல. அதிகாரிகள் கட்டக் கூடாது என்று சொல்லிய பிறகும், நான் போய் பார்த்தேன், அனுமதி தருகிறேன் என்று சொல்வது முறையல்ல. ஆகவே, அரசு இதை பரிசீலனை செய்து, கைவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கைவிட்டு விடும் யோசனை தற்போது அரசினுடைய ஆய்வில் இல்லை. ஆனால், அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகள் முனைப்பாக, அதற்கான முன் ஏற்பாடுகள் தான் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. கைவிடும் யோசனை இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்





கொள்கிறேன். நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அணைக்கட்டு கட்டப்பட வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால், ஒருவர் மட்டுமே, முன்னாள் சபாநாயகராக இருக்கக்கூடிய ஒரு உறுப்பினர் மட்டுமே அதைக் கட்டக் கூடாது என்று சொல்வது ஏதோ தனக்காக அல்லது தன்னுடைய நண்பர்களுக்காக அதைச் சொல்லுகின்றாரோ ?

திரு. சி. ஆறுமுகம் : ஒரே ஒரு உறுப்பினர் என்று சொல்வது தவறு.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தக் கேள்வியைக் கேட்டாலும், அவர்கள் தனக்காகக் கேட்கின்றார்கள் என்ற அப்படையில் பேசுவது சட்டமன்ற மரபுக்கு மாறுபட்டது. இருந்தாலும், இப்படிப் பட்ட கேள்விகளில் நான் ஒரு பொதுப்படையான கேள்வியை அரசிடம் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே பயன்பெறும் ஆயக்கட்டுக்காரர்கள் '' பிரியாரிடி ரைட் '' அதாவது '' முன்னுரிமை '' என்பது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை. அந்த ஆயக்கட்டுக்காரர்கள் ஏற்கனவே தாங்கள் பெற்றுள்ள முன்னுரிமை பாதிக்காத வகையில், அதற்கான விதி முறைகளை இந்த அரசு பரிசீலித்து, ஏற்கனவே அந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஆயக்கட்டுதாரர்கள் உரிமைகள் பாதிக்காத அடிப்படையிலே, அந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலே அரசாங்கம் செயல்பட முன் வருமா ?

[முற்பகல் 10·10.]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே பாசன வசதி பெற்றுக் கொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய முன்னுரிமை பாதிக்காத வண்ணந்தான் அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ள இருக்கிறோம் என்பதை கூறியிருக்கிறேன்.

## Training in Poultry development.

* Q. No. 56—Thiru SALEM M. ARUMUGAM ; Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state.—

(a) whether any training in poultry development was imparted at the Poultry Research Station, Nandanam, Madras, during June 1979 to persons interested to augment their incomes; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஓர் ஆண்டில் பணியில் இல்லா பட்டதாரிகளுக்காக மூன்று பயிற்சிகளும், எஸ்.எஸ்.எல்.சி. தேறி பணிபுரிபவர்களுக்காக நான்கு பயிற்சிகளும் நந்தனத்தில் உள்ள கோழி வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் கொடுக்கப்படுகின்றன. இதற்கான போதனைக் கட்டணம் ரூ. 10 பயிற்சி முடிவில் தேர்விற்குப் பின் ஒரு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## தூத்துக்குடி மருத்துவமனை.

*வினா எண் 57— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா —

தூத்துக்குடி மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தூத்துக்குடி மருத்துவமனையில் 260 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் 1979–80 ல் இம் மருத்துவமனைக்கு எக்ஸ் கதிர் வாங்குவதற்காக ரூ. 1.50 இலட்சம் தொடரும் இனச் செலவுக்காகவும் ரூ. 11,000 தொடரா இனச் செலவுக்காகவும் வரவு செலவுப் பட்டியலில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. ந. தனசேகரன் : தூத்துக்குடி நகரம் விரிவடைந்த நகரமாகப் பெருகி வரும் காரணத்தால் ஒதுக்கப்படுகிற தொகை பேர்தாது என்ற குறைபாடு இருப்பது அரசுக்குத் தெரியுமா? மருத்துவ மனை விஸ்தரிக்கும்திட்டம் ஆய்விலுள்ளது, முடிவடைகின்ற நிலையிலுள்ளது என்று சொல்லும் அமைச்சர் அவர்கள அந்தத் திட்டம் எப்போது முற்றுப்பெறும் என்பதை அறிவிப்பார்களா! அதற்குக் காலவரையறை உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தூத்துக்குடி மருத்துவ மனையின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் 260 படுக்கைகள் கொண்ட விஸ்தரிப்பு வேலைகள் 37.60 இலட்சம் செலவில் மூன்று பிரிவாகக் கட்டுவதற்கு தலைமைப் பொறியாளர் திருத்திய வரை பட மதிப்பீடு அனுப்பியிருந்தார்கள். மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் அதிலே சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவை வரப்பெற்றவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.





திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது 1.50 இலட்சம், 37.60 இலட்சம் என்று புள்ளிக்குப் பின்னால் வரக்கூடிய எண்ணிக்கை ஒரு வேளை ஐம்பது லட்சம், அறுபது லட்சம் என்று குறிப்பதுபோல் கூறுகிறார்கள். புள்ளிக்குப் பின்னால் எப்படிப் படிக்க வேண்டுமென்ற முறைப்படி அமைச்சர் அவர்கள் படிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்று புள்ளி ஐந்து சைபர் லட்சம் என்று சொல்ல வேண்டுமென்று பேராசிரியர் சொல்லுகிறார்.

திரு. ந. தனசேகரன் : நான் கேட்க விரும்புவது 260 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை விஸ்தரிப்புத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள்ளாக முற்றுப்பெறும்? குறிப்புகள் திரும்பக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்படி மேலே வருவதும் கீழே போவதுயான முறையை நிறுத்தி உடனடியாக மருத்துவ மனை வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அந்த மருத்துவ மனை விஸ்தாரப்பு அவசியம், தேவைதான் என்பதை உணர்ந்துதான் இந்த நடவடிக்கைகள் எடுக்கபட்டிருக்கின்றன. திருத்திய மதிப்பீடு வரைபடங்கள் வந்த பிறகு பரிசீலித்து வேலைகள் துவங்க ஆவன செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தூத்துக்குடி மருத்துவ மனை ஆய்வு எப்போது எடுத்துக் கொள்ளப்பட்டது? எவ்வளவு காலமாக ஆய்வு நடைபெற்றுக் கெண்டிருக்கிறது? ஆய்வு எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : சுமார் 260 படுக்கைகள் கொண்ட பிரிவுக்கு ஆய்வு வரைபட மதிப்பீடு சென்ற ஆண்டு அனுப்பப்பெற்று 37.60 இலட்சம் செலவில் பொறியாளர் வரை படங்கள், மதிப் பீடுகளை அனுப்பியிருக்கிறார். அதன்பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

## அரசு மருத்துவமனைகளில் தடுப்பு மருந்துகள் வழங்கல்.

*வினா எண் 58— திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தடுப்பு மருந்துகளான டிரிப்பிள் ஆண்டிஜன், போலியோ சொட்டுமருந்துகள், பிசிஜி போன்றவைகளை எல்லா அரசு மருத்துவ மனைகளிலும் இலவசமாகப் போடும் ஆய்வு ஏதேனும் அரசுக் குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது இலவசமாகப் போடப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : இனியாவது தடுப்பு மருந்துகளை ஆரம்பச்சுகாதார நிலையங்கள் மூலமாக விநியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அதுபோன்ற நோய்த் தடுப்பு மருந்துகள் சிலவற்றை ஆரம்பச்சுகாதார நிலையங்கள் மூலமாக அளித்துக் கொண்டிருக்கிறோம். சிலவற்றை மாவட்ட மருத்துவ மனை வாயிலாக வழங்கிக்கொண்டு இருக்கிறோம்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, இந்த நோய்த் தடுப்பு மருந்துகள் சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவசமாக அளிப்பதன்மூலம் இந்த நாட்டில் நல்ல பிரஜைகள் உருவாக வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து இலவசமாக மருந்துகளை அளிப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது இதுபோன்ற நோய்த் தடுப்பு மருந்துகள் நம்முடைய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலமாகவும் மாவட்டத் தலைமை மருத்துவ மனை மூலமாகவும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

## எலவானாசூர் கோட்டையில் கால்நடை மருத்துவமனை.

*வினா எண். 59— திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை தொகுதி எலவானாசூர் கோட்டையில் கால்நடை மருத்துவ மனை அமைப்பது பற்றிய கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் 1979–80-ல் அங்கு மருத்துவமனை திறக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : (அ) ஆம்.

(ஆ) எலவானாசூர் கோட்டையில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்துவது பற்றிய கோரிக்கை கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் ஆய்வில் உள்ளது.



திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அந்த மருத்துவ மனையைத் திறப்பதற்கான கோரிக்கை இருந்து கொண்டே இருக்கிறது. அப்படியிருந்தும் திறக்கப்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைச்சர் அவர்களிடத்தில் நேரிலேயும் விண்ணப்பம் மூலமாகவும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். இருந்தும் அந்த மருத்துவ மனையைத் திறப்பதற்குத்தாமதம் ஏற்படுகிறது. ஏன் அந்தத் தாமதத்தைப் போக்க அந்த மனக்குறையை நீக்காமல் இருக்கிறார்கள்? உடனடியாக அந்த மருத்துவமனையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்து உத்திர விடுவார்களா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அதனுடைய தீர்மானம் நாள் 22—11—1973-ல் பிடாகம் பஞ்சாயத்தில் (எலவனாசூர்கோட்டை) ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தவும் அதற்காக பங்குத் தொகை கொடுக்கவும் தெரிவித்துள்ளது மேற்குறித்த இடத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் ஒதுக்கீடு மற்றும் கால்நடை மருந்தகம் தற்காலிகமாக இயங்க வாடகை கட்டடம் கொடுப்பதற்காகவும் நிறைவேற்றி அனுப்பியுள்ள தீர்மானங்கள இப்போது தான் வந்துள்ளன. நிச்சயமாக இந்த ஆண்டுக்குள் அந்த மருந்தகம் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சுவேதநதியின் குறுக்கே பாலம்.

*வினா எண். 60—திரு. செ.மெ. இராஜு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் 74 கிருஷ்ணாபுரம் ஊரின் அருகே உள்ள சுவேத நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பணி நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :– (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்.

### (அ) மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப் பெறுவது குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே ஒரு விளக்கம்பெற விரும்புகிறேன். அண்மையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்குச் சட்டம் இலகுவாகின்ற வகையில் உரிமங்கள் அளிப்பது போன்ற பல் வேறு வகைகளிலும், சிறைச்சாலையிலே இருக்கின்ற கைதிகளை விடுவிப்பதற்கு ஆணை பிறப்பிக்கின்ற வகையிலும் புதிய அறிவிப்புக்களைச் செய்தார்கள். அதையொட்டி நேற்றைய தினம் விதிகள் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்த விதிகள் திருத்தத்தோடு அந்தத் தீவிரச் சட்டம் நின்றுவிடுகிறதா அல்லது சட்டத் திருத்தங்கள் இங்கே கொண்டுவரப்பட இருக்கிறதா? ஏனென்றால் சட்டத்தினுடைய நோக்கம் வேறு. இப்போது விதிகள் திருத்தப்பட்டு நடைமுறையிலே மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிற நிலை வேறு. இரண்டிற்கும் முரண்பாடு இருக்கிற காரணத்தால் சட்டம் அப்படியே நீடிக்கப்படுமேயானால் கடுமையான தண்டனைகளுக்கு நாடு கடத்தல் போன்ற தண்டனைகளுக் கெல்லாம் மக்கள் ஆளாகக்கூடிய சூழ்நிலை நாட்டிலே இருக்கிறது. எனவே சட்டம் திருத்தப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமல்படுத்தப்படுகிற மதுவிலக்குச் சட்டத்தில் சில விதிகளைத் தளர்த்தியிருக்கிறோம் என்று அரசு அறிவித்திருக்கிறது. அப்படித் தளர்த்தி இருக்கிற விதிகளை மாற்றுவதற்கும் உருவாக்குவதற்கும் அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்டு அந்தச் சட்டத்திற்குட்பட்டு விதிகளை மாற்ற அரசு அறிவித்து இருக்கிறது. தேவையான சட்டத் திருத்தங்களைத் தேவையான நேரத்திலே சட்டமன்றத்தின் முன்னாலே வைத்து அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப்பெறும் சலுகை குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்னொரு கருத்துப் பற்றிய விளக்கமும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்டோர் பாதிக்கப்படுகிற அளவிற்கு பிறப்பிக்கப்பட்ட உத்திரவு திரும்பப் பெறப்படுகிறது என்று முதல் அமைச்சர் தெரிவித்த அதே நேரத்திலே 31 சதவீதம் என்பது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டனவா ? இல்லையென்றால் எப்போது **பிறப்பிக்கப்படும்?**



மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அதிகரித்தது பற்றி அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதா என்ற பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். கொள்கை ரீதியாக அரசு ஏற்றுக்கொண்டு அறிவித்திருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையிலே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி இன்னும் பத்து நிமிடங்களிலே தெரிந்து நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, அதோடு பிற்பட்டவர்களுக்கு வருவாய் லிமிட் ஏற்கனவே இருந்த சட்டத்தில் 9,000 ரூபாய் வருவாய் லிமிட் இருந்தது. அதையும் மாற்றி இப்பொழுது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த உத்தரவுகூட எல்லா இலாக்காக்களுக்கும் சென்று சேரவில்லை. பத்திரிக்கையில் வந்ததே தவிர அதிகாரப்பூர்வமாக ஜி. ஓ. அல்லது திருத்தச் சட்டத்தின் மூலம் இலாக்காக்களுக்குச் சென்று சேரவில்லை. அதற்கான ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அதைத்தான் கேட்டார்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ.) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம்செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை'' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1980

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கல் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன்அறிமுகப் படுத்துகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம்செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முனவடிவு 1980

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்ய பெற்றிருக்கிறது.

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்
பொது விவாதம்— தொடர்ச்சி.

திரு. எம். ஏ. லத்திப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பட்டுள்ள நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஆளுநர் உரையை மிகத் தெளிவாக கவனமாக நான் படித்துப் பார்த்தேன். அதிலே எந்தவிதமான உயிரோட்டமும் காணவில்லை. உயிரோட்டம் இல்லாத, உற்சாகம் இல்லாத, உத்வேகம் இல்லாத, உப்பு சப்பு இல்லாத, நம் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுமா என்ற நம்பிக்கை கூட இல்லாத ஒரு உரையாக ஆளுநர் உரை அமைந்து இருப்பதை நான் பார்க்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின் மீது இங்கே விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. பல்வேறு உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். இன்னும் பேச இருக்கிறார்கள். பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் விவாதங்கள் தொடங்கப்பட்ட நாளில் இருந்து இந்த ஆட்சி என்ன திட்டங்களைச் சொல்லியிருக்கிறதோ, அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய, இந்த ஆட்சியின் நாயகர் என்று சொல்லப்படுகிற, மாண்புமிகு முதல் அமைச்சர் இந்த அவைக்கே வராமல், கோட்டைக்கு வந்தாலும் சபைக்கு வர மாட்டேன் என்று சபதம் எடுத்துக் கொண்டு செயலபட்டு வருவது, ஜனநாயகத்தையும், அரசியல் சட்டத்தையும், அரசியல் சட்டம் இந்த அவைக்கு அளித்திருக்கிற உரிமைகளையும் அந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அவர் பெற்றிருக்கிற கடமையையும் அவர் தொடர்ந்து உதாசீனம் செய்து வருகிறார் என்பதைத்தான் இது தெற்றென நமக்கு விளக்குகிறது. ஆனால் அரசியல் சட்டத்திற்கு மாறாக நடப்பது என்ற முடிவுக்கு, தம்முடைய சொல்லால் இல்லா விட்டாலும், செயலால் மாண்புமிகு முதலமைச்சர், அவர்கள் வந்திருக்கிறார்கள். என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதை இந்த அவையும், அவைக்கு அப்பால் உள்ள நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்தமான நன்மைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மத்திய அரசும் கவனிக்கவேண்டும் என்ற கருத்தை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள முக்கியமான இரண்டு கொள்கைப் பிரச்சினைப் பற்றி அண்மையிலே தங்களுடைய ஆட்சியினுடைய நிலையை தெளிவாக விளக்கி பத்திரிகைக்குச் செய்தி வெளியிட்டார்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதிலே முக்கியமானது மதுவிலக்குப் பிரச்சினையைப் பற்றியது ஒன்று. இரண்டாவது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகையைப் பற்றியது. இந்த அரசு ஏற்கெனவே மேற்கொண்ட நிலையைப் பற்றியது ஒன்று. மாறுதலைப் பற்றியது மற்றொன்று. இந்த இரண்டும் முக்கியமான கொள்கைப் பிரச்சினை. மதுவிலக்குப் பிரச்சினை என்பது இன்றைக்கு உருவானது இல்லை. நீண்ட காலமாக உள்ள பிரச்சினை. அப்போது மாண்புமிகு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன நிலையை மேற்கொண்டார்கள்? மூதறிஞர் இராஜாஜி அவர்கள என்ன நிலையை மேற்கொண்டார்கள்? பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் என்ன நிலையை மேற்கொண்டார்கள்? ஏனைய முதலமைச்சர்களும், இந்த நாட்டிலே இருந்த ஏனைய அமைச்சர் பெருமக்களும் என்ன நிலையை மேற்கொண்டார்கள் என்பது நாடு அறிந்த உண்மை.

அது மட்டுமல்ல. இடைக்காலத்திலே இங்கே மதுவிலக்குக் கொள்கை தள்ளி வைக்கப்பட்டபோது என்னென்ன பேச்சுக்கள் பேசப்பட்டன? முதலமைச்சர் என்னென்ன பேசினார், அவர் என்ன நிலையை மேற்கொண்டார் என்பது நாடு அறிந்த உண்மை. இந்த நிலையிலே முக்கியமான கொள்கைப் பிரச்சினையைப்



பற்றி முதல் அமைச்சர் அவர்கள், கவர்னர் அவர்கள் அவையைக் கூட்டி இருக்கிறபோது Technically the House is in session but only the deliberations commenced from 30th January, 1980 அந்த நிலையிலே சட்டப்படி சட்ட சபையை கவர்னர் அவர்கள் கூட்டிய பிறகு அவையிலே அறிவிக்க வேண்டிய கொள்கைப் பிரச்சினையை மாண்புமிகு முதல அமைச்சர் அவர்கள் வெளியே வெளியிடுகிறார்.

இன்னொரு கொள்கைப் பிரச்சினை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகையைப பற்றி மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். முன்பு எவ்வளவோ கேட்டுக் கொண்டும், வேண்டிக் கொண்டும் பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைமீது இப்படி மண்ணை வாரி வீசுகிறீர்களே, ஆண்டாண்டு காலமாக தமிழ்நாட்டில தோன்றிய தன்மான இயக்கத் தலைவர்கள் போராடிப் பெற்ற உரிமைகளில், சலுகைகளில் எல்லாம் கை வைக்கிறீர்களே என்று கேட்டுக் கொண்டும் செவிசாய்க்க முதல் அமைச்சர் மறுத்து விட்டார்கள்.

[முற்பகல் 10.30]

ஆனால் திடீரென்று ஒரு அறிக்கை வெளியிடுகிறார். அவர் அப்படித்தான்: தான் நினைக்கும்போது அறிக்கை வெளியிடுவார்; தான் நினைக்கும்போது திரும்பவும் பெற்றுக்கொள்வார். அவர் அறிவிப்பில் எந்தவிதமான பொருளும் இருப்பதாக நான கருதவில்லை. இப்போது பிற்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு 31 சதவிகிதம் என்பதை 50 சதவிகிதம் என்று உயர்த்தியிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருப்பதன் மூலம் It calls for additional financial commitment. இப்படி உயர்த்துகிறபோது அதிகமான நிதி அதற்குத் தேவைப்படுகிறது. இது நிதி தொடர்பான ஒரு விஷயம். இந்த நிதி தொடர்பான விஷயத்தை, சட்டசபை கூட்டப்பட்டு இருக்கும்போது, சட்டசபைக்கு வெளியே, இந்த அவையில் அறிவிக்க வேண்டிய கருத்தை அறிவித்து இருப்பது அரசியல் சட்டத்தை நான் மதிக்க மாட்டேன்; அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நான் நடக்க மாட்டேன்.................

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இங்கே ஒரு பிரச்னையை எழுப்பி அரசியல் சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீறி இருப்பதாக இங்கே ஒரு குற்றச்சாட்டை எழுப்பி இருக்கிறார்கள். 31 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு என்று இருப்பதை 50 சதவிகிதம் என்று உயர்த்தி இருப்பதால் (குறுக்கீடு) எந்த விதமான சட்டமீறலும் இல்லை. அவா சொன்னது அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1980 பிப்ரவரி 5

வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிய நிலையில் அவையைக் கலக்காமலேயே எப்படி அறிவிக்கலாம். அது அரசியல் சட்டத்தை மீறிய குற்றமாகும் என்று குற்றச்சாட்டு மாண்புமிகு லத்தீப் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள்.

அதிகமான இடங்கள் ஒதுக்கியிருப்பதால, அதற்கென தனிப்பட்ட கூடுதலான நிதி தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் சொல்வதை அமைச்சர் பொறுப்பில இருக்கிற அவர் நிச்சயமாகப் புரிந்து கொண்டார், புரிந்து கொண்டு இருப்பார் என்று நினைக்கிறேன். நான் சொல்வது It is not only an additional commitment on the State finance but also divertion of State finance.

THE HON. THIRU G. R. EDMUND : Sir, there is no necessity either for sanction for additional funds or for diversion.

திரு. எம்.ஏ. லத்தீப் : ஒருகுறிப்பிட்ட இடத்திற்கு என்று இருந்தது இன்னொரு இடத்திற்கு மாற்றப்படுகிறது. பொதுவாக ஒரு புதிய கொள்கையை அறிவிக்கவும், ஏற்கனவே இருந்த கொள்கையை மாற்றியமைக்கவும், இந்த அவையின் அனுமதி தேவை. ஏனென்றல் இது நிதி குறித்த பிரச்னையாகும். அது மட்டுமல்லாமல், இது ஒரு அடிப்படைக் கொள்கை விஷயம். அதற்கு இந்த அவையின் ஒப்புதல் தேவை. இந்த அவையின் ஒப்புதல் பெறாமல் இந்த அவைக்குத் தெரிவிக்காமல், இந்த அவைக்கு வெளியே அவர் அந்த விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். இது அரசியல் சட்டத்தை மீறிய பிரச்னை என்பது என்னுடைய கருத்தாகும். மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் வேண்டுமானால் என்னுடைய கருத்தில் இருந்து மாறுபடலாம். அந்த உரிமை அவருக்கு இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அரசியல் சட்டத்தை மீறியிருக்கிறார். இந்த அவையின் அதிகார வரம்பிலே தலையிட்டு இருக்கிறார். இந்த அவையின் அதிகாரத்தைத் தான் வைத்து நடத்துவதுபோல், அவையை மதித்து நடக்கமாட்டேன் என்று தன்னுடைய இஷ்டம்போல் அதை அவர் வெளியே சொல்லியிருக்கிறார்.



1980 பிப்ரவரி 5] [திரு. எம். ஏ. லத்தீப்]

சரி, சொல்லிவிட்டார், சொல்லிவிட்டு, அந்த இரண்டு முக்கியமான கொள்கை அறிவிப்பை ஆளுநர் உரையில் இணைத்து இருப்பாரா என்று நான் துருவித் துருவிப் பார்த்தேன். அதில் கொடுக்கப்பட வில்லை. இது ஒரு முக்கியமான பிரச்னை இல்லையா என்பதை மாண்புமிகு திரு. எட்மண்ட் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மதுவிலக்குப் பிரச்னை, முக்கியமான பிரச்னை இல்லையா? மதுவிலக்குப் பிரச்னை சட்டத்தின் மூலமாக நடைமுறைப் படுத்தப்படுகிற ஒன்றாகும். இந்த மது விலக்குக் கொள்கை இந்த மாநிலத்தில் இந்த அவை உருவாக்கிய சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிற ஒன்றாகும். ஆகவே, அது சட்டத்தின் அடிப்படையில் நடைபெறுகிற ஒரு விஷயம், அதில் மாற்றம் செய்யவேண்டும் என்றால், இங்கே சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். இங்கே சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பு இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று ஒரு கொள்கையை வகுத்துச் சொல்ல வேண்டிய ஒரு கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியே சொல்வது ஜனநாயக முறைக்கு மீறிய எவ்வளவு பெரிய செயல் என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட மக்கள் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. அந்தப் பிரச்னை பற்றி நீங்கள் வெளியே சொல்லியிருக்கிறீர்கள். கவர்னர் உரையில் அது குறித்து ஏதாவது சொல்லியிருக்கிறீர்களா என்றால் இல்லை. நான் வெளியே எதை வேண்டுமானாலும் சொல்வேன், என்ன வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் மக்களை ஏமாற்ற நான் அறிவிப்பேன், அந்த அறிவிப்பைப் பயன்படுத்துவேன், ஆனால் சட்டப்படி கவர்னர் உரையில் நான் அதைச் சேர்க்கமாட்டேன். அப்படி நான் சேர்த்து விட்டால், அது சட்டப்படி என்னைக் கட்டுப்படுத்தும். சட்டப்படி கட்டுப்படுத்தும் காரியத்தை நான் செய்யமாட்டேன். மக்களை ஏமாற்றுவேன். சட்டத்தின்மூலம் கட்டுப்படுத்தும் எந்தக் காரியத்தையும் நான் செய்யமாட்டேன். தேவையிருக்கிறபோது தேவையான அளவிற்கு நான் என்னுடைய பிரகடனங்களை, என்னுடைய பேச்சுக்களை மாற்றிக்கொள்வேன். தேவையாக இருந்தால் இப்படிச் செய்வேன், இல்லாவிட்டால் இப்படிச் செய்வேன் என்று ஒரு உள்நோக்கத்தோடு செய்யப்படுகிற காரியமாக இது இருப்பதோடு மட்டுமல்லாமல், இந்த அவையை வெளிப்படையாக அவமதிக்கும் காரியமாகவும் அமைந்து இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிற அமைச்சரவை, சட்டத்தையும், இந்த அவையின் அதிகாரத்தையும், உரிமைகளையும் மீறி நடந்து இருப்பதோடு மட்டுமல்லாமல், அரசியல் சட்டப்படி நான் ஆட்சி செய்யமாட்டேன் என்று சொல்லி முதல்வர் அவர்கள் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கிறார்கள். There is a grave constitutional crisis in the State, என்ற

அளவுக்கு இந்த ஆட்சி எவ்வளவு நாட்களுக்கு அமைந்திருக்கும் ; சட்டப்படி நடக்காமல் எவ்வளவு நாட்களுக்கு இந்த ஆட்சி இருக்கும் ; சட்டத்திற்கு விரோதமாக எத்தனை நாளைக்கு ஒரு ஆட்சி நீடித்திருக்கும் என்பது கேள்வி. அதுமட்டுமல்ல; யார் அரசியல் சாசனத்தின்படி மக்களுடைய உடைமைகளை, உரிமைகளைக் காப்பாற்ற அதிகாரம் பெற்றிருக்கிறார்களோ, தமிழ்நாட்டு மக்களுக்குக் கடமையாற்ற அதிகாரம் பெற்றிருக்கிறார்களோ அவர்கள் உரியமுறையிலே கடமையாற்ற முற்படுவதற்கு முதலமைச்சருடைய செயல்கள் அவர்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும்; செயல்படத் தூண்ட வேண்டும் ; அப்படிச் செயல்பட வேண்டும் என்று இந்த அவை விரும்புகிறது, என்று நான் என்னுடைய கருத்துக்களை அவையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் யாரிடத்திலும் காழ்ப்பு உணர்ச்சி கொண்டு சொல்லவில்லை. என்னுடைய பேச்சிலே வேகம் இருக்கும் ; ஆனால் யார் மீதும் காழ்ப்பு உணர்ச்சி இருக்காது. நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் ; உங்களையே சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த நேரத்தில் வேகத்தைக் காட்ட வேண்டுமோ அந்த நேரத்தில் வேகத்தைக் காட்ட வேண்டும் : ஆனால் அதே நேரத்தில் விவேகம் குறையாமல் காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பலமானவர்கள் பலஹீனமானவர்களை அழிக்கக் கூடாது. பல ஹீனமானவர்களால் பலமானவர்களை எதிர்த்து நிற்க முடியாது. பலமானவர்களை அழிக்கும் சக்தி பலகீனமானவர்களுக்கு இல்லை. இதுதான் இயற்கை நீதி. சமுதாயத்திலே நடைபெறுகின்ற சில நிகழ்ச்சிகளை நாம் பார்க்கிறோம். வரலாற்றுச் சான்றுகளும் இருக்கின்றன. பலமானவர்கள் இன்றைக்கு பலஹீனமானவர்களை அழித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் பலமானவர்கள் தாங்களே அழிந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? பலமானவர்கள் தம்மைத் தாமே அழித்துக்கொள்கிறார்கள். தங்களுடைய செயலால், சொல்லால் தம்மைத் தாமே அழித்துக் கொள்கிறார்கள். இதைத்தான் கழிந்தகாலத் தேர்தல் காட்டுகிறது.

உங்களுக்கு நான் சொன்னேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் சொல்லி, இன்னும் 100 நாள் ஆகவில்லை என்று கருதுகிறேன். கடந்த சட்ட மன்றக் கூட்டத்தின் போது சொன்னேன். அண்ணா அவர்களின் தத்துவத்தை மனதிலே கொண்டு, தூய உள்ளத்தோடு; உள்ள சுத்தியோடு நீங்கள் செயல்பட்டால் 100 ஆண்டுகள் கூட ஆட்சி நடத்தலாம். அதற்கு மாறாக பலஹீனமானவர்களை அழிக்க வேண்டும் ; அரசியல் சட்டத்தை மதிக்கக் கூடாது ; எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம் ; எப்படி வேண்டுமானாலும் செயல்படலாம் என்று நினைத்தால் நீங்கள் 100 நாள் கூட



இருக்கமாட்டீர்கள் என்று நான் சொல்லி 100 நாள் இன்னும் ஆகவில்லை. 100 நாட்களுக்குள் இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது ? இன்றைக்கு சட்டசபை இருக்குமா? அமைச்சரவை இருக்குமா? அமைச்சரவை கலைக்கப்படுமா? சட்டசபை கலைக்கப்படுமா என்ற விவாதங்கள் இங்கேயே நடைபெறுகின்றன. அமைச்சர்கள் எத்தனை நாள் இருப்பார்கள் என்று அமைச்சர்களே கேட்டுக் கொள்கிறார்கள். வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் உள்ளத்திலே அப்படி கேட்டுக் கொள்கிறார்கள். ஏன் இந்த நிலைமை என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்.

நான் என்ன சொன்னேன் ? முஸ்லீம் மக்களின் ஆதரவைப் பெற்றவன், முஸ்லீம் மக்களின் சார்பாக நான் ஒருவன்தான் பேசுகிறேன் என்று சொன்னபோது, முஸ்லீம்களுக்கு ஆதரவாகப் பேச நீ யார் என்று கேட்டார்கள். நான் ஆணவத்தோடு சொல்லவில்லை; அடக்கத்தோடு சொல்கிறேன். நிலைமை என்ன? இன்றைக்கு என்ன முடிவு ஏற்பட்டிருக்கிறது ? வார்த்தைகளை அள்ளி வீசலாம், பலம் உள்ள இடத்திலே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். பலமற்றவனை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பலஹீனப் படுத்தலாம் என்று அன்றைக்கு நினைத்தீர்கள். முதலமைச்சர் அந்த இடத்திலே இருந்து சொன்னார்கள். அந்த இடத்திலே இருந்து முதலமைச்சர் என்ற முறையிலே பேசி விடலாம். பேசுவது எளிது. பலமுள்ளவர்கள் பலவீனமானவர்களை அன்போடு அணைத்துக் கொள்வதுதான் பேராண்மைக்கு அழகு ; பெருந்தன்மைக்கு அழகு. அதற்கு மாறாக பலஹீனர்களை மேலும் பலஹீனர்களாக ஆக்க வேண்டுமென்று நினைத்தால் அது உலகத்திற்கே பலஹீனம் ஆகும்.

பலம் எது, பலஹீனம் எது என்பதை முதலில் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். வரலாற்றைப் பார்க்க வேண்டும். உலகத்தையே அழித்துவிட வேண்டுமென்று நினைத்து அணுகுண்டை உருவாக்கினார்கள். அணுகுண்டின் பலம் உலகத்தை அழித்து விடலாம். நகரங்களை அழித்துவிடலாம், அப்படி அழிக்கப்பட்ட ஹிரோஷிமா என்னவாயிற்று ? இன்றைக்கு அந்த ஹிரோஷிமா புத்துயிர் பெற்று, பூகோளத்திலே இடம் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10-40]

அணுகுண்டைவிட அதிக பலம் வாய்ந்தது கோபால்டு பாம். ஆனால் அதை எல்லாம் விட உலகத்திலேயே மிகப் பெரிய ஆயுதம் ஒன்றிருக்கிறது. அதுதான் பலஹீனமானவர்களாக, ஏழைகளாக, எண்ணிக்கையிலே குறைவானவர்களாக, வாழ்க்கைக்கு வழி இல்லாதவர்களாக இருக்கின்றவர்கள் விடுகின்ற பெருமூச்சு. அந்தப் பெருமூச்சானது அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகர்களையே அழிக்கின்ற சக்தி உடையது. பேரணாம்பட்டிலே முஸ்லீம் சமுதாயத்திற்குப் பாதிப்பு ஏற்பட்ட

போது, அவர்கள் அநீதிக்கு உள்ளாக்கப்பட்டபோது நாங்கள் உங்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். அநீதியாக எதையும் செய்ய வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. எங்களுக்கு நீதியைச் செய்யுங்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பைத் தாருங்கள் என்றுதான் கேட்டோம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எங்களுடைய கோரிக்கைக்குப் பதில் சொல்லாதது ஒரு புறம் இருக்கட்டும், அந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க அவரால் முடியவில்லை. அவ்வளவு உதாசீனம். ஆனால் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் நாட்டிலே ஒரு சம்பவம், அதாவது உத்திரப் பிரதேசத்தில் உள்ள நாராயுணபுரத்திலே நடந்த சம்பவம் தொடர்பாக, இந்த பாரதத்தினுடைய, பரந்த பூபாகத்தை, ஆளுகின்ற நம்முடைய பிரதமர் அவர்கள் அங்கே போய் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. பாராளுமன்றத்திலேயிருந்து ஒரு குழுவையே ஏற்படுத்தி, 4 பேர் கொண்ட அக்குழுவை அங்கே அனுப்பி விசாரிக்குமாறு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தக் குழுவிலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர் ஒருவரும் இடம் பெற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களிடத்திலே நீதியைக் காண முடியவில்லை, மாண்புமிகு சத்தியவாணிமுத்து அவர்களே, நீங்களே அங்கே போய்ப் பார்த்துவிட்டு வந்து பின்னர் உங்களுடைய முதலமைச்சருக்கு உணர்த்துங்கள் என்ற அளவிலே ஒரு குழுவிலே இங்குள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரையும் சேர்த்து அனுப்பி இருக்கிறார்கள். அந்தக் குழு என்ன செய்கிறது என்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு அந்த மனம் இருந்தது அல்லவா ? அவ்வாறு உடனடியாக ஒரு குழுவை அங்கே அனுப்ப வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள் அல்லவா அதுதான் எங்களுக்குப் பெரிது.

இங்கே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதே அவையிலே முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்களை நாங்கள் ஆதரிக்கிறோம். உங்களைக்கூட நாங்கள், முதலமைச்சராக வீர வேண்டும் என்று முன்பு சொன்னோம். ஆனால் நீங்கள் என்ன சொன்னீர்கள். முஸ்லீம்களைப்பற்றி மட்டுமே நான் பேசுகிறேன் என்றும், நான் மற்றவர்களின் வாக்குகளையும் பெற்றுத்தான் வந்திருக்கிறேன் என்றும் நீங்கள் சொன்னீர்கள். முன்பு ஒரு பிரச்சினை வந்தது. அதாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே உருது பேசுகின்ற மக்களைச் சேர்க்க வேண்டும் என்று சொன்னபோது அன்றைக்கு அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு. க. இராசாராம் அவர்கள் சட்டத்திலே இடம் இல்லை என்று சொன்னார்கள். அவர் அன்றைக்கும் அப்படித்தான் பேசினார். இன்றைக்கும் அப்படித்தான் பேசுகிறார். அவரைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் என்ன





சொன்னார்கள் தெரியுமா ? சட்டத்திலே இடம் இருக்கிறதோ இல்லையோ , ஆனால் எங்களுடைய உள்ளத்திலே இடம் இருக்கிறது என்று டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு அவர்கள் சொன்னதைத்தான் நாங்கள் பெரிதாகக் கருதுகிறோம். பெரிய சலுகைகள் கிடைக்கின்றன என்பது முக்கியமல்ல. (மணியடிக்கப்பட்டது). அதாவது பலம் உள்ளவர்கள், அதிகாரத்திலே இருப்பவர்கள் என்ன மனப்பக்குவத்துடன் இருக்கிறார்கள் என்பதிலே தான் நாங்கள் அக்கறை காட்டுகிறோம். அப்போதுதான் நாங்கள் சொன்னோம், டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு சொர்க்கத்தைத் தந்தால் கூட நாங்கள் மகிழ்ச்சி அடைய மாட்டோம், அவருடைய உள்ளத்திலே இடம் இருக்கிறது என்று சொன்னார்கள் அல்லவா, அதைத்தான் பாராட்டுகிறோம் என்று சொன்னோம். அந்த மனப் பக்குவத்தை நீங்கள் பெற்றாக வேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். அந்த வீரனை நான் பாராட்டுகிறேன். தங்களுடைய சமுதாயம் அழிக்கப்படுகிறது, தங்களுடைய சமுதாயத்தினுடைய நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்படுகின்றன என்று போன சட்டமன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். எந்த அளவுக்கு இந்த நாட்டிலே, தமிழகத்திலே, அரிசன மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று அண்மையிலே வெளியிடப்பட்ட மத்திய அரசினுடைய அறிக்கையிலே பார்க்கிறோம். அந்த மக்கள் அநீதிக்கு ஆளாக்கப்படுகின்ற நிலைமை அதிகமாகி வருகிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது. அந்த அறிக்கையைப் பார்த்துவிட்டு மாண்புமிகு திரு. சௌந்தரபாண்டியன் அவர்களை நோக்கி நீங்கள் ஆட்சியிலே இருக்க வேண்டுமா என்று கேட்டோம். அவருடைய மனச்சாட்சி, தூங்கிக் கொண்டிருந்த மனச்சாட்சி விழித்துக் கொண்டது. தன்னுடைய சமுதாயம்தான் பெரிது என்று கருதி தன்னுடைய சமுதாயத்திற்காக ராஜிநாமா செய்த அந்த சௌந்தரபாண்டியன் அவர்களை நான் பாராட்டுகிறேன். ஆனால் எங்களுக்கும் ஒரு அமைச்சர் இருக்கத்தான் செய்கிறார். அவரைப் பொறுத்தவரையிலே எப்படி இருந்தாலும் அமைச்சர் பதவியிலே இருக்க வேண்டும் என்பதுதான்................

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் எங்கோ போய் கடைசியில் என் பக்கம் வந்து கொண்டிருக்கிறார். அரசியலிலே வெற்றி தோல்விகள் பல்வேறு காரணங்களால் ஏற்படுகின்றன. அவரவர்கள் அதற்கு ஒவ்வொரு காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஒட்டு மொத்தமாக மத்தியிலே இந்திரா அம்மையார் தலைமையிலே ஆட்சி வரவேண்டும் என்று மக்கள் விரும்பி அவருடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கிறது. அதற்கு பலபேர் உறுதுணையாக இருப்பார்கள். பலபேர் எதிர்த்திருப்பார்கள். எனக்கு திரு. லத்தீப் அவர்களைப் பற்றித் தெரியும். அவர் நல்லவர்தான். ஏதோ உணர்ச்சி வயப்பட்டு அவர் பேசிக் கொண்டிருக்கிறார், அதில் குறுக்கிட வேண்டாம் என்று நினைக்கிறேன். ஆனால், நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இப்போதிருக்கிற சூழ்நிலையில் நெருக்கடி வருகிறபோது, ஒரு கட்சிக்கு நெருக்கடி வருகிறபோது, தெளிவாக உறுதியாக நிற்க வேண்டும்; அதைவிட்டு விட்டு ஓடுகிறவன் ஆண் மகன் அல்ல, வீரன் அல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே.............

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> மன்னித்து விடுங்கள், நான் பேசி முடித்து விடுகிறேன், நீங்கள் பேசலாம்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, வேறு பகுதிக்குச் செல்வதற்கு முன்னாலேயே சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், அவருடைய பேச்சில் குறை கூறவோ, குறுக்கிடவோ நினைக்கவில்லை. இந்த அறிவுரையை நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அங்கே வந்தபோது அமைச்சர் ராஜா முகமது அவர்கள் சொல்லி இருந்தால் அவரைப் பாராட்டியிருக்கலாம்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> கட்சிக்கு இடையூறு வந்தது என்றால் அந்த இடையூறுகளுக்கு, முடிவுகளுக்கு என்ன காரணம் என்று கட்சி பரிசீலிக்க வேண்டும் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள் நான் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எழுந்து பேசிக் கொண்டிருக்கிறார். நான் பதில் சொல்லியதற்குப் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே வந்து இப்படி ஏதாவது சொல்வதினால் வீரன் என்று ஆகிவிடாது.......... (கூச்சல், குழப்பம்.)

மன்னிக்க வேண்டும், நான் இன்னும் பேசியே முடிக்கவில்லை. அதற்குள் நான் மிரட்டுகிறேன் என்று மிரளுகிறார்.... நான் சாதாரணமாக பேசிக் கொண்டிருக்கும்போது ஏன் மிரளுகிறார் என்று தெரியவில்லை. ஒரு கட்சியின் வெற்றி தோல்விகள் மாறி மாறி வரும் என்பது எல்லோருக்கும் தெரியும். குறைபாடுகளை உணர்த்துகிறார்கள். பொறுமையோடு கேட்டுக் கொண்டிருக்கிறோம். முடிந்த வரையில் பிரச்னைகளை வேண்டிய வகையில் அதிகாரிகளிடம் சொல்லி செய்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக குறைபாடுகளே இல்லை என்று சொல்லவில்லை. அவைகளை முடிந்த வரையில் களைந்து கொண்டிருக்கிறோம்.



திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது இங்கேயும் ஒரு அமைச்சர் இருக்கிறார் என்று சொன்னார்கள். இந்த அமைச்சர் சட்டத்திற்கு உட்பட்டு சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் பலதரப்பட்ட சமுதாயம் இருக்கக்கூடிய நாடு இது. அந்த அடிப்படையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார் இந்த அமைச்சர். நான் மத நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். மத வெறியன் இல்லை. நான் இங்கே ஜாதிக்காக இல்லை, தமிழ் சமுதாயத்திற்காக இருக்கிறேன். அவர்களுக்குத் தெரியும். கொள்கைக்காக கட்சி மாறியதாக வேண்டுமானால் பேசலாம். கொள்கை ரீதியாக என்று வரும்போது அது தனியாக விவாதிக்கப்பட வேண்டிய விஷயம். அவர் ஏதோ உணர்ச்சி வயப்பட்டுப் பேசுகிறார். ஆனால், அதற்காக வீரன் அல்ல என்பது போலெல்லாம் பேச வேண்டாம்...... (கூச்சல், குழப்பம்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> தயவுசெய்து நிற்காதீர்கள். உட்காருங்கள். கலைஞர் பேசினார், அதற்கு அமைச்சர் பதில் அளித்தார் ; இப்பொழுது திரு. லத்தீப் பேசப் போகிறார். முதல் வரிசையில் உள்ளவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக மற்றவர்களுக்கும் பேச உரிமை இல்லை என்று சொல்லவில்லை ; எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால், எல்லோருக்கும் அனுமதி கொடுத்துக் கொண்டே வந்தால் அவை நடக்காது. திரு. லத்தீப் அவர்கள் பேசட்டும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவர் அவர்களே, அவர்களுக்கு செக்யூலரிசத்திலே நம்பிக்கை இருப்பது பற்றி நன்றி. செக்யூலரிசம் என்பது தன்னைத்தானே அழித்துக் கொண்டு செக்யூலரிசத் தத்துவதற்கு உயர்வு கொடுப்பது. அதுதான் அவருடைய வாதமாக இருந்தால் அவருடைய எண்ணத்திற்கு நான் குறுக்கே நிற்கவில்லை.

[முற்பகல் 10-50]

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் திரும்பத் திரும்பத் ஏதோ என்னைப்பற்றி ஒரு தவறான அபிப்பிராயத்தை உண்டாக்க முயற்சிக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். எனக்குத் தெரியும். நான் தெளிவான கொள்கையுடையவன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் "செக்குலரிசம்" என்றால் ஒரு சமுதாயத்தை அழித்து மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பது என்பதல்ல, தன் சமுதாயத்தைக் காப்பாற்றி மற்றவர்களோடு

இணைந்து வாழ்வதுதான் அந்த சமுதாயத்திற்கு நன்மை செய்வதாகும். '' லக்கும் தீனுக்கும் வலியுதீன் '' என்று நாம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறோமே. நாம் எந்த மதத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோமோ, மரியாதை கொடுக்கிறோமோ, அதே மரியாதை மற்ற மதத்திற்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் திருமறை வலியுறுத்துகிறது. அந்த அடிப்படையில்தான் நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேனே தவிர, ஒன்றைத் தியாகம் செய்து இழந்து மற்றவர்களுக்காக நான் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. சமுதாயத்திற்கும் நன்மை செய்கிறோம், இந்த இனத்திற்கும் நன்மை செய்கிறோம் என்ற பொது அர்த்தத்தில் தான் அதைக் குறிப்பிட்டுருக்கிறேன். அந்தக் கொள்கையைத் தான் நான் பின்பற்றி வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப், நேரமாகி விட்டது. 10–25-க்கு நீங்கள் ஆரம்பித்தீர்கள். இப்போது 10–50 ஆகிறது. இரண்டு நிமிடங்கள் வேண்டுமானால் இப் பிரச்னையில் போயிருக்கலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமறையை இங்கே சுட்டிக்காட்டினார்கள். மகிழ்ச்சி. திருமறையை இங்கே சுட்டிக்காட்டினால் மட்டும் போதாது. அந்த திரும்றையை முறையாக புரிந்துகொண்டிருக்க வேண்டும். '' லக்கும் தீனுக்கும் வலியுதீன் '' என்ற வசனத்தை அவர்கள் படித்துக் காட்டி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அந்தப் பிரச்னையை விட்டுவிட்டு பேரவை முன்னுள்ள பிரச்னையைப் பற்றிய விவாதத்திற்கு வந்தால் நல்லது.

திரு. எம். ஏ. லத்தீப் : அவர்களுடைய மார்க்கம் அவர்களுக்கு, உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு என்பதுதான் அந்த வாதம். அதைத்தான் கூறியிருக்கிறார்கள்: அவரவர்கள் மார்க்கத்தை அவரவர்கள் சுதந்திரமாகப் பயன்படுத்த உரிமை உண்டு என்பதுதான் திருமறையில் உள்ள அந்த வாக்கியத்தின் மூலப் பொருளாகும். ஆனால், இங்கே அவர்களுடைய மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டாம், இங்கே இந்து ராஷ்ட்ரம் வேண்டும் என்று சொல்கிற ஆர்.எஸ்.எஸ். காரர்கள் இந்த நாட்டில் இருக்க வேண்டும் என்று சொல்கிற முதல் அமைச்சரின் ஒரு அமைச்சரவையில் இருந்துகொண்டு சமுதாயத்தைப் பற்றிப் பேசுகிற வெட்கங் கெட்ட நிலை..........

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நான் அவர்களைப் போல் ஆத்திரப்பட்டுச் சொல்லவில்லை. ஒரு விளக்கத்திற்காகச் சொல்கிறேன். ஆர்.எஸ்.எஸ். சேர்ந்தது ஜனதா, அந்த ஜனதாவோடு சேரலாமா என்று கேட்டார்கள். வெட்கம் கெட்டுப்





போய் கேரளாவில் கூட்டு சேர்ந்து கொண்டு அங்கே தேர்தலில் நின்றீர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அதைப்பற்றி அப்போது கேட்டபோது அவர்கள் சொன்னார்கள், அங்கே ஆர்.எஸ்.எஸ். இல்லை, அது பழைய காங்கிரஸ் என்று. இதைத்தான் முதல் அமைச்சர் அவர்களும் சொன்னார்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஜனதா பழைய காங்கிரஸ்தான் என்று. வாதங்களை எப்படியும் வைக்கலாம். இதிலே வெட்கம், மானம் வீரம் என்பதைப்பற்றியெல்லாம் சொல்லி (குறுக்கீடு) திரும்பத் திரும்பச் சொல்கிறேன், இதைப் பொதுமேடையில் சொல்லத் தயார். (குறுக்கீடு) நான் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு மாண்புமிகு உறுப்பினர் பொதுமேடையில் பேசுவது போல் நீ, வா, என்றெல்லாம் பேசுகிறார்கள். இது தொடர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. அதைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் பொது மேடையில் சந்திக்கத் தயாராயிருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நானும் தயாராயிருக்கிறேன், தயாராயிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதை ஏற்றுக் கொள்கிறேன் (கூச்சல், குழப்பம்).

நான் தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்களுக்காக இவ்வளவு பேர்கள் எழுந்து கொண்டு சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் என்னைச் சமாளித்தாலே போதும். அவர்கள் சவால் விட்டிருக்கிறார்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் அமைதியாக இருந்தால் போதும். அவர் சவாலை ஏற்றுக்கொள்கிறேன். அவர் எந்தத் தேதி கொடுக்கிறாறோ அந்த இடத்தில் பொது மேடையில் இஸ்லாமிய சமுதாயத்திற்கு இந்த ஆட்சி செய்திருக்கிற நன்மைகள், எங்களுடைய அரசியல் கொள்கைகள் என்ன, நீங்கள் மார்க்கத்திற்கு எந்த அளவிற்கு ஆதரவாகப் போகிறீர்கள், விரோதமாகப் போகிறீர்கள் என்று சொல்லி எங்களால் ஆதாரத்தோடு பேச முடியும். அதை நாம் சந்தித்துக் கொள்வோம். இந்த இடத்தில் பேச வேண்டிய விஷயம் என்ன என்று சொன்னால் நன்றாகயிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையில் பேசுகிறபோது சவாலாக ஒருவருக்கொருவர் பேசக் கூடாது என்பது ஒரு மரபு. நான் திரு. லத்தீப் அவர்களுக்காகச் சொல்ல வில்லை, அமருங்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, 'பேரவைக்கு ஓர் அறிவிப்பு' என்று இப்படி மொத்தமாக ஒரு அறிவிப்புத் தேவையில்லை. அப்படிச் சொல்வது சரியல்ல.

[1980 பிப்ரவரி 5

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவளேர்ககளே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே ஒருவருக்கு ஒருவர் இப்படி போட்டி போட்டுக்கொணடு பேசுவது நல்லதல்ல ; திரு. ரகுமான்கான், உட்காரவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எங்களுக்கு மட்டும் பேசத் தெரியாதா ?...... பேச அனுமதி இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான், உட்காருங்கள். யார் அதிகமாகப்பேசுகிறார்கள் என்பதற்கு, மன்ற நடவடிக்கை குறிப்பு சொல்லும். திரு. கூத்தக்குடி சண்முகம் பொதுப் படையாக 'பேரவைக்கு ஓர் அறிவிப்பு' என்று சொல்லுகிறீர்களே, அதற்கு மாறாக மன்றத்தில் யார் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொன்னார். என்னைப் பார்த்து நேரடியாக, உடனடியாகச் சொல்ல வேண்டிய ஒன்று. அதனால், நான் அனுமதித்தேன். ஆனால், உறுப்பினர் லத்தீப் அவர்களும், அமைச்சர் அவர்களும் நேருக்கு நேராக, பொது விவாதத்தில் பேசுவதைப்போல் சவால் விட்டுப் பேசுவது கூடாது. லத்தீப் அவர்கள் பேசும்போது, ' நீ ' என்று பேசுகிறார். ' நீ ' என்று சொன்னால், இந்த அவையில் அது பேரவைத் தலைவரைக் குறிப்பதாகப் பொருள். ' யு ' என்று ஆங்கிலத்தில் சொல்வது போல எடுத்துக்கொண்டால், தமிழ் எங்கோயோ போய் நிற்கும். மரியாதைகள் போய்விடும். ஆனால், அதுவல்ல பிரச்னை. திரு. லத்தீப் அவர்களும், அமைச்சர் அவர்களும் பக்கத்தில் இருப்பதினால், ஒருவருக்கு ஒருவர் காழ்ப்புணர்ச்சியுடன் சவால் விட்டுப் பேசுவது கூடாது. ஆகவே, லத்தீப் அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லி சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நடைபெற்ற ஒரு சம்பவத்தில் அவை முன்னவர் அவர்கள் அமைச்சர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததையும், அமைச்சர்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது என்றும் சொன்னதையும், நேற்று நான் அவையில் இல்லாததால், பத்திரிகையில் பார்த்தேன். உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்தேன். அவை முன்னவர் அந்த அறிவிப்பையும், எச்சரிக்கையையும் விடுத்திருக்கின்றார்கள். ஆனால், இப்போது, திரு. லத்தீப் அவர்கள் பேசும்பொழுது அமைச்சர் அவர்கள்தான் இந்த வாக்கு வாதத்தை ஆரம்பித்தார்கள். எனவே, எதிர்க்கட்சி நண்பர்கள் சற்று வேகமாகக் கேட்டால், சற்று பொறுமையோடு ஆவேசப்படாமல் இருந்தால், கூடுமான வரையில் இத்தகைய சம்பவங்களைத் தவிர்க்கலாம்.



1980 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் இன்னும் பொறுமையாக, இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதற்குமேல் இன்னும் பொறுமையாக இருக்க வேண்டுமென்றால், பேசாமல் உட்கார்ந்து கொண்டு இருக்க வேண்டும். ஆனால், தவறான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் புகுத்தக் கூடாது, வைக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் விளக்க வேண்டி வந்தது. சவால் என்றுகூட சொல்ல வேண்டியதில்லை. மன்றத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லட்டும். சமுதாயத்தைப் பற்றி, மார்க்கத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், வெளியே சொல்லலாம் என்று பொறுமையோடு, மிகுந்த தெளிவோடுதான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசுகின்றபோது தேவைப்பட்டால் அமைச்சர்கள் விளக்கம் தர வேண்டும். இரண்டு நிமிடங்களில் திரு. லத்தீப் அவர்கள் முடித்துக்கொள்ள வேண்டும். வேறு வழியில்லை.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, நீங்கள் பொதுவாக ' பேரவைக்கு ஓர் அறிவிப்பு ' என்று சொன்னதால், அதை நான் ஆட்சேபித்து எழுந்திருந்தேன். அமைச்சர் அவர்களுக்கும், லத்தீப் அவர்களுக்கும் தகராறு நடந்தபோது தாங்கள் தலையிட்டு இருந்தால், இது நடந்திருக்காது. உரியவர்களுக்கு தாங்கள் சொல்லியிருக்க வேண்டும். உரிய நேரத்தில் தலையிடாமல், இப்படிச் சத்தம் போட்டு பேசி, ஒருவருக்கு ஒருவர் சவால் விட்ட பிறகு, பொதுவாக இந்தச் சபையில் ஒரு அறிவிப்பு செய்தீர்கள். அந்த அறிவிப்பு அமைதியாக இருக்கும் உறுப்பினர்களின் மனதைப் புண்படுத்தும். ஆகவே, உரிய நேரத்தில் தலையிட வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிய நேரத்தில்தான் தலையிட்டிருக்கிறேன். பேசக் கூடாது என்று அவ்வளவு கடுமையாகச் சொல்லத் தெரியாமல் இல்லை. ஒருவருக்கு ஒருவர் பேசும்போது, பொறுப்போடு பேசுவார்கள் என்பதால்தான் அனுமதித்தேன்.

[முற்பகல் 11—00]

இந்த விவாதத்தின் மீது பேசும்போது அது இந்த அவைக்கு நல்லதொரு வழியைக் காட்டுவதாகவும் மக்களுக்கு நல்லதொரு தெளிவை உருவாக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது கூட பொதுப்படையாக ஆளுங் கட்சியைப்பற்றி சொல்லாமல் 'முதலமைச்சர் அவர்கள் வெட்கங்

கெட்டநிலையில்' என்ற முறையில் பேசும் அளவுக்கு அவர் இறங்கி இருக்கிறார். தனிப்பட்டவர்களைத் தாக்கி அப்படியெல்லாம் பேசக் கூடாது என்று பலமுறை எடுத்துச் சொல்லியும் இப்படியே அவர் வலுச் சண்டைக்கு இழுப்பது போல் பேசிக் கொண்டிருக்கிறார். நான் என்ன சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறார். திரு. லத்தீப் அவர்கள் பேசுவது ஆளுங் கட்சியை வலுச் சண்டைக்கு இழுப்பது போல்தான் இருக்கிறதே தவிர பிரச்னைகுள்ளே நின்று பேசுவதே இல்லை. இதையே அவர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

*திரு. ஜெபமணி : பாயின்ட் ஆப் ஆர்டர், சார், சபாநாயகர் அவர்களே, விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது மற்றவர்களை எப்படியாவது குத்திப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு பேச வேண்டுமென்றில்லாமல் பேசினால் நல்லது. ''இந்து ராஷ்டிரம்'' என்று பெயர் வைத்திருக்கிறார்களே என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு விளக்கம் சொல்ல ஆரம்பிக்கிறேன். ''இந்து ராஷ்டிரம்'' என்று பெயர் வைத்துக் கொண்டு எங்காவது இந்துக்கள் இஸ்லாமியர்களையோ, கிறித்தவர்களையோ வெளியே தலைகாட்ட முடியாதபடி செய்தார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. உட்காருங்கள்.

திரு. ஜெபமணி : இது பெரிய பிரச்னை. இப்படியே சென்று கொண்டிருந்தால் இந்த நாட்டில் இந்துக்களே இருக்க மாட்டார்கள். இவர்கள் நாட்டை அழித்து விடுவார்கள். இந்த நாட்டில் இந்து மதம் இருக்கக் கூடாதா ? இந்துக்கள் இருக்கக் கூடாதா ? பொறுமையாகக் கேளுங்கள். நீங்கள் இந்துப் பேப்பர் படிக்கவில்லையா? இந்து மகா சமுத்திரம் என்று இருக்கிறது? அங்கு அரபுக் கப்பல்கள் வருகின்றன. அரபிக் கடல் என்று இருக்கிறது. அங்கு நம்முடைய கப்பல்கள் செல்லுகின்றன. ஏன் இந்து என்ற பெயரையே வைத்துக்கொள்ளக் கூடாது, அந்தப் பெயரில் கட்சி இருக்கக் கூடாது என்றால் மெஜாரிட்டியாக இருக்கும் இந்து மதம் அலங்கோலத்திற்கு உள்ளாக வேண்டுமா ? எதை வேண்டுமானாலும் பேசுவதா ? அதற்கு எல்லோரும் ஒத்துப் பேசுவதா ?

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது நான் வேகமாகப் பேசலாம். ஆனால், திரு. ஜெபமணி அவர்கள் பேசும்போது நான் விவேகத்தோடு பேச வேண்டும். அதற்கு மிக நுணக்கமான காரணங்கள் இருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு அவர்களே பதில் சொல்லி விட்டார்கள். ''இந்துஸ்தான்'' என்று சொன்னதே நாங்கள். ''இந்துஸ்தான்'' என்று பாடியவர்கள் நாங்கள்.............



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

(மணி அடிக்கப்பட்டு திரு. துரை முத்துசாமி பேச அழைக்கப்பட்டார்.)

திரு. எம். ஏ. லத்தீப் : நான் அந்தப் பிரச்னைக்குள் போக விரும்பவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : உங்கள் நேரம் முடிந்து விட்டது. திரு. துரை முத்துசாமி இப்போது பேசுவார்.

மாண்புமிகு திரு. க. உ. ரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறதா என்பதைப்பற்றி விளக்கம் கேட்டிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு விதிக்கப்பட்ட வருமான வரம்பை ரத்து செய்து அரசு ஆணை ஜி. ஓ. எம். எஸ். நம்பர் 72, சோஷியல் வெல்பேர், 1—2—1980 இல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு என 31 சதவீதமாக இருந்ததை 50 சதவீதமாக உயர்த்தி அரசாணை ஜி. ஓ. எம். எஸ். நம்பர் 73, சோஷியல் வெல்பேர், 1—2—80-ல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவுகள் 24—1—80 இலிருந்து அமலில் வரும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே............

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பி. எச். பாண்டியன்) : உங்கள் நேரம் முடிந்துவிட்டது, அமருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : கன்குளூஷன்தான், முடித்துவிடுகிறேன். இந்த குடியரசு நாளிலே ஒரு குறிப்பை அரசு வெளியிட்டிருக்கிறது. குடியரசு சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்ற ஒரு குறிப்பை அரசு வெளியிட்டிருக்கிறது. அதிலே எல்லோரைப்பற்றியும் குறிப்பிடுகிறபோது முஸ்லீம்களை விட்டிருக்கிறது இந்த அரசு. நான் கேட்கிறேன் இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காக முஸ்லீம்கள் யாரும் பாடுபடவில்லையா, ஏன் மௌலானா ஹசரத் மோகானி இல்லையா, மௌலானா ஹுசேன் அகமத் மதன் இல்லையா, மௌலானா அபுல் கலாம் ஆசாத் இல்லையா, அல்லது தமிழ்நாட்டில் தோன்றிய யாராவது ஒரு முஸ்லிம் சுதந்திரப் போராட்ட வீரராக இல்லையா ஒரு முஸ்லீம்கூட இந்தப் பட்டியலில் இல்லை. முஸ்லீம்கள் இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுக்கவில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இளைஞர்கள், படிக்கின்றவர்கள் எண்ணக்கூடிய அளவுக்கு அரசின் சார்பிலே ஒரு குறிப்பு

வெளியிடப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களுக்கு விரோதமாக திட்டமிட்டுச் செய்யப்படுகிற ஏதோ ஒரு சூழ்ச்சி என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கிறது. இந்த அரசு அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதுகுளத்தூரில் கடந்த 1979 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 8 ஆம் நாள் அன்று முஸ்லீம் லீகை, குறிப்பாக முஸ்லீம்களை ஆளுங்கட்சிக்காரர்கள்—நான் குற்றத்தைச் சொல்லவில்லை இங்கே உறுப்பினர் இருக்கிறார், அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்— சூறையாடி பல்லோரை கைகால்கள் இழக்கச் செய்தார்கள். ஆனால் அவர்கள் பிராது கொடுத்தார்கள், பெட்டிஷன் கொடுத்தார்கள், நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்பட்டது. இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக மண்டும் பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி ஒரு முஸ்லீம் தாக்கப்பட்டு அவனுடைய கால்கள் உடைக்கப்பட்டு இன்றைக்கு மருத்துவ மனையிலே சாகும் நிலையிலே இருந்து கொண்டிருக்கிறான். என்ன காரணம் என்றால் கடந்த தேர்தலில் இவ்வளவு வேகமாக வேலை செய்யவில்லையே எங்களோடு இருந்தபோது, இப்போது இவ்வளவு வேகமாக வேலை செய்து திரு சத்தியேந்திரனை வெற்றிபெறச் செய்தீர்களே, உங்களை விட்டோமா பார் என்று ஆளுங்கட்சிக்காரர்கள் முஸ்லீம்களின் குடிசைப் பகுதிகளில் புகுந்து அவர்களை அடித்திருக்கிறார்கள், வேண்டுமானால் உறுப்பினர் இங்கே இருக்கிறார் அவரைக் கேட்டுக் தெரிந்துகொள்ளுங்கள், இன்னொன்று . . . . . . . . . . . . . . .

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்கள் குடியரசு நாளன்று வெளியிடப்பட்ட ஒரு குறிப்பை வைத்துக் கொண்டு விடுதலைக்காகப் போராடிய தலைவர்களின் பட்டியலை அரசு வெளியிட்டிருக்கிறது, அதிலே முஸ்லீம் தலைவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தக் குறிப்பு அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சிபற்றிய குறிப்பு. அதிலே அன்றைக்கு வந்த அலங்கார வண்டிகளைப்பற்றிய விவரங்கள்தான் இருக்கின்றன. விடுதலைக்காகப் போராடிய தலைவர்களின் பட்டியலை அதிலே அரசாங்கம் வெளியிடவில்லை. அந்த அலங்கார வண்டிகளைப்பற்றிய விவரங்கள் தான் அதிலே இருக்கின்றன என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்:</u> தலைவர் அவர்களே, இதைப் படித்துப் பார்க்க வேண்டும். இது அலங்கார வண்டிகளைப் பற்றியது அல்ல' தவறான தகவலைத் தரக் கூடாது, உரிமைப் பிரச்சனை வரும். அலங்கார வண்டிகள் என்றால் அதிலே ஒரு முஸ்லீமை சேர்த்திருக்கக்கூடாதா?



<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பி. எச். பாண்டியன்) :</u> அமருங்கள். நேரம் முடிந்துவிட்டது. அடுத்து திரு துரை முத்துசாமி.

<u>திரு. துரை முத்துசாமி :</u> பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்கின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் கொள்கைகள் பற்றியும் திட்டங்கள் பற்றியும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டு அவர் வாயிலாகப் படிக்கப்படுகின்ற உரையாகத்தான் திகழ்ந்து வந்து இருக்கிறது. இதுவரையில் அப்படித்தான் திகழ்ந்து வந்திருக்கிறது. ஆனால் 1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 30 ஆம் தேதியன்று கவர்னர் இங்கே உரையாற்றினார். அன்று தான் தேசத் தந்தை காந்தியார் அவர்கள் இறந்த நாள். அந்த நாளிலே தான் அந்த உரை ஆற்றப்பட்டிருக்கிறது. இந்த அரசு ஒரு முடிவான, உறுதியான, நிரந்தரமான கொள்கை இல்லாத அரசு என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. காந்தியார் வழியைப் பின்பற்றாத வகையிலே, காந்தியார், அண்ணா வழியிலே செல்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அரசு நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த அரசு காந்தியார் இறந்த நாளிலேதான் கவர்னர் உரையை அறிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11-10]

கவர்னர் உரை என்றால் அரசாங்கத்தின் திட்டத்தையும், கொள்கையையும் சுட்டிக் காட்டுகின்ற ஒன்றாகும். அவர்கள் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்வதாகும். கவர்னர் அவர்கள் உரையாற்றினார்கள். ஆனால் நம்முடைய தமிழக முதல்வர் எம்.ஜி. ஆர். அவர்கள், இந்தச் சட்டமன்றம் கூடுவதற்கு முன்பு சாராயச் சட்டத்தைத் தளர்த்தினார்கள் என்பதை நாம் அறிவோம். அதற்குக் கூட இப்பொழுது அமைச்சவரர்கள் விளக்கம் அளித்தார்கள். 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாளன்று அந்தச் சட்டத்தை நாங்கள் அறிவித்திருக்கிறோம் கெஜெட் மூலமாக என்று சொன்னார்கள். அப்படி இந்த அரசு மதுவிலக்குச் சட்டத்தை தளர்த்தியிருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே நேற்று முன்தினம் நம்முடைய கவர்னர் அவர்கள், பொதுச் சுகாதார நிலையம் ஒன்றின் வெள்ளி விழா ஒன்று மேற்கு மாம்பலத்திலே நடைபெற்றிருக்கின்றது. அந்த விழாவிலே கலந்து கொண்ட கவர்னர் அவர்கள்— நான் முன்பே நம்முடைய சபாநாயகரிடம் அனுமதி பெற்றிருக்கிறேன், பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தி— முன்பே சபாநாயகரிடத்தில் அனுமதி பெற்றிருக்கிறேன். ''மது பர்மிட்டை எதிர்த்து மாதர் சத்தியாக்கிரகம்— கவர்னர் யோசனை'' என்று சொல்லி அந்த வெள்ளி விழாவிலே கலந்து

கொண்ட கவர்னர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ''ஆண்கள் மது பர்மிட்டைப் பெறுவதை எதிர்த்து மாதர்களும் ஒரு சத்தியாக்கிரகம் துவங்க வேண்டும். அப்படித் துவக்கினால் அந்த சத்தியாக்கிரக இயக்கத்திற்கு நான் தலைமை தாங்குவேன் என்று தமிழக கவர்னர் பட்வாரி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்''. இந்த அளவிற்கு இந்த அரசு மது விலக்குச் சட்டத்தைத் தளர்த்தியிருப்பதாக அறிவித்து, சட்டத்தையும் கெஜெட் மூலமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் மேதகு கவர்னர் அவர்கள் நேற்று முன் தினம் பொதுக்கூட்டத்தில், வெள்ளி விழாவிலே கலந்து கொள்கின்றபொழுது, மது பர்மிட்டை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்தால் தலைமை தாங்குவேன் என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படியென்றால் கவர்னர் அவர்களின் கொள்கை வேறா என்று கேட்க விரும்புகிறேன். அரசாங்கத்தின் கொள்கைக்கும், கவர்னரின் கொள்கைக்கும் கருத்து வேறுபாடா என்று கேட்க விரும்புகிறேன். உண்மையான நிலைமை என்னவென்பதை இந்த நாட்டு மக்கள் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்.

நம்முடைய தமிழக முதல்வர் எம்.ஜி. ஆர். அவர்கள் தேர்தலுக்கு முன்பு சொன்னார்கள், நீங்களெல்லாம் அறிவீர்கள். பல அறிவிப்புகளை அறிவித்தார்கள். நான் என்னுடைய உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் இந்திரா காந்தியை இந்த நாட்டின் பிரதமராக விட மாட்டேன் என்ற சபதத்தை ஏற்றார்கள், அதைச் சவாலாக வெளியிட்டார்கள். இதனை தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் அத்தனைபேரும் அறிவார்கள். ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை அன்னை இந்திரா காந்தி அவர்கள் பெற்றிருக்கிறார்கள். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் இருக்கின்ற மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அன்னை இந்திரா அவர்கள் தமிழ்நாட்டில் 38 மணிநேரம்தான் சுற்றுப்பயணம் செய்தார்கள். 38 மணி நேரச் சுற்றுப் பயணத்தில் 38 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் 4 மாத காலம் சுற்றுப்பயணம் செய்த எம். ஜி. ஆர். அவர்கள், தமிழக அரசை நடத்திக் கொண்டிருக்கின்ற அவர்கள் இரண்டே இரண்டு இடங்களைத்தான் பிடித்தார்கள். இந்திரா காந்தி அவர்கள் 1,500 கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் 350 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அன்னை இந்திராகாந்தி அவர்களுக்கு, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலே இருக்கின்ற மக்கள் வாய்ப்பு அளித்திருக்கிறார்கள் என்றால், உலக வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அமோகமான வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், உலகத்திலே பதவி இழந்தவர்கள் மீண்டும் பதவிக்கு வந்தது கிடையாது, அன்னை இந்திரா காந்தி அவர்கள்தான் பதவியிழந்த இரண்டரை ஆண்டுக்காலத்தில் மீண்டும் பதவிக்கு வந்திருக்கிறார்கள்





என்று சொன்னால் உலக வரலாற்றிலே ஒரு சிறப்புமிக் வெற்றியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள். ஆகவே நிரந்தரமான நிலையானநல்லதிட்டங்களையும் கொள்கைகளையும் சமுதாயத்தின் அடித்தளத்திலேயிருக்கின்ற மக்களுக்காகச் செய்து பாடுபடக்கூடிய ஒரே ஒருவர் இந்திரா காந்திதான் என்று இந்த நாட்டு மக்கள் முடிவெடுத்து இருக்கிறார்கள், இப்படிப்பட்ட நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இந்த நாட்டிலேயிருக்கின்ற நிலைமைகளை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிரணியாக இருந்த, காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லீம் லீக் போன்ற கட்சிகளிலே இருப்பவர்கள் மீதெல்லாம் பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கலைஞர் அவர்கள் தொழுதூருக்கு வந்தபொழுது கார் நொறுக்கப்பட்டது. நெய்வேலி, வடலூர், குறிஞ்சிப்பாடி, கள்ளக்குறிச்சி, கடலூர் போன்ற பகுதிகளில் உள்ள காங்கிரஸ்காரர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மீது பொய் வழக்குகள் போட்டு பழி வாங்கியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் அடிபட்டவர்கள், காங்கிரஸ் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சர்ந்தவர்கள் சென்று வழக்குக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வதில்லை. பதிவு செய்வது இல்லை. ஆனால் ஆளுங்கட்சியைச் சார்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மீது ஒரு வழக்குக் கூட இல்லை. நாங்கள் கொடுத்த பெட்டிஷன்கள் அப்படியே இருக்கின்றன. எங்கள் மீது பொய் வழக்குப் போட்டிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் கொடுத்த புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டு தற்போது'கன்டிஷன் பெயிலில்' இருக்கிறார்கள். என் கட்சிக்காரர்கள் மீது ஒரு வழக்கு 307 செக்ஷன் கீழ் போடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவகையில் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் போக்கும் இருக்கிறது. நிலையான கொள்கையோ நிரந்தரமான கொள்கையோ இல்லாத நிலைமையை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்றும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்களுக்கும் இந்த அரசாங்கத்திதுக்கும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் எந்தக் கொள்கையிலும் நிரந்தரமாகச் செயல்படவில்லை. இந்தத் தேர்தல் முடிந்த உடனே சொன்னீர்கள். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கு ஏப்ரல் மாதத்தில் தேர்தல் வைப்போம் என்று சொன்னர்கள். அடுத்தாற்போல ஒரு 10 நாள் கூட ஆகவில்லை. இந்தத் தேர்தல் ஜூலை மாதம் நடைபெறும் என்று

சொன்னீர்கள். பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு தேர்தலை மீண்டும் தற்போது நடத்துவோம் என்று சொல்கிறீர்கள். நேரத்திற்கு நேரம், இடத்திற்கு இடம், வேளைக்கு வேளை உறுதியான கொள்கை இல்லாமல, ஆட்சி நடத்துகின்ற உங்களைப் பார்த்து நம்பிக்கை இழந்த மக்கள் நலல திர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். தேர்தலில் தோலவி அடைந்த உடனே எம்.ஜி.ஆர். அவர்கள் பதவி விலகப் போகிறேன் என்று சொன்னார், சினிமாவிலே நடிக்கப்போகிறேன் என்று சொன்னார். அதோடு இருந்திருக்கலாம். ஆனால் நேற்றைய முன்தினம் மாண்புமிகு செய்தி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள, முதலமைச்சர் அவர்கள் சினிமாவிலே நடிக்கமாட்டார்கள் தமழக முதலமைச்சராகப் பணி ஆற்றுவார்கள் என்று அறிவித்தார்.

அது மட்டுமல்ல. சாராயச் சட்டமும் அப்படித்தான். சென்ற ஆண்டு கவர்னர் உரையின்மீது பேசும்போது மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக ஆக்கினார்கள். நாடு கடத்துதல் போன்ற கடுமையான தண்டனையை எல்லாம் சொன்னார்கள். இந்த ஆண்டு 25 ரூபாய் கொடுத்துவிட்டால் மது பர்மிட் வழங்குகிறோம் என்று சொல்கிறீர்கள். ஆகவேதான் உங்களைப் பார்த்து இந்த நாட்டு மக்கள் சிரிக்கிறார்கள். நீங்கள் ஆளத் தெரியாதவர்கள், திறமை இல்லாதவர்கள், அனுபவம் இல்லாதவர்கள் என்ற காரணத்தினால்தான் இந்தத் தீர்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, ஏதாவது ஒரு திட்டம் என்று சொன்னால், அதை அரசும் புரிந்து கொள்வதில்லை, அமைச்சர்களும் புரிந்து கொள்வதில்லை. உணவுக்கு வேலை வாய்ப்புத் திட்டம், கவர்ன்மென்ட் எம்ப்ளாய்மென்ட் ஸ்கீம், அது மாநில அரசுத் திட்டம். உணவுக்கு வேலைத் திட்டம் என்பது மத்திய அரசுத் திட்டம். இவைகளை அமல் படுத்தி இருக்கிறார்களா? உண்மை நிலை என்னவென்று சொன்னால், எங்கள பக்கத்திலே, தென்னார்க்காடு மாவட்டத்திலே வேலைக்கு உணவுத் திட்டம் 31—12—1979 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. மத்திய அரசுத் திட்டத்தை முன்பாகவே நிறுத்தி விட்டார்கள். 11—1—1980 அன்றுதான் மத்தியிலே நாங்கள் பொறுப்பேற்றோம். அதற்கு முன்பாகவே நிறுத்தப்பட்டுவிட்டது. இது மத்திய அரசு ஸ்கீம்தான். அப்படிப்பட்ட உத்தரவை பஞ்சாயத்து யூனியன்களில் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலே எந்தத் திட்டம் இருக்கிறது எந்தத் திட்டம் இல்லை என்று பாராமல் நீங்கள் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u>: "Government Guarantee Employment Scheme" என்று இல்லை "Employment guarantee Scheme" என்றுதான் இருக்கிறது.





<u>திரு. துரை முத்துசாமி</u>: மாநில அரசில் வேலைக்கு உணவு என்ற திட்டத்தை வைததிருக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட்டத்திலும் அதேபோல மற்ற மாவட்டங்களிலும் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று கவர்னர் உரையிலே சொல்லி இருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தினால் சில இடங்களில் நடந்த தவறுகள் எல்லாம் புகார்கள் மூலம் வந்திருக்கின்றது. இன்னும் வேலைக்கு உணவுத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் வேலை செய்தவர்களுக்கு அரசு பணம் தரவில்லை, அரிசியும் தரவில்லை என்ற நிலை பல இடங்களிலே இருந்து கொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-20]

அதன் விளைவாக ஏராளமான பேர் பல பகுதிகளில் வேலை செய்து விட்டு, போராட்டம் நடத்தும் நிலையில் இருக்கிறார்கள்.

அடுத்தாற்போல், டீசல் தட்டுப்பாடு, கிரசின் தட்டுப்பாடு, சர்க்கரை தட்டுப்பாடு இருக்கிறது. மற்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அதிக விலை கொடுத்தால், அதாவது 4.50 ரூ. டீசல் என்றால், அதற்கு 3.00 ரூ. கொடுத்தால் கிடைக்கிறது. கிரசின் 1.90 என்றால் 3 ரூ. கொடுத்தால் கிடைக்கிறது. சர்க்கரை 2-90 என்றால் 4 ரூ. அல்லது 5 ரூ. கொடுத்தால் கிடைக்கிறது. இப்படி அதிக விலை கொடுத்தால் கிடைக்கிறது என்று சொன்னால், அது எதைக் காட்டுகிறது. அவைகளை சப்ளை செய்வதை ரெகுலேட் செய்வது யார்? மாநில சர்க்கார். மாநில சர்க்கார் தன்னுடைய கடமைகளை முறையாகச் செய்யாத காரணத்தால் தான் இந்த நிலைமை இருக்கிறது. நியாய விலைக் கடை கூட்டுறவுச் சங்கம் என்று வைத்து இருக்கிறார்கள். அந்தச் சங்கத்தில் சென்று கேட்டால் அத்தியாவசியப் பொருள்கள் தவிர மற்ற பொருள்கள் அனைத்தும் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். அத்தியாவசியப் பொருளகள் அங்கேயும் தட்டுப்பாட்டில் இருக்கின்றன. அதை எடுத்து முன்னதாகவே விற்று விடுகிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலைக்கு காரணம் என்ன? தமிழக அரசு முறையாக, சீராக நடைபெறவில்லை. அதன் காரணமாகவே தான் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் நல்ல தீர்ப்பை அளித்து இருக்கிறார்கள்.

ஊழலை ஒழிப்பேன், ஊழலை ஒழிப்பேன் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சொன்னார்கள். ஆனால் அது ஒழிந்ததா? நான் பகிரங்கமாக சில குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். அண்ணா போக்குவரத்துக் கழகம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் 95 லட்ச ரூபாய் வரை

ஊழல் நடைபெற்று இருக்கிறது. அதற்குக் காரணமாக இருந்த மேனேஜிங் டைரக்டர், நிர்வாக இயக்குநர் சஸ்பென்ட் செய்யப்பட்டு இருக்கிறார். 4—5 பேர் மாற்றப்பட்டு இருக்கிறார்கள். அதற்கெல்லாம் காரணம் என்ன? அந்த அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் 95 லட்ச ரூபாய் ஊழல் ஏற்பட்டதற்கு இந்த முதலமைச்சருக்கும் பொறுப்பு இருக்கிறது. * * *

என்னுடைய பகுதியில் பண்ருட்டி-அரசூர் என்ற வழித்தடத்தில் ஒரு பேருந்து விடுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மனு கோரினார். அதற்கு 4 பேர் மனு போட்டார்கள். அந்த 4 பேரில், 2 பேர் இரண்டு அமைச்சர்களுக்கு வேண்டியவர்களாகி விட்டார்கள். அந்த இரண்டு அமைச்சர்களிடையே கவுரவப்பிரச்னை வந்து விட்டது. ஒரு பஸ் தான் விடவேண்டும் என்று மனு கோரப்பட்டது. இரண்டு அமைச்சர்களிடையேயும் யார் பெரியவர் என்ற கவுரவப் பிரச்னை வந்து விட்டதால் இரண்டு பேர்களுக்கும் ஆர்டர் கொடுக்கச் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் முடியாது என்று சொன்னதால், அமைச்சருக்கு மேலும் கவுரவப்பிரச்னை வந்து விட்டது. இரண்டு பேருக்கும் கொடுக்கவேண்டும் என்று பின்னர் முடிவு எடுத்து, கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக அங்கே அதிகார அத்து மீறல் நடைபெற்று இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கே இப்போது இரண்டு பேருந்துகள் பண்ருட்டி— அரசூர் இடையே சென்றுகொண்டு இருக்கிறது. வழக்கு நடைபெறுகிறது. இப்படிப்பட்ட வகையில் மாநில அரசு அரசாங்க அத்து மீறல் செய்து இலஞ்ச ஊழல் செய்து வருகிறது. இதையெல்லாம் புரிந்துகொண்ட மக்கள் நல்லதொரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதற்குப்பிறகு சமீபத்தில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இரண்டாவது நிலக்கரி சுரங்கம் வெட்டும் நிகழ்ச்சியைத் துவக்கி வைக்கிறபோது நெய்வேலியில் இருந்து சென்னைக்குக் குடிநீர் கொடுப்பேன் என்று அறிவித்து விட்டார்கள். தென்னாற்காடு விவசாயிகள் அந்தத் தண்ணீர் சென்னைக்குக் கொண்டுபோய் விட்டால் தங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இருக்காது அங்கே நிலைமை பலவீனமாகிவிடும் என்ற நிலையில அந்தத் தண்ணீரை கொண்டு செல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். மீறிக்கொண்டு வந்தால் அதற்குப் போராட்டம் நடத்தத் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட போராட்டத்தை நீங்கள் சந்திக்க வேண்டி வரும் என்று சொல்லிக் கொள்கிறேன்

காரணம் ஏதாவது ஒரு கொள்கை இருந்தால், அதைச் செயல்படுத்துவதாக இருந்தால் அது மக்களுக்கு நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும், அப்படிப்பட்ட கொள்கையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே. நெய்வேலி சுரங்கம் வெட்டப்பட்டதைப்பற்றிச் சொல்கிறார்கள். அங்கே கிடைக்கின்ற தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார்கள்; அங்கே இருக்கின்ற நிலங்களுக்குப் பாசன வசதிக்குக் கொடுக்க மாட்டார்கள் என்று சொல்கிறார்கள். நான் ஏற்கனவே இது குறித்து இங்கே சட்டமன்றத்திலும் வெளியிலும் பேசி, பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. பாசன வசதிக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உறுதி கொடுக்கின்ற வகையிலே அந்தத் திட்டம் செயல்படும். மீதி இருக்கிற தண்ணீர்தான் சென்னைக்கு வரும் என்பதை ஏற்கனவே விளக்கிச் சொல்லியிருக்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : இன்றைக்கு நெய்வேலியில் 7 கிராம மக்கள் அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அங்கேயிருந்து அவர்களை வெளியேற்றி னார்கள். அவர்களுக்கு இடவசதி செய்து கொடுக்கவில்லை வீட்டு வசதி செய்து கொடுக்கவில்லை அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவில்லை; வீடு கட்டிக் கொடுக்கவில்லை. அதனால் அந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே நிலைமை இருக்கிறது. நெய்வேலியிலே 7 கிராம மக்கள் வெளியேற்றப்பட்டு இருப்பதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு, பெருத்த பீதி அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்ட ஈடும் கொடுத்து, வசிக்க இடமும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாத்தனூர் வலது பக்கக் கால்வாயை எடுத்துக் கொண்டால், 38 கிராமங்களில் சுமார் 22,400 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் நிலை இருந்தாலும் அங்கே தண்ணீர் சரியாக விடவில்லை. காரணம் என்னவென்றால் சில கால்வாய்ப் பணிகளைச் சரியாக எடுத்துக் கொள்ளவில்லை; அந்த வகையில் 4 கால்வாய்கள் இருக்கின்றன. மத்திய அரசு கொடுத்த 5 கோடி ரூபாயில் 3 கோடியே 85 இலட்சம் ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது; மீதியை சரண்டர் செய்யப் போகிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படி சரண்டர் செய்யாமல் கொடுக்கப்பட்ட பணம் முழுவதையும் அங்கே செலவிட வேண்டும் சாத்தனூர் வலது பக்கக் கால்வாய்க்கு சிமின்ட் லைனிங் கொடுத்து, ஏரிகளுக்குத் தண்ணீர் விட வேண்டும். அதற்குச் செய்ய வேண்டிய பணிகளுக்காகக் கொடுக்கப்பட்ட பணம் முழுவதையும் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ''ரெகுலேடட் மார்க்கெட்டிங் கமிட்டி'' என்று ஒரு கமிட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு மூட்டை நெல் 95 ரூபாய்க்கு வாங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் நெல்லை வாங்குவதில்லை. வியாபாரிகள் தான் வாங்குகிறார்கள். நான்கு வியாபாரிகள் ஒன்றாக சேர்ந்து கொண்டு, 85 ரூபாய்க்கு அல்லது 90 ரூபாய்க்குத்தான்

வாங்குகிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது ஆகவே இந்த அரசு ரெகுலேட்டட் மார்க்கட்டிங் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை வியாபாரிகள் பிழைப்பதற்காக வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடிப்பதற்காக ஏற்படுத்தி இருக்கிறார்களே தவிர, பொது மக்களுக்கு, விவசாயிகளுக்கு அதனால் எந்தவிதமான பயனும் இல்லை. அங்கே என்ன நடைபெறுகிறது என்பதை ஆராய்ந்து அறிவதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

இந்த ஆட்சியிலே விவசாயிகள் கைது செய்யப்பட்டு, அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். விவசாயிகள் மீது வழக்கு இருக்கிறது ; போலீசார் மீது வழக்கு இருக்கிறது ; தேர்தல் நடந்த பிறகு எதிர்க்கட்சிக்காரர்கள் மீது வழக்கு. இப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் '' வாபஸ் '' பெற வேண்டும். (மணியடிக்கப் பட்டது). இப்படி விவசாயிகள், ஆசிரியர்கள், தொழிலாளர் கள், மற்றும் எல்லாத் தரப்பு மக்களும் இந்த அரசை வெறுத்து ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, இதற்குப் பிறகும் நீங்கள் பதவியில் நீடித்திருப்பது சரியல்ல ; நியாயம் அல்ல ; நீங்கள் பதவியிலிருந்து விலக வேண்டும். நியாயமற்ற முறையிலே, நேர்மை இல்லாத வகையிலே எல்லாத் தரப்பு மக்களும் உங்களை வெறுத்து ஒதுக்கிய பிறகு (குறுக்கீடு) நீங்கள் பதவியிலே இருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது)*

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகாத வார்த்தைகளை, '' அன்பார்லிமென்டரி '' வார்த்தைகளை எல்லாம் உபயோகிக்கிறார்கள். *

* * * *

இப்படிப்பட்ட பிரச்சனைகளை இங்கே எழுப்புவதாக இருந்தால் எங்களாலும் எழுப்ப முடியும். நான் அவர்களைக் கேட்கிறேன்; இந்திரா காந்தி அம்மையாருக்கு மதிப்பு கொடுத்து கேட்கிறேன். அலகாபாத் ஹைகோர்ட் தீர்ப்பு வந்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் ஏகோபித்து ஒரு குரலை எழுப்பினார்களே, அந்த நேரத்தில் நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள் என்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். (குறுக்கீடுகள்).

[முற்பகல் 11-30]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொஞ்சம் அமைதியாக இருந்து சபையை சரியாக நடத்திக்கொண்டு போவதற்கு உதவ வேண்டுமே தவிர அலகாபாத் போன்ற விஷயங்களை எல்லாம் பேசி பிரச்சினையைச் சிக்கலாக்க உதவியாக இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் எதை வேண்டுமானாலும் மன்றத்திலே பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் சாதாரணமாக ஒரு உறுப்பினர் கையைக் காட்டினார் என்பதற்காக மிகுந்த ஆவேசமாகப் பேசக் கூடாத வார்த்தைகளை எல்லாம் பேசி அது சபைக் குறிப்பிலேயும் ஏறி இருக்கிறது. ஆகவே அவற்றை நீக்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன் ) அப்படி ஏதாவது குறிப்பேட்டில் பதிவாகியிருந்தால் அவற்றை நீக்குவதற்கு உத்தரவிடுகிறேன். அடுத்து திரு. க. மருதாசலம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. க. மருதாசலம் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, சென்ற 30-ம் தேதி அன்று இம் மாமன்றத்தில் தமிழக ஆளுநர் அவர்கள உரையின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூறுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும், ஆட்சி நடத்தத் தெரியாதவர்கள் ஆளுகிறார்கள், ஆட்சியிலே இருப்பவர்கள் இலஞ்சம் பெற்று ஆளுகிறார்கள், இந்த ஆட்சியிலே இருப்பவர்கள் ஆளுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றெல்லாம் பேசினார்கள். அது மட்டு மல்ல. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு இதே மன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேசுகிற நேரத்தில் கப்பல் இங்கே வந்துவிடும், பஸ்கள் இங்கே வந்துவிடும் என்று சொன்னார்கள். அப்போது நாங்கள் எல்லாம் திரும்பித் திரும்பிப் பார்த்தோம். இந்த மன்றத்திற்குள் கப்பல் வருகிறதா அல்லது பஸ் வருகிறதா என்று பார்த்தால் ஒன்றையும் காணோம். நான் ஒன்றை இங்கே நினைவு கூற விரும்புகிறேன். நாங்கள் எல்லாம் சென்ற ஆண்டு மதிப்பீட்டுக் குழுவினுடைய சார்பிலே பல்வேறு பகுதிகளுக்குச் சென்று இருந்தோம். அப்போது நாங்கள் கப்பலிலேயும் சென்றோம். அவர்கள் சொன்ன மாதிரி பஸ்லேயும் சென்றோம். அதைத் தான் ஒருவேளை இங்கேயும் வந்து சொல்கிறார்களோ என்று ஆச்சரியப்படத்தக்க அளவிலே அவர்கள் பேசினார்கள்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசுகிற நேரத்தில் இந்த ஆட்சியிலே சர்க்கரை கிடைக்கவில்லை, இந்த ஆட்சியிலே மண்ணெண்ணை கிடைக்க வில்லை, விலை வாசிகள் எல்லாம் விஷம் போல் ஏறுகின்றன, காவலர்களுக்குத் தொல்லை, அரசிதழ் பதிவு பெறாதவர்களுக்குச் சலுகை இல்லை, அதைப் போலவே விவசாயிகளுக்கு இந்த ஆட்சியில் கொடுமைகள் செய்யப் படுகின்றன. கப்பல் ஊழல், மருத்துவக் கல்லூரி அனுமதியில் ஊழல் என்றெல்லாம் கூறினார்கள். இதுபோல் எதிர்க் கட்சியைச்

சேர்ந்த பலரும் பேசினார்கள். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர், மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் உட்பட இதே மன்றத்திலே அவ்வாறு பேசியிருக்கிறார்கள். வெளியிலேயும் பேசி இந்த அரசுக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வத்திலே அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்த ஆட்சி ஏற்பட்ட இரண்டரை ஆண்டுக் காலத்தில் பல எண்ணற்ற சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதே. அவைகளில் குறிப்பிடத்தக்க சிலவற்றைச் சொன்னால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுத்துசாமி போன்றவர்களுக்குப் புரிய முடியும் என்று கருதுகிறேன். இந்தக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு நல்ல சர்க்கரை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். வழக்கமாக விநியோகிக்சப்படும் சர்க்கரையை விட சுமார் 1,500 டன்கள் அதிகமான அளவிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் நியாய விலைக் கடைகள் மூலமாகவும் எல்லாப் பகுதி மக்களுக்கும் கிடைக்சத்தக்க வகையிலே இந்த அரசு செய்திருக்கிறது என்பதை மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். பொய் சொல்வது என்றாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால், இந்த மன்றத்தில் அப்படி அவர்கள் பேசவில்லை. மண்ணெண்ணெய் விநியோகம் இன்றைக்குச் சீரான முறையிலே சிறப்பான வகையிலே விநியோகிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லாமல் இருக்க முடியாது.

அதைப்போலவே மழை வெள்ளம் அதிகமாக ஏற்பட்டதன் விளைவாக ஏறியிருந்த காய்கறிகளின் விலை அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவாக இறங்குமுகத்தை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். அதைப்போலவே வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும், அவர்களுக்கு வேலை அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளையும் செய்வதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதை அன்போடு சொல்லிக் கொள்கிறேன். அதைப்போலவே வேலை நீக்கம் செய்யப்பட்ட காவலர்களுக்கு, அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் இப்போது வசித்து வரும் வீடுகளிலேயே அவர்கள் குடியிருக்கும் அளவுக்கு இன்றைக்கு இந்த அரசு மிகப் பெரிய சாதனையாக அவர்களுக்கு அறிவித்திருக்கிறது. காவலர்களுக்கு தனிப்பட்ட உயர்வு, உயிர்ப் பாதுகாப்பு போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.



அரசு ஊழியர்களுக்கு என்று வழங்கப்பட்டுள்ள சலுகைகள் தேவையான சலுகைகள் என்பதை விட செய்தே தீர வேண்டிய பணிகள் சிலவற்றை மிக மனிதாபிமானத்தோடு இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே கிராமங்களில் வேலை பார்க்கும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுப் படி என்னும் சலுகையை முதன் முதலாக இந்த அரசு தான் அறிவித்தது ; இதற்கு முன்பாக எந்த அமைச்சரவையும் அறிவிக்க முடியாத, கிராமப் புறங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு வீட்டுப்படி என்று சொல்கிற இந்த அறிவிப்பை இந்த அரசு அறிவித்திருக்கிறது.

அதைப்போலவே ஓய்வு பெறும் வயதை 55–லிருந்து 58–ஆக உயர்த்திருக்கிறது இந்த அரசு. இதனால் பல்லாயிரக் கணக்கான பெரியவர்கள் இந்த அரசை பராராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே சமுதாயத்தின் முதுகெலும்பான விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை மனச்சாட்சி படைத்தவர்களின் நெஞ்சை விட்டு கொஞ்சமும் அகலாது. விவசாயிகளுக்கு ஏறத்தாழ 40 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறது. அதைப்போலவே மின் கட்டணத்தை 16 பைசாவிலிருந்து 14, 12 பைசாவாகக் குறைத்திருக்கிறது. பெரும் அளவில் கூலி உயர்வு, சிறு விவசாயிகளுக்கு முதலீட்டு உதவி, பாதுகாப்பு போன்ற உதவிகள் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய முறையான ஆட்சியிலேதான் வழங்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, மீனவர்கள், பீடி சுற்றும் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்காக குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே உணவுக்கு வேலைத் திட்டம் என்ற வகையில், அதன் அடிப்படையில் 18 லட்சம் மக்கள் அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இதுவரை 37,794 டன் அரிசியை அவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் அரசு வழங்கியிருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் 5,59,42,000 ரூபாய். வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 1,85,900 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கே பேசுவார்கள், யாருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. யாருக்கு வேலை தருகிறார்கள் என்று, அவர்களுக்குச் சொல்கிறேன் 1,85,900 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. என்று. குழந்தைகளுக்கு இலவசமாகப படிப்பதற்கான சலுகைகள் பலவற்றை அறிவித்திருக்கிறது.

மின் திட்டங்களைப் பொறுத்தவரையில் சுருளியாறு மின் திட்டம், குந்தா மின் திட்டம் என்று முக்கிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. அதைப்போலவே போக்குவரத்துத் துறை

[திரு. க. மருதாசலம்] [1980 பிப்ரவரி 5

பற்றிச் சொன்னார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தான் பஸ் முதலாளிகளிடமிருந்து லஞ்சம் பெற்றிருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

[முற்பகல் 11–40]

போக்குவரத்துத் துறையில் புதிய வழித்தடங்கள், பேருந்துகள் கட்டணக் குறைப்பு இவைகளில் இந்த அரசு ஏற்கனவே இருந்த அரசைக் காட்டிலும் மிகுந்த சாதனைகளைச் செய்திருக்கிறது. அனைத்துப் பேருந்துக் கழகங்கள் வருவாயும் பெருகியுள்ளது. 1977–78–ல் ரூ. 416·70 லட்சம் என்றிருந்த நிலைமை மாறி 1978–79–ல் ரூ. 726·58 லட்சமாக உயர்ந்துள்ளது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் மானத்தைக் கப்பலேற்றி பழக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வாங்காத கப்பல் குறித்து ஊழல்கள் என உரைத்து கூக்குரல், முழக்கமிடுகிறார்கள். ஊழல் என்று அதற்கு கண் வைக்கிறார்கள். ஊழல் என்று அதற்குக் காது பொருத்தியிருக்கிறார்கள். ஊழல் என்று அதற்குக் கை வைக்கிறார்கள். இப்படி பொய்யான வாதங்களை எல்லாம் அவர்கள் கிளப்பிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உண்மை உறங்காது, சத்தியம் வெல்லும், நீதி நிலைக்கும் என்ற நம்பிக்கையோடு நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல் மருத்துவத் துறையில் ஊழல்கள் மலிந்து இருக்கின்றன என்ற பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்துகிறார்கள் சில கட்சிகள். கரைபடிந்த அந்தக் கட்சியின் கடந்த கால வரலாற்றுக்கு இத்தகைய பிரசாரம் உதவும் என்று நம்புகிறார்கள். ஆனால் மக்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் பல இடர்பாடுகளுக்கு இடையே சிறப்பான பணிகளை ஆற்றி வந்திருக்கிறது. தமிழகத்தை வழி நடத்திச் செல்லும் நம்முடைய முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இன்று பல எதிர்ப்புகளுக்கு இடையே செயல்பட்டு வருகிறது. கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், படிக்காத இளைஞர்களுக்கு, சிறு விவசாயிகளுக்கு, நிலமற்றோருக்கு அவரவர்கள் எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கவும் நிகழ்காலத்தில் நிலவி வரும் விரக்தி மனப்பான்மையை அறவே போக்கிக் கொள்ளவும் வேலைவாய்ப்பு என்ற முறையில் விரிவான வேலைவாய்ப்புத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் கடந்த ஆண்டு மட்டும் ஐந்து இடங்களில் சுரங்கப்பாதைகளை இந்த அரசு அமைத்திருக்கிறது. இந்த நேரத்தில் நான் அரசின் மேலான கவனத்திற்கு ஒன்றைக்



1980 பிப்ரவரி 5] [திரு. க. மருதாசலம்]

கொண்டுவர விரும்புகிறேன். கோவை மாநகராட்சியாக ஆக இருக்கிற இந்த நேரத்தில் கோவையிலும் இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறப்புமிக்க கோவையில் இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகள் அமைக்க வேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டு என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூர்மார்க்கெட்டுக்குப் பின்னால் இருக்கிற மிருகக் காட்சி சாலை மூன்று கோடி ரூபாய்ச்செலவில் வண்டலூருக்கு மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலிருந்து கண் இழந்தவர்களுக்கு அவர்கள் வீட்டிலிருந்து மருத்துவ மனைக்குச் செல்ல அல்லது அவர்கள் பணியாற்றுகின்ற இடங்களுக்குச் செல்வதற்காக அல்லது பள்ளிக்கூடங்கள், வேறு இடங்களுக்குச் சென்றுவர இலவசப் பயணச் சீட்டு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கும் மேலாக அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு இதுவரை மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த பயணச் சலுகைகளை ஐந்து வரை உள்ள குழந்தைகளுக்கு என்று உயர்த்திருக்கிறது அரசு என்ற பெருமிதமான செய்தியைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல் ஏழை எளியவர்கள் தங்கள் கழுத்தில் போட்டிருக்கிற நகைகளை யெல்லாம் அடகுக் கடைகளில் அடகு வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் ரூ. 100–க்கு ஒரு ரூபாய்க்கு மேல் வட்டி வசூலிக்கக் கூடாது என்று இந்த அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதேபோல் கிராமப்புற மக்களின் நல்வாழ்விற்காக நடமாடும் மருத்துவ மனைகளை ஏராளமான இடங்களில் அரசு துவங்கியிருக்கிறது. இவற்றை யெல்லாம் சொல்வதற்குக் காரணம் இந்த ஆட்சி என்ன சாதித்து விட்டது, இந்த ஆட்சியில் ஊழல் ஒன்று தவிர எதுவும் இல்லை என்று சொல்கிற அவர்களுக்காக இதை நான் சொல்கிறேன். அயல் நாடுகளில் உள்ள பயணிகள் தேவையைக் கருதி நம் மாநிலத்தில் இருந்து ஆக்கப்பணிகளுக்காக செல்பவர்களின் தகுதி அனுபவம் ஆகியவற்றை கணக்கில்கொண்டு தேர்ந்தெடுத்துத்தரும் வகையில் அயல் நாட்டு வேலைவாய்ப்புகள் நிறுவனம் என்ற ஒரு அமைப்பை அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

அதைப்போலவே, ஒவ்வொரு கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அறிவித்திருந்தது. ஆனால், ஏற்கனவே இயங்கி வந்த 5,800 கடைகளில், 5,600–க்கு மேற்பட்ட கடைகள் பலபொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. புதிதாக கடைகள் திறக்கப்பட வேண்டிய கிராமங்கள் சுமார் 10,000. இவற்றில் 8,000 கிராமங்களில் கடைகள் இப்போது திறக்கப்பட்டு விட்டன. கிராமங்களில் மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்கு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அங்குள்ள மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்க இந்த அரசு முனைந்து செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

[திரு. க. மருதாசலம்] [1980 பிப்ரவரி 5

இத்தனைக்கும் மேலாக, இந்த அவை உறுப்பினராக இருந்த, பழம் பெரும் தேசபக்தர், முன்னாள் அமைச்சர், போராட்ட செயல்வீரர் கக்கன்ஜி அவர்களுக்கு மாதம் 500 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல. அரசு மருத்துவ மனைகளில் அமைச்சருக்கான அளவில் அவர் மருத்துவ வசதிகள் பெறவும், வாடகையில்லாமல் குடியிருக்கவும், அரசுத் துறை பேருந்துகளில் கட்டணம் இல்லாமல் பிரயாணம் செய்யவும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல. நம்முடைய மதிப்பிற்குரிய பெருந் தலைவர் முன்னாள் முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களின் தங்கை திருமதி நாகம்மாள் அவர்களுக்கு ஏற்கனவே மாதந்தோறும் அளிக்கப்பட்டு வந்த உதவித் தொகை, 1—7—1978 முதல் 500 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மத்திய அரசு வழங்கி வந்த ஓய்வூதியம் 200 ரூபாய் பெறுபவர்களுக்கு மாநில அரசின் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டு மத்திய அரசின் ஓய்வூதியம் பெறுகின்றவர்கள், மாநில அரசின் ஓய்வூதியத்தையும் பெறலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. சுதந்திரப் போராட்ட வீரர்களின் குடும்பங்களுக்கு அளித்து வந்த 100 ரூபாயை ரூ. 125 என்று உயர்த்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மிகப் பெரிய சாதனைகளை யெல்லாம் செய்திருக்கிறார்கள்.

அதைப்போலவே கல்வித்துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை 1974–லே அளிக்கப்பட்டாலும் இந்த அரசுதான் 1977ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் புதிய சம்பள விகிதத்தை அளித்திருக்கின்றது. அதைப்போலவே, பள்ளி இறுதித் தேர்வில் தவறிய பாடங்களுக்கு மட்டும் தேர்வுகள் எழுதக் கூடிய கம்பார்ட்மென்மென்டல் சிஸ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் ஏழை எளிய நடுத்தர மக்கள், பாட்டாளிமக்கள் ஆகியோரின் குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள்.

தமிழ் கலை, நாகரிகம் ஆகியவற்றை வளர்க்கின்ற வகையில் தமிழ் பண்பாட்டு மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ் அறிஞர்கள் வசதியற்ற நிலையில் இருந்தால், அவர்களுக்கு மாதந்தோறும் 25 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. கிராமங்களிலே உள்ளவர்கள், கல்லூரிக் கல்வி படிக்க வேண்டும், அதற்கான வசதிகள் அளிக்க வேண்டும் என்ற வகையில் மேல்நிலைப் பள்ளி கல்வி முறையை அங்கே அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டில் 912 மேல்நிலைப் பள்ளிகளும், இந்த ஆண்டில் 130 மேல்நிலைப் பள்ளிகளும், ஆக மொத்தம் 1,042 மேல்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை



1980 பிப்ரவரி 5] [திரு. க. மருதாசலம்]

**1,14,000க்கு** மேற்பட்டோர் ஆகும். இந்தத் திட்டத்திற்கு இந்த அரசு ரூ. 15,17,00,000 ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு, என்னுடைய பகுதியாகிய தொண்டாமுத்தூர் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய பகுதி கடல் போன்ற பகுதியாகும். இதே மன்றத்தில் சென்றமுறை பேசுகின்றபோது, சின்ன தடாகத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு அணைக்கட்டு கட்டுவதுபற்றிக் கேட்டேன். அப்போது, அவர்கள் ஆட்சி இருந்த காரணத்தினால், வேண்டுமென்றே ஒருசில நபர்கள் அந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

[முற்பகல் 11–50.]

ஆகவே, அந்தத் திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவரின் புனித ஆட்சியில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரை ஊழல் இல்லாத ஆட்சி; களங்கமில்லாத ஆட்சி, மக்கள் நம்பிக்கையை என்றைக்கும் இழக்காத ஆட்சி; இந்த ஆட்சியின் பக்கம் நாலரைக் கோடி தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள் என்று கூறி கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாற்றுத் தலைவர் அவாகளே, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் அங்கத்தினர் என்ற முறையில் ஆளுநர் அவர்களுடைய உரையிலே எனதுக் கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நடந்து முடிந்த நாடாளு மன்றத் தேர்தலுக்குப் பின்னால் இந்த மாமன்றம் கூடுகிற நேரத்தில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு முன்னதாக எங்களது முற்போக்குக் கூட்டணியின் சார்பாக இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து அவர்களும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் நானும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் மதிப்பிற்குரிய அங்கத்தினர் வகாப் அவர்களும் இந்த ஆட்சி நாடாளுமன்றத் தேர்தலின்போது நாட்டு மக்களால் அதிகமாகப் புறக்கணிக்கப்பட்டதற்குப் பின்னால் தொடருவதற்கு நியாயமில்லை என்று கூறி கண்ணியமாக வெளிநடப்புச் செய்தோம். அதற்குப் பின்னால்தான் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

அந்த உரையிலே ஆளுநர் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தல் தமிழகத்திலே ஜனநாயக மரபுப்படி அமைதியாக நடந்து முடிந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நாடாளுமன்றத் தேர்தலின்போதுதான் நான் தேர்ந்தெடுக்கப்பெற்ற உசிலம்பட்டி

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1980 பிப்ரவரி 5

சட்ட மன்றத் தேர்தலும் நடந்தது. மதுரையில் அப்போது நடந்த சம்பவங்கள் இந்த ஆட்சிக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அப்போது துப்பாக்கிச் சூடு நடந்து இருவர் மாண்டார்கள். மாண்டவர்கள் யார் என்று பார்த்தால் வன்முறையில் ஈடுபட்டு துப்பாக்கிச் சூட்டினால் இரு அண்ணா தி.மு.க. வினர் மாண்டார்கள். உசிலம்பட்டி சட்டசபைத் தொகுதியில் இந்த அரசு மத்திய போலீசை அதிகமாகக் குவித்து வைத்து தேர்தலை நடத்தினார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறது. அந்த சட்டப் பேரவைத் தொகுதியில் மட்டும் ஏன் மத்திய போலீசை நிறுத்தி வைத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலின்போது வன்முறைகள் தூண்டிவிடப்பட்டன. எங்களது இயக்கத் தோழர்கள் மீது நாற்பதுக்கும் அதிகமான வழக்குகள் போடப்பட்டன. எங்கள் இயக்கத் தோழர்கள் அடிபட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள் அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. அண்ணா தி.மு.க. வினர் வன்முறையைத் தூண்டியதோடு மட்டுமல்லாமல் அமைச்சர்களும் அங்கு வந்து முகாமிட்டார்கள். அமைச்சர்கள் அங்கிருக்கிற எங்களுடைய இயக்கத் தோழர்களை என்ன விலை கொடுத்து வாங்கினார்களோ தெரியாது, பலரை தங்கள் இயக்கத்திலே சேர்த்துக் கொள்ளுகிறோம் என்று தேர்தல் நடந்து முடிவதற்கு முன்னாலேயே பத்து, இருபது பேரைப் பிடித்து கட்சி மாற்றிவிட்டார்கள். அதை அகில இந்திய வானொலியிலே சொல்லக்கூடிய அளவுக்குச் செய்தார்கள் என்றால் அங்கே எவ்வளவு பணம் விளையாடியது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். அங்கே பணம் விளையாடியது, வன்முறைகள் தூண்டிவிடப்பட்டன. இந்த நிலைமைகளுக்குப் பிறகும் இந்த அரசு ஆளுநர் உரையில் அமைதியாகத் தேர்தல் நடந்தது என்று சொல்கிறது. என்றாலும் நாட்டு மக்கள் உங்களை பெரும்பான்மையாக ஒதுக்கிவிட்டார்கள்; புறக்கணித்து விட்டார்கள்; ஆகவே, இதற்கு மேலும் ஆட்சியில் நீடிப்பது நியாயமில்லை என்ற கருத்தை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாங்கள் சொல்லி இந்த மன்றத்திலே இருந்து வெளிநடப்புச் செய்த நேரத்திலே இருந்து அதற்குப் பிறகு இந்த மூன்று தினங்களாக இங்கே நடைபெறுகின்ற விவாதத்தைப் பார்க்கிறேன். திரு. லத்தீப் சிறுபான்மையோர் இயக்கத்தைச் சேர்ந்தவர், குறைந்த எண்ணிக்கையில் உறுப்பினர்களை வைத்திருக்கிறார், ஆனால் எதிர்த்தரப்பில் அதிக எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டு நடந்து கொண்டிருக்கின்ற முறையைப் பார்க்கிறபோது, என்போன்று புதிதாக வந்திருக்கின்றவர்களுக்குத் தெரிகின்ற காட்சியெல்லாம் — மூன்றாம் தேதி அண்ணா அவர்களின் நினைவு நாளை நினைவுபடுத்திக் கொண்டார்கள், இந்த அவையிலே அறிஞர் அண்ணா அவர்களின் படம் வைக்கப்பட்டிருக்கின்றது, அதற்குக் கீழே வாசகங்கள் இருக்கின்றன, அவர்கள் சொல்லிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளையும் பேசிக்கொண்டு அவர்கள் பேசிய பேச்சுக்களையும் பார்த்தேன்.



1980 பிப்ரவரி 5] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சி பதவியில் இருந்து இறங்க வேண்டும், அது தொடர்ந்து இருப்பது ஜனநாயக மரபுக்கு ஒத்தது அல்ல என்று சொல்கிற நேரத்திலே அவர்கள் பெரும் அளவிற்கு உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்று நான் கருதுகிறேன், 'அவர்கள் இறங்கி ஜனங்கள் மத்தியிலே சென்றால் எத்தனை பேர்கள் இந்த மன்றத்திற்குத் திரும்பி வருவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அப்படிப் பேசுகிறார்கள்' என்று கருதுகிறேன். அது மட்டுமல்ல, அந்த அச்சத்தின் காரணமாகத்தான் உணர்ச்சி வசப்படுகிறார்கள் என்று கருதுகிறேன்.

நாடாளு மன்றத்திற்குத்தான் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று சொன்னால், இங்கே எடுத்துச் சொன்னார்களே, மத்தியிலே இந்திரா காந்தி அம்மையாருக்குத்தான் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று, அப்படிச் சொன்னால் அந்தத் தேர்தலிலே தான் நான் உசிலைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். சட்டசபைத் தேர்தலில் இரண்டு இடங்களைப் பெற்றோம் என்று அவர்கள் சொன்னாலும் உசிலைத் தொகுதியிலே நான் வெற்றி பெற்றிருக்கிறேன். எங்களது தொகுதியிலே அராஜகத்தைத் தூண்டியும், வழக்குகளைப் போட்டும், வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று கூறியும் வாபஸ் பெறப்படாத நிலையில் 12 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றி பெற்றிருக்கின்றேன் என்று சொன்னால் மக்கள் உங்களை நிராகரித்துவிட்டார்கள் என்றுதான் பொருள்.

இதை ஏற்றுக்கொள்ளாமல் இரண்டு தொகுதியிலே வெற்றி பெற்று விட்டோம் என்று சொன்னால் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகி அத்தனை பேர்களும் திரும்ப வர முடியாது என்று கருதினால் தமிழகத்தின் முதலமைச்சர் ராஜிநாமா செய்துவிட்டு அவருடைய தொகுதியில் நின்றால், நான் என்னுடைய உசிலைத் தொகுதியில் ராஜிநாமா செய்துவிட்டு அங்கே நிற்கத் தயாராக இருக்கிறேன், அந்தத் தேர்தலில் ஒரு கொள்கையாக அறிவித்து, 'தேர்தலில் அவர்கள் தோற்றால் பொறுப்பிலே இருந்து இறங்க வேண்டும், எதிர்க் கட்சியினர் தோற்றால் அந்தக் கோரிக்கையை வாபஸ்பெற வேண்டும் என்ற முறையிலே வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஆளுநர் உரையைத் துருவித் துருவிப் பார்த்தாலும் மக்கள் தொகையில் 80 சதவீதம் உள்ள விவசாயிகளுக்கு எந்த விதமான நிவாரணமும் கிடையாது. இரண்டாண்டுக் காலமாக விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகியிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே முகவை மாவட்டத்திலே 3 தாய்மார்கள் சுட்டு வீழ்த்தப் பட்டிருக்கிறார்கள். அவர்களது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு எதுவும் குறிப்பிடப்படவில்லை. விவசாய சங்கத்தின் சார்பிலே போராடிக் கொண்டிருக்கின்ற

[திரு. எஸ். ஆண்டித்தேசர்] [1980 பிப்ரவரி 5

திரு. நாராயண சாமி நாயுடு மற்ற விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன் அவர்களுடைய 9 அம்சக் கோரிக்கையை இந்த அரசு ஏற்று நிறைவேற்ற வேண்டும்.

[நண்பகல் 12-00.]

அதுமட்டுமல்லாமல், இந்த அரசு கடமையுணர்வோடு, விவசாயச் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களை அழைத்துப் பேச வேண்டும். ஏன் இந்த அரசு அவரோடு பேசத் தயங்குகிறது என்று தெரியவில்லை. விவசாயச் சங்கத்தினரால் கோரிக்கை வைக்கப்படும் நேரத்தில் அதை இந்த அரசு பரிசீலிக்கத் தவறினால் நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக அவருடைய போராட்டக் கோரிக்கைகளுக்காக எங்கள் இயக்கம் ஆதரவாக நிற்கும், உறுதுணையாக நிற்கும் என்பதை இந்த மன்றத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த அரசு ஒரு வாக்குறுதியைக் கொடுத்தால், அதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வாக்குறுதி என்றால் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே கேலிக்கூத்தாக இருக்கிறது. இன்றைக்கு ஒன்றைச் சொல்வார்கள், நாளைக்கு மறுத்து விடுவார்கள் என்ற நிலையாக இருக்கிறது. நான் அந்த வாக்குறுதிகளைப் பற்றிச் சொல்லவில்லை. இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள், எங்கள் மாபெரும் தலைவர், தியாகத் திருமகன் தேவர் அவர்களின் படத்தை இந்த மன்றத்திலே வைப்பதாக அறிவித்தார்கள். அவர் பிறந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அவர் பிறந்த பகுதியாகிய கமுதி, முதுகளத்தூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இராமநாதபுரம் மேற்கு மாவட்டம் என்று பிரித்துப் பெயர் வைப்பேன் என்று இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். இந்த மன்றத்திலே அவருடைய தியாகத்தை மதித்து, அவரை இந்த நாட்டின் தியாகச் செம்மல் என்று இந்த அரசு ஏற்றுக்கொண்டு படம் வைப்பதாகச் சொல்லி நீண்டகாலமாகியும் அவருடைய படம் இங்கே வைக்கப்படவில்லை. இனியும் தாமதப்படுத்து வார்களேயானால் நாங்கள் நேரடி இயக்கத்தில் நேரடி நடவடிக்கையில் இறங்க வேண்டி வரும் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சமீபத்தில் குடியரசு தின விழா நடந்தது. சென்னையிலே அலங்கார வண்டிகள், இரதங்கள் விடப்பட்டன. அதிலே அலங்கார ஊர்வலத்திலே தலைவர்களுடைய பெருமைகளைப் பற்றி அலங்கார வண்டிகள் விடப்பட்டன. அதிலே எங்களது மாபெரும் தலைவர், தேசியத் தலைவர், இந்த நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட, ஜனநாயக முறைப்படி இந்த மன்றம் அமைகின்ற அளவிற்கு



1980 பிப்ரவரி 5] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி ஆறரை ஆண்டு, ஏழாண்டுக் காலம் சிறையிலே இருந்த முத்து ராமலிங்கத் தேவர், ஜீவா போன்ற இந்தத் தியாகிகளுக்கு அந்த ஊர்வலத்திலே நினைவுச் சின்னம் வைக்கப்படவில்லை என்பதை மிக்க வேதனையோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த உரையிலே நான் பார்க்கின்றபொழுது தமிழுக்காகத் தியாகம் செய்த, தமிழுக்காகப் போராடிய, தமிழ் மாநிலம் பிரிகின்ற நேரத்திலே இந்த மாநிலத்திற்காகப் போராடியவர்களுக்காக மான்யம் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் கூறப்பட்டிருப்பதை நான் பெருமையோடு ஏற்றுக்கொள்வதோடு, நமது தமிழ் வாழ வேண்டும், தமிழ் இந்த மாநில மொழியாக இருக்க வேண்டுமென்று அரும்பாடு பட்டு, 1901-ஆம் ஆண்டு 4-வது கடைச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கு இந்த அரசு நினைவு மன்றம் ஏற்படுத்த வேண்டும். அவருக்கு உருவச் சிலையை சென்னையிலே வைப்பதாக ஏற்றுக் கொண்ட அரசு உடனே அதை வைக்க வேண்டும். அப்படியில்லாமல் தமிழைப் பற்றிப் பேசினால் சரியாக இருக்காது. எனவே, நான்காவது தமிழ்ச் சங்கம் ஒன்றுண்டு என்ற நிலையை உருவாக்கித் தந்த மாபெரும் நேசபக்தர் பாண்டித் துரை தேவருக்கு நினைவாலயம் வைக்க வேண்டுமென்பதை வேண்டுகோளாக வைக்கிறேன்.

இப்பொழுது மதுரை மாவட்டத்திலே கள்ளர் ரெக்ளமேஷன் என்று குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு ஆங்கிலேயகளால் ஏற்படுத்தப்பட்ட அந்தச் சலுகையை இப்பொழுது இந்த அரசு நிறுத்த வேண்டுமென்ற திட்டம் ஒன்றை வைத்திருப்பதாக அறிகிறேன். அந்தக் கள்ளர் ரெக்ளமேஷன் குற்றப் பரம்பரைச் சட்டத்தினர் என்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய அந்தக் குற்றத்திற்காகப் பல ஆண்டுகள் அழுத்தப்பட்டிருந்த சமுதாயத்திற்கு நல்ல நன்மைகள் செய்ய வேண்டும் என்று நிறுவப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த கள்ளர் ரெக்ளமேஷன் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அத்துடன், டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், மறவர்கள் குற்றப் பரம்பரைச் சட்டத்தின் கீழ் அழுத்தப்பட்டு, அவர்களும் நீண்ட நெடுங்காலமாக ஆங்கிலேயரின் ஆட்சியிலே கொடுமைப் படுத்தப் பட்டார்கள் என்பதற்காக மறவர் ரெக்ளமேஷன் என்று அமைக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டு முடிவுற்ற நிலையில் இந்த ஆட்சியில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்வதோடு, அந்த மறவர் ரெக்ளமேஷனை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குற்றப் பரம்பரைச் சட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், 9,000 ரூபாய் என்ற அரசு உத்தரவை வாபஸ் பெற்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதம் கொடுத்திருக்கிறது,

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1980 பிப்ரவரி 5

அதை நான் ஏற்றுக்கொள்கின்ற நேரத்தில், மராட்டிய மாநிலத்தில் இருப்பது போன்ற குற்றப் பரம்பரைச் சட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பத்து சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அரசுக்கு இந்த நல்ல நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த அறிக்கையை நான் பார்க்கின்ற நேரத்தில் போலீசார் போராடினார்கள். இந்த அரசுக்கு போலீசார் மீது நம்பிக்கையில்லை என்றெல்லாம் சொல்லக்கூடிய நேரத்தில் இப்போது வேலை இழந்து இருப்பவர்களுக்கு வேலை திரும்பத்தரப்படும் என்று சொன்னாலும், அவர்களுக்கு இழைத்த தீமைகளைப் பற்றி அங்கத்தினர்கள் இந்த மன்றத்தில் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். இன்னும் வேலை கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்ததாகத் தெரியவில்லை. வேலையில் இருந்து அவர்கள் நீக்கப்பட்டிருந்தாலும், எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் திரும்பவும்வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அந்தக் காலத்திற்கு ஊதியமும் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உசிலம்பட்டித்தொகுதியில் கடந்த 30 ஆண்டுகளாக, குடியரசு ஏற்பட்டு, தேர்தல் நடந்த காலம் முதல் இன்று வரையில் எங்களுடைய அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி தான் தொடர்ந்து வெற்றி பெற்று வந்திருக்கிறது. அந்தக் கட்சியைத்தான் மக்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அப்படி அனுப்பப்பட்ட காரணத்தால் அந்தத் தொகுதியை ஆளுங்கட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் ஒதுக்கி வைத்து எந்தச் சலுகையும் செய்யாமல் இருக்கிறார்கள். இப்போது 30 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்றைக்கும் ஒரு கிராமத்திற்கு கட்டை வண்டி கூடச் செல்ல முடியாத அளவுக்குப்பிற்படுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது இந்த அரசும் அந்தத் தொகுதியைப் புறக்கணிக்கிறது. அங்கு எந்தத் தொழிற் சாலையும் இல்லை.

நடைபெற்ற தேர்தலின்போது நான் ஒரு கிராமத்திற்கு 14 மைல்கள் நடந்துசென்று ஓட்டு கேட்டேன். கார் போகக்கூட வசதியில்லை. உசிலம்பட்டி முதல் கொப்பளிப்பட்டி வரையில் 14 மைல்கள் ரோடு இல்லாமல் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. மிகவும் வேதனைப் படத்தக்க நிலையில் இருக்கிறது. சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகள் ஆகியும் இன்னும் 14 மைல்கள் நடக்க வேண்டிய அளவில் இருக்கிறது. சில கிராமங்களில் கட்டை வண்டிகள் கூடப் போக முடியாத அளவிற்கு இருக்கிறது. இந்தத் தொகுதி குற்றப் பரம்பரைச் சட்டம் அமலில் உள்ள பகுதி. அப்போதிருந்த ஆங்கில அரசு வைகை அணைத் திட்டத்தை 1924 ஆம் ஆண்டு போட்ட நேரத்தில் இப்போது உசிலம்பட்டி என்ற பகுதி அன்றைக்கு



1980 பிப்ரவரி 5] [திரு. எஸ். ஆண்டித் தேவர்]

திருமங்கலம் பகுதியோடு இருந்த காரணத்தால் அந்த வைகை அணைத் திட்டம் திருமங்கலம் மெயின் கால்வாய் என்று குறிப்பிடப்பட்டு தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் குற்றப் பரம்பரைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளவர்கள். அந்தப் பகுதிக்குத் கிடைக்க வேண்டிய நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை. செம்பட்டியில் இருந்து tகட்டதேவன் பட்டி வழியாக போத்தம்பட்டி, பெருங்காய நல்லூர் போன்ற இடங்களில் உள்ளவர்களுக்குத்தான் முதலிலே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. பெருங்காய நல்லூரில் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னால்தான் இந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நேரத்தில் இன்னமும் அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை.

அது மட்டுமல்ல; இந்த உலக வங்கியிலே இருந்து பணம் பெற்று 17 கோடி ரூபாய் வைகைத் திட்டத்தை சீர்திருத்தத் திட்டமிடப்பட் டிருக்கிறது. இந்தந் திட்டத்தின் கீழ் 20,000 ஏக்கர் இன்னும் உபரி தண்ணீர் விஸ்தரிக்க முடியும் என்று இருக்கிறது. எனவே இந்த அரசு அந்தப் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு இந்தத் தொகுதியில் மட்டும் இதுவரையில் எந்தவிதமான அரசினுடைய பணிகள், மருத்துவ மனையிலே இருந்து, தொழிற்சாலை வரையில் ஏற்படுத்தவில்லை. ஏற்கனவே கழக ஆட்சிக் காலத்திலே உசிலைத் தொகுதியிலே அரசு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு அந்தத் திட்டத்திற்காக நிலம் அளக்கப்பட்டு ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்குப் பின்னாலே, இந்த ஆட்சி வந்த பிறகு அந்தத் திட்டம் வேறு தொகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட அநீதிகள் ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்களுக்கு எதிராக வாக்களித்தார்கள் என்பதற்காக அந்தத் தொகுதி புறக்கணிக்கப்படுமானால் அந்தத் தொகுதி மக்கள் இந்த ஆட்சியை எதிர்த்துப் போராட வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்படுவதை, அந்த நிலைமையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டு அங்கே தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஆக்க வேலைகளைத் தொடங்க வேண்டும் என்று இந்த அரசுக்கு வேண்டுகோளை வைத்து அமர்கிறேன்.

[பிற்பகல் 12–10]

<u>திரு. எஸ். வி. இராமசாமி :</u> சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் என்பது 'கவர்ன்மென்ட் ஆப் தி பீப்பிள், கவர்ன்ட்மென்ட் பை தி பீப்பிள்' கவர்மெண்ட் பார் தி பீப்பிள்' என்று அமெரிக்க நாட்டிலே கெட்டிஸ்பர்க்கிலே ஆப்ரகாம் லிங்கன் கூறினார். ஜனநாயகத்தின் உயிர் ஓட்டமாக, உருவமாக அதனை அந்த நாட்டிலே ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியில் 'கவர்ன்மென்ட் ஆப் எம்.ஜி.ஆர்., கவர்ன்மென்ட் பைதி எம்.ஜி.ஆர்., கவர்ன்மென்ட் பார் தி எம்.ஜி.ஆர்' என்ற நிலைமையை நாம் காண்கிறோம்.

[திரு. எஸ். வி. இராமசாமி] [1980 பிப்ரவரி 5

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு அண்ணாவின் இதயக் கனியாக அண்ணாவின் லட்சியங்களைத் தாங்கி வருபவராக, அண்ணாவின் ஜனநாயக சுடரைத் தாங்கி வருபவராக நாம் அவரைக் கனவு கண்டோம். ஆனால் ஒத்தல்லோ நாடகத்தில் — செயற்கரிய சேக்ஸ்பியர் — கூறிகிறார்—ஒரு நாடக கதாபாத்திரத்தின் மூலமாக. அந்த கதாபாத்திரம் யாகோ. அவனை விமர்சிக்கிறபோது கூறுகிறார்— கன்னிங், டயபாலிக், ஜெலசி, ஈஸ் தி சிம்பல்—என்று வர்ணனை செய்கிறார். அந்தக் காட்சியைத்தான் புரட்சித் தலைவர் ஆட்சியில் நாம் காண்கிறோம். அத்தகைய அளவிற்கு நாட்டிலே நயவஞ்சகத்தின் கோர உருவமாக புரட்சித் தலைவரின் ஆட்சியை நாம் காண வேண்டியிருக்கிறது. 18 ஆம் நூற்றாண்டிலே இங்கிலாந்து நாட்டில் பாராளுமன்றத்திலே எட்மன்ட் பர்க் கூறினார்.

'Little minds, and great emperors, seldom pull together'. அந்த நிலை, அதாவது சிறு மதி படைத்தோரும் பெரிய ராஜ தந்திரியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாது என்று கூறினார். அந்த நிலைமையை நாம் இன்றைக்குக் காண்கிறோம்.

குறிப்பாக இந்த நாட்டிலே அரிசன நலத் துறையின் அமைச்சராக இருந்த சௌந்திரபாண்டியன் அவர்கள் நிலையை நாம் காண்கிறோம். இந்த நிலைமைக்கு ஒரு சாட்சியாக, ஒரு சான்றாக இருக்கிறார். இப்போது நீதியைத் தேடி, தர்மத்தைத் தேடி இன்றைக்கு இந்தியநாட்டின் பிரதம மந்திரியைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார். இந்த நாட்டிலே அரிசன மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, அரிசனம் என்றாலே கடவுள் என்று கூறினாரே காந்தியார், அத்தகைய புனிதத் தத்துவத்தை மறந்து விட்டு, அவர்களைப் புறக்கணித்து விட்டது இந்த புரட்சித் தலைவர் ஆட்சி என்று நான் கூறிக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியிலே குறிப்பாக அரிசன மக்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்தார்கள் என்று அவர்களால் சொல்ல முடியாது. கலைஞர் ஆட்சியில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வீடு கட்டிக்கொடுத்தார்கள். அதனை இவர்கள் ஏன் மறந்தார்கள். அரிசன மக்களுக்குக் காலனி கட்டுவதற்காக இந்த கவர்னர் உரையின் 21, 22 பாராவிலே திட்டம் அறிவிக்கப்பட்டு இருப்பதைக் காண்கிறேன். இது எப்படி இருக்கிறது என்றால் கண் அவிந்த பின் சூர்ய நமஸ்காரம் செய்வது போல் இருக்கிறது. எங்கே இந்த ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்று பயம் வந்த காரணத்தால் தான் அதை இணைத்து இருக்கிறார்கள். 30,000 வீடுகள் கட்டுவதாகவும், 5,000 காலனிகள் கட்டுவதற்கு மதிப்பீடு திட்டம் போடுவதாகவும் சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கலைஞர் ஆட்சியில் கட்டப்பட்ட குறிப்பாக, குரும்பலூர் காலனித் திட்டம் இன்றைக்கு இருள் சூழ்ந்து கிடக்கிறது.. அதன் கதவுகளைத் திறந்து மக்களை அங்கே குடியமர்த்தக் கூட நீங்கள் தயாராக இல்லை. வெங்காலூர் அரிசன மக்கள் நாங்கள் வீடுகள் கட்டிக் கொள்கிறோம். எங்களுக்கும் இடம்



1980 பிப்ரவரி 5] [திரு. எஸ். வி. இராமசாமி]

கையகப் படுத்திக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தைக் கையகப்படுத்திக் கொடுக்க இந்த அரசுக்கு இயலவில்லை. அன்னிமங்கலம் என்ற இடத்தில் கலைஞர் ஆட்சியில் இடம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த இடத்தில் காலனி கட்டிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதை உங்களால் செய்யமுடியவில்லை. கலைஞர் காலத்தில் நல்ல வகையில் நிதி ஒதுக்கம் செய்து, விண்ணப்பம் செய்தவர்களுக்கு எல்லாம் நிலப் பட்டா கொடுத்தார்கள். ஆனால். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அந்த நிலைமையில்லை. அருமை நண்பர்களே. இப்படியெல்லாம் அந்த அரிசன மக்கள்உதாசீனப்படுத்தப்பட்டு, முடக்கப்பட்டிருக்கிறார்கள் ; அடக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வீடு இப்பொழுது முற்றுகையிடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, நம்முடைய அருமை நண்பர் ஐயாசாமி அவர்கள். தன்னுடைய கொள்கையின் காரணமாக கலைஞர் கட்சிக்கு வந்த போது அவருடைய குடும்பத்தாருக்கு தொல்லை கொடுத்தார்கள் ; வீட்டை சூறையாடினார்கள். இன்னும் சொல்லப்போனால், 'Little minds and great emperors seldom pull together' என்று 18-ம் நூற்றாண்டிலே எட்மண்ட்பர்த் கூறினானே, அந்த அளவுக்கு சிறுமதி படைத்தவர்களைத்தான் அண்ணா தி. மு. க. வில் காண முடிகிறது. அந்த அளவுக்கு அரிசன மக்களை புறக்கணித்தார்கள். அதனால்தான் தேர்தலிலே தோல்வியைத் தழுவினார்கள். மக்கள் அவர்களைத் தோல்வியடையச் செய்தார்கள்.

விழுப்புரத்திலே நடைபெற்ற 10 கொலைகளுக்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ? வழக்குமன்றத்தில் என்ன செய்யப் போகிறீர்கள் ? அதைப்போல பூஞ்சோலையில் 5 உயிர்கள் பறிக்கப்பட்டன. அவர்களுடைய கால்கள் வெட்டப்பட்டன: கரங்கள் பிரிக்கப்பட்டன : அவர்களுடைய உயிர்கள் பிய்த்தெடுக்கப்பட்டன. அதற்கு என்ன செய்தீர்கள் ? இப்படி எண்ணற்ற குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து, ஆளும் கட்சியிலிருந்து பேசிய நண்பர் சின்னராசு அவர்களுக்குச் சொல்கிறேன். பேரம் பேசி இந்தக் கட்சியில் வந்த சேர்ந்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உண்மை என்னவென்றால், அந்த கட்சியிலே இலட்சியம் இல்லை : இலட்சியம் இல்லாத கட்சியில் எப்படி இருப்பது ? இங்கே இலட்சியம் இருப்பதால் வந்திகிறேம். இலட்சியம் இல்லாமல் வாழ்க்கை இல்லை.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் 8-வது வகுப்பில் படிக்கும்போதே தந்தை பெரியார் அவர்களின் ஆணைப்படி தார் சட்டி ஏந்தி, இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்திய கலைஞர் உணர்வில் வளர்ந்தவன் ; அண்ணாவின் பாசறையில் வளர்ந்தவன். அந்த அளவுக்கு கொள்கைத் துடிப்போடு இருந்ததால், அந்தக் கொள்கைக் கோட்டத்திற்கு வந்திருக்கிறேன் ; இலட்சியக் கூடாரத்திற்கு வந்திருக்கிறேன் : கலைஞர்

பாசறைக்கு வந்திருக்கிறேன் ; இங்கே கொள்கை இருக்கிற காரணத்தால் ஒரு ஆண் மகனாக வந்திருக்கிறேன். திரு. சின்ன ராசு அவர்களே இன்னும் பசை இருக்கிறது என்பதால் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். இப்பொழுது அங்கே பேரம் பேசப்படுகிறது. பஸ் ரூட் வேண்டுமா, பஸ் பெர்மிட் வேண்டுமா என்று கேட்கிறார்கள். நீங்கள் உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். இன்று கூட பேரம் பேசப்படுகிறது. அமைச்சர் பதவி வேண்டுமா, அந்தஸ்து உயர வேண்டுமா, எவ்வளவு பணம் வேண்டும், கேளுங்கள் தருகிறேன் என்கிறார்கள். இங்கே கொள்கை இருப்பதால், இலட்சியம் இருப்பதால் நான் கலைஞர் பாசறைக்கு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அண்ணா தி. மு. க. ஆட்சியிலே எதை பார்த்துக் கொண்டிருக்கிறோம் ? இன்றைக்கு இந்த ஆட்சியிலே, '' இன்கன்சிஸ்டன்சி '' என்ற நிலையை, முன்னுக்குப் பின் முரணான என்ற நிலையைத்தான் பார்க்கிறோம். பிற்பட்ட மக்களுக்கு வருமான வரம்பை அறிவித்தார்கள். அது உயிர் பிரச்சினை. அவர்களுடைய வாழ்வுக்கு அழிவு தேடும் அந்த மக்களுக்கு நீங்கள் செய்கின்ற தீங்கு அது என்று எடுத்துச் சொன்னோம். கலைஞர் அவர்கள் போராட்டத்தை அறிவித்தார்கள். தங்கள் ஆணவத்தால், பிடிவாதத்தால், எங்களுடைய கருத்துகளை ஏற்காத காரணத்தால் உங்களுக்கு ஆளத் தெரியாத காரணத்தால் அந்த அறிவிப்பைச் செய்தீர்கள்.

அதைப்போல சாராயச் சட்டம் 4 (பி) என்று சொல்லுகிற ஒரே ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு இன்றைக்கு மதுவிலக்கை எடுத்து விடுவோம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர் சமரசம் அவர்களுக்கு என்னுடைய பதிலாக வைக்கிறேன், கலைஞர் ஆட்சியிலே அவைகள் எல்லாம் அழியாத கோலங்களாக நிலைத்துவிட்டன என்று, ஆகவே, நீங்கள் தான் கலைஞரை குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்ற குற்றத்திற்கு உள்ளாவீர்கள்.

அருமை நண்பர்களே, உத்தம தலைவர், புனித தலைவர், அந்த அழியாத கோலங்களை அழித்துவிடுவேன் என்று பிழைத்து வந்த காந்தி, அதை ஏன் இப்பொழுது தள்ளாடி, தள்ளாடி தளிர் நடை போடவிட்டார் ? அதிலும் மாறுபட்ட கருத்து. அதிலே சட்ட அமைச்சருக்கு ஒரு கருத்து: முதலமைச்சருக்கு ஒரு கருத்து. சட்ட அமைச்சர் கூறுகின்றார், நாங்கள் சட்டத்தைத் தளர்த்திவிட்டோம் என்று.

[பிற்பகல் 12—20]

ஆனால் முதலமைச்சரவர்கள் கூறுகிறார்கள், இன்னும் தன்னுடைய நிலையிலே இருந்து மாற மாட்டேன் என்று அழுத்தமாகக் கூறுகிறார்கள். அரசு தளராது என்று கூறுகிறார்கள். உங்களுடைய கொள்கையும் ஆட்சியும் இதுவரை தள்ளாடித் தள்ளாடித் தான் சென்று கொண்டு இருக்கிறது. அது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. நான் வழக்கு மன்றத்திற்குச் செல்லும் போது.. (மணியடிக்கப்பட்டது)





மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எச். பாண்டியன்) : முடித்துவிடுங்கள், நேரம் ஆகிவிட்டது.

திரு. எஸ். வி. இராமசாமி : ஆகவே அவர்களுக்குத் தெரியும், இந்த முதலமைச்சர் ஒரு நிலையிலே இருக்க மாட்டார் என்பது ஆகவே அந்த அளவுக்கு நிலை இல்லாத ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அடுத்து நீங்கள் பதவியிலே இருந்து விலக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்கள் தோற்றுவிட்டதால் மட்டும் நான் இதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன் ): முடித்துவிடுங்கள். நேரமாகிவிட்டது.

திரு. எஸ். வி. இராமசாமி : இங்கே பேசிய அருமை நண்பர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் புள்ளிவ்வரங்களைக் காட்டி பிரச்சினையை திசை திருப்பினார்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. எஸ். வி. இராமசாமி : நாட் யீல்டிங்

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் தாங்கள் அனுமதிக்கக் கூடாது. பேசுகின்ற உறுப்பினர் அனுமதி தராத பட்சத்திலே பாயின்ட் ஆப் ஆர்டர் எவ்வாறு அனுமதிக்கலாம். அனுமதிக்கக் கூடாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): அனுமதிக்கலாம். நீங்கள் உட்காருங்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, நான் ஏதோ புள்ளிவிவரத்தைக் காட்டி திசை திருப்பியதாகச் சொன்னார்கள். என்ன அந்த புள்ளி விவரம், எப்படித் திசை திருப்பினேன்? அந்தப் புள்ளி விவரங்கள் உண்மை அல்ல என்றால் அதை அவர் விளக்க வேண்டும். அல்லது திசை திருப்பியதாகக் கூறுவதை அவர் வாபஸ் வாங்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டரை அனுமதிக்கக் கூடாது

திரு. எஸ். வி. இராமசாமி : இந்த ஆட்சியினர் பதவியிலே இருந்து விலக வேண்டும் என்று சொல்கிறேன். நடைபெற்ற தேர்தல் மத்திய அரசு சம்பந்தப்பட்டது தான் என்றும் ஆகவே இது தமக்குப் பொருந்தாது என்றும் சொல்கிறார்கள்.. (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : அடுத்து திரு. கு. ரமணி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

* திரு. கு. ரமணி : மதிப்புமிக்க தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலே இந்த ஆளுநர் உரையின் மீது இரண்டு உறுப்பினர்கள் ஏற்கெனவே சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதோடு சேர்ந்து நானும் சில கருத்துக்களை தங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால் ஒரு விஷயத்தை நான் இங்கே தெளிவாக்க விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் அரசியல் துறையிலே விமரிசனம் செய்கிறோம். எந்தக் கட்சியையும் புண்படுத்த வேண்டும் என்பதோ அல்லது அவர்களுடைய அந்தஸ்துக்கு இழுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதோ எங்களுடைய நோக்கம் அல்ல. ஆனால் அரசியல் துறையில் கறாராக எங்களுக்குத் தெரிந்திருக்கும்படியான விஷயங்களை இந்த மன்றத்தின் முன் வைக்கிறோம் என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் இருக்கும் கனம் அங்கத்தினர்கள் அனைவரும் அதை கூர்ந்து கவனிப்பீர்கள் என்று நினைக்கிறேன். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் இரண்டு அணிகள் போட்டி போட்டன. இந்திரா காங்கிரஸ் தலைமையிலே ஒரு அணியும், அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சியுடன் சேர்ந்துகொண்ட ஒரு அணியுமாக 2 அணிகள் போட்டியிலே ஈடுபட்டன. அந்தப் போராட்டத்திலே, தேர்தல் போராட்டத்திலே இந்திரா காங்கிரஸ் தலைமையிலே ஈடுபட்ட அணி பெரிய வெற்றியைப் பெற்றது. இன்னொரு அணி இரண்டு சீட்டுகளை மட்டும் பெற்றுத் தோல்வி அடைந்திருக்கிறது. இதிலிருந்து ஒரு சூழ்நிலை உருவாகி வந்துக்கொண்டிருக்கிறது. அதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்வது மிகமிக அவசியம்.

காரணம் இது தமிழகத்தில் மட்டும் இருக்கும் படியான ஒரு நிலைமை அல்ல. இந்திய நாடு முழுவதிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு நிலை. அதாவது மத்தியிலே ஒரு கட்சி வெற்றிபெற்று விட்டால் மாநிலங்களில் எந்த இடத்திலேயும் அந்த கட்சியைத் தவிர வேறு எந்த கட்சியும் மாநில அரசாங்கங்களிலே ஆட்சியில் இருக்கக் கூடாது; இருக்க முடியாது என்ற ஒரு நடைமுறையை உண்டாக்குகிற முயற்சி நடைபெறுகிறது. அந்த





முயற்சியினுடைய பலனாகத்தான் மாநிலங்களிலே இருக்கும்படியான அரசாங்கங்கள் ராஜிநாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களை மக்களே தேர்ந்து எடுத்திருந்தாலும், இந்தப் பாராளுமன்றத் தேர்தலிலே அந்தக் கட்சியின், மாற்று அணிக்கு மக்கள் பெருவாரியான வாக்குகளை போட்டுள்ளதால் அவர்கள் மக்களுடைய நம்பிக்கையை இழந்து விட்டார்கள். அவர்கள் மீதுமக்களுக்கு நம்பிக்கை இல்லை. அதனால் அவர்கள் நடத்தும்படியான சட்டமன்றமும் அரசாட்சியும் நம்பிக்கைக்குப் பாத்திரமானது அல்ல என்ற ஒரு வாதம் கொண்டு வரப்படுகிறது. அந்த வாதம் முற்றிலும் தவறானது. அது ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்லது. கடுமையாக எதிர்க்கப்பட வேண்டிய வாதம் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. அந்த நிலைமைக்குக் கொண்டு வரப் படுமேயானால், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிட்டி, சட்டமன்றம், மாநகராட்சி மன்றங்கள், பாராளுமன்றம் அத்தனையும் சேர்த்து ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தி ஒரே கட்சி வெற்றி பெற வேண்டும் என்ற நிலைக்கு வரும்.

அப்படித்தான் வேண்டுமென்று சொன்னால் நாட்டில் கலகமும், குழப்பமும் ஏற்படும். வெற்றிபெற்று வந்திருக்கும்படியான அங்கத்தினர்களை, மக்கள் கொடுத்த தீர்ப்புக்கு மாறாக அவர்களைச் சட்டமன்றத்திற்குள்ளே பாராளும் மன்றத்திற்குள்ளே வலைபோட்டு பிடிப்பதும், சாக்கு பையில் பிடிப்பதுமான காரியங்கள் நடைபெற்றன. அப்படிக் கட்சி விட்டு கட்சி மாறும்படியான நிலைமையை ஏற்படுத்துவது எந்த ஒரு அரசாட்சிக்கும் நன்மையாக இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால் அந்த நிலைமை நிச்சயமாக அராஜகத்திற்குத் தான் கொண்டு செல்லுமே தவிர ஜனநாயகத்திற்கு கொண்டு செல்லாது என்பது எங்களுடைய கருத்து. ஆகவே அந்த முயற்சிகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும் என்பது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் வாதம். அந்த முறையிலே தமிழகத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே உள்ள அரசாங்கத்தை ராஜிநாமா செய்ய வேண்டும், வெளியேற வேண்டும் என்கிற கிளர்ச்சியை இங்கேயும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் பகிரங்கமாகப் போராடுவதற்கு இன்னும் ஆரம்பிக்கவில்லை என்று நினைக்கிறேன்.. ஆரம்பிக்கப்படுமா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் சட்ட மன்ற உறுப்பினர்களை கட்சி மாற்றுவதற்கான பிரயத்தனம் எல்லா மூலை முடுக்குகளிலும், சந்து பொந்துகளிலும், பட்டி தொட்டிகளிலும் மிகத் தீவிரமாக நடைபெறுகின்றன.

இது என்ன ஜனநாயகம் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்த ஜனநாயகத்தை நல்ல ஜனநாயகம் என்று சொல்ல முடியாது. இந்திய நாடு முழுவதிலும் ஏற்பட்டிருக்கும் படியான இப்படிப்

[திரு. கு. ரமணி] [1980 பிப்ரவரி 5

பட்ட போக்கு சரியல்ல. இது இன்றைக்கு நம்முடைய நாட்டிலுள்ள பெடரல் சிஸ்டம் ஆஃப் கவர்னர்மென்ட் என்று சொல்லக்கூடிய, கூட்டாட்சி என்று சொல்லக்கூடிய மத்தியிலே இருக்கும்படியான அரசாட்சிக்கு ஒத்தது அல்ல என்பது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின கருத்து.

"The similarity of the ruling parties at the Centre and the States is not quite in consonance with the logic of the kind of fedalism envisaged in the Constitution which implicitly recognise the divergence of major issues at the Centre and in the States". இது அரசியல் சட்டத்தில் இருக்கும்படியான ஒரு நியாயத்தை பற்றிக் கூறுகிறது. அந்த நிலையில் நம்முடைய பெடரல் கான்ஸ்டிடியூஷன் இருப்பதற்கு, அப்படிப்பட்ட போக்குகள் நிச்சயமாக ஒத்தது அல்ல. மத்தியில் இருக்கக்கூடிய அரசாட்சிக்கு அடிப்படையான மாறுபட்ட கருத்துக்கள் உள்ள, மாறுபட்ட எண்ணங்கள் உள்ள எத்தனையோ அரசாங்கங்கள் மாநிலங்களிலே வரும். பல தரப்பட்ட எண்ணங்களும், கருத்துக்களும் கொள்கைகளும், மொழிகளும், கலாச்சார வளர்ச்சியும் உள்ள ஒரு "மல்டி நேஷன்" என்று சொல்லக்கூடிய நம்முடைய நாட்டில் இப்படிப்பட்ட ஒரு முயற்சியை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டால் இந்த பெடரலிஸம் என்பது அடியோடு ஒழிந்து விடும்.

[பிற்பகல் 12–30].

நான் நினைக்கிறேன். இந்திரா காங்கிரஸ் கட்சியோடு கூட்டு சேர்ந்துள்ள நமது மதிப்பிற்குரிய தி.மு.க. நண்பர்கள் அனைவரும் நிச்சயமாக அந்தக் கண்ணோட்டம் உடையவர்கள் அல்ல என்று.. அந்த நம்பிக்கை எங்களுக்கு உண்டு. ஆகவே, இந்த நிலைமையில் இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் உதாரணத்திற்காக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற பல ஆண்டுகளாக மாநிலங்களின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் மத்திய அரசு அரசியல், பொருளாதார அதிகாரங்களை மேலும் மேலும் அதிகமாகக் குவித்து வந்துள்ளது. மறைமுக வரியிலிருந்து ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகள் வரை பொதுமக்கள் விரும்பாத பலதரப்பட்ட முடிவுகளை மத்திய அரசு செய்வதால் ஏற்படும் சிக்கலான நிலைமைகளை மாநில அரசுகள் சுமக்கவேண்டி வந்துள்ளது. ஆகவே தற்போதுள்ள மத்திய — மாநில அரசு உறவுகள் மறுபரிசீலனை செய்து மாநிலங்களுக்கு அதிக பொருளாதார அதிகாரங்களும் மாநிலச் சுயாட்சி அதிகாரங்களும் தரப்பட வேண்டும் என்று இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய ஏழாவது பாராளுமன்றத்தில் எங்களுடைய மதிப்பிற்குரிய தலைவர் ஏ.கே.ஜி. அவர்கள் மனைவி திருமதி சுசிலா



1980 பிப்ரவரி 5] [திரு. கு. ரமணி]

கோபாலன் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது விவாதம் நடக்கிறபோது என்ன கருத்துக்கள் கூறப்பட்டன — பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தைப் பற்றிக் கூறவில்லை. தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றிக் கூறுகிறேன்—என்று பார்க்க வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுப்பது ஆபத்தாகும். அதற்கு மாறாக ஏழை மக்களுக்கு உதவி செய்ய, அவர்கள் கோரினால், எந்த மாநிலத்திலும் தலையிட மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற இந்தக் கருத்துத்தான் அதற்குப் பதிலாகச் சொல்லப்பட்டது. அதாவது இன்றைய ஆளும் கட்சிச் சார்பில் சொல்லப்பட்டது. இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் எந்த மாநில அரசு இந்த நாட்டில் இருக்க முடியும்? நாளைக்கு இந்த நிலை மற்ற கட்சிகளுக்கு ஏற்படலாம். வேறு ஒரு கட்சி மத்திய அரசுக்கு வநது மத்தியில் உள்ள கட்சி மாநிலங்களில் வந்துவிட்டால் அவர்களுக்கும் இந்த நிலை ஏற்படும் அல்லவா? ஜனதா கட்சி ஆண்ட காலத்தில் இப்படி நடந்தது என்றால், அதைப் பற்றி நண்பர் திரு. கோவிந்தராசன் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதற்குள் நான் அதிகமாகச் செல்ல விரும்பவில்லை.

தார்மீக அரசியல் அடிப்படை என்று சொல்லப்படுகிறது. ஜனதா அரசு மாநில அரசுகளைக் கலைத்தபோது இந்திரா காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டி அப்படிக் கலைத்ததற்கு தார்மீக அரசியல் அடிப்படை இல்லை என்று தீர்மானம் போட்டது. இன்று அதே காங்கிரஸ் (இ) கட்சி அதிகாரத்திற்கு வந்ததற்குப் பிறகு மற்ற மாநில அரசுகளை உடனே கலைக்க வேண்டும் என்றால் அது தார்மீக அரசியல் அடிப்படைக்கு ஒத்ததா? பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்திருக்கலாம். சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடத்தட்டும். அல்லது பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல் நடத்தட்டும் அல்லது அனைத்து மாநில சட்ட மன்றங்களுக்கும் இந்தப் பிரச்னையை வைத்து தேர்தல் நடத்தட்டும், என்ன முடிவு வருகிறது என்று பார்க்கலாம். அப்போது ஆட்சியை மாற்றலாமே தவிர அப்படியில்லாமல் வேறுவிதமாகச் செய்தால் அது நிச்சயமாக ஆதரிக்கப்படமாட்டாது. எங்கள் கட்சி தன் தீர்மானத்தில் இந்த நிலையை எடுத்துக் காட்டியிருக்கிறது. நாங்கள் இதை இன்று சொல்லவில்லை. 1972 ஆம் ஆண்டில் கூறியுள்ளோம். There is a tendency dictatorial tendency, that is developing in ruling Congress party in India என்று எடுத்துக்காட்டியவர்கள் நாங்கள். அன்று நாட்டை ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியின்கீழ் சர்வாதிகார எண்ணம் வளரும் சூழ்நிலை இருந்திருக்கிறது. மக்கள் போராட்டத்தைச் சமாளிக்க முடியாத நிலையில், தொழிலாளர்கள் போராட்டத்தைச் சமாளிக்க முடியாத நிலையில் சுரண்டும் வர்க்கத்தினருக்கு ஆதரவாக சர்வாதிகாரத்தை சுவீகரித்துக் கொண்டு போராட்டத்தை அடக்குவது, ஒடுக்குவது. இது உலகம் முழுவதும்

சர்வசாதாரணமாக நடக்கக் கூடிய ஒன்று. மாநில அரசுகள் எத்தகைய அரசியல் குணம் கொண்டிருப்பினும் அவைகளைக் கவிழ்க்க மத்திய அரசோ அல்லது இந்திரா காங்கிரஸோ முயற்சித்தால் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கும். அந்த முயற்சிகளை முறியடிக்க தன்னாலான அனைத்துக் காரியங்களையும் கட்சி மேற்கொள்ளும். எதேச்சாதிகார சக்தி மீண்டும் ஒருமுறை ஜனநாயகத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. எதேச்சாதிகார எதிர்ப்புச் சக்திகள் ஒற்றுமையாக நின்று இதனை எதிர்க்காவிட்டால் தற்போதைய அரசு எதேச்சாதிகார அரசாக மாறிவிடுவதற்கான நிலை இருக்கிறது. அதை நாம் ஏற்கெனவே அனுபவத்தில் பார்க்கிறோம். ஆகவே இத்தகைய போக்கினை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பல மாநிலங்கள் அறிவித்திருக்கின்றன. இந்த எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த மாநில முதல் அமைச்சர்கள் 9 பேர்கள் மாநில சட்டமன்றங்களைக் கலைக்கக் கூடாது, அப்படிக் கலைப்பதற்கான முயற்சிகளை எதிர்த்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அரசியல் சட்டத்தின் பெடரலிசம் பாதுகாக்கப்பட வேண்டும். ஜனநாயக உரிமைகளை மக்கள் பயன்படுத்தி, அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள்.

சட்டமன்றங்களைக் கலைக்கும் முயற்சிகளை இந்திரா காங்கிரஸ் மேற்கொண்டால், அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்போம் என்று அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் கருத்தை 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துக் கொள்ளுகின்ற வகையில், நமது தமிழக முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கதாகும். அந்தக் கூட்டத்திற்குச் செல்ல முடியாவிட்டாலும், அதற்கு சில இடைஞ்சல் இருந்ததால், போக முடியாவிட்டாலும், அந்தக் கருத்துக்களை, மாநில அரசைக் கலைக்கும் முயற்சியை எதிர்க்கும் அந்தக் கருத்துக்களை, 9 மாநில முதலமைசசர்கள் சொன்ன கருத்தை தாமும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மற்றுமுள்ள சகோதர தோழமைக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து அதை எதிர்க்கின்ற வகையில் தொடர்ந்து வேலை செய்யும், மக்கள் மத்தியிலே இதற்கான உண்மைகளைத் தெளிவாக்க வேண்டும். தங்கத்திலிருந்து வெங்காயம் வரைக்கும் பிரச்சாரத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தங்கத்தின் விலையை யார் நிர்ணயிப்பது? தங்கத்தின் விலையை நிர்ணயிப்பது சர்வதேச ஏகாதிபத்திய நாடுகள்; எம்.ஜி.ஆர். அல்ல. வெங்காயத்தின் விலையை நிர்ணயிப்பதுகூட இந்த தமிழ்நாடு அரசல்ல. ஆகவே, தங்கத்தின் விலையை நிர்ணயிப்பது இந்த அரசாங்கம்



என்று பேசுவது சரி அல்ல. அதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பது பிரச்னை அல்ல. அப்படிப்பட்ட கொடுமைகளை, சுரண்டலைச் செய்கின்ற வியாபாரிகள், கள்ளமார்க்கெட்காரர்கள் மீது அவர்களால் முடிந்த நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக மக்களோடு சேர்ந்து நின்று அவர்களோடு அணி சேர்ந்து, அந்த மக்கள் சக்தியைத் திரட்டி, நாம் அதிகாரிகளை நம்பாமல், விலைவாசியைக் குறைக்கப் போராட வேண்டும். உடைத்த விறகு என்ன விலை? வெங்காயம் என்ன விலைக்கு விற்கின்றது? என்றெல்லாம் பார்லிமெண்ட் தேர்தலில் பிரச்சாரம் செய்து, ஓட்டு கேட்கப்பட்டது. அந்தப் பிரசாரம் ஜனங்களிடம் எப்படி செல்லுபடியாகும்? விலையேற்றத்தால் ஏற்பட்டுள்ள கஷ்டத்தால்தான்.

திரு. க. சுப்பு: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. கு. ரமணி: ஐ ஆம் நாட் ஈல்டிங். தமிழக அரசு சுரண்டல்காரர் போக்கை எதிர்க்கத் தயாராக இருப்பது நல்லது வரவேற்கத்தக்கது.........

திரு. க. சுப்பு: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தால் பர்சனல் எக்ஸ்பிளனேஷனாகச் சொல்லலாம் ஆனால், அவர் 'நாட் ஈல்டிங்' என்று சொல்லுகிறார். எனவே உட்காருங்கள்.

திரு. கு. ரமணி: தனிப்பட்ட ஆளைப் பற்றி நான் சொல்லவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், சர்வாதிகாரப் போக்கை எதிர்ப்பது வரவேற்கத்தக்கது. அப்படி எதிர்ப்பதை..............

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறார். அவர் என்ன சொல்லுகிறார் என்று கேட்கலாம்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நான் கட்சியைப் பற்றிச் சொல்லவில்லை. உறுப்பினர் ரமணி அவர்கள் பேசும்போது, எம். ஜி. இராமச்சந்திரன் என்று சொன்னார்கள் முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி சட்டமன்றத்தில் பேசும் போது, மாண்புமிகு என்று சொல்லியிருக்க வேண்டும் என்பது

ஒன்று. அதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. அடுத்தாற்போல் குடியரசுத் தலைவர் உரைக்குத் திருத்தம் கொண்டுவந்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரிக்கவில்லை. எனவே, அவர்கள் உங்களோடு தோழமையாக இல்லை என்பது தெரிந்திருக்க வேண்டாமா?

திரு. கு. ரமணி : நமது மதிப்பிற்குரிய சுப்பு அவர்கள், முதலமைச்சர் அவர்கள் மீது இவ்வளவு மரியாதை செலுத்துவதை நான் நிச்சயமாக வரவேற்கிறேன். எனவே, நானும் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் என்றே சொல்கிறேன். ஆகவே, நாம் மக்களுடைய நம்பிக்கையைப் பெற வேண்டும். அதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேற்கு வங்காளத்திலே இந்திரா காந்தியின் அலை புக முடியவில்லையே? அந்த சூறாவளி அங்கே புக முடியவில்லையே? இதே மாதிரி, கேரளாவிலேயும் நடக்கவில்லையே? இந்திரா காந்தி பாராளுமன்றத்தில் பதவியேற்றவுடனேயே, கேரளாவில் நடந்த தேர்தலுக்காகச் சென்றார்கள். 26 தொகுதிகளில் அவர் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். அப்படிச் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்த பிறகு, அவர் சுற்றுப்பிரயாணம் செய்த தொகுதிகளில் 22 தொகுதிகளில் தோற்றுப்போகவில்லையா? ஆகவே, இதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. ஜனங்களுடைய நம்பிக்கையை நாம் பெற்றாக வேண்டும். ஜனநாயகத்தை இந்த நாட்டிலே ஏற்படுத்துவது பாதுகாப்பது இந்த அரசாங்கத்தின் கடமையாகும்.

[பிற்பகல் 12-40.]

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பெரிய சக்தியான விவசாயிகள். விவசாயத் தொழிலாளர்களுக்காகச் சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். வரவேற்கிறோம். பினாமி நிலங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டும், அதற்கு ஒத்துழையுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஒத்துழைக்கத் தயார். ஆனால் ஐந்து ஏக்கர் குத்தகை நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதிலிருந்து பினாமி நிலத்தை எடுப்பது என்றால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அது சரியல்ல. அதற்கு மாறாக 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருப்பதிலே அதைக் கறாராக அமலாக்கி அந்த நிலச்சுவான்தார்கள், மிட்டாமிராசுதாரர்கள், பாளையக்காரர்கள், பட்டக்காரர்கள் வைத்திருக்கக்கூடிய அதிகப்படியான நிலங்களை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிப்பட்ட நிலங்களை எடுக்க உதவும் முறையில் விவசாயச் சங்கங்களும், தொழிலாளர் சங்கங்களும், கிராம வாரி கமிட்டி-





களும் தாலூகா வாரி கமிட்டிகளும் எங்கெங்கு யார் யார் அப்படி நிலங்களை வைத்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்ட உதவும்படி கோர வேண்டும். அதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயார். அரசு அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தால் ஆளும் கட்சி சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர மக்கள் மத்தியில் இந்தச் சட்டம் உங்களுக்குப் பயன் தருகிறது என்று சொல்லி மக்களைத் திரட்டினால் பினாமி நிலங்களைக் காண்பிப்பார்கள். அதைத்தான் மேற்கு வங்கத்தில் செய்தார்கள். பத்து லட்சம் ஏக்கர் வரை நிலத்தை எடுத்தார்கள். நிலச்சுவான்தார்கள் போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டபோது கொடுக்கவில்லை, அவர்கள் நிலம் என்பதற்கு பட்டா காட்ட வேண்டுமென்று சொன்னார்கள் பட்டா காட்டினால் பாதுகாப்புத் தரத் தயார் என்றார்கள். பட்டா இல்லாத பினாமி நிலங்களைக் காப்பாற்றிக் கொடுக்க போலீஸ் வராது. நிலம் இல்லாதவர்கள் அந்த நிலங்களில் இறங்கி உழுது பயிரிடுவார்கள். அவர்களுக்குப்பட்டா கொடுக்கப்பட்டது. அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கை வளர்ந்தது.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அந்தக் கூலி கிடைக்கவில்லை. அதை அமலாக்குவதற்கு விவசாயிகள் சங்கமும், தொழிலாளர்கள் சங்கமும் கலந்து எப்படிப்பட்ட உத்திகளைக் கையாண்டு நாட்டுப்புறங்களில் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவது என்று பார்க்க வேண்டும். உதவி செய்ய வேண்டும். அப்போதுதான் விவசாயத் தொழிலாளர்களிடத்தில் அரசாங்கத்திற்கு அடிப்படையான பிடிப்பு ஏற்படும். அவர்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகத் தேர்தலில் ஓட்டுகள் மாறிப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படித்தான் ஒவ்வொரு கட்சியின் சரிவும் ஏற்பட்டிருக்கிறது ஐந்து ஏக்கர் குத்தகை நிலத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொடுப்பது என்பது பினாமி நிலம் அல்ல. அப்படிச் செய்வது நல்லதாக இருக்காது.

வேலைக்கு உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி அந்தக் காரியங்களைச் செய்வதற்கு பஞ்சாயத்துக்கள்தான் அடிப்படையான அமைப்பு என்று அங்கீகரித்து ஒப்படைக்க வேண்டும். The lowest unit in the system அரசியலைப்பில் கட்சி ஆட்சி முறைகளில் அடிப்படையாக கீழ்மட்டத்தில் இருக்கக்கூடியது. பஞ்சாயத்துக்கள் அரசாங்கத்தின் அங்கம். பஞ்சாயத்துக்களில் மக்கள் தலைவர்கள், பிரதிநிதிகள் உட்கார்ந்து முடிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு வசதியைக் கொடுங்கள். பணம் தேவையானால் பணத்தைக் கொடுக்க வேண்டும். சட்ட உதவி கொடுக்க வேண்டும். சட்டத்தின்படி அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும். எத்தனை ஏக்கர் பினாமி நிலங்கள் இருக்கின்றன என்ற கணக்கை எடுக்கவும், எத்தனை பேர்கள் வேலை

இல்லாமல் இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுக்கவும் பஞ்சாயத்துக்களுக்குப் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் வங்க அரசாங்கம் செய்தது. இதுதான் இறுதியானது என்று சொல்லவில்லை. எல்லோரும் இப்படியேதான் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. நாங்கள் செய்து வெற்றி பெற்ற முறை, திட்டம், நீங்களும் அதைக் கடைப் பிடித்து வெற்றிகரமாக்கக் கூடாதா என்றுதான் கேட்கிறோம்.

அடுத்து மதுவிலக்குச் சட்டம். இந்தச் சட்டம் வந்தபோதே நாங்கள் சொன்னோம். இந்தச் சட்டத்தினுடைய சக்தி, போலீசும், தடியும்தான் என்றும், இது ஆபத்தில் கொண்டு போய் விடும் என்றும், இது சாத்தியமல்ல, உலகம் பூராவும் முயன்று முயன்று பார்த்து தோல்வி அடைந்த விஷயம் என்றும் சொன்னோம். நாங்கள் கேள்விப் படுகிறோம். உங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலே கூட இதைப்பற்றிய அனுபவத்தை எடுத்துச்சொன்னார்கள் என்று. சட்டத்தின் பலத்தாலே இதைச் செய்ய முடியாது, தீவிரப் பிரச்சாரத்தின் மூலமாக குடிப் பழக்கத்தை மாற்ற முயற்சிக் கலாம் என்று சொன்னோம். இன்றைக்கு அந்தச் சட்டத்தைத் தளர்த்தி வேறு விதிமுறைகளைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். யார் யாருக்கு மது அருந்த அனுமதி கொடுக்கப்போகிறார்கள் என்று பார்த்தால் 30 வயதாகியிருக்க வேண்டும், 25 ரூபாய் லைசென்ஸ் ரீஸ் கட்டவேண்டும், மருத்துவர் சான்றிதழ் வேண்டும் (குறுக்கீடு) மருத்துவர் சான்றிதழ் வேண்டாமென்றால் சரி, நான் திருத்திக்கொள்கிறேன். இது இருந்தால் தாசில்தார் கொடுப்பார் என்று சொல்லப்படு கிறது. தாசில்தார் எப்படிக் கொடுப்பார் என்றால், தாசில் தாரின் திருப்திதான் அடிப்படை. ஒரு விஷயத்தை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். நான் எந்தத் தனித் தாசில்தாரையும் குறிப்பிடவில்லை. அவரிடம் அதிகாரம் கொடுக்கப்படுவதால் லஞ்ச ஊழலும் பணம் திரட்டலும்தான் நடைபெறும். லைசென்ஸ் வியாபாரப் பொருளாகிவிடும். ஆகவே நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் மதுவிலக்கை அமலாக்க முடியாது அதைக் கைவிடுவதுதான் ஒரே வழி. எல்லாக் கட்சிகள், பொது ஜன ஸ்தாபனங்கள் மூலமாகப் பிரச்சாரம் செய்து அதைத் தடுப் பதற்கு முயற்சி செய்யலாம்.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் மதுவிலக்குக் கொள்கையை அமல் படுத்துப்போகிறதா என்று பார்க்க வேண்டும். பார்லி மெண்டிலே பேசி இருக்கிறார்கள். தொழில் மந்திரியும், நிதி மந்திரியுமான திரு. வெங்கட்டராமன் பேசியிருக்கிறார்.

"The Centre would leave the States free as far as the policy of prohibition vis-a-vis their financial resources were concerned. If the State Governments could not afford to have prohibition they





were free not to have it. It was a matter for each State to decide. It was for the State Governments to decide whether or not their financial position would permit them to have prohibition foregoing a part of their revenue. The Centre had nothing to do with their problem என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்த மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வரையிலும் மதுவிலக்கு வேண்டுமென்றோ அல்லது வேண்டாமென்றோ எந்தக் கொள்கையையும் மத்திய சர்க்கார் சொன்னதாகப் பார்க்கவில்லை. இனிமேல் சொல்வார்களா என்று பார்ப்போம். ஒரு விஷயத்தைத் தெளிவாக்க விரும்பு கிறேன். மாநிலங்களிலே நாங்கள் மதுவிலக்கைக் கொண்டு வந்தோம், 100 கோடி ரூபாய் நட்டம் வந்தது என்று எங்களிடம் வராதீர்கள், செப்பால் அடித்த ஒரு பைசா கூடத் தரமுடியாது, நிறுத்துங்கள் என்றும் சொல்லவில்லை, நடத்துங்கள் என்று சொல் வில்லை. நீங்கள் பார்த்துச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். மாநிலங்களிலே உள்ளவர்களுக்கு காந்தியடிகளுடைய மதுவிலக்குக் கொள்கையிலே நம்பிக்கை இருக்கலாம், நடக்க முடியுமா என்பது தான் கேள்வி. 100 கோடி ரூபாய் கிடைத்தால் வேலையில்லா தோருக்கு படித்தவர்கள், பட்டதாரிகளுக்கு கிராமங்களிலும் நகரங்களிலும் இருக்கின்றவர்களுக்கு—மேற்கு வங்காளத்திலே அன் எம்பிளாய்மென்ட் ரிலீப் கொடுப்பதைப் போன்று—அவர்கள் 2,3,4, மணி நேரம் வேலை செய்து, அந்த நேரத்திலே குறிப்பிட்ட வேலையைச் செய்யச் சொல்லி வேலையில்லாதவர்களுக்கு ரிலீப் கொடுக்க முடியும். மேற்கு வங்காளத்திலே மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ரூ. 50 வீதம் கொடுக்கிறார்கள். அதற்குள் அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்கிறது. அதுவே மூன்று ஆண்டுகளுக்குக் கொடுக்கிறார்கள். இப்பொழுது கேர ளாவில் வந்திருக்கின்ற இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசும் வேலையில்லாதவர்களுக்கு ரிலீப் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதனால் தான் அங்கே இந்திரா அலைகள் புகமுடியவில்லை. அந்தச் சுவரை உடைக்க முடியவில்லை. ஊழிக்காற்றும், சூறாவளியும் உள்ளே புகமுடியவில்லை. மக்கள் நொறுக்கித் தள்ளுகிறார்கள்.

[பிற்பகல் 12-50]

இந்திரா காந்தி அம்மையார் மத்தியிலே உறுதியான சர்க்காரை அமைக்க வேண்டுமென்ற முறையிலே பிரச்சாரம் செய்ததால் வேறு மாற்று சர்க்கார் அமைக்கும் நிலையை மற்ற கட்சிகளினிடை யில் பார்க்க முடியாத நேரத்திலே இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் ஞானத்தின் அடிப்படையில் மக்கள் ஓட்டுப்போட்டார்கள் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள், அதற்காக மாநில அரசாங் கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத ஓட்டு என்று அதைச்

சொல்லாதா? அப்படி யென்றால் தேர்தலிலேயே ஒரு விளம்பரத்தைக் கொண்டு வந்து பிரகடனம் செய்திருக்கலாம். மத்திய அரசாங்கத்திற்கு நடக்கின்ற இந்தத் தேர்தல், இந்த ரிசல்ட் மாநில சட்ட மன்றத்திற்கும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், மாநில அரசாங்கத்திற்கும் நம்பிக்கைப் பிரச்சினையாகத் தான் நடக்கும் என்று சொல்லியிருக்கலாம். அப்படிப்பட்ட நிலைமைகள் நம்முடைய கான்ஸ்டிடியூஷனிலே கிடையாது. ஆகவே, அன்—கான்ஸ்டிடியூஷனலாக நம்முடைய மாநில சர்க்காரைக் கவிழ்க்கின்ற நிலைமையோ, கட்சி விட்டுக் கட்சி மாறக்கூடிய நடவடிக்கை மூலம் கவிழ்க்கும் நிலைக்கோ கொண்டு போவது தப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற முயற்சி எடுக்க வேண்டும். மிகுந்த வேதனையோடு நான் சொல்ல ஆசைப்படுகிறேன், தமிழ்நாட்டின் நிலை என்ன என்பதை கணக்கில் கொண்டு நாம் இதைப் பரிசீலிக்க வேண்டும்.

All the political parties must think dispassionately over this thing.

நல்லமுறையிலே யோசனை செய்யுங்கள். 1971-ல் நாடாளுமன்றத்திற்கு 10 தொகுதிகள் மட்டும் போதும் என்று சொல்லி, ஒரு சட்டமன்றத்தொகுதிகூட வேண்டாமென்று கூறி அன்றைக்கு தமிழ்நாட்டில் ஆளுங்கட்சியாக இருந்த தி. மு. க. கட்சியினிடத்திலே இந்திரா காங்கிரஸ் கேட்டு 10 நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொடுத்தார்கள்.

1977-ஆம் வருடத்தில் 15 நாடாளுமன்றத் தொகுதிகள் வேண்டுமென்று கேட்டு அதை இன்றைக்கு ஆட்சி புரிகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்த 15 தொகுதிகளைக் கொடுத்தார்கள். 1980-இல் 22 தொகுதிகளை அதே கட்சி கேட்டு, நமது மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களோடு சேர்ந்து நிற்பதற்காக, கூட்டு அணிக்காக வேண்டி அவர்களும் அந்த 22 சீட்டுகளைக் கொடுத்தார்கள். இப்பொழுது என்ன நிலைமை வந்து கொண்டிருக்கிறது தெரியுமா?

" தமிழகம் தேசிய நீரோட்டத்தில் கலந்து விட வேண்டும் என எங்களுடைய கட்சித் தொண்டர்கள் விரும்புகிறார்கள். 1967-ஆம் ஆண்டு இழந்துவிட்ட தமிழக அரியணையை காங்கிரஸ் கட்சி மீண்டும் பெற்றிட முழு முயற்சியுடன் பாடுபடுவேன். பாண்டிச்சேரியில் நாங்கள் விட்டுக் கொடுத்ததுபோல தி. மு. க. வினர் தமிழகத்தில் எங்களுக்குப் பெரும்பான்மையான இடங்களை விட்டுக் கொடுக்க வேண்டும் " என்று தமிழகத்திலே இருக்கக் கூடிய இந்திரா காங்கிரஸினுடைய தலைவர் சொல்கிறார். பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். அவருக்கு அப்படிச் சொல்வதற்வதற்கு உரிமை உண்டு. அதிலே நாங்கள் எந்தவிதமான தவறையும் பார்க்கவில்லை.



இந்த நிலைமை எப்படி உண்டாயிற்று என்பதைப் பார்க்க வேண்டும். நான் கேட்கிறேன் அன்றைகு இதே சட்ட மன்றத்தில் சொல்லப்பட்டது, திராவிட இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள் இரண்டு பக்கத்திலே இருக்கலாம், ஒன்று ஆளுங்கட்சியில் இருக்கலாம், ஒன்று எதிர்க்கட்சியில் இருக்கலாம். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்தால் தமிழகத்தில் இருக்கும்படியான வாக்காளர்களிலே, மொத்த மக்களிலே 70 சதவீதத்தினருக்கு மேல் நாங்கள் பிரதிநிதி என்று சொன்ன உங்களிடத்திலே, இன்றைக்கு அவர்கள் நாங்கள்தான் பிரதிநிதிகள் என்று சொல்லக்கூடிய நிலை வருகிறதே என்பதைப் பார்க்கிறோம்.

காங்கிரஸ் கட்சி 1967 ஆம் வருஷத்தில், அதனுடைய கொள்கைகனள தமிழ்நாட்டு மக்கள் நிராகரித்த காலத்தில், இந்திய மக்கள் நிராகரித்த காலத்தில், எட்டு ஒன்பது மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்த காலத்தில், மதிப்பிற்குரிய மறைந்த நமது முதலமைச்சராக இருந்த திரு. அண்ணாதுரை அவர்கள், மார்க்சிஸ்ட் கட்சி உள்பட மற்றக் கட்சிகளோடு ஒன்றாகச் சேர்ந்து, காங்கிரஸ் கட்சியினுடைய அரசாட்சி இனிமேல் நமக்கு ஒத்துவராது என்று நீக்கப்பட்டதற்குப் பிறகு, 14 வருஷம் இந்த நிலைமையில் ஆட்சி நடந்ததற்குப் பிறகு இன்றைக்கு இதை சொல்லக்கூடிய நிலைமையை உண்டாக்கியதைக் கண்டு நாங்கள் வருத்தப்படுகிறோம், ஆனால் இன்னும் நாம் சொல்லுகிறோம் காலம் மீறிப்போய் விடவில்லை.

நிலைமைகள் இப்படியே போய்க் கொண்டிருக்காது. ஆகவே, ஜனநாயக சக்திகள், இடதுசாரி சக்திகள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அத்தனையும் ஒன்றாகச் சேர்ந்து இந்தப் போக்கினை முறியடிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் இந்தத் தன்மையை உணர்வார்கள். அவர்கள் நிச்சயமாக பெட்ரிலசத்தை எதிர்க்கக் கூடியவர்கள் அல்ல, அதை ஆதரித்து நிற்கிறவர்கள், மாநில சுயாட்சியை ஆதரிக்கின்றவர்கள். அங்கே டில்லியில் இருக்கும்படியான மத்திய சர்க்கார் இந்த நிலையில் இருக்கிறது, கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். வேறு யாரும் அல்ல, நமது மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் இந்திரா அம்மையாரினுடைய திருப் புதல்வர் சஞ்சைய் காந்தி பேசியது தான் அது. சுசீலா கோபாலனுடைய தீர்மானத்தை எதிர்த்துப் பார்லிமெண்டில் பேசியதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஆகவே அர்த்தம் இல்லாமல் நான் சொல்லவில்லை. இந்த நிலைமைகள் மாற வேண்டும். திட்ட வட்டமாக தமிழகத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அண்ணா தி. மு. க. வோடு உடன்பாடு கொண்ட இந்த அணி இருக்கிறதே, இது மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். வெறும் கோஷங்கள் மட்டும் சொன்னால் போதாது. நல்ல சட்டத் திருத்தங்கள் கொண்டு வருவதாகச் சொல்வது நல்லதுதான், நாங்கள் வரவேற்கிறோம்.

கீழே உள்ள கட்சித் தொண்டர்கள், கட்சி ஊழியர்கள் சகோதரக் கட்சிகளுடன் சேர்ந்து கிராமம் கிராமமாக, பட்டி தொட்டி, பட்டணம், பட்டிக்காடு, சந்து பொந்து சகலத்திலும் மக்களைத் திரட்டும்படியான வேலைகளிலே ஈடுபடவேண்டும். நீங்கள் செய்துள்ள காரியத்தை நல்லது என்று எடுத்துக்காட்ட வேண்டும். உங்கள் குறைகளை அவர்கள் விமர்சிக்கட்டும். மக்களோடு சேர்ந்து உரையாடுங்கள். சட்ட மன்றத்திலே வந்து சேர்ந்ததால் நாம் உப்பரிகையிலே உட்காருகிறோம் என்று அர்த்தம் அல்ல அதுமாதிரி தோளோடு தோள் சேர்ந்து நிற்கக் கூடிய மற்றக் கட்சிகளோடு சேர்ந்து நில்லுங்கள். உழைப்பாளி மக்களுடைய சங்கங்களோடு, ஸ்தாபனங்களோடு சேர்ந்து நில்லுங்கள். அப்படிச் சென்றால் உங்களுடைய ஜனநாயக அடிப் படை இன்னும் வலுப்படும். மக்களிடத்தில் உங்களுடைய அஸ்தி வாரம் பலப்படும். இதுதான் மேற்கு வங்கம் திருபுரா, கேரளாவில் எங்களுக்குக் கிடைத்த அனுபவம். அந்த அனுபவத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த முறையிலே இடதுசாரி ஜனநாயக சக்திகள் வெற்றி கண்டு முன்னேற வேண்டும். இது 1971 அல்ல. அன்று இந்திரா காங்கிரஸ் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிடி கிடைத்து ஜாம் ஜாம் என்று எந்தச் சர்க்காரையும் வேண்டுமானால் கலைத்துவிடலாம் என்பது 1980லே நடக்காது. விஷயம் வேறு விதமாகப் போய்முடியும் என்பதையும் நாம் இன்றைக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இங்கே ஒரே இந்திய நாடு இருக்க வேண்டாமா ? அதையும் ஆலோசிக்க வேண்டும். இந்த நிலைமையில் இந்த ஆளுநர் உரையில் கிடைத்த சந்தர்ப்பத்தில் என்னுடைய கட்சியின் தெளிவான கொள்கைகளைப் பற்றி என்னால் முடிந்த அளவிற்கு எடுத்து வைத்திருக்கிறேன். பாக்கி உள்ளவைகளை எங்கள் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் பின்னால் விளக்கமாக எங்கள் நிலையை எடுத்து வைப்பார்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்.

### (இ) பதவி விலகிய திரு. பெ. சௌந்தரபாண்டியனுக்கு ஒதுக்கப் பெற்றுள்ள இடம் குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சௌந்திரபாண்டியன ராஜிநாமா தங்களுக்கு வந்து சேர வில்லை என்கிறீர்கள். இன்றைக்கு அந்த இடம் வெற்றிடம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. அது முறையாக வந்திருக்கிறதா ? ஜி. ஓ. வந்திருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைக்கு திரு. சௌந்தர பாண்டியனிடமிருந்து ஒரு இடத்தை ஒதுக்குமாறு கடிதம் வந்திருக்கிறது. நானும் இடத்தை ஒதுக்கியாகிவிட்டது.

கனம் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையில் இப்போது நான் பார்த்த தகவலின்படி, நான் ஏற்கனவே சொன்ன கருத்தை திருத்தி சொல்ல வேண்டிய





கடமையில் இருக்கிறேன். அவர் அமைச்சர் பதவியில் இருந்து விலகி விட்டதாக அரசாங்க ஜி. ஓ. என்னுடைய அலுவலகத் திற்கு நேற்று வந்திருக்கிறது. அவர் வேறு கட்சிக்குப்போன தாகவோ, கட்சியிலிருந்து விலகியதாகவோ கடிதம் வரவில்லை. அவர் அமைச்சர் பதவியில் இருந்து விலகிவிட்டேன் என்பது குறித்து அரசாங்க உத்தரவு என் கையில் வந்திருப்பதை ஒட்டி அவருக்கு முதல் வரிசையில் இருந்த இடத்தை மாற்றி வேறு இடத்தை ஒதுக்கியிருக்கிறேன் என்ற தகவலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முன்னாலே அவர் கடிதம் அனுப்பியுள்ளதாகச் சொன்னதை திருத்திக் கொள்ள வேண்டும் எனறும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: எந்த இடம்?

[பிற்பகல் 1—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எவ்வளவு ஆவலாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். வெற்றிடம் எங்கே இருக்கிறதோ அங்கே அவருக்கு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அவர் எங்கே இருக்கிறார் எனபது அவர் அமர்ந்த பிறகு உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. செ. சிவசாமி; எந்த எண்ணில் அவருக்கு இடம் ஒதுக்கப் பட்டு இருக்கிறது?

திரு. க. சுப்பு : முன்னாள் அமைச்சருக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்குவது வழக்கம். அதனால் எங்கள் பக்கம் ஒதுக்கி யிருக்கிறீர்களா அல்லது வேறு இடத்தில் ஒதுக்கியிருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அந்தக் கருத்தை பேரவைத் தலைவருக்கு யோசனை என்கிற முறையில் சொல்லலாம். அதையே ஒரு கட்டாயமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. உங்களுடைய யோசனை எனக்குத் தெரியும். அவர் எங்கே உட்கார வேண்டும் என்பதைப் பற்றி கேட்டதால் இருக்கிற இடத்தில் இடம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னேன்.

திரு. துரை கலியமூர்த்தி : அவருக்கு எந்த இடம் ஒதுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து அந்த உறுப்பினருக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியினுடைய சார்பில் ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன். இந்த கவர்னர் உரையில் சில குறிப்பிடத்தக்க காரியங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சில வரவேற்கத்தக்க காரியங்களை இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் வரவேற்க வேண்டியது என்னுடைய கடமை.

குறிப்பாக போர்டு ஆப் ரெவின்யுவை அபாலிஷ் செய்திருக்கிறார்கள். அதாவது வருவாய் வாரியத்தை நீக்கி, அதற்குப் பதிலாக தனித் தனித் துறைத் தலைவர்களை அமைப்பது என முடிவெடுத்து இருப்பதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன. நிர்வாக நலனைக் கருதி பல நிர்வாகச் சிக்கல்கள் எழுந்தபோதெல்லாம் அவற்றிற்கு முட்டுக் கட்டையாக இருக்கின்ற வருவாய் வாரியத்தை நீக்கி துறைத் தலைவர்களாக நியமித்து இருக்கிற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரு முறையை இங்கே கொண்டு வருவதற்கான ஒரு நிலையை எடுத்திருப்பதைப் பாராட்டுவது என் கடமை, அதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல இன்னொன்றையும் சொல்லி இருக்கிறார்கள். ஸ்போர்ட்ஸ் டைரக்ட்ரேட் நிறுவி அது நடைபெற்று வருவதை நான் வரவேற்றபோதிலும் இன்னும் சில பிரச்சினைகளை நாம் எடுத்துச் சொல்லவேண்டியது என கடமை என்று கருதுகிறேன். இங்கே நம் மாநிலத்தில் ஸ்போர்ட்ஸ் டைரக்டரேட் என்று ஒன்று நிறுவப்பட்டு வருவது மட்டும் போதாது என்று குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். கேரளா, அரியானா, பஞ்சாப், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் விளையாட்டுத் துறைக்கு ஒரு அமைச்சகம் இருக்கிறது. ஒரு அமைச்சரின் பொறுப்பிலே நடைபெறுகிறது.

அது மட்டுமல்ல, அதற்கான மானியம் கோரப்பட்டு சட்ட மன்றத்திலே நிதி ஒதுக்குகின்ற நிலைமைகள் நடந்து கொண்டு வருகின்றன. அதேபோல தமிழ்நாட்டிலே நான் அறிகிறேன் இன்னும் கொஞ்ச நாட்களுக்குள்ளாக, அமைச்சரவையில் கூட சில மாறுதல்கள் இருக்கும் என்று அறிகின்றேன். அப்படி மாறுதல் வரும்போது இந்த விளையாட்டுத் துறைக்கு ஒரு அமைச்சரை நியமித்து அந்த அமைச்சர் கையிலே இந்தப்பொறுப்பைக் கொடுத்து இளைஞர்களுடைய வாழ்க்கைக்கு, பிற்காலச் சமுதாயத்தை உருவாக்குகின்ற பணியினை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அரியானா, பஞ்சாப், கேரளா



போன்ற மாநிலங்களில் இந்த விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்ற, மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் மற்ற கல்லூரிகளிலும் சேருவதற்கான கோட்டாவை வைத்திருக்கிறார்கள். தனியாக இடத்தை ஒதுக்கீடு செய்து வைத்திருக்கிறார்கள்.

பல்வேறு மாநிலங்களில் விளையாட்டுத் துறையில் சிறந்த மாணவ மாணவியருக்கு என்று பல்வேறு படிப்புகளில் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்வது போல், நம்முடைய மாநிலத்திலே விளையாட்டுத் துறையில் சிறந்த மாணவ, மாணவியருக்கு தனித் தனியாக ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கீடு செய்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களில் இருக்கிற விளையாட்டு நலக் கழகங்கள், ஸ்போர்ட்ஸ் கவுன்சில்கள் என்று சொல்லப்படுபவை, ஆங்காங்கு நிறுவப்படாமல் இருக்கின்றன. அந்தக் கவுன்சில்கள் கூட்டப்படாமல் இருக்கின்றன. அவற்றை உடனடியாக நிறுவி, திறமையான விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் கேள்விப்படுகிறேன். நம்முடைய ஸ்போர்ட்ஸ் டைரக்டரேட் அடிப்படையில், கட்டாக்கில் நடைபெறுகிற தேசீய ஹாக்கிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இருக்கும் தமிழ் நாட்டு அணியினருக்கு இப்போது (சுமார் 22 பேர்களுக்கு) பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக அறிகிறேன். அந்தப் பயிற்சியினைப் பெற்றுக் கொண்டு இருப்பவர்களுக்குச் சரியான அளவிற்கு அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை, பயிற்சி சரியாக நடைபெற முடியவில்லை என்று நான் அறிகிறேன். அதைப் போக்க உடனடியாக ஹாக்கி அணியில் பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கிற வீரர்களுக்கு உதவும் வகையில் அவர்களுக்கு உரிய பணத்தை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் சொல்லப்பட்டு இருக்கிறது, தமிழ் மொழிக்காகவும் தமிழ் நாட்டிற்காகவும் பாடுபட்ட தியாகிகளுக்கு நாங்கள் சலுகை தரப் போகிறோம், பல்வேறு உதவிகளைத் தரப் போகிறோம், அதற்குச் சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த அரசைப் பார்த்து பணிவோடு கேட்டுக்கொள்வேன், கடந்த முறை இது போன்று சொன்னீர்கள் என்பது என்னுடைய நினைவு. கடந்த முறையே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னீர்கள். இந்தத் தமிழ் நாட்டிற்காகப் பாடுபட்டவர்களுக்கும் நாங்கள் உதவிப் பணம் அளிப்போம் என்று சொன்னீர்கள். ஆகவே, காலம் கடத்தாமல், உடனடியாக சட்டத் திருத்தம் கொண்டு வந்து குறிப்பாக தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று போராடிய குமரி மாவட்ட தியாகிகளுக்கு

[திரு. பொ. விஜயராகவன்] [1980 பிப்ரவரி 5

அளித்து வந்த முன் பணம் மட்டுல்ல, இனியும் அளிக்காமல் இருக்கிற ஆயிரக்கணக்கான உதவிப் பணத்தையும் சலுகைகளையும் வழங்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் சொல்லப்பட்டு இருக்கிறது, தூத்துக்குடிக்கும் சென்னைக்கும் இடையே அகல ரயில் பாதை போட வேண்டும் என்று. அதை வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். கடந்த 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கன்னியாகுமரி—திருவனந்தபுரம் ரயில் பாதை தொடங்கியபோது அன்றைய ரயில்வே அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய மது தண்டவதே அவர்கள் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் (காந்தி பிறந்த நாள் விழாவான 2 ஆம் தேதிக்குள்) கன்னியாகுமரிக்கும் காஷ்மீருக்கும் இடையே துரித ரயில் விடப்படும் என்று அறிவித்தார்கள். பல்வேறு அரசியல் சூழ்நிலை காரணமாக அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் அது நிறைவேறவில்லை. அந்த நிலைமை கடந்து போய் விட்டாலும், இன்றைய நிலையில் உடனடியாக நம்முடைய தமிழக அரசு கன்னியாகுமரிக்கும் காஷ்மீருக்கும் இடையே மிகப் பெரிய துரித ரயில் விடுவதற்கு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவனந்தபுரம்—கன்னியாகுமரி ரயில் பாதை இணைப்பு செய்ததுபோல், திருநெல்வேலிக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே ரயில் பாதை அமைக்கும் பணி கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது இன்றைக்கும் தொடர்ந்து முடியாமல் இருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். அதைத் துரிதமாக முடிப்பதற்கு இந்த அரசு மத்திய அரசை கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் இன்னும் பல்வேறு பிரச்னைகள் பல்லாண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக எங்களுடைய பகுதியிலே இருக்கிற கடைவரம்பு நிலங்களுக்குப் பல இடங்களில் தண்ணீர் போய்ச் சேராத காரணத்தால் பயிர்கள் கரிந்து, தீய்ந்து போகிற சூழ்நிலை இருக்கிறது. சித்தாறு-பட்டணங்கால் திட்டத்திற்கு உட்பட்ட பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர் காய்ந்துவிட்டது. இன்றைக்கு அணையில் ஏராளமாக தண்ணீர் இருந்தும் கடைவரம்பு நிலங்களுக்குப் போக முடியவில்லை. அதற்கான காரணங்களை ஆராய்ந்து இருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்க வேண்டும். அதோடு, பயிர் தீய்ந்து போன நிலங்களில் முதலிடு செய்திருந்த விவசாயிகளுக்கு வரி வஜா செய்வதோடு, அந்த விவசாயிகளுக்கு நஷ்டயீடும் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

1971—72 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அந்தத் திட்டத்தில் மெயின் சானலில் 35 கிலோமீட்டர் தூரம் வரையில் நீர் ஒழுங்கு இருக்கிறது. அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 10 ஆண்



1980 பிப்ரவரி 5] [திரு. பொ. விஜயராகவன்]

டுகள் ஆகியும் இதுவரையில் எந்தவிதமான பழுதும் பார்க்கப்படவில்லை. மெயின் சானல் சம்பந்தமாக விஜிலன்ஸ் கேஸ் ஒன்று இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 13 நிமிடங்கள் ஆகிவிட்டன, முடித்துக் கொள்ளுங்கள் அதோடு, அவையில் சத்தம் நிறைய இருக்கிறது. உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: இடையிலே இரண்டு குறுக்கீடுகள் வந்துவட்டன. அதனால் இன்னும் 5 நிமிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கேஸ் முடிந்த பிறகும் ரெக்கார்டுகள் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு வராத காரணத்தால் பல இடங்களில் வேலை முடிவடைந்திருந்த போதிலும் இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. மேற்கொண்டு வேலையும் நடக்காமல், பழுதும் பார்க்கப்படாமல் இருப்பதால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர்கள் தீய்ந்து போகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட உடைப்பு கூட இன்னும் அடைக்கப்படவில்லை. கீழ்குளம் பகுதியில் ஏறத்தாழ 1,35,000 ரூபாய் அடைப்புக்கு என்று பணம் ஒதுக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, அந்த டெண்டர் கூட இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது அதன் காரணமாக அந்த இடத்தில் இருக்கின்ற விவசாயிகள் நூற்றுக்கணக்கானவர்கள் இன்றைக்கும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற சூழ்நிலையைக்காண்கிறோம். அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல உண்ணாமலைக்கடை, மாங்காடு உடைப்புகளும் அப்படியே இருக்கின்றன. அந்த உடைப்புகளையும் உடனடியாக சீர் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கெட்டுக்கொளகிறேன்.

அடுத்து, பனை ஏறும் தொழிலாளர்கள் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அவர்களுக்கு விறகு கிடைக்கவில்லை. விறகு விலை அவர்கள் வாங்க முடியாத அளவுக்கு அதிகமாக இருப்பதால் அவர்கள் வாழ்க்கை நடத்தத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்; வறுமையைப் போக்க வழியில்லாமல் கஷ்டப்ப்டுகிறார்கள். அவர்களுக்குக் குறைந்த விலையில் விறகு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, அவர்கள் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழும், சிறு விவசாயிகள் மேம்பாட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழும் உதவி பெறத் தகுதியுடையவர்கள் என்ற நிலையை

[திரு. பொ. விஜயராகவன்] [1980 பிப்ரவரி 5

உருவாக்கினால், அவர்கள் பல சங்கங்களிலிருந்து கடன் வாங்க முடியும் ; ''சப்சிடி''யும் கிடைக்கும். அதனால் அவர்கள் வாழ்க்கை ஓரளவுக்கேனும் வளம்பெற முடியும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் பிரச்னைகளைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு முழுவதும் அவர்கள் பிரச்சனை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைபப்டுகிறேன் கைத்தறித் துணி தேங்கிக் கிடப்பது மட்டுமல்லாமல், இன்றைக்கு அவர்களில் பாதிபேர்களுக்குமேல் வேலை இல்லை. காரணம் என்னவென்றால் கைத்தறித் துணி ஏற்றுமதி ஜனதா அரசு இருந்தபோது இருந்த அளவுக்கு இப்போது இல்லை ; புதிய சர்க்கார் வந்த பறகு ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கிறது; ஏறத்தாழ முன்பருந்ததில் பாதி அளவுக்குத்தான் இப்போது ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்கான காரணம் பல இருப்பதாகச் சொல்கிறார்கள் ஏற்றுமதியை அதிகரிப்பதில் கவனம் செலுத்தி நெசவாளர்கள் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். அவர்கள் வாழ்க்கைக்கு நல்லதொரு பரிகாரம் செய்ய வேண்டும். ஏற்றுமதியைப் பெருக்கப் போராட வேண்டுமானால் அதற்கும் தயாராக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ஏனென்றால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கைத்தறித் துணியில் பெரும்பகுதி தமிழ்நாட்டிலிருந்துதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[பிற்பகல் 1—10.

மீனவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்குப் பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன. மீனவர்களில் பணக்காரர்கள் மட்டும் தான் விசைப்படகு வாங்க முடியும் என்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணத்தைக் கட்டினால் தான் விசைப்படகு வாங்க முடியும் என்கிற சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. அந்த முறையினை நீக்கி ஏழை, பாமர மீனவர்களும் மீன் பிடிப்பதற்கு வசதியாக விசைப்படகுகளைப் பெறுவதற்குரிய சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்சொள்கிறேன். அதோடு அவர்களுக்குத் தேவையான நல்ல வலைகளையும் அரசாங்கமே பெற்று, அவர்களுக்கு சப்சிடி கொடுத்து அந்த வலைகளை அவர்களுக்குத் தந்து அவர்களது தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறன்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் என்கிற இடத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசும், மாநில அரசும் 50, 50 சதவிகித பணத்தைப் போட்டு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருந்ததாசத் தெரிய வருகிறது. அந்தத் திட்டத்தை மேலும் தீவிரப்படுத்தி அந்த மீன்பிடித் துறைமுகத்தைக் கட்டிக் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 பிப்ரவரி 5] [திரு. பொ. விஜயராகவன்]

அடுத்து குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் வாய்ப்பு இருப்பதால் அங்கேயும் ஒரு மீன் பிடி துறைமுகம் கட்டித் தருவதற்கு இந்த அரசு முயல வேண்டும் என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பல இடங்களில் இன்றைய தினம் பிஷ் டெவலப்மெண்ட் பார்மர்ஸ் ஏஜென்சி என்று சொல்லப்படுகிற ஏஜென்சி நிறுவப்பட்டு அது நன்றாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த ஏஜென்சியின் மூலம் உள்நாட்டிலேயே மீன்பிடிக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாகச் செய்ய முடியும். பல இடங்களில் குளங்களிலும், குட்டைகளிலும் மீன்பிடிக்கும் வாய்ப்பு இருப்பதால் இந்த ஏஜென்சியைப் பரவலாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு வங்கியினுடைய ஒரு பிரிவு, மார்த்தாண்டம் என்ற இடத்திலே இயங்கிக் கொண்டு வந்தது. கள்ளிகுளம், விளவங்கோடு ஆகிய இரண்டு தாலுக்காவையும் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்களில் உள்ளவர்களுக்கு தங்களுடைய குறைகளைச் சொல்லவும், பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கும் வசதியாக இருந்தது. ஆனால், அது திடீரென்று மார்த்தாண்டத்திலிருந்து நாகர்கோவிலிலுக்கு மாற்றப்பட்டிருக்கின்றது. அதை மீண்டும் மார்த்தாண்டத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேங்காய் மட்டைகள் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கேரளாவிற்குக் கொண்டு செல்லக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால், அது கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் கொண்டு செல்லக் கூடாது என்ற அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. கயிறுத் தொழிலில் அதிகமாகப் பயன்படக் கூடிய தேங்காய் மட்டைகளைத் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொண்டு செல்லக் கூடாது என்று சொல்லப்படுகின்றபோது நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். கன்னியாகுமரியை கேரளாவின் ஒரு பகுதியாக இன்றைக்கும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரியிலிருந்து தேங்காய் மட்டைகள் கேரளாவிற்குக் கொண்டுபோக முடியாது. கேராளவிலிருந்து வேண்டுமானால் தேங்காய் மட்டைகள் கன்னியாகுமரிக்கு வர முடியுமே தவிர இங்கிருந்து கொண்டு போக முடியாது. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு கன்னியாகுமரிக்கு திருநெல்வேலியிலிருந்து தேங்காய் மட்டைகளைக் கொண்டுபோவதற்கான அந்த உத்தரவை இந்த அரசு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேங்காய்ப்பட்டணம், தொடுவட்டி சாலையில் சின்னமுட்டம் என்கிற இடத்தில் ஒரு பாலம் இருக்கின்றது. அந்தப் பாலம் இன்றைக்குப் பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. அதை உடனடியாகப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குளச்சல் ஆற்றில் கணபதியான்கடவு என்ற இடத்தில் ஒரு பாலம் கட்டவேண்டும் என்று பல ஆண்டுக் காலமாக ஒரு கோரிக்கை இருந்து வருகின்றது. அந்தக் கோரிக்கையை உடனடியாக இந்த அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இன்னும் பல்வேறு காரியங்களைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் காலம் குறைந்திருக்கின்ற காரணத்தால் நான் என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்து அமருகிறேன்.

*திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை ஆளுநர் உரையின் மீது கூற விரும்புகிறேன். ஏற்கனவே நடந்து முடிந்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சியானது 2/3 பங்கு மெஜாரிட்டி பெற்றிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொண்டு தமிழகம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி புரிந்து வரும் அரசு கலைக்கப்பட வேண்டும் என்ற நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக இடது சாரி முற்போக்கு அணியானது ஓரளவே இடங்களைப் பெற்றாலும் கூட, மொத்தத்தில் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியாக இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தாலும் கூட, 42 சதவித ஓட்டுகளைத்தான் அவர்கள் கூட்டணியாக நின்று பெற்றிருக்கிறார்கள் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதேமாதிரி 58 சதவீதம் ஓட்டுகள் எதிர் அணிக்கு போடப்பட்ட ஓட்டுகள் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் எதிர்காலத்தில் கணிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

30 வருஷம் ஆண்டவர்கள் சொல்கிறார்கள்; 30 வருஷம் ஆண்டவர்களானாலும் சரி, பத்து வருஷம் ஆண்டவர்களானாலும் சரி, 30 வருஷமாக ஆண்டும் நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்குச் சரியான முறையிலே நன்மைகள் எதுவும் செய்யப்படவில்லை. திட்டங்கள் தீட்டப்படவில்லை என்றும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் மக்கள் அவர்களை ஒருமுறை வெளியேற்றியிருக்கிறார்கள். மீண்டும் இன்றைக்கு நிலையான ஆட்சி மத்தியிலே வேண்டுமே என்பதற்காக ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் சரியான முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை, அதற்கு மாறாக இந்த நாட்டு மக்களுக்கு எப்படிச் சேவை செய்ய வேண்டும், அவர்களின் நன்மைக்கு எப்படித் திட்டங்களை தீட்ட வேண்டும் என்று செயல்படுவதற்குப் பதிலாக, வந்தவுடனேயே 5 ஆண்டுகளுக்கு நாட்டு மக்கள் ஆள வேண்டும் என்று அதிகாரம் கொடுத்து அனுப்பியிருப்பவர்களை நீக்க வேண்டும் என்கிற வகையில் செயல்படுகிறீர்கள். ஏற்கனவே 9 முதலமைச்சர்கள் கூட இந்த நடவடிக்கையை எதிர்த்து எச்சரித்திருக்கிறார்கள். மீண்டும் இந்த நிலைமையிலேயே சிந்தனை செயல்படுமேயானால் நிச்சயமாக பெருவாரியான மக்கள், வெளியிலே



இருக்கக்கூடிய மக்கள், உங்களுக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தை தங்கள் கையிலே திரும்ப எடுத்துக்கொண்டு உங்களை வெளியேற்றி விடுவார்கள் என்று எச்சரிக்கிறேன்.

அது மட்டும் அல்ல, கேரளத்திலே, இந்தச் சூழ்நிலையிலேயே இந்திரா அம்மையார் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 2/3 பங்கு மெஜாரிட்டி பெற்று ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அரிஜனங்களுக்கு 10 ஆண்டு சலுகைகள் நீடித்து கொடுத்துவிட்டு அங்கு நடைபெற்ற தேர்தலிலே பிரதம மந்திரி என்கிற முறையிலே போய்த் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் அங்குள்ள நிலைமை மாறவில்லை. அங்குள்ள மக்களிடத்திலே கேரள மக்களிடத்திலே உங்களுடைய தேர்தல் பிரச்சாரம் செல்லவில்லை. நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்கிற வகையிலே, பதிலடி கொடுக்கக்கூடிய வகையிலே தேர்தல் முடிவுகள் வந்த பிறகும் கூட எந்த வகையிலாவது தமிழக அரசைக் கலைத்து விடலாம் என்று சிந்திப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்கிறேன்.

மீண்டும், மீண்டும், சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக் கொள்கிறேன். மேலும் இந்த நிலைமையை உருவாக்க வேண்டாம், அது சரியானது அல்லது;ஆபத்தானது. ஜனநாயக மரபுக்கு முரணானது அப்படியும் செவிசாய்க்கவில்லை! என்று சொன்னால், இடது சாரி முற்போக்கு அணியின் சார்பிலே சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மக்கள் சக்தியைத் திரட்டுவோம், அதன் விளைவு வெவ்வேறு முடிவுகளிலே போய் முடியும் என்ற எச்சரிக்கையை விடுத்துக் கொண்டு, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடந்த தேர்தலுக்குப் பிறகு மிகப் பெரிய அளவு மழை பெய்ததின் விளைவாக பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே கடந்த 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாளிலே நடந்த மிகப் பெரிய வெள்ளச் சேதம் அதிகக் கொடுமையானது. அதற்குப் பிறகு தேர்தல் வந்ததன் காரணமாக, மிகப் பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டிருந்தபோதிலும் அவை மறைக்கப்பட்டு விட்டன. என்னுடைய தொகுதியிலே கிழக்கு இராமநாதபுரத்திலே பரமக்குடி, இளையான்குடி, முதுகுளத்தூர், மோகனூர் திருவாடானை, கடலாடி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளிலே வெள்ளச் சேதம் மிக அதிகம். ரோடுகளிலே 4, 5 அடி தண்ணீர் நிரம்பியிருந்தது.

[பிற்பகல் 1–20]

மதுரை மாவட்டத்தில் உள்ள வைகை அணைக்கட்டிலிருந்து, பெரியாறு அணைக்கட்டில்ருந்து ஒரே நேரத்தில் 78,000 க்யூசெக்ஸ் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. அப்படி திறந்து விடப்பட்டதன் காரணமாகக் கிழக்கு இராமநாதபுரம் —

முழுவதும் அழிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் இது மூன்றாவது தடவையாக நடந்திருக்கிறது. ஏற்கனவே இரண்டு தடவை இதைப்பற்றி நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்போது கிழக்கு இராமநாதபுரம் மீண்டும் அழிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தபோது குடிக்கக் கூட தண்ணீர் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டு இன்று தேவையில்லாத நேரத்தில் அளவிற்கு மீறி திறந்துவிடப்படுகிறது அதன் காரணமாக அங்குள்ள பயிர்கள் மட்டுமல்ல; மற்றச் சொத்துக்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. அப்படி எல்லாவற்றையும் இழந்து தவிக்கிற விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் அதுபற்றி உரையில் ஒன்றும் குறிப்பிடாதிருப்பது வருந்தத்தக்கது.

அது மட்டுமல்ல. ரோடுகள் எல்லாம் பாழாகிப்போய்விட்டன. கிழக்கு இராமநாதபுரத்தில் ரோடுகள் எல்லாம் பாழ்ப்பட்ட நிலையில் இருக்கின்றன. போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் ட்ரெயின்ஸ் கூட ஒரு வாரம் வரவில்லை. ஆக அப் பகுதி மக்கள் அனைவரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய ஒரு நிலைதான் உருவாகியிருக்கிறது. திருப்பாலக்குடிக்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கப்பட்டது. அந்தத் தண்ணீர் ஒரு வார காலம் திறக்கப்பட்டு பின்னர் அந்தத் தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். அதற்கு மதிப்பிற்குரிய குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. அங்கு கிடைக்கக்கூடிய தண்ணீர் இன்றுவரை லாயக்கற்றதாக இருக்கிறது.

அடுத்து கூட்டுறவுக் கடன் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழகம் முழுவதும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் தொடர்ச்சியாக மூன்று பட்ஜட் கூட்டத்திலும், மூன்று ஆளுநர் உரை சமபந்தப்பட்ட கூட்டத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் கடன்கள் பூராவும் ரத்து செய்யப்பட வேண்டும். விவசாயிகளைக் கை தூக்கிவிடவேண்டும் என்று சொன்னால் அவர்கள் வாங்கியுள்ள கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அப்படி விவசாயிகள் வாங்கிய கடன்களை ரத்து செய்யவேண்டும் என்று சொல்லியும் இதுவரை அதுகுறித்து எதுவும் செயல்படுத்தப்படவில்லை. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய முறையில் அவர்கள் பட்டிருக்கும் கடன்களைத் தீர்க்கும் முறையில் மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி கொடுத்து அதன்மூலம் விவசாயிகள் பட்டிருக்கக்கூடிய கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக மத்திய அரசோடு மாநில அரசு போராட வேண்டும் என்று வலியுறுத்திச்சொல்ல விரும்புகிறேன். ஏனெனில் மத்திய அரசு 1974-ல் ஒரு கமிட்டி போட்டு அந்தக் கமிட்டி ரிபோர்ட் கொடுத்திருக்கிறது. எப்படி நிவாரணம்





அளிப்பது என்பது பற்றியெல்லாம் அந்தக் கமிட்டி தன் ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறது. அந்தக் கமிட்டி சிபார்சை அமல்படுத்தினாலே பெரிய நிவாரணமாகும், அந்த முறையில் அதைச் சிந்திக்க வேண்டும். எந்த அரசு அந்தக் கமிட்டியை உருவாக்கினார்களோ அதே கட்சிதான் இன்று மத்தியில் ஆளும் கட்சியாக வந்திருக்கிறது. ஆகவே இந்தியா முழுவதிலுமுள்ள விவசாய மக்களுக்கு நியாயம் கிடைக்கத்தக்க வகையில் விவசாயக் கடன்கள் பூராவும் ரத்து செய்யப்பட வேண்டும். ரிசர்வ் பாங்க் சட்ட திட்டங்களை மீண்டும் பரிசீலனை செய்து எந்தளவிற்கு சாதாரண விவசாய மக்களுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவிற்கு சட்ட திட்டங்களைத் திருத்த வேண்டும்.

ஏற்கனவே நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் கடைசி நாள் வந்த சட்டம் நினைவிருக்கலாம். அன்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. கடன் பட்டிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் அத்தனை பேர்களையும் கேவலப்படுத்தும் முறையில் அவர்கள் பெயர்களை பத்திரிகைகளில் போட வேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. தேர்தல் வருவதற்கு இரண்டரை மாதங்கள் இருக்கும்போது இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள், இந்தச் சட்டம் வேண்டாம் என்று சொன்னோம்.

ஆனால், இந்தச் சட்டத்தை கொண்டு வருகிறீர்களே, எந்த முகத்தோடு இந்த நாட்டு மக்களிடம் சென்று ஓட்டு, ஜனங்களிடம் சென்று ஓட்டு கேட்கப் போகிறீர்கள் என்பதை அன்றைக்கு நாங்கள் எடுத்துச் சொன்னோம். ஆனால், அதைவிட்டுவிட்டு இந்தச் சட்டத்தை நீங்கள் இந்தச் சபையிலே தாக்கல் செய்து, பாஸ் செய்தீர்கள். அதற்கான மரியாதையைத்தான் இந்த நாட்டு மக்கள் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது வருந்தத்தக்கதாகும். நடைமுறையிலே இப்படிப்பட்ட எத்தனையோ தவறுகளை செய்திருக்கிறீர்கள். இந்தத் தவறுகளையெல்லாம் திருத்திக் கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல. ஓட்டுக் கேட்கும் முதல் நாள் வரையில் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நானே இதற்கான ரிக்கார்டுகளைக் கொடுத்திருக்கிறேன். கணக்குக் கொடுத்திருக்கிறேன். இது மந்திரி அவர்களுக்கும் தெரியும். இப்படிப்பட்ட ரிப்போர்ட்டின் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெரியவில்லை. இன்றைக்கு நடந்து முடிந்த தேர்தலில் அதிகமான ஓட்டுக்கள் பெறாததற்குக் காரணம், நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்கள்தான் முதல் காரணம் என்று குற்றம் சாட்டுகிறேன். அந்த அளவுக்கு மக்கள்மீது கடுமையான ஜப்தி நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த

நடவடிக்கையைத் தடுக்க ஒரு சூபர்வைசர்மேல் நடவடிக்கை எடுத்திருந்தால், இப்படிப்பட்ட நிலைமையைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால், தடுத்து நிறுத்தவில்லை. அதன் காரணமாக, நாம் என்ன நிலைமையை எதிர்பார்த்தோமோ, அது கிடைக்கவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம், இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளை, நடைமுறைகளைப் பின்பற்றியதுதான் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், கிடைக்கும் தண்ணீரைத் தேக்கி வைத்து உபயோகப்படுத்தாமல்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றரை மணிக்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. செ. சிவசாமி : தண்ணீரைப் பொறுத்த அளவிலே இருக்கும் நிலையிலே எல்லாத் தண்ணீரையும் உபயோகப்படுத்தியது வாஸ்தவம்தான். ஆனால், அதே நேரத்திலே அன்றைக்கு உடைந்த கண்மாய்களை ரிப்பேர் செய்யவில்லை. அடைக்கவில்லை. வெள்ளம் வந்தவுடன், மடைகள் எல்லாம் திறந்துவிடப்பட்டன; உடைக்கப்பட்டன. அப்படிச் செய்ததன் காரணமாக, தண்ணீர் எல்லாம் கடலிலே போய் விழுந்தது. போதுமான கால்வாய்கள், வாய்க்கால்கள் இல்லாமல் தண்ணீர் சிதறிப் போயின. அவைகள் எல்லாம் ரிப்பேர் செய்யப்படாமல், இரண்டு மாதங்கள் ஆகின்றன. இன்றைக்கும் அவைகள் அடைக்கப்படவில்லை. அதனால், தண்ணீர் விரயம் ஏற்பட்டு, இன்றைக்கு விவசாயம் செய்வதற்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். நூற்றுக்கணக்கான கண்மாய்கள் இன்றும் ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன. எல்லாக் கண்மாய்களையும் ஒழுங்கு படுத்தினால், மழைக்காலத்தில் அவற்றில் தண்ணீரைத் தேக்கி, அதன் மூலம் விவசாயத்தைப் பெருக்க முடியும். தண்ணீர் வரக்கூடிய காலத்தில், எல்லாத் தண்ணீரையும் கடலுக்கு அனுப்பிவிட்டு, பிறகு தண்ணீர் இல்லையே என்று சொல்வதில் அர்த்தமில்லை. கால்வாய்களை, மடைகளை முறைப்படுத்த வேண்டும்; கரைகளை பலப்படுத்த வேண்டும். மடைகள் எல்லாம் சீராக இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். ரிப்பேர் செய்ய வேண்டும். அதன் மூலம் விவசாயத்தைப் பெருக்க முடியும்.

தொழிலைப் பொறுத்த வரையில், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே என்ன நிலைமை இருக்கின்றது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். சாக்பீஸ் தொழில் தீப்பெட்டி, மெழுகுவர்த்தி போன்ற சின்னச் சின்ன தொழிலைத்தான் ஆரம்பிக்கிறோம். பெரிய தொழிலை தமிழகத்திலே ஆரம்பிக்க வேண்டும். உதாரணமாக, தொழிலைப் பொறுத்த வரையில் நல்லதொரு கண்ணோட்டம் இல்லாததன் காரணமாக, தொழிலாளர்களிடையே, மிகப் பெரிய ஒரு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும். உதாரணத்திற்கு, இன்னொன்றும் சொல்கிறேன். கமுதக்குடியில் என். டி. சி. மில்லில் கிட்டத்தட்ட 300 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். அது கடந்த 32 நாட்களாக பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணமும் இல்லை. தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் எந்த விதமான பிரச்னையும் இல்லை. ஆனாலும், 32 நாட்களாக பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலை இனி ஏற்படாது.



போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால், கிராமாந்திரப் பகுதிகளில் இன்னும் சரியாக பஸ்கள் செயல்படவில்லை. ஒரு சில பகுதிகளில்தான் பஸ்கள் செயல்படுகின்றன. அதுவும் சரியாகச் செயல்படுவதில்லை. ஒருமுறை பார்த்தால் 8 பஸ்கள் ஓடும்; மறுநாள் பார்த்தால் 2 பஸ்கள்தான் ஓடும். இன்னும் சில இடங்களில் ரூட் மாற்றி விடப்பட்டிருக்கும். இன்னும் சில இடங்களில் ரிப்பேர் செய்யப்படாமல், நின்றுகொண்டிருக்கும். எல்லா ரூட்டுகளிலும் பஸ்கள் சரிவர ஓடுவதற்கான முறையிலே சாலைகள் சரிவர இல்லை; அவைகள் செப்பனிடப்படவில்லை. அந்த ரோடுகளை எல்லாம் செப்பனிட வேண்டுமென்று எடுத்துச் சொன்னபோது தமிழக அரசாங்கம் 120 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் போட்டிருக்கிறது. அதன் மூலம் கிராமாந்திரப் பகுதிகளில் நல்லதொரு ரோடு வசதிகள் செய்து கொடுப்போம் என்று போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றை வரைக்கும் அந்த நிலைமை உருவாகவில்லை. கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் இல்லாததன் காரணமாக, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள இதனுடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடி விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் தேதியிடப்பெற்ற 2199 ஆம் எண் அரசாணையில் வெளி

யான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

58. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாள் தேதியிடப் பெற்ற 2670 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

††59. தமிழ்நாட்டில் நிரந்தரமாகக் குடியிருந்து வருவோர்க்கு மது அருந்த அனுமதிச் சீட்டுக்கள் வழங்க வட்டாட்சியருக்கு அதிகாரமளிக்கும் வகையில் தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மது (உரிமம்—அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள் (மதுவிலக்கு—ஆயம் IV) துறையின் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ம் நாள் தேதியிடப்பெற்ற 265 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*11. உடுக்குறியிடாத வினா-விடை பட்டியல் (1 முதல் 200 வரை).

*2–2–1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

††4–2–1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathanatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-12.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

206/80

வெளியீடு—19-6-1980] [Issued—19-6-1980

DIRECTOR OF ARCHIVES
TAMIL NADU ARCHIVES
2 ... 1980
1467
EGMORE, MADRAS-600 008.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை 1980 பிப்ரவரி 6-தொகுதி XXXVII-எண் 5

Wednesday 6th [illegible]uary 1980—Volume XXXVII No. 5

தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009.

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

## உள்ளடக்கம்

**6–2–1980.**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்–விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 569–603 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) டீசல் பற்றாக்குறை குறித்து .. | 603–605 |
| (ஆ) 6–வது தமிழ்நாடு சட்டசபையைக் கலைப்பது என்கிற பேச்சு குறித்து | 605–606 |
| (இ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் குறித்து .. .. | 606 |
| 3. ஒழுங்குப் பிரச்னைகள்— | |
| (அ) அரசியலமைப்பு எண் 45 திருத்தச் சட்டம் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்பது குறித்து .. | 606–608 |
| (ஆ) பேச அழைத்த உறுப்பினருக்கு முதலில் வாய்ப்பு அளிக்காதது குறித்து .. .. | 608–610 |
| 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி). | |
| திரு. செ. சிவசாமி (தொடர்ச்சி) ... | 611–613 |
| திரு. துரை கலியமூர்த்தி .. | 613–620 |
| திரு. கொ. இராமசாமி ... | 621–624 |
| திரு. ரா. மார்க்கபந்து .. | 625–634 |
| திரு. ஏ. ஆர். மாரிமுத்து .. | 635–653 |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 643–646 |
| திரு. கே. சௌந்தரராசன் .. | 653–659 |
| திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ... | 659–665 |
| திரு. கே. ஜே. சுப்பிரமணியம் ... | 665–669 |
| திரு. கு. வடிவேல் .. | 669–674 |
| திரு. பி. கொ. சின்னசாமி ... | 674–678 |
| திரு. தி. அன்பழகன் ... | 678–682 |
| திரு. யா. சை. மு. யூசுப் .. | 683–686 |

பக்கங்கள்

5. அறிவிப்பு:—

அவைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கப் பெறுவது குறித்து .. .. 648

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்:— 686

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1980, பிப்ரவரி 6

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### பொறியாளர் பதவிகள்

* வினா எண் 61—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசில் பணியாற்றும் டிப்ளமோ பெற்ற பொறியாளர்களுக்கும் பட்டம் பெற்ற பொறியாளர்களுக்கும் இடையே சம்பளம் பதவி உயர்வு முதலியவைகளில் வித்தியாசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அதைப் போக்க அரசுக்கு எண்ணம் உண்டா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம்.

(ஆ) பொறியியல் பட்டம் பெற்ற பொறியாளர்கள் தமிழ்நாடு பொறியியல் பணியின் கீழ் ரூ. 600-30-750-35-890-40-1,050 என்ற ஊதிய விகிதத்துடன் 'உதவிப் பொறியாளர்கள்' என்ற பணிப் பெயரில் அரசிதழ் பெற்ற அலுவலராகப் பணியாற்றுகின்றனர். பொறியியல் டிப்ளமோ பெற்ற பொறியாளர்கள் 'தமிழ்நாடு பொறியியல் சார்புப்பணியின் கீழ் ரூ. 525-25-675-30-855-35-925 என்ற ஊதிய விகிதத்துடன் 'இளம் பொறியாளர்' என்ற பணிப் பெயரில் பணியாற்றுகின்றனர்.

பதவி நியமனத்தில் கடைப்பிடிக்கப்படும் விகித வேறுபாடு காரணமாகப் பதவி உயர்விலும் அதே நிலை கைக் கொள்ளப் படுகிறது. பதவி நியமனத்திலும் பதவி உயர்விலும் பட்டப் பொறியாளர்களுக்கும் டிப்ளமோ பொறியாளர்களுக்குமிடையில் 3:1 என்ற விகிதம் காக்கப்படுகிறது. தவிர, உதவி செயற் பொறியாளராகப் பதவியுயர்வு பெற பட்டம் பெற்ற உதவிப் பொறியாளர்கள் ஐந்து ஆண்டுகள் பணியும், டிப்ளமோ பொறி யாளர்கள் இளநிலை பொறியாளராகப் பத்தாண்டுகள் பணியும் புரிந்திருக்க வேண்டும்.

(இ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : ஒரே பணியைச் செய்கிற அதிகாரிகள் ஒருவர் பட்டம் பெற்றவர், மற்றொருவர் டிப்ளமோ பெற்றவர் என்ற காரணத்திற்காகப் பதவி உயர்வு பெறுவதற்கு ஐந்தாண்டுக் காலம், பத்தாண்டுக் காலம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரே பணியைச் செய்கிறவர் களுக்குள் சம்பளத்தில் வேறுபாடு இருக்கும் காரணத்தால் அதைப் போக்க வேண்டுமென்ற கோரிக்கையும் அவர்களிடத்திலே இருக்கிறது. அரசாங்கம் அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா?

திரு. எம். வின்சென்ட் : (அமைச்சரின் பேரவைச் செயலர்): இந்த வேறுபாடு டிப்ளமோ பெற்றவர்களுக்கும், பட்டம் பெற்ற வர்களுக்குமிடையே காலந்தொட்டு விரிவடைந்து திரும்ப இயலா நிலைக்கு வந்திருப்பது ஈண்டு நோக்கத் தக்கது. மேலும் இது தேசம் முழுவதும் அனைத்துப் பொறியியல் துறைகளிலும் நிலவுகிற நிரந்தரப் பிரச்சினை ஆகும்.

திரு. ந. தனசேகரன் : மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந் துரைக்கேற்ப டிப்ளமோ பெற்றவர்கள், மற்றும் பட்டம் பெற்ற வர்கள் ஊதிய விகிதங்களில் எந்த அளவுக்கு அதிகம் பெறு கிறார்கள்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : உதவிப் பொறியாளர்கள் ரூ, 600-30-750-35.890-40-1,050 என்ற விகிதத்தில் பெற்று வருகிறார்கள். இளம் பொறி யாளர்கள் ரூ. 525-25-675-30-855-35-925 என்ற விகிதத்தில் பெற்று வருகிறார்கள். பட்டம் பெற்றவர்கள் ஆரம்பச் சம்பளம் 425 ருபாயாக இருந்தது 600 ரூபாயாக ஆக்கப்பட்டது. சம்பள விகித உச்ச வரம்பு ரூ. 700 ஆக இருந்தது ரூ. 1,050 ஆக ஆக்கப்பட்டது. டிப்ளமோ பொறியாளர்கள் ஆரம்பச் சம்பளம் ரூ. 350 ஆக இருந்தது ரூ. 525 ஆக ஆக்கப்பட்டது. சம்பள விகித உச்ச வரம்பு ரு. 925 ஆக ஆக்கப்பட்டது. ஆரம்பச்



சம்பளத்தில் இருவருக்கும் ரூ. 175 அதிகம் வழங்கப்படுகிறது. சம்பள விகித உச்ச வரம்பில் பட்டம் பெற்றவர்கள் 350 ருபாய் அதிகமும், டிப்ளமோ பொறியாளர்கள் 225 ரூபாய் அதிகமும் பெறுகிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : டிப்ளமோ பெற்றவர் களுக்கும பட்டம் பெற்றவர்களுக்கும் இடையே அவர்கள் உதவி கோட்டப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெறுகிற காரணங் களால் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஒரே பதவியில் இருக்கும் அதிகாரிகளின் அந்தச் சம்பள விகிதத்தைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அஸிஸ்டெண்ட் எக்சிக்யூடிவ் எஞ்சினியர் பதவி உயர்வு பெறு வதற்கு டிப்ளமோ ஹோல்டர்ஸ் பத்தாண்டுக் காலம் பணி புரிந் திருக்க வேண்டும். அவர்களுடைய ஊதிய விகிதங்கள் நான் ஏற்கனவே சொன்ன விகிதத்தில் வருகிறது.

டாக்டர் கே. சமரசம் : புரட்சித் தலைவர் ஆட்சியில் பட்டம் பெற்றவர்களும், டிப்ளமோ பெற்றவர்களும் பணியாளர் களாக அமர்த்தப்படும்போது ஆரம்பப் பணியில் எவ்விதம் அமர்த்தப்படுகிறார்கள் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : புரட்சித் தலைவர் ஆட்சியில் பட்டம் பெற்றவர்கள் உதவிப் பொறி யாளர்கள்—அசிஸ்டெண்ட் எஞ்சீனியர்ஸ் என்றும் டிப்ளமோ பெற்றவர்கள் இளநிலைப் பொறியாளர்கள்—ஜூனியர் எஞ்சீனியர்ஸ் என்றும் பதவியில் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னால் சம்பந்தப் பட்டவர்கள் அவ்வளவு பேரையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்கள் கேட்கப்பட்டதா? அல்லது அப்படிக் கேட்காமலேயே அது வெளியிடப்பட்டதா? இல்லையென்றால், அவர்களை அழைத்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு அதற்கேற்றவாறு சரியான அடிப்படையிலே அவர்களுடைய சம்பளம் நிர்ணயிக்கப்படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, அவர்களை அழைத்து அவர்களுடைய குறைகள் கேட்கப்பட்டன.

[1980 பிப்ரவரி 6

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, அந்த மூன்றாவது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப் படும்வரை டிப்ளமோ மற்றும் பட்டப் பொறியாளர்களுடைய ஊதிய விகிதங்கள் எவ்வாறு இருந்தன என்பதை அறிவிக்க விரும்புவதோடு, இந்தக் குழு எப்போது ஆரம்பிக்கப் பட்டது என்றும் அதிலே யார் யார் இருக்கிறார்கள் என்றும் தெரிவிப்பார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்படும்வரை சம்பளம் ஒன்றாகத்தான் இருந்தது. ஆனால் பட்டப் பொறியாளர்களைப் பொறுத்த வரையில் அதே ஊதிய விகிதத்தில் கூடிய நிலையில் தொடக்க ஊதியம் வழங்கப்பட்டது. மூன்றாவது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களுக்கு முன் டிப்ளமோ ஹோல்டர்களுக்கு ரூ. 350-15-425-20-525-25-700 என்றும், பட்டப் பொறியாளர்களுக்கு ரூ. 425-20-525-25-700 என்றும் தரப்பட்டது. ஆனால், ஆரம்பச் சம்பள விகிதம் டிகிரி ஹோல்டர்ஸ்க்கு ரூ. 75 அதிகமாக இருந்தது. இருவருக்கும் சம்பள விகித உச்ச வரம்பு ரூ. 700 ஆக இருந்தது.

திரு, சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஒரே துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்குப் படிப்பில் வித்தியாசம் இருப்பதாக அமைச்சரின் பேரவைச் செயலர் தெரிவித்தார். டிப்ளமா படித்தவர்களைப் பொறியியல் படிப்பதற்கு ஏற்பாடு செய்து அவர்களுடைய சம்பளத்தை ஒன்றாக்குவதற்கு அரசு முன்வருமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ? டிப்ளமோ படித்தவர்களும் பொறியாளர்கள்தான்.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, அரசில் பணியாற்றுகின்ற டிப்ளமோ எஞ்சினியர்களுக்கும் பி.இ. படித்த எஞ்சினியர்களுக்கும் பணியில் வித்தியாசம் இருக்கிறதா? அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமானால் அதைப்பற்றி அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தமிழ்நாடு அரசுப் பணியில் உள்ள டிப்ளமோ மற்றும் பட்டம் பெற்ற பொறியாளர்களுக்கு இடையில் அவர்களுடைய கல்வித் தகுதியில் உள்ள உள்ளார்ந்த வேறுபாடுகளின் பொருட்டு ஊதியம் பணியமர்த்துதல், பதவி உயர்வு மற்றும் பணி நிலைமைகளில் வேறுபாடுகள் உள்ளன.



1980 பிப்ரவரி 6]

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் சொந்த மாவட்டத்திலோ வட்டத்திலோகூட பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் பொறியாளர்கள் மட்டும் சொந்த மாவட்டத்தில், வட்டத்தில் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அந்த நிலையை மாற்றி எல்லா அதிகாரிகளுக்கும் சம உரிமை வழங்கக்கூடிய முறையிலே அவர்களும் சொந்த மாவட்டத்தில், வட்டத்தில் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, சில பிரச்சினைகளும் குறைபாடுகளும் இருந்ததால் அதை மக்கள் பிரதிநிதிகள் அரசுக்குத் தெரிவித்ததால் தான் இந்த நிலை ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 62, 63 அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க பிறகு எடுத்துக் கொள்கிறேன்.

## கிருஷ்ணகிரியில் பயணியர் ஓட்டல்

*வினா எண். 64 டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கிருஷ்ணகிரியில் (தருமபுரி மாவட்டம்) ஓர் ஓட்டல் நடத்த ஏதேனும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

திரு ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): அரசின் பரிசீலனையில் ஓட்டல் நடத்தும் செயற்குறிப்பு இல்லை. தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கிருஷ்ணகிரியில் ஒரு ''சாலை ஓர தங்கும் விடுதி'' அமைக்கும் செயற்குறிப்பினை பரிசீலனை செய்து வருகிறது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரிப் பகுதியானது, ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய மத்திய பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினால், மேலும் தர்மபுரி மாவட்டம் வளர்ந்துவரும் பகுதியாக இருப்பதால், கிருஷ்ணகிரியிலே அதை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா? அது மட்டுமல்ல. ஒசூரில் கட்டப்படுகிற சுற்றுலா வளர்ச்சி ஓட்டல் எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, ஓசூரில் கட்டுவதாக இருந்த ஒட்டலை அங்கே கட்டுவதைவிட, பெங்களூருக்குச் செல்கின்ற பெருவழிச் சாலை சந்திக்கும் இடமாகவும்' சேலம் செல்பவர்கள் போகின்ற பெருவழிச் சாலை சந்திக்கும் இடமாகவும் கிருஷ்ணகிரி இருக்கிற காரணத்தால் அதை ஓசூரில் கட்டுவதைவிட கிருஷ்ணகிரியில் கட்டுவது நல்லது என்று முடிவெடுக்கப்பட்டு அங்கே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## தொலைக்காட்சியில் திரைப்படப் பிரிவு வெளியீடுகள்

*வினா எண். 65 திரு யா. சை. மு. யூசப்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையிலிருந்து ஒளிபரப்பும் தொலைக்காட்சியில் மத்திய அரசின் தகவல் துறையின் செய்தி திரைப்படம் வெளியிடுவது போல, மாநில அரசின் செய்தி மக்கள் நலத்துறை மூலம் வெளியிடப்படும் திரைப்படங்களும் வெளியிடக் கோரி மாநில அரசு, மத்திய அரசுக்குக் கோரிக்கை விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு திரைப்படப் பிரிவால் தயாரிக்கப்பட்ட சில படங்கள் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படுகின்றன.

(முற்பகல் 9.10)

திரு. யா. சை. மு, யூசுப் ; பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து தயாரிக்கப்படும் செய்திப் படங்கள், தமிழக அரசால் ஒளிபரப்பப்படுகின்றனவா? வாரத்தில் எத்தனைமுறை ஒளிபரப்பப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு நிர்வாகத்திற்கு உட்பட்ட தொலைக்காட்சி நிறுவனத்தாரிடம் 21-2-79 அன்று கடிதம் மூலம், தமிழக அரசு தயாரிக்கின்ற செய்திப் படங்களையும், அதோடு, விவசாய வளர்ச்சிக்கான, ஏனைய இலாக்காக்களினுடைய செயல் திட்டங்களை விளக்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களையும் வெளியிட வேண்டுமென்று, ஒளி பரப்ப வேண்டுமென்ற வேண்டுகோள் விடப்பட்டு, அந்த வேண்டுகோள் தொலைக்காட்சி நிறுவனத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செய்தி மலர் 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206 ஆகிய செய்திப்படங்கள் தொலைக்காட்சி நிலையத்திற்கு



அனுப்பப்பட்டிருக்கின்றன. அதோடு, விளக்கப்படங்களான நிலக்கடலை பற்றியதும், விவசாயத் துறை சம்பந்தப்பட்டதுமான ''பூச்சி தர்பார்'' என்ற திரைப்படமும், ''மண்ணைப் பொன்னாக்குவோம்'' என்ற திரைப்படமும் தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, சமீப காலமாக மத்திய அரசு, மாநில அரசுகள் தயாரிக்கும் செய்திப் படங்கள் சினிமாக் கொட்டகைகளிலே வெளியிடப் படுவதில்லை என்று அறிகிறேன். எப்பொழுதிலிருந்து வெளியிடப்படுவதில்லை, என் வெளியிடப்படுவதில்லை? எப்பொழுது அதை வெளியிட இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசு வெளியிட்டுள்ள ''பூச்சி தர்பார்'' என்ற திரைப்படத்தையும், ''மண்ணைப் பொன்னாக்குவோம்'' என்ற திரைப்படத்தையும் தமிழகத்திலிருக்கின்ற எல்லாத் திரையரங்குகளிலும் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. பல திரையரங்குகளிலே திரையிடப்பட்டும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதை இன்னும் பார்க்கவில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆர். மணிமாறன் :— பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாக தமிழக அரசைப் பற்றிய படங்களானாலும், தமிழக அரசைப் பற்றிய சாதனைகள், செய்திகளாக இருந்தாலும் அதைக் குறைந்த மதிப்பீட்டிலே எடுத்துக்கொண்டு, அதை ஒளி பரப்புவதில் பாரபட்சம் காட்டுவதாக தொலைக்காட்சி நடந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைக் கவனத்திலே எடுத்துக் கொண்டு, இதுமாதிரியான தவறுகள் நடைபெறாமல் இருக்க அரசு ஏதாவது விசேஷ கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் செய்தி மலர்கள் 197, 21-2-79 லும், 199, 11-4-79 லும், 201, 18-4-79 லும் 202, 23-5-79 லும் 204, 4-7-79 லும், 205, 1-8-1979 லும் தொலைக்காட்சியிலே திரையிடப்பட்டிருக்கின்றன. மேலும், நாம் தயாரிக்கின்ற எல்லாத் திரைப்படங்களையும் தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கு அனுப்பி வைக்கிறோம். அவர்கள் ஏற்கனவே மத்திய அரசின் நிர்வாகத்திற்குள்ளே இருக்கின்ற தொலைக்காட்சி நிறுவனம் தயாரிக்கின்ற திரைப்படங்களோடு நாம் தயாரிக்கின்ற திரைப்படங்கள் ஓரளவிற்குக் காட்சி அமைப்பிலே ஒற்றுமை இருப்பதாலே அந்தக் காட்சிகளை மட்டும் நீக்கிவிட, அதை எடிட் செய்ய அவர்கள்

நம்மிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தத் தொலைக் காட்சியிலே நமது திரைப்படங்களை வெளியிடுகின்ற நேரத்தில் அதிலே பாரபட்சம் காட்டுவதாகச் சொல்லப் படுகிறது. அதைப் போலவே, நமது மாநில அரசு செய்தித் துறை தயாரிக்கின்ற திரைப்படங்களிலே கூட மாற்றுக் கட்சியினருக்கு உரிய இடம் தரப்படுவதில்லை என்றும் கூறப்படுகின்ற காரணத்தால் அதனைப் போக்கி அனைத்துக் கட்சியினருக்கும் சம வாய்ப்பு அளித்திட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வியிலே எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்பதை இந்த அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

## தமிழ்நாட்டிலுள்ள வாசகசாலைகள்

*வினா எண் 66—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டிலுள்ள வாசக சாலைகளில் எல்லா அரசியல் கருத்துப் பத்திரிகைகளைப் போட அரசின் குறிப்பு உள்ளதா?

(ஆ) எப்போதிருந்து? விவரம் என்ன?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கும் நூலகங்களில் அரசியல் கருத்துப் பத்திரிகைகள் போடவோ அல்லது போடக் கூடாது எனவோ அரசு ஆணை ஏதும் வழங்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் நான் கேள்வி கேட்க எழுந்தபோது 'உனக்கோ வயதாகிவிட்டது, நீ ஏன் திரைப்படங்களில் வர வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்' என்று என்னிடத்திலே கேட்கிறார்கள். யாருக்கு வயதாகிவிட்டது என்று விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வயதைப்பற்றி அல்ல எனக்குள்ள அக்கறை. இந்த $2\frac{1}{2}$ ஆண்டுகாலமாக யார் பேசினாலும் உட்கார்ந்துகொண்டே பேசுகிற பழக்கம் திரு. ஆறுமுகம் அவர்களை விட்டுப் போகாது. அது எப்போதும் அவருடன் இருக்கும்.



திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் அவர்கள் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் வாசக சாலைகளிலே குறிப்பிட்ட சில கருத்துக்களுடைய பத்திரிகைகள் மட்டுமே இன்றைய வரையிலும் இருந்து கொண்டிருக்கின்றன. சர்க்காரில் இருந்து அதற்காக வேண்டி ஒரு லிஸ்டும் போடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது, என்று நினைக்கிறேன். ஆகவே எல்லா அரசியல் கருத்துக்களுடைய பத்திரிகைகளைப் போடவேண்டும் என்ற கருத்தோடு கனம் அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு வேண்டிய நாளேடுகளும், பருவ ஏடுகளும் வாங்குகின்ற பொறுப்பு மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு இருக்கிறது. அவர்கள் தங்களுடைய நிதி வசதிக்கேற்ப வாங்குகிறார்கள். அப்படி வாங்குகின்றபோது அங்கே அனைத்து சார்பான கருத்துக்களுடைய பத்திரிகைகளும் வாங்கப் பட வேண்டும் என்று விரும்புகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இந்தக் கருத்துக்கள் மாவட்ட நூலக ஆணைக் குழு அதிகாரிகளுடைய கவனத்திற்கு நிச்சயம் வரும். அது மட்டுமல்ல; எனக்கு வருகிற பல புகார்கள் ஆளுங்கட்சியின் பத்திரிகைகள் பல்வேறு மாவட்ட நூலக ஆணைக் குழுக்களிலே, நிதி இல்லாத காரணத்தால் வாங்குவது இல்லை என்றும் இதனால் ஒரு சார்பான கருத்துக்கள் உள்ள பத்திரிகைகள்தான் வருகின்றன என்பது மட்டுமல்ல, அரசு சார்பான கருத்துக்களைக் கூட பொதுமக்கள் படிப்பதற்கான வாய்ப்பு இல்லை என்ற கருத்து இருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் மாவட்ட நூலக ஆணைக்குழு கூடிய வரையில் எல்லாக் கருத்துகளுடையப் பத்திரிகைகளை வாங்க வேண்டும் என்று ஆலோசனைக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் அரசு தரப்பு இல்லாத இலவச படிப்பகங்கள் சில பல இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு அரசு முதியோர்களுக்கு உதவி செய்வதைப்போல உதவி செய்யுமா? ஒழுங்காக நடைபெறுகின்ற பொது படிப்பகங்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் யோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இப்போது உள்ள நூலகங்களுக்கு புத்தகங்களையும், பத்திரிகைகளையும் போடுவதற்கு அதிக நிதி உதவி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்;</u> தலைவர் அவர்களே நூலகங்களை நடத்துவதற்கான நிதிகளை ஸ்தல ஸ்தாபனங்கள் வசூலிக்கின்றன. அதற்கு ஈடாக அரசு தருகின்ற நிதிகளைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன. ஆனால் சில ஸ்தல ஸ்தாபனங்கள் வசூலிக்கின்ற நிதி சரியாக தரப்படுவது இல்லை, அப்படிப்பட்ட இடங்களில் அரசும் அதற்கேற்ப தந்து கொண்டிருக்கிற காரணத்தால் பல்வேறு நூலக ஆணைக் குழுக்கள் சரியாக இயங்கவில்லை என்று புகார் வந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி நாம் இப்போது ஆலோசித்துக் கொண்டு வருகிறோம்.

<u>திரு. அ. செல்வராசன் :</u> தலைவர் அவர்களே, வருகின்ற பத்திரிகைகள் தபால் மூலம் வருவதால் அவைகள் அன்றாடம் வந்து சேருவதில்லை. அதைப்போலவே புத்தகங்களும் ஒரு வாரம் இரண்டு வாரங்கள் கடந்து வருகின்றன. எனவே இவைகளை தபால் மூலம் வராமல் நேரடியாக அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவரவர்களே, பத்திரிகைகள் உடனுக்குடன் கிடைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துமாறு அந்த நூலக ஆணைக் குழு அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

(முற்பகல் 9—20)

<u>திரு- வி. கே. கோதண்டராமன் :</u> சார், நிதிநிலைக்கு ஏற்ற வாறு பத்திரிகைகள் வாங்கிப் போடப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது சரியே. ஆனால் சரியான திட்டவட்டமான கருத்து இல்லாமல் சமயோசிதம்போல் கருத்துக்களைமாற்றி எழுதும் பத்திரிகைகள் போடப்படுகிறதே தவிர திட்டவட்டமான ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி பத்திரிகைகளை, புத்தகங்களை போடுவது கிடையாது. ஆகவே நிதிநிலைக்கு ஏற்றவாறு உண்மையிலேயே போடுகிறார்களா என்பதைப் பரிசீலனை செய்வதற்கு பல அரசியல் கருத்துடையவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு கவனம் செலுத்தப்படுமா?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவர் அவர்களே, இந்த நூலகங்களை நடத்துவதற்காக நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வந்தன. ஆனால் இப்போது இவைகள் செயல்படாத நிலையில் இருக்கின்றன. அதற்குக் காரணம், அந்தக் குழுக்களுக்கு பெரும்பான்மையான பிரதிநிதிகள் ஸ்தல ஸ்தாபனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள் தள்ளிப்போட்டுக் கொண்டு வருவதால்





இவைகளும் இயங்குவது தள்ளிப்போடப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த நூலக ஆணைக் குழுக்களை ஒரு ஆலோசனைக் குழுவாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு முறையிலோ போடலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது. அப்படி வருகிறபோது தற்காலிகமாக அந்தக் குறைபாடுகளை நாம் போக்கிவிட முடியும்.

<u>திரு. சு. பாலன் :</u> தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள நூலகக் கட்டிடங்கள் நீண்ட நெடுங்காலமாக பழுது பார்க்கப் படாமலும், வெள்ளை அடிக்கப்படாமலும் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மூலக்கேள்வி பத்திரிகைகள் பற்றியதாகும், கட்டிடங்கள் பற்றியதல்ல.

<u>திரு. பெ, சு. திருவேங்கடம் :</u> தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழுக்கள் மாவட்டங்களில் சரிவர செயல்படவில்லை. என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, அவைகள் சரிவர நடைபெறுவதற்கு மாவட்ட அளவில் இருக்கும் நூலகங்களை ஆங்காங்கு இருக்கும் நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றிற்குப் பிரித்துக் கொடுத்து, அவர்கள் வசூலிக்கிற பணத்தை நல்ல முறையில் செலவழித்து நூலகங்களை நடத்துவதற்கு அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. அது மாவட்ட அளவில் நடைபெறுவதுதான் நல்லது. காரணம், இப்போது நாம் நூலகங்கள் என்று நினைத்துக் கொண்டு பேசிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் நூலகங்கள் ஒரு சில நகரமன்றங்களில் சேர்ந்து இயங்குமானால், அந்த நிலைமை இருக்காது. நூலகங்களில் ஒரு சில நூலகங்களாவது சிறந்த நிலைமைக்கு, நல்ல அறிவு தருகின்ற நிலைமைக்கு, மிகச்சிறந்த நிலைமைக்கு அமைய வேண்டும் என்கிற கருத்து இருப்பதால், அப்படிப்பட்ட நூலகங்கள் இருக்கவேண்டுமானால், மாவட்ட அளவில் அவைகள் இயங்கினால் தான் முடியும் என்று நாங்கள் கருதுகிறோம்.

<u>திரு. என். பழனிவேல் :</u> தலைவர் அவர்களே, நூலகங்களை நடத்தக் கூடிய மாவட்ட நூலக ஆணைக் குழு நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக சில பத்திரிகைகளை வாங்க இயலாத நிலையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள்

குறிப்பாக, நல்ல புதிய சமுதாய மாறுதலைப் பிரதிபலிக்கும் பத்திரிகைகள், அதிலும் குறிப்பாக எங்களுடைய மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகைகள் எல்லாம் நூலகங்களில் கண்டிப்பாக போட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா? காரணம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பத்திரிகைகள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு மேலும் விளக்கம் தேவையில்லை. பத்திரிகைகள் போட வேண்டும் என்று கேட்பதோடு போதும், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பத்திரிகைகள் வாங்கவேண்டும் என்பதை நிதிநிலையைப் பார்த்து முடிவு எடுக்கிற காரணத்தால் அப்படிச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். குறிப்பிட்ட பத்திரிகைகள் வாங்க வேண்டும் என்று நாம் பட்டியல் போட்டுச் சேர்ப்போமானால், சிலவற்றை வாங்கக் கூடாது என்ற நிலைமை ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாட்டை அந்த நூலக ஆணைக் குழுக்களுக்கு நாம் ஏற்படுத்தவில்லை. ஆனால் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் ஜனசக்தி, 'நியூ' 'ஏஜ்,' 'தாமரை போன்ற பருவ ஏடுகளை நன்கொடை என்ற அளவில் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் வாங்கிக்கொண்டு இருந்ததை, ஏற்க வேண்டியது இல்லை என்ற உத்தரவை 24–1–77-ல் போட்டு இருந்தார்கள். இந்த அரசு 28–11–77–ல் அந்தத் தடையை நீக்கியிருக்கிறது. இந்தப் பத்திரிகைதான் வாங்க வேண்டும் என்றோ, இந்தப் பத்திரிகைகள் வாங்கக் கூடாது என்றோ நாம் எந்தவிதமான உத்தரவும் போடவில்லை. மாவட்ட அளவில் இருக்கிறவர்கள் அதை வாங்குகிறார்கள். நூலக ஆணைக் குழுக்கள் ஏற்படுகிற நேரத்தில் இந்தக் குறைபாடுகள் இருக்காது.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, நூலகங்களில் அரசியல் கட்சிகளின் பத்திரிகைகளை போடுவதைப் போலவே வாரத்திற்கு ஒருமுறை வருகின்ற புத்தகங்களையும், மாதத்திற்கு ஒருமுறை வருகின்ற புத்தகங்களையும் நூலகங்களில் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு அரசின் கொள்கைகளை கருத்துக்களை வெளியிடுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்புடைய பத்திரிகைகளையும் நூலகங்களில் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசுக்கு ஆதரவு தருகின்ற பத்திரிகைகளை வைக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை முறையாகச் செயல்



படுத்த வேண்டுமென்று கருதுகிறோம். பருவ ஏடுகளை வாங்குவது பற்றி, அவர்களின் இஷ்டத்திற்கு விட்டுவிடுகிறோம். முடிந்த அளவு அவர்கள் வாங்கி வருகிறார்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி ; தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து பிரதிநிதிகள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் ஆலோசனை குழுவைப் போடுவதற்கு யோசனை இருப்பதாகவும் சொன்னார்கள். அந்த ஆலோசனைக் குழுவில் யார், யார் இடம் பெறுவார்கள்? ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களையே போடுவீர்களா? அல்லது எதிர்க்கட்சிக்காரர்களையும் அந்தக் குழுவில் சேர்த்துக்கொள்வீர்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே, அரசினுடைய திட்டங்களுக்கு யார், யாருடைய ஆதரவை நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறோமோ அவர்களை எல்லாம் நாங்கள் போடுவோம்.

## மேலூரிலுள்ள அரசினர் ஆண்கள் கல்லூரி

* வினா எண். 67—திரு ரா. கு. பெருமாள் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூரில் உள்ள அரசினர் ஆண்கள் கல்லூரியை விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) பட்ட வகுப்புகள் தொடங்கும் எண்ணம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : (அ) இல்லை;

(ஆ) 1979–80-ம் கல்வி ஆண்டில் வேதியியல் இளங்கலை (B.Sc., Chemistry) பட்டப் படிப்பு துவங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

[1980 பிப்ரவரி 6

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, பொதுவாக தமிழ்நாட்டிலே பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்ற மாணவ; மாணவிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் வெறுமனே வீட்டில் இருப் பதைக் காட்டிலும் கல்லூரிகளில் சென்று படிக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, பட்ட மேல் படிப்பை கல்லூரி களில் தொடங்கும் எண்ணம் இருக்கிறதா? அத்துடன் பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்கிற மாணவர்களுக்கு மாதா மாதம் ஊதியம் கொடுக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பி.யு.சி. வகுப்புகளை எடுத்துவிட்ட காரணத்தால் உபரியாக இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில் இந்த ஆண்டு பல்வேறு வகுப்புகளைத் தொடங்க இருக்கிறோம். இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு உபரியாக இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில் நாம் புதிய வகுப்பைகளைத் தொடங்குவதுதான் உசிதமாக இருக்கும். காரணம் நாம் அரசு பணத்தைச் செலவிடும்போது சிக்கனமாக அல்லது முறையாக செலவிட வேண்டுமென்று கருதுகிறோம். அந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு புதிய பட்டப் படிப்பு வகுப்புகளைத் தொடங்க வேண்டிய நிலையிலே பல்கலைக் கழகங் கள் இருக்கின்றன. அதுபற்றி பல்கலைக் கழகங்கள் ஆலோசித்து வருகின்றன. எப்படிப்பட்ட பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவது என்று இறுதி முடிவு எடுத்தவுடன் புதிய வகுப்புகளைத் தொடங்க வசதியாக இருக்கும்.

### அம்பத்தூர் நகரியத்தில் தெருவிளக்குகள்.

* வினா எண் 68 – திரு. க. சுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகரியத்தில் தெரு விளக்குகள் எரிய வில்லை என்ற புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) ஆம்

(ஆ) அதுபற்றி நகரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.



1980 பிப்ரவரி 6]

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, அம்பத்தூர் நகரியத்தைப் பறறிய கேள்வி இது. ஆனால் இன்றைக்கு தமிழ் நாட்டிலே எந்த ஊராட்சியில் பார்த்தாலும் தெரு விளக்குகள் எரியவில்லை. இப்போது ஊராட்சி மன்றங்களால் தெரு விளக்குகளுக்கு பல்புகள் வாங்கிக் கொடுப்பது நிறுத்தப்பட்டு, மறு படியும் மின்சார வாரியமே தெருவிளக்குகளைப் பராமரிக்கின்ற முறை அமல்படுத்தப்படுவதாக அறிகிறோம். மின்சார வாரியத்தி லிருந்து ஊராட்சி மன்றங்களுக்குத் தெருவிளக்குகள் பராமரிக்கும் முறை மாற்றப்பட்டபோது எல்லா விளக்குகளுக்கும் பல்பு போட்டுத்தான் மாற்றினோம்; அதைப்போல ஊராட்சி மன்றங் களிலிருந்து மின்சார வாரியத்திறகு மாற்றும்போதும் எல்லா பல்புகளையும் போட்டுக் கொடுத்தால்தான் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். இந்தத் தகராறினால் எந்த ஊராட்சி மன்றத்திலும் தெருவிளக்குகள் எரியவில்லை. எல்லா தெரு விளக்குகளையும் எரிய வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த அவையிலே பேரவைத் தலைவராக இருந்தவர். ஆகவே இந்த மாதிரி பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரலாமே தவிர இப்படி அம்பத் தூர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் பொதுப்படையான தகவல்களைப் பற்றிப் பேசக் கூடாது. ஆகவே இதற்குரிய தகவல்களைத் தரவேண்டிய அவசியம் இல்லை.

### திருச்சி நகரிலுள்ள சாலைகள்.

*வினா எண் 69—திரு. கே. சௌந்தரராஜன்— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி நகரில் சாலைகள் நீண்டகாலமாக பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) பாதாள சாக்கடை வேலைகள் நடைபெற்று வருவதால் சில சாலைகள் பழுது பார்க்கப்படாமல் உள்ளன.

(ஆ) சாலைகளைப் புதுப்பிக்க திருச்சி நகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1980 பிப்ரவரி 6

*வினா எண். 70.—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

அ) திருச்சி நகரத்தில் முக்கிய ரோடுகள் அகலப்படுத்தி அழகு படுத்தும் திட்டமுள்ளதா?

ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அ) ஆம்.

ஆ) நகராட்சியால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, திருச்சி நகரத்தில் மட்டும் இவ்வாறு சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதல்ல. மற்ற நகராட்சிகளிலும் சாலைகள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. அதன் காரணம் பற்றி அதிகாரிகளைக் கேட்கிற நேரத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி திருச்சியைப்பற்றியது. ஆகவே திருச்சி சாலை பற்றி மட்டும் தான் கேட்க வேண்டும். பொதுப்படையாகக் கேட்கக் கூடாது.

## குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்.

*வினா எண். 71—திரு. சு. பாலன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட தயவு செய்து வினாகளுக்கு விடையளிப்பாரா—

அ) தற்போது குடிசைப் பகுதிகளுக்கு மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் எம். எம். டி. ஏ. மூலம் அடிப்படை வசதிகள் செய்யப்படுகிறதா?

ஆ) ஆம் எனில், அதன் வேலைகளை யார் மேற்பார்வை செய்வது? செய்யப்படுகிற செலவினத்தை அங்கு வாழும் குடிசை மக்களிடம் பின்னால் வசூல் செய்ய ஏதாகிலும் திட்டமுள்ளதா? அல்லது இலவசமாகச் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சென்னை மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் உலக வங்கித் திட்ட உதவி கொண்டு சென்னை பெருநகர் வளர்ச்சி ஆணைக்குழு மூலம் செய்து



கொடுக்கும் அடிப்படை வசதிகளை மேற்பார்வை செய்கிறது. அடிப்படை வசதிகள் செய்து முடித்தப் பின்னர் அப்பகுதி குடிசை மக்களிடம் மாதம் ரூ. 10 வீதம் (ரூ. 8 அடிப்படை வசதிச் செலவை ஈடுகட்டும் வகையிலும், ரூ. 2 பராமரிப்பிற்காகவும் வசூலிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன்: தலைவர்வர்களே, குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் ஆகியவற்றிற்கு உள்ளடங்காத குடிசைப் பகுதியில் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு உலக வங்கி மூலம் கடன் பெற்று அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, அக் குடிசை மக்களிடமிருந்து எம். எம். டி. ஏ. மூலமாக வசூல் செய்யப்படுவதாகத் தெரிவிக்கிறார்கள். அதைபோலவே சென்னையில் உள்ள பல குடியிருப்புக்களில் தனியார் வீதிகளை அமைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீதிகளைச் செப்பனிடுவதற்கு கார்ப்பரேஷனிடம் பெட்டர்மென்ட் டாக்ஸ் கட்டினால்தான் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்று விதி இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களுக்கும் உலக வங்கியின் மூலம் உதவி பெற்று அடிப்படை வசதிகளை அந்த மக்களுக்கும் செய்து கொடுத்து மாதத் தவணையில் அவர்களிடமிருந்து வசூல் செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் இருக்கக்கூடிய இடத்தில் முதலில் செய்துவிட்டு பிறகு மற்ற இடங்களுக்குச் செல்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, குடிசைப் பகுதிகளில் இப்போது என்னென்ன வசதிகள் செய்து தரப்படுகின்றன? அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதாரக் கேடான நிலையில் வசிக்கிறார்கள். கழிவறை வசதி இல்லை, போக்குவரத்து வசதி இல்லை, ஆங்காங்கே தண்ணீர் தேங்கி அதிகமான தொல்லைக்கு ஆளாகிறார்கள். கொசுத் தொல்லையும் அதிகமாக இருக்கிறது. இந்த நிலையைப் போக்க உலக வங்கியிடமிருந்து பெறப்படும் உதவியின் மூலம் அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அந்த நடவடிக்கைகளைத் துரிதமாக இந்த அரசு செய்து தருமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மூலக்கேள்வி மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் உலக வங்கி மூலமாக உதவி பெற்று அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது பற்றியது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்

[1980 பிப்ரவரி 6

அவர்கள் உலக வங்கி மூலம் பெறப்படும் உதவியால் எவ்வென்ன வசதிகள் செய்துகொடுக்கிறார்கள் என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அதற்கு இங்கே ஆங்கிலத்தில் இருப்பதைப் படித்துவிடுகிறேன்.

1) One flush toilet per 10 households.

2) One bathing facility per 10 households.

3) One stand pipe per 10 households.

4) Vehicular access to septic tanks serving centrally located toilets and bath rooms.

5) Vehicular access to within 50 m. of each hut.

6) Paved pedestrian access to each hut.

7) One street light per 40 metres of vehicular roads and footpaths; and

8) One primary school per 3,000 persons and one secondary (high) school per 10,000 persons, etc,.

திரு. வி. கே. கோதண்டராமன்: மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் என்றுதான் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்போது நகராட்சிகளுக்கு உட்படாத குடிசை பகுதிகளுக்கும் உண்டா? தமிழ்நாடு பூராவும் மாநகராட்சி அல்லது நகராட்சிகள் இவற்றிற்கு உட்படாத குடிசைப்பகுதிகளுக்கா அல்லது மாநகராட்சிக்கு உட்படா குடிசைப்பகுதிகளுக்கு மட்டும்தானா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சென்னை மாநகராட்சியை மனதில் கொண்டு தான் திரு. பாலன் இக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். பதில் அதையொட்டித் தான்.

திரு. என். கிட்டப்பா: அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் படித்துக்காண்பித்தார்கள். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கொள்கை உடைய இந்த அரசு அதிலும் குறிப்பாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் என்னைப்போன்று ஆங்கிலம் தெரியாதவர்கள் புரிந்துகொள்கிற வகையில் — ஆங்கிலத்தில் சொல்வதில் தவறு இல்லை —— தமிழில் அதைச் சொன்னால் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும். அதை அவர்கள் மேற்கொள்ள ஆவன செய்வார்களா?



1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா அவர்கள் எழுப்பிய பிரச்சனை நியாயமாக இருந்தாலும் அவர்கள் கூறியது இந்தக் கேள்வியை ஒட்டியதல்ல. அமைச்சர் அவர்கள் தம் விருப்பப்படி சொன்னார்கள். அதைத் தவிர்த்திருக்கலாம். அவர்கள் தமிழிலேயே சொல்லியிருக்கலாம். இக் கேள்வியையொட்டியதாக இருந்தால் தமிழில் சொல்லச் சொல்லியிருப்பேன். ஆனால் அவர்கள் சொன்னது இக்கேள்வியையொட்டியதல்ல. எனவே இனிமேல் வருமானால் தமிழிலேயே சொல்ல ஏற்பாடு செய்கிறேன்.

## அயோத்தியா நகர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கல்

*வினா எண். 72 திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சா் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள அயோத்தியா (குப்பம்) நகரில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகளில் ஒரு பகுதிக்கு மின்தொடர்பு கொடுக்கப்பட்டு, ஒரு பகுதிக்கு இதுநாள்வரை மின்தொடர்பு கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மின்தொடர்பு கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—(அ) மற்றும் (ஆ): அயோத்தியா நகரில் 708 குடியிருப்புகள் உள்ளன. இதில் 251 குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டதில், தற்போது 111 குடியிருப்புகளில்தான் நிலையான மின் இணைப்பு உள்ளது. குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் மின் இணைப்புக் கொடுப்பது இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திற்கு ஒரு தடையின்மை சான்றிதழ் அளிக்கப்படுகிறது. அதைக் கொண்டு ஒதுக்கீடுதாரர் தாங்களாகவே மின் வசதி பெறலாம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: ஏற்கனவே அளிக்கப்பட்டமுறையிலே அங்கிருக்கிற அத்தனை குடியிருப்புகளுக்கும் மின்வசதி செய்துதர இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்வசதி பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையாகவே மின்வசதி வேண்டுமென

விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு மட்டும் மின்வசதி பெற்றுத் தரலாமென முடிவு செய்யப்பட்டு அந்தப்படிக்கு வாரியம் தனது 28—10—73-ம் தேதிய சுற்றறிக்கையில் உத்தரவிட்டுள்ளது. மின் வசதி செய்து கொள்ள விரும்பும் ஒதுக்கீடுதாரர்களின் குடியிருப்புகளுக்கு மட்டும் அக்குடியிருப்புக்குண்டான வாடகை பாக்கியை வசூல் செய்து கொண்டு 'தடையின்மைச் சான்று' நிர்வாகப் பொறியாளர்களால் வழங்கப்படுகிறது. வாரியமே மின் இணைப்புத்தருவது வேண்டாம் என 28—10—73-லே உத்திரவிடப் பட்டுள்ளது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிறது. மீனவர்கள் வாழ்கிற, மிகவும பின்தங்கிய, வருவாய் அதிகமில்லாத, கஷ்டப்பட்டு வாழ்கிற அத்தகையவர்கள் இருக்கும் பகுதிகளில் ஒரு பகுதிக்கு வாரியமே பொறுப்பேற்று மின்வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மற்றப் பகுதியினருக்கு அவர்கள் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிலையில் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு ஒரு பகுதினயிருக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட பின் இப்படி ஒரு நிபந்தனை விதிப்பது நியாயமற்றது என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த வேண்டுகோளை ஏற்று அவர்களுக்குக் அந்த அடிப்படையில் மின்வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: முன்பிருந்த அரசு ஏற்கனவே எடுத்த முடிவைப் படிக்கிறேன். குடிசைப் பகுதி மாற்று வாரியம் குடியிருப்புகளுக்கு ஆரம்பத்தில் வாரியத்தாலேயே மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒதுக்கீடுதாரர்கள் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணத் தொகையைச் சரிவர செலுத்தவில்லை. இதனால் மின்இணைப்பு பலவற்றில் துண்டிக்கப்பட்டன. அத்துடன் ஒதுக்கீடுதாரர்கள் பதுக்கி வைத்த மின் கட்டணத் தொகையும் குடிசைமாற்றுவாரியமே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே அதனால் முன்பிருந்த அரசு அவர்களுக்கு மின் இணைப்பு தருவதற்கில்லை, வேண்டுமென்று கேட்பார்களேயானால் 'தடையின்மைச் சான்று' தருவது என்று முடிவு செய்திருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்றால் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

(முற்பகல் 9.40)

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து ஏற்கெனவே இன்னும் கொடுக்கவேண்டிய பாக்கியை வசூலித்துக் கொடுக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில், மற்றவர்களுக்கு வசதிசெய்து கொடுக்கப்படுமா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முன்பிருந்த அரசு 1972 ஆம் ஆண்டிலே, 1973 ஆம் ஆண்டிலே பாக்கியிருந்ததால், அதன்மீது ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் மின்கட்டணத்தை அங்கிருந்தவர்கள் சரியாகக் கொடுக்கவில்லை வேண்டுமானால், தாங்களாகவே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்வது பற்றி அரசு ஆலோசனை செய்யும்.

## தூத்துக்குடி துறைமுகம்.

*வினா எண் 73— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடி துறைமுக மேம்பாடு குறித்து தூத்துக்குடி துறைமுகக் குழுமத்திற்குப் பரிந்துரை ஏதும் செய்யப்பட்டுள்ளதா?

திரு. ப.கோ.கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): இல்லை.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிக்காக தமிழக அரசுக்கு ஏதாவது குழு ஒன்றினை அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அப்படி உத்தேசம் இருந்தால், அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, ஒரு குழு தமிழக அரசால் அமைக்கப் பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலுள்ள பழைய துறைமுகம் 1—4—79 முதல், புதிய துறைமுகத்தோடு ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சேர்க்கப்பட்ட துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. தூத்துக்குடி துறைமுக மேம்பாடு குறித்து மாநில அரசு, தலைமைச் செயலாளரின் தலைமையில் பதினாறு உறுப்பினர்கள் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அக் குழுவில், உள்ளூர் இந்திய வணிக தொழில் வர்த்தக சபை, தூத்துக்குடி தொழில் வளர்ச்சிசங்கம், தமிழ்நாடு மின்வாரியம், தென் ரயில்வே ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரை, தூத்துக்குடியில் மூன்று கூட்டங்கள் நடைபெற்றன. பல பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைமுக மேம்பாடு குறித்து ஒரு குழு அமைக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் செயலர் அவர்கள் சொன்னார்கள்.

அந்தக் குழு பல்வேறு பொருள்கள் பற்றி விவாதித்ததாகவும் சொன்னார்கள். என்னென்ன பற்றி பரிசீலனை செய்திருக்கிறது? இதுசம்பந்தமாக மத்திய அரசினுடைய பரிந்துரையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியில்லை என்றால், உடனடியாக தூத்துக்குடி துறைமுகத்தின் அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்மட்டக் குழு பல்வேறு பரிந்துறைகளை மத்திய அரசுக்குச் செய்திருக்கிறது. அதிலே முக்கியமானவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. சில பொருட்களுக்குச் சுங்கவரியைக் குறைத்தல்.
2. பருத்தி நூல், பருத்தித் துணிகள் ஏற்றுமதி.
3. துறைமுகத்தின் முகப்பிலுள்ள கால்வாயை ஆழப்படுத்தல்.
4. ஜிப்சம் ஏற்றுமதி.
5. தூத்துக்குடியைத் துறைமுகப் பகுதியுடன் இணைப்பதற்கு ரயில் பாதை அமைத்தல்.
6. தூத்துக்குடியில் எண்ணெய் சுத்தகரிப்பு ஆலை அமைத்தல்.
7. துறைமுகத்தில் நிலக்கரி இறக்குதல்.
8. கப்பல் எரிபொருள் அறை வசதி.
9. இரயில் நிலையம் ஒன்று அமைத்தல்.
10. விமான தளத்திற்கான இட அமைவு.
11. டீசல் லோகமோடிவ் என்ஜின்களை வாங்குதல்.
12. உப்பைக் கப்பலில் ஏற்றுவதற்கான நவீன வசதிகள்.

இதுபோன்று பல்வேறு வகையான பரிந்துரைகளைப் பற்றி விவாதித்து, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டிற்கு இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது ? அப்படிச் செலவு செய்யப்பட்டிருந்தால், எந்தெந்த வகையில் அந்தத்தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், இன்னும் செலவு செய்ய திட்டமிடப்பட்டிருக்கின்ற தொகை எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா ?



திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, செலவுபற்றிய குறிப்பு தற்போது கைவசம் இல்லை.

திரு. ந. தனசேகரன்; பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் செயலர் அவர்கள் பதிலில் அங்கு ஒரு குழு அமைக்கப் பட்டதாகவும், அது பல நேரங்களில் கூடி பல முடிவுகளை எடுத்ததாகவும் சொன்னார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடிய ஒரே சட்டமன்ற உறுப்பினர்கூட அந்தக் குழுவில் இடம் பெறவில்லை. அந்தக் குறையைப் போக்குவதற்கு, அரசு முயற்சி செய்ய முன்வருமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்); தலைவர் அவர்களே, அந்தக் குழுவிலே அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் தவிர வர்த்தகத் துறை பிரமுகர்களும் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சேலம் திருச்சிராப்பள்ளி பேருந்து வழித்தடம்.

*வினா எண். 74—திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலத்திற்கும் திருச்சிக்குமிடையே இரவு நேரங்களில் செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஆம்.

திரு. கா. செங்கோடன்: சேலத்திலிருந்து திருச்சிக்கு குறிப்பாக இரவு 8 மணியிலிருந்து 10 மணி வரையில் அரசு பஸ்கள் இல்லை. இதனால் அங்கு பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, இரவு 8 மணியிலிருந்து 10 மணி வரை அதிக பஸ்கள் விட முன்வருவார்களா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஏற்கெனவே சேலத்திலிருந்து திருச்சிக்கு மூன்று இரவு நேர பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அண்ணா போக்குவரத்துக் கழகம் அதை நடத்தி வருகிறது. மேலும் இரண்டு பேருந்துகளை சேலத்திலிருந்து திருச்சிக்கு விட ஏற்பாடு நடந்து வருகிறது.

### அரூர் வட்டத்தில் ஏரிகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 75—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரூர் வட்டம் தீர்த்தமலை பிர்க்கா, பெரியப்பட்டி தரப்பு ஓடமணியங்குட்டை, ஏரிப்பள்ளம், எலந்தக்குட்டை, புள்ளபுதைச்சன் குட்டை., கன்னிமா கோயில் ஓடை, எருப்பு தோட்டப்பள்ளம் ஆகிய இடங்களில் ஏரிகள் அமைக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அரூர் வட்டம், தீர்த்தமலை பிர்க்கா, சிக்கலூர் கிராமம் அருகே ஓர் குட்டை கட்டும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது. இதனை தவிர்த்து வேறு எந்தத் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். அண்ணாமலை: அரூர் வட்டம், தீர்த்தமலை பிர்க்கா, சிக்கலூர் கிராமம் அருகே குட்டை கட்டும் திட்டம் ஆய்விலுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு ஆறு கிராமங்களில் அவ்வாறு குட்டைகள் கட்ட வேண்டும். அந்த ஏரியாவில் பாசனத்திற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் சிறு குட்டைகள் சட்டினால் கூடப் போதும். அந்த ஏரியாவில் குட்டைகள் கட்டிக் கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அரசு பரிசீலிக்கும்.

### Arrears from New Horizen Company, Atiyur.

*Q. No. 76—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(a) Whether a large amount of money is due to Tamil Nadu State from Messrs New Horizan Sugar Mills Limited, Arjyur in Pondicherry State; and

(b) the steps taken to recover the amounts?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டு அரசுக்குச் சேரவேண்டிய கரும்பு மேல் வரி நிலுவையை விரைவில் கொடுக்கும்படி பாண்டிச்சேரி அரசின் தலைமைச் செயலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அரசு நிலுவையை விரைவில் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.



திரு. என். கிட்டப்பா: பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள அரியூரில் இருக்கும் "நியூ ஹொரைசன்" என்ற நிறுவனம் தமிழக அரசுக்கு எவ்வளவு தொகை நிலுவை தர வேண்டியிருக்கிறது? அது இன்னும் வசூலிக்கப்படாமைக்குக் குறிப்பிட்ட தடங்கல் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நியூ ஹொரைசன் சர்க்கரை ஆலையிலிருந்து ரூ. 25,15,543.74 காசு வர வேண்டியிருக்கிறது. 1975–76, 1976–77, 1977–78 ஆகிய மூன்று ஆண்டுகளில் மட்டும் இந்த நிலுவை பாக்கி நிற்கிறது. சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யக் கூடிய சர்க்கரைக்கு சரியான விலை வெளி மார்க்கெட்டுகளில் கிடைக்காததன் காரணமாக இந்த வரியை அவர்கள் செலுத்த முடியவில்லை. அதனால் இந்த அரசாங்கத்தின் மூலம் "ஸ்டே" கொடுக்கப்பட்டு அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

### கொல்லிமலையில் பழ ரசத் தொழிற்சாலை.

*வினா எண். 77— திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொல்லிமலையில் கிடைக்கும் பழவகைகளைப் பயன்படுத்தும் வகையில் அங்கு ஒரு பழரசத் தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:— கொல்லிமலைப் பகுதியில் பழரசத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. என். பழனிவேல்: இந்தப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலையை என்னுடைய தொகுதி ஆயக்குடி பகுதியில் பழம் அதிகமாக உற்பத்தியாவதால் அங்கு அமைப்பதுபற்றி அரசு ஏற்கனவே பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்த முடிவு என்னவாயிற்று? அங்கு பழரசத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முற்படுமா?

மாண்புமிகு கே. இராஜா முகமது: இந்திய அரசின் உணவு மற்றும் சத்துணவுக் கழகத்தின் ஆலோசனைப்படி நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் தக்காளிப்பழம், 10 மெட்ரிக் டன் மாம்பழம், 10 மெட்ரிக் டன் அன்னாசிப் பழத்தைப் பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவலாம் என்று உத்தேசித்திருந்தார்கள்.

இவற்றை எப்படி விற்பனை செய்வது என்ற பிரச்சினை காரணமாக ஒரு கோடி 30 லட்சம் செலவில் மதுரை மாவட்டத்தில் நிறுவலாம் என்று செய்திருந்த முடிவை மாற்றி 40 லட்சத்திற்கு மேல் போகாமல் ஒரு தொழிற்சாலையை பழங்கள் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய பழனி—பெரியகுளம் பகுதியில் ஏதாவது ஓரிடத்தில் நிறுவலாம் என்று அரசு யோசித்து வருகிறது. அது விரைவில் செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–50]

திரு. எம். எம். ஏ. ரசாக்: தலைவர் அவர்களே, புதிதாக பழரசத் தொழிற்சாலை மதுரை மாவட்டதில் ஏற்படுத்தப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மாங்காய் அதிகமாக இருக்கிற காரணத்தினால் அங்கே அதை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் கூடுமானவரையில் மூலக் கேள்வியை ஒட்டியதாகவே இருக்க வேண்டும். கொல்லிமலை சம்பந்தப்பட்ட கேள்விதான் அது. திரு. பழனிசாமிக்கு அனுமதித்ததால் ஏற்பட்ட நிலை அது. மூலக் கேள்வியை ஒட்டித்தான் கேட்கவேண்டுமே தவிர தமிழகத்திலே உள்ள அத்தனை இடங்களைப் பற்றியும் கேட்பது தவறு.

## பழனி தாலுக்காவில் பால்வள அபிவிருத்தித் திட்டம்.

*வினா எண் 78— திரு. எஸ். ஜே. இராமசாமி; மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1979–80 ஆண்டில் மதுரை மாவட்டத்தில் பழனி தாலுக்காவில் பால்வள அபிவிருத்தித் திட்டம் புதிதாக ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) பழனி; திண்டுக்கல் பகுதிகளில் பால் உற்பத்தி சங்கங்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் கருத்துரு தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு உள்ளது. கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் ஆகிய வசதிகள் இப் பகுதிகளில் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் உறைவிந்து நுட்ப திட்டம் இப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.



திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த பால்வளத் திட்டத்திற்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கம் செய்திருக்கிறது? அதேபோல் இப்படிப்பட்ட திட்டம் மற்ற இடங்களிலும் இருக்கிறதா? இந்தத் திட்டத்தை சென்னை மாநகரத்திற்கு இப்போது வரக்கூடிய பால் போதாத நிலைமை இருப்பதால்-சென்னை மாநகரத்திற்கும் விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே பழனி தாலுக்காவில் பால்-வள அபிவிருத்தித் திட்டம் புதிதாக ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதுதான் கேள்வி. உத்தேசம் உண்டு. எந்த எந்த அடிப்படையில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதற்குத்தான் நான் சொல்லியிருக்கிறேன், செயற்கை கருவூட்டல் கூடுதலாக சங்கங்கள் அமைத்தல், உறைவிந்துத் திட்டம் ஆகிய இந்தத் திட்டங்களின் மூலமாக பால்—வள அபிவிருத்திக்கு பழனி பகுதியிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. எஸ். ஜே, இராமசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எனக்கு அறிவுரை வழங்கியதற்கு மிகுந்த நன்றி. அதற்குத்தான் நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்று கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. சென்னை மாநகரத்தின் பால் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய முறையிலே திட்டமிடப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி என்ன என்பதைத்தான் நினைவுபடுத்தினேனே தவிர அறிவுரை வழங்கவில்லை, அந்த அளவிற்கு எனக்கு வயதாகிவிடவில்லை, மூலக் கேள்விக்கு மட்டுந்தான் பதிலளிக்க வேண்டுமென்று தலைவர் சொன்ன காரணத்தால் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இதற்கு என்று நிதி ஒதுக்கம் முன்கூட்டியே செய்வது இல்லை, எந்தக் கிராமங்களிலே சங்கங்கள் வேண்டுமென்று கேட்கிறார்களோ அங்கே போய்ப் பார்த்து கிராம ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலமாகவும், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகவும் சங்கங்கள் அமைக்கப் படுகின்றன. செயற்கை முறையில் கருவூட்டல் என்பது மாநில அளவில் திட்டமிட்டுத்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் நிதி ஒதுக்கம் செய்யப்படுவதில்லை. எந்த எந்தப் பகுதியிலே தேவையோ அதை நாம் செய்து தருகிறோம்,

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பால் உற்பத்தியாளர்கள் இது குறித்து அரசிடம் வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். அதை அரசு கருணையோடு பரிசீலனை செய்து வருகிறது. ஓரளவிற்குக் கட்டுபடியாகக் கூடிய அளவுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தியை ஏற்படுத்தி வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நல்ல திட்டம்தான். அதே நேரத்திலே பழைய கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலானவை செயல்படாமல் இருக்கின்றன. அவை அனைத்தையும் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றி பழைய சங்கங்களின் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பால்வள அபிவிருத்தித் திட்டம் பற்றிய கேள்வி. நீங்கள் சொஸைடிகளுக்குச் சென்று விட்டீர்கள்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, பால் அபிவிருத்தித் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. அரிசனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிற முறையிலே மிகக் கூடுதலான மெம்பர்களை சேர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய உதவித் தொகைகள் அரசு மூலம் அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் 1,400 புதிய பால் உற்பத்தியாளர்கள் ' சங்கங்கள் தமிழகத்திலே உருவாக்கப் பட்டிருக்கின்றன. அதிலே ஏறத்தாழ 400 சங்கங்கள் வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் கறவை மாடு வாங்க பணம் கேட்டு மனுப் போடுகிறபோது பால்வள நிறுவனத்தின் மூலமாக மானியத் தொகை வழங்கப்படுகிறது. அது இல்லாமல், சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழும் அவர்களுக்கு மானியமாக 30 சதவீதம் 33 சதவீதம் வரை வழங்கப்படுகிறது. அவர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்கக்கூடிய உதவியையும் அரசே முன் நின்று செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காகப் புதிய பால்வள சங்கங்களை ஏற்படுத்தி, அதை அதிகப்படுத்துவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். என்னுடைய தொகுதியில் ஒரு பால் சங்கம் ஆரம்பிக்க 3 மாதங்களுக்கு முன்பே 'ப்ரபோசல்' தயாரிக்கப்பட்டு........ (மணியடிக்கப்பட்டது)



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மதுரை மாவட்டத்தில் பழனி தாலுக்காவில் பால்-வளஅபிவிருத்தித் திட்டம் பற்றிய கேள்வி. அதையொட்டி கேள்வியைப் போட வேண்டும்.

திரு, என். பழனிவேல்: தலைவரவர்களே, மூன்று மாதங்களுக்கு மேல் 'ப்ரபோசல்' அனுப்பியும் அங்கிருக்கும் சில சுயநலமிகள் அங்கிருக்கக் கூடிய அதிகாரிகளைச் செயல்பட விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் உடனடியாகத் தலையிட்டு பச்சலநாயக்கன்பட்டி என்ற கிராமத்தில் சங்கம் ஆரம்பிக்க ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே, இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆர்வத்தோடு அந்தப் பகுதியிலே ஒரு சங்கம் வர வேண்டுமென்பதைப் பற்றி என்னிடத்தில் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். பால் இப்பொழுது கூடுதலாக உற்பத்தியாகக் கூடிய காலத்திலே, பொதுவாக நாம் அதிகமாகச் சங்கங்களைப் பதிவு செய்வதில்லை. இரண்டு, மூன்று மாத காலம் தடைப்படுவதற்கு இது ஒரு காரணம். இது பால் அதிகமாக உற்பத்தியாகக் கூடிய காலம், பிப்ரவரி மாதம் முடிந்ததற்குப் பிறகு மேலும் கூடுதலான சங்கங்களைத் துவக்க நாம் ஆரம்பிப்போம். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக் கொள்வது, யார் எந்தத் தடைகளை ஏற்படுத்தினாலும் உறுதியாக அவர்கள் சொல்லுகின்ற இடத்திலே பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்துக் கொடுக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆஸ்திரேலிய ஜெர்சி காளைகள் இறக்குமதி.

*வினா எண் 79. திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1978–79–ல் தமிழ்நாட்டில் எத்தனை ஆஸ்திரேலிய ஜெர்சி காளைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன?

(ஆ) அதற்கான மொத்தச் செலவு எவ்வளவு?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை ஜெர்சி காளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன?

[1980 பிப்ரவரி 6

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: (அ) 8-1-1978-ல் இரண்டு ஜெர்சி இன காளைகளும் மற்றும் 50 இளம் பசுக்களும் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

ஆ) இவை ஆஸ்திரேலிய அரசாங்கத்தால் தமிழகத்திற்கு இனாமாக வழங்கப்பட்டதாகும். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கம் என்னும் ஊரில் அவைகளின் தொற்று நோய்த் தடுப்புக்காக (quarantine) ரூ. 34,686.33 செலவிடப்பட்டது. மேலும் கொட்டகைகள் கட்டிய செலவுக்காக ரூ. 39,000-க்கு நிதி ஒப்புதல் கோரி அரசுக்கு பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது. இரண்டாவது முறையாக இனாமாக ஆஸ்திரேலியாவிலிருந்து 100 ஜெர்சி இனப்பசுக்கள் மீனம்பாக்கம் நிலையத்தில் 11-3-1979 அன்று பெறப்பட்டு, உடனேயே ஈச்சங்கோட்டை பண்ணைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு மற்ற பசுக்களுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(இ) இக்காளைகள் விநியோகிப்பதற்கல்ல. செயற்கை முறை கருவூட்டல் மூலம் உயரின கால்நடை வம்சவழியை அபிவிருத்தி செய்வதற்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இக் காளைகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டை உயரின கால்நடைப் பெருக்கப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆஸ்திரேயாவிலிருந்து இன்னும் ஜெர்சி இனக் காளைகளும், பசுக்களும் வரவிருப்பது உண்மையா? அப்படி வரவழைக்கப்பட்ட இந்த ஜெர்சி இனக் காளைகள் மூலம் என்ன பயன் கிடைத்திருக்கிறது? சுருக்கமாகச் சொல்லப் போனால், செயற்கைக் கரு உற்பத்தி செய்வதற்காக எவ்வளவு செமன் ஒவ்வொரு காளையிலிருந்தும் எடுக்கப்படுகிறது? அவை எவ்வளவு பசுக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, இனிமேல் வரவிருக்கின்ற பசுக்களின் எண்ணிக்கை 100. கூடிய விரைவில் வந்துவிடும் என்று மத்திய அரசிலிருந்து தகவல் வந்திருக்கிறது. முதல்முறையாகப் பெறப்பட்ட 50 பசுக்கள் மூலம் 14 காளைக் கன்றுகளும், 11 கிடேரிக் கன்றுகளும் ஈச்சங்கோட்டை பண்ணையில் பிறந்துள்ளன. மற்ற விவரங்கள் தற்சமயம் என்னிடத்தில் இல்லை.



1980 பிப்ரவரி 6]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இரண்டு முறையும் நன்கொடையாகத்தான் தந்ததாகச் சொன்னார்கள். இவைகள் மற்றைய இனப் பசுக்களைவிட இலாபகரமாக இருக்கிறதா? அப்படியிருந்தால் அரசாங்கம் இன்னும் அதிக அளவிலே அதை ஆஸ்திரேலியாவிலிருந்து விலை கொடுத்து வாங்கி மற்றைய மாவட்டங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, மற்றைய இனங்களைவிட இந்த ஜெர்சி இனம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இந்த சீதோஷ்ண நிலைக்கு உகந்ததாக இருக்கிறது. இவைகளை ஈச்சங்கோட்டையில் இப்பொழுது பராமரித்துக் கொண்டிருக்கிறோம். அதில் எந்தவிதமான சிரமமும் இருப்பதில்லை. ஆனால் உஷ்ணமண்டலத்தில் இருக்கும் "பால்ஸ்டன் ப்ரிஷ்யன்" எனப்படும் ஒருவகை காளைகள் அங்கே இருக்கும்போது நாள் ஒன்றுக்கு 30 லிட்டர் பால் கொடுக்கிறது. ஆனால் சென்னைக்கு கொண்டு வந்தால் 10 லிட்டர் ஆகக் குறைந்து விடுகிறது. ஆனால் இந்த ஜெர்சி இன பசுக்கள் நம் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு ஒத்து வருகிறது. அதனால் தஞ்சையில் உள்ள ஈச்சங்கோட்டை பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன. இந்த இன கால்நடை உற்பத்தி முதலில் தஞ்சையில் தொடங்கி பிறகு படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விநியோகிக்கலாம் என்ற கருத்தை கால்நடை பராமரிப்புத் துறை சொல்லியிருக்கிறது.

திரு. ரா. க. சு. தண்டபாணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜெர்சி இன காளைகளைவிட காங்கேயம் காளைகள் தான் வீரியத்தில் சிறந்தவை என்று பெயர் பெற்றவை. அமைச்சர் அவர்கள் வெண்ணெயை கையில் வைத்துக் கொண்டு நெய்யுக்கு அலைவது போல, இந்த காங்கேய இனங்களைவிட்டு விட்டு, ஏன் ஜெர்ஸி இனத்தைத் தருவிக்கிறார். காங்கேய இனக் காளைகளை வைத்து காளைகள் இன அபிவிருத்தியை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: உறுப்பினர் அவர்கள் காங்கேயம் தொகுதியில் இருந்து வந்தவர். அதனால் அந்த இன காளைகளுக்குப் பரிந்து வருகிறார். காங்கேய இன காளைகள் நம் நாட்டு இனம், அவைகளும் பராமரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தில்தான் சென்ற முறை சட்டமன்ற கூட்டத்தில் அதற்கான ஒரு பண்ணையை திறக்க வேண்டும்.

என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதைவிட அதற்கான முயற்சியில் இறங்கியிருப்பாரே யானால், அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்நேரம் அங்கே பண்ணை தொடங்கப்பட்டிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆரணி பகுதியில் கால்நடைகளுக்கு தவிட்டுத் தீவனப் பற்றாக்குறை.

*வினா எண். 80 திரு. ப. சந்திரன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு, ஆரணி பகுதியில் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் உள்ள தவீட்டை வாங்கிவிடுவதால் கால்நடைகளுக்கு உணவுத் தீவனமாக தவிடு கிடைக்காத குறையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) புகார்கள் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, புகார்கள் பிறப்பிக்கப்பட்டதா, இல்லையா என்று பார்ப்பதை விட கால்நடையின் பாதுகாப்பிற்காக தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதைத் தவிர்த்து, கால் நடைகளுக்குத் தீவனமாக உணவுப் பொருளாக உபயோகப் படுத்தினால் நம்முடைய கால்நடைகள் வளர்ச்சியடையாதா? அதனால் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதை தவிர்த்து கால்நடைகளை வளர்ப்பதில், பாதுகாப்பதில், பராமரிப்பதில் இனிமேலாவது அரசு கவனம் செலுத்துமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்ட பின்னர் கூட அவை கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தீவனமாகப் பயன்படுத்த வாய்ப்பு உண்டு என்று கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார். எனவே இப் பிரச்னைக்கு இடம் இல்லை என்று கருதுகிறேன்.



## பள்ளிப்பத்து ஊராட்சிமன்ற எல்லைக்குள் கூடுதல் மின்மாற்றிகள் நிறுவுதல்.

*வினா எண். 62 திரு. இரா. அமிர்தராஜ். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்செந்தூர் தாலுகா, பள்ளிப்பத்து ஊராட்சி மன்ற எல்லைக்குள் அடிஷனல் மின்சார டிரான்ஸ்பார்மர் ஒன்றினை நிறுவ எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திருச்செந்தூர் தாலுகா, பள்ளிப்பத்து, ஊராட்சிமன்ற எல்லைக்குள், இரு 63 கே. வி. ஏ. கூடுதல் மின்மாற்றிகள் நிறுவனம் மின்வாரியத் தால் மதிப்பீடுகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. இவ் வேலை இவ்வாண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, அந்த டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்படாத காரணத்தினால், பல்வேறு இடங்களிலும் உள்ள விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்னைக்கு அமைச்சர் அவர்கள் முன் உரிமை கொடுத்து, மிக விரைவில் இவைகளை அமைக்க ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் மார்ச் மாதம் என்பது வெகு தொலைவில் இல்லை.

## திரை அரங்குகளில் மின்சார ஏற்பாடுகளைப் பார்வையிடல்.

*வினா எண் 63—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) திரைப்பட அரங்குகளில் மின்சார ஏற்பாடுகளைப் பார்வையிட கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) மேற்படி அதிகக் கட்டணங்களைக் குறைக்க வேண்டு மென்று திரைப்பட அரங்கு உரிமையாளர்களிடமிருந்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகாவிலே இப்பொழுதான் செக் பண்ணுகிறார்கள். அதற்குப் பிறகு சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். அதற்காக எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறார்கள்? அந்தக் கட்டணம் அதிகமானதா என்பதுதான் கேள்வியின் நோக்கம். அநதக் கட்டணத்தைக் குறைப்பதில் அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கட்டணம் ஒரே மாதிரியாகத்தான 1963-ம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. ஆனால் முன்பு மூன்று ஆண்டுகளுக்கும், ஒவ்வொரு ஆண்டிற்கும் தனித்தனியாக வசூலிக்கப்பட்டது. இப்பொழுது மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து வசூலிக்கப்படுகிறது. முன்பு முதல் ஆண்டில் 150 ரூபாய், அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 75, ரூ. 75 என்ற வீதத்தில் மொத்தம் 300 ரூபாய் வசூலிக்கப்பட்டது. இப்பொழுது 300 ரூபாய் ஒரே ஆண்டில் மொத்தமாக வசூலிக்கப்படுகிறது.

## குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

குறுகியகால * வினா எண். 1. திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்து வந்த பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டத்தின் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இத் திட்டத்திற்கான மதிப்பீடுகளை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அரசுக்கு அனுப்பியுள்ளார். திட்டம் அரசின் ஆய்வில்உள்ளது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு நீர்த் திட்டம் நீண்ட நாட்களாக இழுத்து அடிக்கப்பட்டு தற்போது ஆய்வு செய்யப்பட்டு தலைமை பொறியாளரிடம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டம் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படுமா? இதனால் எத்தனை ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே இந்தத் திட்டம் நீண்ட நெடு நாட்களாக அரசினுடைய ஆய்விலிருந்து இப்போது இந்த அரசு வந்ததற்குப் பின்னாலேதான் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தது. 301 லட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 3,250 ஏக்கர் புதிய புஞ்சை நிலம் பாசன வசதி பெறும், 400 ஏக்கர் இரண்டுபோக நஞ்சை நிலங்கள் பயன் அடையும் 2,200 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறவும் 202 ஏக்கர் பாசனப் பற்றாக்குறை போகவும் வழி வகை செய்யும் திட்டமாக இது இருக்கும்.

திரு. என். பழனிவேல்; தலைவர் அவர்களே, திட்டத்தினுடைய விவரங்களை அமைச்சர் கூறியதற்கு நன்றி. இந்தத் திட்டம் இந்த ஆண்டே எடுத்துக் கொள்ளப்படுமா என்றும், அமைச்சர் அவர்களும் இந்தத் தொகுதியில் சம்பந்தப்பட்டிருப்பதால், அவருடைய சார்பிலேயும் வேண்டுகோளாக வைக்கிறேன். இந்த 2 தாலுகாவிலும் உள்ள மக்கள், இந்த அணைக் கட்டினால் வசதி அடைவார்கள். எனவே இந்த ஆண்டே அவசியமாக எடுத்துக் கொள்ளப்படும் என்ற உறுதியை அளித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே உடுமலைப் பேட்டை தொகுதியும், பழனி தொகுதியும் பயன் பெறுகிற வகையிலே இந்தத் திட்டம் இந்த ஆண்டிலேயே அமல் படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல்கோரல்

### (அ) டீசல் பற்றாக்குறை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மிக முக்கியமான விஷயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு எழுந்து நிற்கிறேன், சேலம் மாவட்டத்திலே ஆத்தூர் பகுதியிலே விவசாயிகள் எல்லாம் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். பஸ் போக்குவரத்தை மறித்து பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள்.......

[1980 பிப்ரவரி 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் சொல்வது முக்கியமானதுதான. அதை அனுமதித்துக் கொண்டே போனால் எல்லோரும் கேட்பார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு விதி இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தால் இரண்டு நாட்கள் ஆகும். அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்க முடியாது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்ற காரணத்தால் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். தாங்கள் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள். எந்த விதியின் கீழ் இதை அனுமதிக்க முடியும் என்று சொல்லுங்கள்,

திரு. ஏ. ஆர். மாரிமுக்து: தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்த உடனே முக்கியமான விஷயமாக இருந்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியமான விஷயம் இல்லாவிட்டால் திரு. மாரிமுத்து எழுந்திருக்கமாட்டார் என்று எனக்குத் தெரியும். இதை அனுமதித்துவிட்டால், இதுவே முன் மாதிரியாகப் போய் சபை நடவடிக்கை பாதிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: முன் பெஞ்சிலே இருக்கிற தலைவர்கள் இம்மாதிரி முக்கியமான பிரச்சினையாக இருந்தால், சம்பவங்கள் நடந்தால் எடுத்துச் சொல்லலாம் என்று சொன்னார்கள்.

தற்போது டீசல் கிடைக்கவில்லை அதனாலே ஆயில் எஞ்ஜின்கள் ஓட்டமுடியவில்லை. மின்சாரத்திலே ஓட்டலாம் என்றால் மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பதால் மின்சாரம் கிடைக்கவில்லை. இது விவசாயிகள் மத்தியிலே பெரிய கிளர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழ்நாடு பூராவும் டீசல் கிடைக்கவில்லை. மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதால் மின்சாரமும் கிடைக்கவில்லை. விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பயிர்கள் காய்கின்றன. எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆத்தூர் பகுதியிலே மிகுந்த கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு நானும் உங்கள் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே......



1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்; முன் வரிசைக்கு மட்டும்தான் அந்தச் சலுகை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை. வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலே—மாவட்டம் பூராவுமே—டீசல் கிடைக்கவில்லை. மின்சாரம் கிடைக்கவில்லை. மின்சாரம் இல்லாமல் ஒரு வார காலமாக போராட்டத்தை விவசாயிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதைச் சீர் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பேரவைத் தலைவர் அவர்கள் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுகிறேன்.

[முற்பகல் 10—10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் நெய்வேலி நிறுவனத்தில போதுமான அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படவில்லை. அதேபோல் மேட்டூரில் இருந்து தஞ்சைக்கு விடப்படுகிற தண்ணீர் நிறுத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தால் மேட்டூரில் இருந்து நமக்கு இதுவரையிலும் கிடைத்த மின்சாரம் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அண்மையில் மின்சார வெட்டு அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. கேரளாவோடு நாம் பேச்சு வார்த்தை நடத்த இருக்கின்றோம். அதன் வாயிலாக ஓரளவிற்கு நிலைமை சீர் அடையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. டீசலைப் பொறுத்தவரையில், தற்போது என்னிடத்தில் தகவல் இல்லை. அது பற்றி அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

## ஆ. 6-வது தமிழ்நாடு சட்டசபையைக் கலைப்பது என்கிற பேச்சு குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்னையை நாம் ஆராய்ந்து கொண்டு இருக்கிற நேரத்திலே நம்முடைய சட்டசபையைக் கலைப்பது என்கிற பேச்சு ஒவ்வொரு நாளும் அடிபட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த சூழ்நிலையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றார்கள். அங்கே போயிருக்கிறார்கள். அதற்கு முன்பாகவே காங்கிரஸ் அல்லாத மாநிலங்களைக் சேர்ந்த சட்டசபைகளைக் கலைப்பது சம்பந்தமாக கடிதம் எழுதப்பட்டு இருப்பதாக பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்வளவு முக்கியமான பிரச்னை இருப்பதால் நம்முடைய ஆயுட்காலத்தைப் பற்றி நமக்கே நிச்சயம் இல்லாமல் இருப்பதால், அதைப் பற்றி விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கொடுத்தால் மேலும் உற்சாகத்தோடு பணியாற்றுவதா அல்லது உட்கார்ந்து விடுவதா என்பதைப் பற்றி முடிவு செய்ய வசதியாக இருக்கும்.

[1980 பிப்ரவரி 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதைப் பற்றி மிக ஆவலாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நடப்பது நடக்கட்டும். அதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்.

## (இ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நாங்கள் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தோம். அதைத் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி இருக்கிறீர்கள். சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, நாமக்கல் கல்லூரி ஆகியவற்றில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கொடுத்த தீர்மானம் என்னவாயிற்று என்றுநான் கேட்க வேண்டுமே தவிர அதன் விவரங்களைச் சொல்லக் கூடாது. ஆகவேஇந்தப் பிரச்சினை சனிக்கிழமை இங்கே எழுப்பப்படலாம். அநேகமாக வந்தாலும் வரலாம், அந்த நம்பிக்கையோடு அவர்கள் அமரலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## 3. ஒழுங்குப் பிரச்சினைகள்

### அரசியலமைப்பு 45வது திருத்தச் சட்டம் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்பது குறித்து

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நம்முடைய பேரவைவிதி 13(2)-ன்படி 'அரசின்சட்டமுன்வடிவு அல்லது அரசின் பிற அலுவல்களை விவாதிக்க வேண்டுமென்று கொண்டு வரப் பெறும் தீர்மானத்திற்கிணங்க உரையின் மீதான விவாதம் தள்ளி வைக்கப்பெறலாம்'' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஆளுநர் உரை மீதான விவாதம் தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொடுத்து இருக்கிறேன் அதற்கு உங்களுடைய அனுமதி கோருவதற்கு முன்பு ஒரு பிரச்சினை இருக்கிறது. விவாதத்திற்கு ஒரு பிரச்சினை இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால், அது குறித்து தனி நபர் தீர்மானம் கொடுக்கத் தேவையில்லை. உங்களுக்குத் தெரியும், இப்போது "ரிசர்வேஷன் ஆப் சீட்ஸ் பார் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்டு ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்'' ஒரு சட்டம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியில் என்ன சொல்லப் பட்டு இருக்கிறது என்பதை மட்டும் சொல்லுங்கள். பொருளுக்குள் போக வேண்டாம். பொருள் குறித்த விவாதம் அவசியம் இல்லை.



1980 பிப்ரவரி 6]

திரு. அ. ரகுமான்கான்; 45-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கும், மலை ஜாதியினருக்கும் இன்னும் 10 ஆண்டுக் காலத்திற்கு இட ஒதுக்கீடு தொடர்ந்து தரவேண்டும்' என்று சொல்லி, ஒரு மசோதா பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, நம்முடைய சட்டசபையின் ஒப்புதலுக்காகவும் இங்கே டேபிளில் வைத்து இருக்கிறார்கள். அதை நம்முடைய சட்டசபை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்போகிறதா? ஏனென்றால், உத்திரப்பிரதேச முதலமைச்சர் அதை விவாதிக்க விருப்பம் இல்லை என்று தெரிவித்து இருக்கிறார். மகாராஷ்டிரத்திலும் அந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருக்கு ஏதோ தெரியாமல் இருக்கிற மாதிரி உறுப்பினர் பேசிக் கொண்டு இருப்பது சரியல்ல. இந்த விதியின் கீழ் இந்தப் பிரச்சினையை நான் கொண்டு வரவிரும்புகிறேன் என்று சொல்லுங்கள், அது போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) நானே விதிகளைப் படித்துக் காட்டி விடுகிறேன். இங்கே விவாதம் செய்ய அனுமதிக்க முடியாது. அந்தப் பொருளுக்குள் போகக் கூடாது. (குறுக்கீடு) விதியைச் சுட்டிக்காட்டிச் சொல்லுங்கள் போதும்.

திரு. அ. ரகுமான்கான்: ஆளுநர் உரை நடந்து கொண்டு இருக்கிறபோது, அந்த விவாதத்தைத் தள்ளி வைப்பதற்கு விதிகளில் இடம் இருக்கிறது. அப்படி விதி இருக்கிற காரணத்தால் அது போன்ற ஒரு ரேட்டிபிகேஷன், ஒரு ரெசல்யூசன் கொண்டு வருகிறபோது, அப்படி ஒரு தீர்மானம் கொடுக்கலாம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அப்படிக் கொடுத்து இருக்கிறார்களா? இல்லையென்றால், தயவு செய்து உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான்; தீர்மானம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிகழ்ச்சி நிரலில் எது அவசியம், அவசரம் என்பதைப் பார்த்து சேர்க்கின்ற உரிமை பேரவைத் தலைவருக்கு உண்டு. நீங்கள் பிரச்சினையை திசை திருப்ப வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுவிட்டு, சொல்லுங்கள், என்னை அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எது இருந்தாலும் எழுதித் தரவேண்டும். நீங்கள் இதுவரை சொன்னது போதும்; உட்காருங்கள். இல்லாவிட்டால் எல்லாவற்றையும் நீக்கி விடுவேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

*திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எழுப்ப விரும்புகின்ற பிரச்சனை உறுப்பினர் எழுதிக் கொடுக்கா விட்டாலும் அரசாங்கமே சேர்த்துக் கொள்ளலாம் என்பது. ஆளுநர் உரையினை ஒட்டிய விவாதத்தை நிறுத்தி வைத்து எந்தப் பிரச்சனையையும் அரசாங்கம் விரும்பினால் சேர்த்துக்கொள்ள இடம் இருக்கிறது என்ற எண்ணத்தையே வெளிப்படுத்துகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு முக்கியமான பிரச்சனை, ஆகவே, இதை நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அவசரம் கருதி நான் அதை நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ள முடியும். அரசு அவசியம் என்று கருதினால் அப்படி சேர்த்துக்கொள்ளலாம்.

## ஆ. பேச அழைத்த உறுப்பினருக்கு முதலில் வாய்ப்பு அளிக்காதது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, நான் முதலிலே ஒழுங்குப் பிரச்சனை எழுப்பினேன்; ஒழுங்குப் பிரச்சனை எழுப்ப என்னை அனுமதித்தீர்கள். நான் பிரச்சினை எழுப்புவதற்குள் பேராசிரியர் எழுந்தார்கள்; தாங்களும் அவரை அனுமதித்து விட்டீர்கள். கட்சியில் வேண்டுமானால் அவர்கள் பெரிய கட்சியாக இருக்கலாம்; நாங்கள் சிறிய கட்சியாக இருக்கலாம். ஆனால் முதலில் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பியது நான். ஆகையால் என்னை முதலில் அனுமதித்துவிட்டு, அதற்குப் பின்னால் பேராசிரியரை அனுமதித்திருக்க வேண்டும். இதுபற்றி தங்களுடைய தீர்ப்பைத் தெரிந்த பிறகுதான் மேற்கொண்டு (குறுக்கீடுகள்) நான் பேசுவேன். நான் தலைவரைப் பார்த்து கேட்கிறேன்; மற்றவர்கள் குறுக்கிடுவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் என்னைப் பார்த்து பேசுகிறார். என்னைப் பார்த்து கேட்கின்ற உறுப்பினருக்கு நான்தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர, மற்ற உறுப்பினர்கள் அல்ல. திரு. ரகுமான்கான், திரு. புருஷோத்தமன் நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். சும்மா உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள். (குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.



நீங்கள் பேரவைத் தலைவரைப் பார்த்து கையை நீட்டிப் பேசுவது சரியல்ல. நீங்கள் எதை வேண்டுமானாலும் துணிந்து பேசலாம். பேரவைத் தலைவரைப் பார்த்து கையை நீட்டிப் பேசுவது, சிரித்துப் பேசுவது—உங்களுடைய இந்த வழக்கத்தை மாற்ற முடியாது. ஒன்று கட்சித் தலைவருக்கு கட்டுப்படுங்கள்; அல்லது இந்த அவைக்குக் கட்டுப்படுங்கள். என்னைப்பார்த்து கேலி, கிண்டல் என்று சொன்னால் என்ன அர்த்தம்? திரு. கூத்தகுடி சண்முகம் என்னிடம் கேட்கிறார். அதிலே குறுக்கிட உங்களுக்கு உரிமை இல்லை. எப்போது பார்த்தாலும் கேலி, கிண்டல், சிரிப்பு, உட்கார்ந்து பேசுவது, இதெல்லாம் வேண்டாம்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தாங்களே உணர்ச்சிவசப்பட்டால் பிரச்சனை வேறு எங்கோ போய்விடும். தாங்கள் அமைதிபடுவதற்காகத்தான் இப்போது நான் எழுந்து நிற்கிறேன். அப்போதும் பிரச்சனையை முடித்து வைப்பதற்காகத்தான் எழுந்து நின்றேன். மாண்புமிகு உறுப்பினரின் கட்சி சிறிய கட்சி என்ற காரணத்தால் நான் இடையிலே எழுந்து நிற்கவில்லை; அவர் சார்ந்துள்ள கட்சியும் பெரிய கட்சிதான் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கூத்தகுடி சண்முகம், அவர்களுக்கு மதிப்பு கொடுக்கக் கூடாது என்பதல்ல. முதல் வரிசையிலே இருந்து, கட்சித் தலைவர் எழுந்து சொன்னால், அவர் பிரச்சனையைத் தீர்த்து வைப்பார் என்ற எண்ணத்தோடு அனுமதிப்பது இயற்கை. அந்த அடிப்டையிலேதான் பேராசிரியரை அனுமதித்தேனே அல்லாமல் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: நான் பேரவைத் தலைவரையும், பேராசிரியரையும் எதிர்த்து எதையும் சொல்ல விரும்பவில்லை. நான் எழுந்து நின்றேன்; அடுத்து பேராசிரியர் எழுந்தார். கட்சித் தலைவர் என்ற முறையில் முதலில் அவரை அனுமதித்துவிட்டு, உங்களை அழைக்கிறேன் என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சனை அவர் சார்ந்திருக்கிற கட்சி உறுப்பினரைச் சேர்ந்தது. அவர் எழுந்து பேசினால் சமாதானப்படுத்தி விடுவார் என்ற நோக்கத்தோடு பேராசிரியரை முதலிலே அனுமதித்தேன். அதனால் தங்களை மதிக்கவில்லை என்ற எண்ணம் வேண்டாம். இப்போது அண்ணன் அவர்கள் பேசலாம்.

[முற்பகல் 10-20]

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, இங்கே நான் மற்றொரு நிகழ்ச்சியைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சபை ஒழுங்காக நடக்க வேண்டும் என்றால் நான் தங்களைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டு இருக்கும்போது மற்ற உறுப்பினர்கள் அவரைப் பார்த்து உட்கார் என்று சொல்வது முறையா? அப்படி நான் பேசிக்கொண்டிருக்கும்போது என்னைப் பார்த்து ''உட்கார், உட்கார்'' என்று சொல்லி மிகவும் மோசமான முறையிலே, பலாத்காரமான முறையிலே வார்த்தைகளைச் சொல்கிறார்கள். அதைப்பற்றி நீங்கள் என்ன தீர்ப்புச் சொல்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். மற்ற உறுப்பினர்களைப் பார்த்து எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எந்த உறுப்பினர்களும் அவ்வாறு சொல்வதில்லை. ஆகவே இந்தமாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடுவது பற்றி வெறும் அறிவுரை மட்டும் வழங்கினால் போதாது. இந்த மாதிரி நிகழ்ச்சிகள் திரும்பவும் நடக்காத அளவுக்கு தாங்கள் என்ன உத்தரவாதம் தருகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தகுடி ச. சண்முகம் அவர்களுடைய உணர்வினை நானும் உணருகிறேன். எல்லா உறுப்பினர்களும் தங்களது எண்ணங்களையும், கருத்துக்களையும் எடுத்துச் சொல்ல நான் உரிமை தருகிறேன். ஆனால் அதே நேரத்தில் அந்த எண்ணங்களை வேகமாகவும், கோபமாகவும் தெரிவிக்கின்ற நேரத்தில் என்னைப் பார்த்துதான் பேசவேண்டுமே தவிர மற்ற உறுப்பினர்களைப் பார்த்து நேரடியாகப் பேசக் கூடாது என்று பல முறை சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் இவ்வாறு நடப்பது எல்லா இடங்களிலிலும் இருந்தல்ல. சில குறிப்பிட்ட இடங்களில் இருந்துதான் சிலர் இந்த மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். சில குறிப்பிட்ட உறுப்பினர்கள்தான் இந்தமாதிரி ஈடுபடுகிறார்கள். ஆகவே என்னைப் பார்த்தே அவ்வாறு சொல்லப்படுகிறபோது நான் என்னுடைய வேதனையை வேறு எங்கே போய்ச் சொல்ல முடியும், இந்த அவையிலேதானே என்னாலும் சொல்ல முடியும். ஆகவே இது மாதிரி நிகழ்ச்சிகளில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு விதிகளில் இடம் இருக்கின்றது. ஆனால் இந்த அவையினுடைய நல்ல மரபு காப்பாற்றப்பட வேண்டும் என்று கருதுகிறேன். ஆகவே இனிமேல் இந்தமாதிரி நடக்காமல் நாம் பார்த்துக்கொள்வோம், அப்படி மீண்டும் நடந்தால், விதிகளின்படி என்ன நடவடிக்கையை எடுக்கலாம் என்பது பற்றி முடிவு செய்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—(விவாதம்) (தொடர்ச்சி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஆளுநர் உரையின் மீது விவாதம், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சிவசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*திரு. செ. சிவசாமி: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி 1977 முதற்கொண்டு மிகவும் வற்புறுத்திக் கூறப்பட்டது. ஆனால் அந்த சேதுசமுத்திரத் திட்டத்தைப் பற்றி எந்த வார்த்தையுமே ஆளுநர் உரையிலே இல்லாத நிலை இருக்கிறது. இந்த சேதுசமுத்திரத் திட்டம் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிலேயே போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமான திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றி மீண்டும் வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடற்கரையினைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் இந்த மாநிலத்தில் இருக்கின்றது. அந்த இடங்களில் அதிகமான அளவிலே சங்கு குளித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். முன்பு அவர்கள் கடலிலிருந்து சங்கை எடுக்க வேண்டும் என்றால் இலவசமாக எடுக்கக்கூடிய நிலை இருந்தது. ஆனால் இப்போது லைசன்சு முறை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் தொழில் இன்றைக்கு அங்கே நல்ல முறையிலே நடைபெற முடியவில்லை. ஆகவே அந்தச் சங்கு குளித் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே இருந்ததைப்போல கடலிலே இருக்கின்ற சங்கு அத்தனையையும் இனாமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற பழைய முறையைக் கைக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இடையிலேதான் இந்த லைசன்ஸ் முறை கொண்டுவரப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முறையினைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீனவர்களைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கொடுக்கப்படவேண்டும். அவர்களுக்கு வலைகள் எல்லாம் சரியாக சப்ளை செய்யப்படவில்லை. ஆகவே அவர்களுக்கு வலைகள் எல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட ஊதியக் குழுவினுடைய அறிக்கை இன்று வரைக்கும் வராத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் குழுவினுடைய அறிக்கை

இன்னும் வராத காரணத்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஏதாவது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தலைநகரே இல்லாத மாவட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. கடந்த மூன்று பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட காலத்திலும், ஆளுநர் உரைகள் படிக்கப்பட்ட காலத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர் பற்றி முடிவு எடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கிறோம். நாங்கள் மட்டுமல்ல; எல்லோருமே வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட இந்தத் தலைநகர் பற்றி எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை. ஆகவே இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மதுவிலக்கைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு தளர்த்தப்பட்டிருந்த நிலை வந்தபிறகும் கூட மேல் மட்டத்திலே உள்ள மக்களுக்குச்சாதகமாகவும், சுலபமாகவும் மது கிடைக்கிறது. கீழ் தட்டில் உள்ள சாதாரண மக்களுக்கு கள், சாராயம் முதலியவை கிடைப்பதற்கு என்ன செய்ய வேண்டும், எப்படி பெறுவது என்ற விவரங்கள் கூடத் தெரிய முடியாத அளவிலே நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, கீழ் தட்டில் உள்ள சாதாரண மக்களுக்கும், மற்றவர்களுக்கும் மது அருந்தக்கூடியவர்கள் அத்தனை பேருக்கும் எந்த விதமான கட்டுப்பாடும் இருக்கக் கூடாது, விதிகள் தளர்த்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, போலீஸ் சங்கத்தைப் பொறுத்த அளவிலே போலீஸ்காரர்கள் சங்கம் அமைத்திருக்கிறார்கள், அவர்கள் சங்கத்தை அனுமதித்து, அவர்கள் வேண்டிய வாய்ப்பை பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சம்பந்தப் பட்ட கேஸ்கள் வாபஸ் பெறப்பட வேண்டும்.

வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்த அளவிலே அந்தத் திட்டம் கிராமப் புறங்களிலே சரிவர செயல்படுத்தப்படவில்லை. அவைகளை நல்ல முறையிலே திருத்தி அமைத்து சாதாரண மக்கள், ஏழை எளிய மக்களும் பயன் பெறும் வகையில் வீடு கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, கல்வியைப் பொறுத்த அளவிலே இங்கே மீறைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இராமநாதபுரத்தைச் சேர்ந்த சீதாலஷ்மி கல்லூரி, செயிண்ட் ஜோசப் கல்லூரி, நாமக்கல் கல்லூரி, இன்னும் சென்னை மாநகரில் இருக்கக்கூடிய 6, 7 கல்லூரிகள், சட்டக் கல்லூரி, உள்பட



எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டால் அவைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது இந்த நிலைமைகள் தவிர்க்கப்படவேண்டும். இந்தக் கல்லூரிகளை உடனடியாகத் திறப்பதற்கான ஏற்பாடு செய்து கல்வியின் தரம் வளர முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்த அளவிலே, நடமாடும் மருத்துவ மனைகள் வருகின்றன என்று சொல்லப்படுகிறது. அது நன்றாக வரட்டும். வீடுவீடாக வரட்டும், வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் நடைமுறையில் என்ன நிலைமை இருக்கிறது என்றால், பரமக்குடியில் இருக்கும் ஆஸ்பத்திரி காட்டுப் பகுதியில் அமைந்திருக்கிறது. இந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு போன் வேண்டும் என்று மூன்று வருடங்களாக மூன்று தடவைகள் சொல்லி விட்டேன். சர்வ சாதாரணமான ஒரு வசதி, ஆயிரம் ரூபாய் செலவு செய்தால் வந்து விடும். ஆனால் அதை வைக்கக் கூட வக்கு இல்லாத நிலைமையில் இந்த ஆஸ்பத்திரி அபிவிருத்திகள் இருந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது 4-வது தடவையாக கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வரும் மாதத்திற்குள்ளாவது அங்கே போன் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, போக்குவரத்தைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு மீண்டும் உங்களிடத்திலே சொல்லிக் கொள்கிறேன், கிராமப்புறங்களிலே போக்குவரத்து நல்ல முறையில் செயல்படவில்லை. பேச்சுக்கு பஸ்கள் விடப்படுகின்றன. ஆனால் அவைகள் ஒரு தடவை 2 தடவை ஓடிய பிறகு நின்று விடுகின்றன. அப்படி நின்று விடாமல் அவைகள் தொடர்ந்து ஓட விடப்பட வேண்டும். அவைகள் அப்படி ஓட விடுவதற்கு வசதியாக இணைப்புச் சாலைகளையும், ரோடுகளையும் கிராமப்புறங்களிலே செப்பனிட உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

*திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற கூட்டத்தில், ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்திலே 4வது முறையாக உரையாற்றி, அந்த உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானம் விவாதத்திற்கு வந்திருக்கிறது. அதிலே தமிழக மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய திட்டங்களை செயல்படுத்தும் விளக்கமும், கொள்கை விளக்கங்களும் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை எதிர்கட்சியாகிய நாங்கள் குற்றங்குறைகளை எடுத்துக் கூறி ஆலோசனை கூறுவது எங்களு

டைய கடமை. அந்தக் கடமையை ஆற்றுகிறோம். இந்த ஆளுநர் உரையானது எந்தச் சூழ்நிலையில் வந்திருக்கிறது என்று பார்க்கவேண்டும். அனைத்து மக்களுடைய நம்பிக்கையையும் இழக்கும் விதத்தில் தமிழகத்தில் மாணவமாணவியர் போராட்டம், ஆசிரியர் பேராசிரியர்கள் போராட்டம் டாக்டர்கள், நர்சுகள் போராட்டம், வக்கீல்கள், என்ஜினியர்கள் போராட்டம், என்.ஜி.ஓக்கள் போராட்டம், கர்ணம் மணியக்காரர்கள் போராட்டம். 80 சதவீதம் விவசாயிகளைக் கொண்டநாடு அந்த விவசாயிகள் போராட்டம், அனைத்து துறையில் உள்ள தொழிலாளர்கள் போராட்டம், ஜெயில் கைதிகள் கூட போராட்டம் என்ற அளவிலே நடந்து முடிந்தன. அந்த நேரத்திலே தேர்தல் நடைபெற்று கிட்டத்தட்ட 207 தொகுதிகளிலே, சட்ட மன்ற தொகுதிகளிலே ஆளும் கட்சியினர் நம்பிக்கையை இழந்த நிலைமையில், இந்த ஆளுநர் உரை கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த உரையிலே காணப்படும் குறைகளைப்பற்றி எடுத்துக் கூறக்கடமைப் பட்டிருக்கிறேன். மொத்தத்திலே 80 சதவீதம் விவசாயிகள் தமிழகத்திலே வசிக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதுதான் அரசினுடைய முக்கியமான கடமையாக இருக்க வேண்டும்.

[முற்பகல் 10-30]

இன்று விவசாயிகள் தீவிரமாகப் போராட்டம் நடத்துகிறார்கள். ஒன்பது அம்சப் போராட்டம் என்ற வகையில் அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற நிலையை அவர்கள் உணர்த்துகிறார்கள். அவர்களுக்குச் செய்யவேண்டிய வசதிகள் சரியாகச் செய்யப்படுகின்றனவா என்று பார்த்தால் சரியான முறையில் செய்யப்படவில்லை. பசுமைப் புரட்சி என்று அண்ணா அவர்கள் ஆரம்பித்தார்கள். அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பசுமைப்புரட்சி காரணமாகத் தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்தாலும் விவசாயிகளின் நிலைமையை எடுத்துக் கொண்டால் அவர்கள் நிலைமை கவனிப் பாரற்ற நிலையில்தான் இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய கடன் வசதிகள், அவர்களுக்கு அத்தியாவசியமான பாதுகாப்பைக் கொடுக்க இந்த அரச தவறிவிட்டது. அவர்களுக்குப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் என்ற வகையில் கொண்டுவருகிறோம் என்று இந்த அரசு கூறியது. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு, கொள்முதல் செய்வதில் அவர்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகமாகக் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றிருக்கக்கூடிய நிலை என்ன? நெல் ஒரு க்விண்டாலுக்கு ரூ. 130, ரூ. 140 என்ற வகையில் கிடைத்தால்தான் கட்டுபடியான விலையாக இருக்கும். விவசாயிகள் வெள்ளம் புயல் இவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள்.





கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத ஏழை எளிய பாட்டாளி விவசாயிகள் பொருள்களை ஜப்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நகைக் கடன்கள் பற்றி சட்டம் போட்டார்கள். ஏழை மக்களின் அடகு கடையிலுள்ள நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு திருப்பி அளிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது இருவது ரூபாய், முப்பது ரூபாய், ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் என்று தமிழ்நாடு பூராவும் ஏழை விவசாயிகளின் அடகு வைத்த நகைகள் ஏலம் விடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதை உடனடியாக நிறுத்துவதற்கு இந்த அரசு எந்த விதமான முயற்சியையும் எடுக்கவில்லை.

மின்வசதியை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு விவசாயத்தைப் பெருக்க சரியான முறையில் மின்சாரம் வழங்கப்படவில்லை. சில மாதங்களுக்கு முன்னர்கூட மின்சாரம் எந்த வகையில் வினியோகம், எவ்வளவு மணி நேரம் வருகிறது, எந்த நிலையில் வருகிறது என்று ஒரு அறிவிப்புக்கூட இல்லாமல் மின்சார வினியோகம் இருந்து வந்தது.

அதேபோல், பாசனபம்புகளைஓட்ட டீஸல் மிக அத்தியாவசியப் பொருளாக மதிக்கப்படுகிறது. டீஸல் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஏன் தமிழ்நாட்டிற்கு சரியான முறையில் டீஸல் கிடைக்கவில்லை? டீஸல் கிடைக்காத காரணத்தால் என்ஜின்களை ஓட்டமுடியாத நிலை இருக்கிறது. அதற்கு ஒரு பரிகாரமும் காணப்படவில்லை.

அரசு பாசன ஆதாரத்தைச் சரியாகச் செயல்படுத்தவில்லை. ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். வீராணம் ஏரிப் பாசனம் புனரமைப்புத் திட்டம் என்ற வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். அதற்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பீடு என்ற வகையில் வெள்ளியக்குடி. வால்பேட்டை வாய்க்காலுக்கு முதலில்ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர்ரூபாய் மூன்றுலட்சமாகக் குறைக்கப்பட்டது. 1978-79ல்ரூ.60,250செலவு செய்யப்பட்டது யென்று அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கேள்விக்குப் பதிலாக சட்டமன்றத்தில் அது அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆக எந்த அளவிற்குப் பாசனத் துறையில் இந்த அரசு கவனம் செலுத்துகிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து, என் தொகுதியில் பலாந்துறை வாய்க்கால் உடைப்பெடுத்து சரியான முறையில் கட்டப்படாமல் சரியான முறையில் பாசனவசதி கிடைக்காமல் இருக்கிறது. ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் நெல் கொள்முதல் சரியான முறையில் நடைபெறவில்லை. அதற்கான கொள்முதல் நிலையம் வைக்கப் படவில்லை.

[திரு. துரை கலியமூர்த்தி] [1980 பிப்ரவரி 6

பின்னர். தேர்தலைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால் ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டன. ஒன்றியங்களைக் கலைத்துவிட்டு இதுவரை தேர்தல் நடத்தவில்லை. அடிப்படைத் தேவைகள் எல்லாம் கிடைக்காமல் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடிநீர் வசதி இல்லை, ரோடு வசதி இல்லை, மின்சார வசதி இல்லை. அதைக்குறித்துக் கேட்க எந்தவிதமான நிலைமையும் இல்லை. அதே நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தல்கள் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறார்கள். அது எப்படி நடந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கள் தலைவர் 31—12—79 சுற்றுப் பயணம் வருகிறபோது மாயவரத்தில் இருந்து திரும்பி விழுப்புரம் திண்டிவனம் வருகிறபோது அவருக்குப் பின்னால் அரசியல் தலைவர்களாக இருப்பவர்கள் — நம் முதல் அமைச்சராக இருக்கக் கூடியவர்—எங்கள் கட்சித் தலைவர் சுற்றுப்பயணம் வருகிறபோது இடை இடையில் வந்து எங்களுக்கு ஆத்திரமூட்டும் வகையில் பல செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. மாயவரம், சீர்காழி, கொள்ளிடம். சிதம்பரம், விருத்தசாலம். திட்டக்குடி, பெண்ணாடம், தொழுதூர் என்று பாதை வகுத்திருந்தார்கள். ஏனோ தெரியவில்லை, சேத்தியா தோப்பிற்கு மேற்கே அவர்கள் அவ்வழி வரவில்லை என்றாலும் தொழுதூரில் இரவு 12·30 மணிக்கு ஒரு கலவரம் எற்பட்டது. எங்கள் தலைவரின் காரை, வானை அடித்து நொறுக்கினார்கள். பின்னால் வந்த கார்களை அடித்தார்கள். இதனால் மங்களூரில் நடைபெற இருந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது. சிதம்பரத்தில் எங்கள் தலைவர் இருக்கிறபோது அங்கே எம்.ஜி. ஆர். வருவதாக விளம்பரம் செய்து அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. தொண்டர்கள் மத்தியில் அங்கே இரண்டு கூட்டங்கள் நடத்தினால் தகராறு வரும் பதட்டமான நிலைமை இருந்தது.

அதோடு மட்டுமல்ல, துப்பாக்கிச் சூடு, சென்னையிலே கொலை, இன்னும் உசிலம்பட்டியிலே கொலை போன்றவைகள் நடந்திருக்கின்றன. இதைப்போல் இன்னும் பல இடங்களில் அடி தடி நடந்து, தாக்குதல்கள் நடந்திருக்கின்றன, அப்படி நடந்திருப்பது சரியான முறையா அமைதியான சூழ்நிலையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, குடிநீர் வசதியைப் பற்றி, ஏழை மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு 12 மாதங்களுக்குள் நாங்கள் குடிநீர் வசதியை அளிப்போம் என்று இங்கே தமிழக பட்ஜெட்டில் 25— 7 —77 அன்று முதன்முதலாக நிதி அமைச்சர் அவர்கள் உரை நிகழ்த்துகின்றபோது சொன்னார்கள். அது எந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சரியான முறையில்குடிநீர்வசதி அளிக்கப்பட்டது என்பதைநீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கிருஷ்ணா நதிநீர் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வருகிறோம் என்று 1977 ஆம் ஆண்டு முதல் சொல்லப்பட்டது. அந்தத் திட்டம் இன்னும் ஏன் நிறைவேற்றப்படவில்லை. எப்படி சென்னைக்கு குடிநீர் வசதியை நிறைவேற்றப்படும் என்பதைப்பார்க்கும் போது, இந்த அரசு சரியான முறையில் செயல்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இவர்கள் சரியான முறையில் நிர்வாகம் செய்யவில்லை. சரியான முறையில் நிர்வாகம் செய்ய இவர்களுக்குத் திறமை இல்லை; திராணி இல்லை.



1980 பிப்ரவரி 6] [திரு. துரை கலியமூர்த்தி]

தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களுக்குச் சலுகை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இங்கே இவர்கள் மதுவிலக்குச் சட்டத்தை இயற்றினார்கள் என்றார்கள். இவர்கள் எப்படி அந்தச் சட்டத்தை இயற்றினார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் தெரியும். குடித்தவர்களைப் பிடிக்கக் கூடாது என்று போலீஸ் துறைக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. எங்களது தலைவர் கலைஞர் அவர்கள் இதே மன்றத்தில் பேசும்போது சொன்னார்கள், அந்த சுற்றறிக்கையை விளக்கத்தைக் கேட்டு படித்துக் காட்டினார்கள். அப்படி கலைஞர் அவர்கள் கேட்கின்ற போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றறிக்கையைப் பற்றி எனக்குத் தெரியாது என்றார்கள். போலீஸ் உங்கள் இலாக்கா உங்களுக்குத் தெரியாமல் எப்படிவந்தது என்று கலைஞர் அவர்கள் கேட்கின்றபோது, மீண்டும்அவர்கள் பைலைப் பார்த்து மறுநாள் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். முதல்வர் அவர்கள்தான் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள். சுற்றறிக்கையும் போலீஸ் துறைக்கு வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தைத் தீவிரமாக, மதுவிலக்குக் கொள்கையை அமுல் நடத்தப் போகிறோம், உயிர்மீது ஆணை வைத்து அமுல் நடத்தப் போகிறோம். அதை மீறுபவர்கள் நாடு கடத்தப்படுவார்கள், 6 மாதங்கள் சிறை தண்டனை கொடுக்கப் போகிறோம், 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும், ஜாமீன் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இன்று நிலைமை என்ன? அந்த மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தியிருக்கிறார்கள், தளர்த்தியதற்கு சரியான முறையில் விளக்கம் கொடுத்திருக்கிறார்களா என்றால், சினிமா படத்திற்கு 'ஏ' சர்டிபிகேட் கொடுப்பதைப்போல். 30 வயதானவர்கள் குடிக்கலாம் என்ற வகையில் தளர்த்தியிருக்கிறார்கள். சரியான முறையில் நிர்வாகத்தை நடத்த, சட்டத்தை சரியான முறையில் இயற்றுகின்றார்களா என்பதைப் பார்க்க வேண்டும்.

பிற்பட்டோர் நிலையைப் பற்றிக் கூறுகிறபோது, அதற்காக ஒரு சட்டத்தை இயற்றினார்கள். பெருந்தலைவர் காமராஜ், அண்ணா அவர்கள். தந்தை பெரியார் அவர்கள் அதற்காகப் போராடி பெறப்பட்ட சலுகையை — 15—25 என்றிருந்ததை கலைஞர் அவர்கள் 18 சதவீதம் அரிசன மக்களுக்கும், 31 சதவீதம் பின்தங்கிய மக்களுக்கும் என்று உயர்த்திக் கொடுத்தார்கள். அந்த வகையில் கலைஞர் அவர்கள் சிறப்பாகச் செவ்வனே பல காரியங்களைச் செய்தார்கள். ஆனால், இந்தத் சட்டத்தினால், உத்தியோகத் துறையிலே உள்ளவர்களுக்கு 9000 ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவர்களுக்குச் சலுகை கிடையாது என்று சட்டம் வந்ததால், பாதிக்கப்பட்டார்கள். இவர்கள் பதவி உயர்வு பெறும்போது பாதிக்கப்பட்டார்கள். அதற்காக கலைஞர் அவர்கள் ஒரு போராட்டத்தை நடத்துவோம் என்று அறிவித்த பிறகு, உயிரையே கொடுக்கத் தயார் என்று சொல்லிய பிறகு, போராட்டம் அறிவித்த அந்த நிலையில் அந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். வாபஸ் வாங்கியதற்கு சரியான முறையில் விளக்கம் தருவதற்குப் பதிலாக, அதை 50 சதவிகிதமாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதையும் எப்படிக் கொடுக்கிறார்கள் என்பதற்கு சரியான விளக்கம் இல்லை. இன்னும் அரிசன மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான முறையில் பங்கு விகிதாச்சாரம் உயர்த்தி கொடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டிக் கூறுகின்ற வகையில் அது அமைந்திருக்கிறது.

அடுத்து, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் போராட்டம் நடத்தக் கூடாது, உரிமையைக் கேட்கக் கூடாது, எந்தவகையிலும் அவர்கள் நிலைமையைச் சொல்வதற்கு உரிமை இல்லை என்ற வகையில் தொழிலாளர் விரோதச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

[முற்பகல் 10-40]

அந்தச் சட்டத்தை எதிர்த்து எல்லாக் கட்சித் தரப்பிலும் கருத்து தெரிவிக்கப்பட்டது. தீவிரமான போராட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது, அந்த வகையில் அது அப்போது பேசாமல் விடப்பட்டது. இப்படித்தான் ஒவ்வொரு நிலைமையும். போலீஸ்காரர்கள் சங்கம் அமைப்பதில் பெரிய போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இன்று 30 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் துறையைச் சேர்ந்த அம்மையார் வசந்தமணி என்பவர் போலீஸ்காரர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்ததால், அவர் வீட்டில் அவர்களுடைய குடும்பத்திற்கு தங்க இடம் கொடுத்தார் என்பதற்காக திருச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். தமிழகத்திலுள்ள அனைத்து மக்களின் உணர்வுகளையும் மதிக்காததன் காரணமாக மக்கள் தங்கள் தீர்ப்பை பாராளுமன்றத் தேர்தலின்போது காட்டினார்கள், 207 தொகுதிகளிலே





திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள், அது தமிழக மக்கள் இந்த ஆட்சியை வெறுக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இனிமேலும் இந்த ஆட்சி பதவியில் இருக்க வேண்டுமா? தமிழக மக்களுடைய உணர்வை மதிக்க வேண்டும், உணர்ச்சியை மதிக்க வேண்டும், தமிழகமக்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். தமிழர்களின் நிலை உணர்ந்து ஆட்சி செய்ய வேண்டும்.

இன்று அரிசன மக்கள் நிலை சரியான முறையில் இல்லை. அவர்களுக்குப் பாதை வசதி இல்லை. குடிநீர் வசதி இல்லை. 'தமிழகத்திலுள்ள அனைத்துத் தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது என்னும் செய்தி மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகும். மேலும், தாழ்த்தப்பட்டோர் வாழும் காலனிகள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை, குடிநீர் வசதி, இடுகாட்டுக்கும் பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து அளிப்பதற்கான சிறப்புத் திட்டமொன்றை அரசு மேற்கொள்ளும் என்று ஆளுநர் உரையில் கூறியிருக்கிறார்கள். இரண்டரை ஆண்டு காலம் ஆண்ட பிறகு அரிசன மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். எவ்வளவோ மனுக்கள் நாங்கள் கொடுத்திருக்கிறோம். பல ஊர்களில் இடுகாட்டுப் பாதை இல்லை, இருக்க இடம் இல்லை. முன்னாலே கொடுக்கப்பட்ட மனைகளை தூர்த்து வீடுகட்ட வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எங்கள் ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவாகள் குருவிக்குக் கூட கூடு உண்டு. மனிதர்கள் வாழ இடம் இல்லையே என்பதன் காரணமாக அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் சாக்கடை ஒரத்தில் வாழக்கூடிய அந்த மக்களுக்கு, ஊர் ஒரத்தில் வாழக்கூடிய அந்த மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஊட்டும் வகையில் அவர்களுக்கு வீடு கட்டி கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்து 40,000 வீடுகளை இலவசமாகக் கட்டிக் கொடுத்தார்கள். அதை ஏன் தொடர்ந்து செய்யவில்லை? இப்போது பின் தங்கியவர்களுக்கு கட்டிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். முந்தைய அரசு செய்ததைத் தொடர்ந்து செய்யவில்லை. மக்களின் அடிப்படையான தேவையைப் பூர்த்தி செய்யும் நிலை இல்லை. இன்று அரிசன மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்பட்ட மக்களும், ஏளை பாட்டாளி மக்களும் கலைஞர் ஆட்சியை விரும்புகிறார்கள். அதன் காரணமாகத்தான் நடந்து முடிந்த தேர்தலில் ஆளும் கட்சிக்கு எதிர்ப்பாக தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

இந்த ஆட்சி ஊராட்சி மன்றங்களைக் கூடக் கலைத்தார்கள். ஜனநாயக உணர்வுகளின் அடிப்படைக் களமாக இருக்கிற ஊராட்சிகளைக் கலைத்தார்கள். அதன் காரணமாக கிராமத்து தேவைகளை எடுத்துச் சொல்ல வழி இல்லை. மின்சாரம்

இல்லை யென்றாலும், பாதை குடிநீர் வசதிகள் இல்லையென்றாலும் அதைப் பற்றி எடுத்துச் சொல்ல வழி இல்லாமல் இருக்கிறார்கள்.

ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. சரியானமுறையில் படிக்கவேண்டுமென்றால் சுற்றுச் சார்பு சரியான முறையில் இருக்கவேண்டும். அந்த வகையிலே ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத ஊர்களில் நல்லமுறையில் பள்ளிக் கூடக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

இந்த அரசு மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது. எல்லாத் தரப்பு மக்களின் நம்பிக்கையையும் இழந்து விட்டது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அந்தத் தீர்ப்பை மக்கள் அளித்திருக்கிறார்கள். ஆகவே இந்த ஆளுங்கட்சியானது நம்பிக்கையை இழந்திருக்கின்ற காரணத்தால் நீங்கள் ராஜிநாமாச் செய்யவேண்டும், அதுதான் உங்களுக்கு நல்லது, அதுதான் உங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று சொல்லி அமைகிறேன். நன்றி.

*திரு. கொ. இராமசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் உரைமீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உணவுப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கான உத்திரவாதம் எதுவும் இந்த உரையிலே கொடுக்கப்படாதது மிகவும் வேதனைக்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு கடுமையான வெள்ளத்தாலும் மழையினாலும் பாதிக்கப்பட்ட சுற்றுப்புற ரோடுகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரோடுகளைப் பழுதுபார்க்க நிதி ஒதுக்கப்பட்டாலும்கூட நிதிப் பற்றாக்குறை என்று சொல்லி ரோடுகள் பழுது பார்க்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. அதேபோன்று அநேக பஸ் ரூட்கள் செல்லும் சாலைகள் எல்லாம் பழுதுபார்க்கப்படாமல் மிகவும் கேவலமான நிலையில் இருக்கின்றன, அந்தக் காரணத்தினால் இன்றைக்கு கிராமங்களிலே கொந்தளிப்பும், அதிருப்தியும் காணப்படுகிறது. இதுவே இந்த அரசு செயலற்ற நிலையில் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

சிவகாசியின் சுற்றுப்புறங்களிலே உள்ள ரஸ்தாக்கள் மிகக் கேவலமான நிலையில் இருக்கின்றன. சிவகாசி-விருதுநகர் சாலை மிகப் பழம்பெருஞ்சாலை. அந்தச் சாலை 50 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையிலேயே தான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. அர்ஜுனா நதியில் ஒரு பாலம் கட்டுவதற்காக ஏற்கனவே பல முறைகள் எடுத்துச் சொல்லியும் அந்தப் பாலம்





இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலம் கட்டப்படாத காரணத்தினால் மழை காலங்களில் பல மைல்கள் சுற்றி சுற்றிச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது அந்தப் பாலம் கட்டும் பணி இப்போது கைவிடப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதைப்பற்றி அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும். உடனடியாக இந்த வேலையை எடுத்து நடத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி தொழில் வளர்ச்சியடைந்த ஒரு நகரம். அந்த நகரத்திலிருந்து மத்திய அரசிற்கு வருமான வரியின் மூலம் ஆகவும், மாநில அரசுக்கு வரியின் மூலமாகவும் 40 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அப்படி 40 கோடி ரூபாய் வருமானத்தைப் பெற்றுக்கொண்டும்கூட அந்த நகரத்திற்கு எந்த நன்மையும் செய்யாதபோது மிகுந்த வேதனையாக இருக்கிறது. சிவகாசியின் சுற்றுப்புறத்திலே இருக்கின்ற ரோடுகளை செப்பனிட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தெருக்களை பழுதுபார்த்து நல்லமுறையில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல. அங்கே உள்ள ஆஸ்பத்திரி ஒரு பெரியவரால் நல்லமுறையிலே கட்டிக்கொடுக்கப்பட்ட கட்டடத்தோடு இருக்கிறது. ஆனால் இப்போது நிர்வாகச்சீர் கேட்டின் காரணமாக அதற்குத் தண்ணீர் வசதிகூட கிடைக்காமல் தண்ணீர் இருந்து பயன்படுத்தப்படாமல் மோசமான நிலையில் இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது மிகவும் வருத்தப்படுகிற சூழ்நிலைதான் இருக்கிறது.

தென்காசி, செங்கோட்டை ஆஸ்பத்திரிகளும் அந்தப் பழைய நிலையிலேயேதான் இருக்கின்றன. தென்காசியில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அங்கே இருக்கின்ற டிரான்ஸ்பார்மர் குறையின் காரணத்தினால் மின்சார சப்ளை அடிக்கடி தடங்கல்படுகிறது, அதன் காரணத்தினால் அங்கே ஆப்பரேஷன் நடந்து கொண்டிருக்கும் போதே திடீரென்று மின்சப்ளை நின்றுவிடுகிறது, அதனால் பலவிதமான சிரமங்களுக்கு உள்ளாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்போலத்தான் செங்கோட்டை அஸ்பத்திரியிலே படுக்கைகள் நீண்ட காலமாக விஸ்தரிக்கப்படாமல் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற பழைய படுக்கைகள்தான் இருக்கின்றன. 35 படுக்கைகள் அந்த ஆஸ்பத்திரிக்கு மேலும் கொடுத்து விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி நகரப் பகுதியிலே டிராபிக் மிகவும் மோசமாக இருக்கிறது. டிராபிக் ரூல்ஸ் இருந்தும் முறைப்படுத்தப்படுவதில்லை. கட்டுப்பாடு இல்லாமல் போலீஸ் செயலற்ற நிலையில் இருப்பதால் அங்கே சட்டம் ஒழுங்கு கெட்டதாகவே கருதுகிறேன். சிவகாசியைச் சுற்றி 5 கிலோ மீட்டர் சுற்றுப்புறத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படக் கூடாது என்று சொல்லியிருப்பது சரியல்ல. அதைப்பற்றி நான் ஒரு கேள்வி

எழுப்பியபோதுகூட அமைச்சர் அதற்கு நல்ல முறையிலே பதில் சொல்ல முடியாமல் அந்தக் கேள்வியை பூர்த்தியாகாத நிலையில் அப்படியே விட்டுவிட்டார்கள்.

[முற்பகல் 10-50]

இப்படி 5 கிலோ மீட்டர் என்ற கட்டுப்பாடு இருப்பதால் அங்கே எந்தவ்தமான தொழிலையும் ஆரம்பிக்க முடியவில்லை. விவசாயக் குடிமக்கள் விவசாயத்தையும் செய்ய முடியாமல் இருப்பதால் தொழிலையாவது ஆரம்பிக்கலாம் ,என்றால் அதையும் ஆரம்பிக்க முடியாமலும் கஷ்டப்படக்கூடிய ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. எனவே. இந்த 5 கிலோ மீட்டர் என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே குழந்ததகள் அதிகமாக வேலை பார்க்கிறார்கள். இதை யாராலும் கட்டுப் படுத்த முடியாது; குழந்தைகள் வேலை செய்துதான் ஆக வேண்டியிருக்கிறது. அந்தக் குழந்தைகளுக்காக சேமநிதித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். தனியார் நிர்வாகங்கள் நல்லமுறையில் செய்து கொண்டிருக்கின்றன. அதை மேலும் விரிவுபடுத்த வேண்டும். அவர்களுக்கு கல்வி வசதி, சுகாதார வசதி, உடை வசதி போன்றவைகளைச் செய்து கொடுக்க வேண்டும். 'சைல்ட் லேபர்' (Child Labur) முறையைச் தவிர்த்தால் குழந்தைகளின் எதிர்காலம் மிகவும் கெட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகாசி பகுதியில் அச்சுக்கூடங்கள் நிறைய இருக்கின்றன. சிவகாசியில் தொழில் கூட்டுறவு அச்சகம் ஒன்று இருக்கிறது. அதுபோல் தொழிலாளர்களின் எதிர்கால நன்மைகளைக் கருதி தொழிலாளர் கூட்டுறவு அச்சகம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் பிரச்சனைகளைத் தீர்க்க இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. பாராளு மன்றத் தேர்தலுக்கு முன்பு, விவசாயிகளின் போராட்டங்களும், பேரணிகளும் நடத்தப்பட்டது, எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும், அவர்களின் கொந்தளிப்பை இந்த அரசு பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. விவசாயிகள் என்ற பொழுது, சிறு விவசாயி, பெரிய விவசாயி என்ற பிரச்சனைக்கே இடமில்லை. அவர்கள் தகுதிக்குத் தக்கவாறு கடன் சுமயும், பிரச்சனைகளும் உள்ளன. சலுகைகளை அறிவிக்கும் போது, விவசாயிகளுக்குக் குழப்பம்தான் உண்டாகின்றது. யாருக்கு இந்தச் சலுகை கிடைக்கிறது என்பதே தெரியவில்லை. அவர்கள் உண்மையான பிரச்சனை என்ன என்பதை இந்த அரசு புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை.



கடந்த ஐந்தாண்டுகளாக வறட்சியினால் மிகவும் பாதிக்கப் பட்ட விவசாயிகள், சென்ற ஆண்டு ஏற்பட்ட கடும் மழையினாலும், வெள்ளத்தினாலும், கால பயிர்கள் அனைத்தும் பாழாயின. கிணறுகளில் தண்ணீர் இருந்தும், பயிர் செய்ய முடியாத நிலை. அப்படியே பயிர் செய்தாலும், அதை அறுவடை வரையும் கொண்டு வர முடியாத நிலை. அறுவடை செய்தபின் கட்டுபடியாகாத நிலை, அவர்கள் என்ன தான் செய்வார்கள் ? இந்தியநாடு, விவசாய நாடு. அதில் தமிழ்நாடு முதலிடம் வாய்ந்ததாகயிருந்தது. இன்று இவர்கள் உள்ள நிலையில் எங்கோ தள்ளப்பட்டு விட்டது. அதற்கு அரசுதான் காரணம். இவர்கள் பிரச்சனைகள் திட்டவட்டமாகத் தீர்க்கப்படாவிட்டால், ஒரு கொந்தளிப்பே ஏற்படும்.

அரசு கடன்களை மாறி மாறிக் கொடுத்து, தெண்ட வட்டியும், வட்டியும் அசலும் கட்ட முடியாத நிலை. எல்லா வட்டிகளையும் அறவே நீக்க வேண்டும். அசலை நீண்ட காலத் தவணையில் வசூல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். கடன் கட்டியவர்களுக்குத்தான் புதிய கடன் என்பதை கைவிட்டு, விவசாயிகள் மீண்டும் தன் நிலைக்கு வர வேண்டுமானால், உதவித் தொகையுடன் நீண்டகாலத் தவணையில் வட்டியில்லாக் கடன் வழங்கப்பட வேண்டும்.

மின்சாரக் கட்டணங்கள் ரத்து கிடையாது என்று அமைச்சர் சொல்லிவிட்டார். இதுவும் விவசாயிகள் மேல் ஒரு சுமையாக வளர்ந்து கொண்டு வருகிறது. அரசு தங்கள் காலத்தைத் தட்டிக் கழித்துவிட்டுச் செல்லப் பார்க்கிறது. இந்தப் பாக்கியை நீண்ட தவணை முறையிலாவது வசூல் செய்ய ஒரு விதி செய்ய வேண்டும்.

பயிர் பாதுகாப்பு வேண்டும். காடுகளில் உள்ள பயிர்களுக்குத் தற்பொழுது கட்டுப்பாடு காவல் கிடையாது. ஆடு, மாடுகள், பன்றிகள், கழுதைகள் போன்றவைகளால் சேதம் அதிகமாக இருக்கிறது, அதோடு மனிதர்களாலும் சேதம் விளைவிக்கப்படுகிறது. இந்தமாதிரி விவசாயிகள் தொல்லைக்கு ஆளாக்கப்படுவது அரசின் பலகீனத்தால்தான். பயிர் பாதுகாப்பிற்குத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பயிர் இன்ஸ்சூரன்ஸ் திட்டம் செயல் முறையில் விரிவுப்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசில் இன்று விவசாய அமைச்சராக வந்திருப்பவர் நம்மவர். அவர் நமது பிரச்சனைகளையும், கொந்தளிப்பையும் நம்முடனிருந்தே புரிந்து கொண்டவர். அவரே விவசாயிகளின் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டுமென்று கூறியுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழக அரசு, நல்லமுறையில் பயன்படுத்தி விவசாயிகளின் பிரச்சனையைத் தீர்க்கத் தவறிவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில், மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கிறது. பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல் இல்லாமல் ஸ்பெஷல் ஆபிசர்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் எஞ்சினீயர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பஞ்சாயத்து வேலைகள் மிகவும் தாமதமாக நடக்கின்றன. ஊழல் மிக அதிகமாக நடக்கிறது. இந்த நிலையில் பஞ்சாயத்து வேலைகளும், வெள்ள நிவாரணப் பணிகளும் சரிவர நடக்கவில்லை. எனவே, இந்த வேலைகளை யெல்லாம் கவனிக்க பஞ்சாயத்துத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்.

நமது தமிழக அரசு சரியான முறையில், இயங்காத நிலையில் தமிழக அரசு ராஜிநாமாச் செய்து, முதலில் தமிழக அரசை மாற்றியமைத்து, புதிய தேர்தல் நடத்தி நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்த வகை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில் மத்திய மாநில உறவுகள் நல்ல முறையாக நடைபெறுகிறது என்பதைப் பற்றியும், மத்திய அரசாங்கம் போடுகின்ற திட்டங்களை நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதைப் பற்றியும், குறிப்பாக 20 அம்சத் திட்டத்தை நாங்கள் ஆட்சியிலே இல்லாதபோது கூட அந்தத் திட்டத்தைப் பாராட்டி இருக்கிறோம். என்றும் அது ஒரு பொருளாதாரத் திட்டம் என்பதையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் பார்க்கின்ற போது தமிழகத்திலே இருக்கிற மத்திய மாநில உறவுகள் வேறுவிதமாக இல்லாமல் The relationship between the State and the centre is in co-ordination, but not in confrontation என்கின்ற முறையிலேதான் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக சமீபத்திலே நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னாலே இங்கே ஒரு கோஷம் எழுப்பப்பட்டது. தமிழகத்திலே ராஜிநாமாச் செய்ய வேண்டும், அரசாங்கத்தைக் கலைத்து விடவேண்டுமென்ற கோஷங்கள் கட்டுப்பாடாக வெளியிலேயும் பேசப்பட்டது. இங்கேயும் சட்டசபையிலும் பேசப்படுகின்றது. ஒன்றை நாம் இங்கே உணர்ந்து கொள்ள வேண்டும். நமது அரசியல் சட்டம் என்பது ஒரு பெடரல் சிஸ்டம். மத்தியிலே ஒரு ஆட்சி இருக்கலாம் மாநிலத்திலே ஒரு ஆட்சி இருக்கலாம். ஒரே ஆட்சி, ஒரே கட்சியினுடைய ஆட்சிதான் மத்திய அரசிலேயும்; மாநில அரசிலேயும், இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இன்று இருக்கிற அரசியல் சட்டத்திலே இல்லை. அந்தந்த மாநிலங்களுக்கு அந்தந்த மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆளுகின்றபோது அது மத்திய அரசாங்கம் உருவாக்குகின்ற திட்டங்களை, எல்லாம் மாநில அரசாங்கம் ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறதா என்பதிலே தான் இருக்கிறது. அப்படி மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கத்தினுடைய திட்டங்களை செயல்படுத்தாமல். ஒட்டு



மொத்தமாக மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைக்குக் குந்தமாக அமைந்து உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்துமானால், அரசியல் சட்டத்தில், அந்த மாநில அரசைக் கலைப்பதற்கு ஷரத்துகள் இருக்கின்றன. இப்படி ஒரு மாநில அரசாங்கம் செய்திருக்கிற செயல்கள், அது நடந்திருக்கிற முறைகளை, குறிப்பாகத் தமிழகத்திலே ஒரு ஆட்சி நடைபெற முடியாத அளவுக்கு ஒரு அராஜகம் தலைவிரித்தாடுகிறது என்ற குற்றச் சாட்டை எடுத்து வைத்து, அந்தக் குற்றசாட்டு பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், அது மத்திய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படுமேயானால் அந்த மாநில அரசாங்கத்தை கலைப் பதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே ஒரு கட்சியானது பெருமிதமாக வெற்றி பெற்றிருக்கிறது. ஆகையினாலே தமிழகத்திலே இருக்கிற மக்கள் எல்லாம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியின் மீது வெறுப்பு கொண்டிருக்கிறார்கள், மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டார்கள் என்ற கோஷத்தை வைத்து இங்கே ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அரசியல் சட்டத்திலே மத்திய அரசாங்கத்திற்குத் தேர்தல் நடைபெற்றது. மக்கள் மத்திய அரசாங்கம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். ஆனால் மாநிலத்திலே நடைபெறுகின்ற ஒரு அரசாங்கத்தை நீக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு 'ரைட்-டு-ரீகால் அண்டு ரெபரன்ஸ்' என்று பிரெஞ்ச் கான்ஸ்டிட்யூஷனிலே சொல்லி இருப்பதைப் போல் மக்கள் மத்தியிலே ஒரு வாக்கெடுப்பை நடத்தி, அந்த வாக்கெடுப்பின் மூலம் மக்கள் நம்பிக்கையை இந்த அரசு இழந்து விட்டது என்று சொல்வதன் மூலமாக இந்த அரசாங்கத்தை நீக்க வேண்டும் என்று சொன்னால் அதிலே நியாயம் இருக்க முடியும். அதிலே அரசியல் ஞானம் இருக்க முடியும். அதைவிட்டுவிட்டு, எங்கேயோ, எதற்கோ ஏற்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலையை வைத்துக் கொண்டு காழ்ப்பை வைத்துக் கொண்டு இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க நினைப்பது எந்த விதத்தில் நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11-00]

மத்திய பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னாலே, கேரளாவிலே, கோவாவிலே சட்டசபைத் தேர்தல் நடைபெற்றன. ஆனால் அந்த இடங்களிலே அந்த மக்கள் எல்லாம் மத்தியில் இருக்கும் ஆட்சிக் கட்சிக்கு எதிரான கட்சிக்கு வாக்குகளை அளித்து சட்டமன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அப்படி என்று சொன்னால், நடைபெற்ற அந்தப் பாராளுமன்றத் தேர்தலிலே அந்த மாநிலங்களின் M. P.க்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை எல்லாம் இராஜிநாமாச் செய்யச் சொல்லப் போகிறீர்களா, என்று கேட்க விரும்புகிறேன். அல்லது

மறுபடியும் மாநில அரசுகளுக்கு ஒரு தேர்தலை நடத்தப் போகிறீர்களா ? மத்தியில் உள்ள ஆளும் கட்சிக்கு விரோதமான கருத்துக்களை உடைய கட்சி மாநிலங்களிலே ஆளும் கட்சியாக இருக்கிறது என்ற காரணத்தால் அதைக் கலைத்துவிட்டு, கிட்டத்தட்ட 8 மாநிலங்களில் மறு தேர்தல் வைக்கப்—போகிறேன் என்று சொல்லக் கூடியவர்களை நான் கேட்க விரும்புகிறேன்-மாநில சட்டமன்றங்களில் மாற்றுக் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு நடைபெறும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துவிட்டால் அங்கேயுள்ள காங்கிரஸ் எம். பி. க்களை ராஜிநாமா செய்யச் சொல்வீர்களா ? அவர்களைத் திரும்பவும் அழைத்துக் கொள்ளும் உரிமையை மக்களுக்கு வழங்கப் போகிறீர்களா? இப்படி எதையுமே நிர்ணயிக்கப்பட முடியாமல் வெற்றி பெற்ற குதூகலத்தில் நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசுவதும், சட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டு, நாங்கள் நினைத்தபடி செய்வோம், அது தான் நியாயம் என்று சொல்வதும், சரியாகாது என்று சொல்லிக்கொள்கிறேன். எந்த ஒரு குறிப்பிட்ட கட்சி மத்தியில் ஆட்சியில் இருக்கிறதோ அவர்கள் இஷ்டப்படுவதுதான் நியாயம் என்று இருக்கக் கூடாது. சட்டத்திற்கு உட்பட்டு அது இருக்க வேண்டும் என்பதை நான் தெளிவாக எடுத்து சொல்ல விரும்புகிறேன்.

இன்று தமிழக அரசாங்கமானது கலைக்கப்பட்டு, மீண்டும் தேர்தல் நடைபெறுமானால், இங்கேயுள்ள மக்கள் தான் மீண்டும் ஓட்டுப் போட வரவேண்டும். அவர்கள் எல்லாத் தொகுதிகளிலும் உங்களுக்குத்தான் ஓட்டுப் போடுவார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே, அந்த 234 எம்.எல்.ஏ.க்களையும் நீங்களே நியமித்துக் கொள்வது என்று சொன்னால், நிச்சயமாக அந்த முறையை நீங்கள் மேற்கொள்ளலாம். அப்போதுதான் நீங்கள் எதிர்பார்க்கிற அமைச்சரவை நடக்கும். ஆனால் அதற்குத் தீர்ப்புக் கொடுக்க வேண்டியவர்கள் நாட்டுமக்கள், நாட்டுமக்கள் வேறு விதமாகத் தீர்ப்புச் சொல்லிவிட்டால், உங்களுடைய நிலைமை என்ன என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே, ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று சொல்வது அரசியல் சட்டத்தின் விதி முறைகளுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டுமே தவிர, வேகமாக நீங்கள் பேசுவதன்மூலம் ஒரு நல்ல நிலைமை நாட்டிலே உருவாவதற்கு வழிகோலாது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்லிக்கொள்கிறேன், ஜனதா கட்சியானது மத்தியில் இப்போது ஆட்சியில் இல்லை. பெருவாரியான ஜனதா எம். பி. க்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தான் இப்போது ஜனாதிபதியாக இருக்கிறார். ஜனதா எம். பி.க்கள் எல்லாம்தோற்கடிக்கப்பட்டதால் அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து இறங்க வேண்டும் என்று சொல்வது நியாயம்தானா என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வேகமானது நம்முடைய ஜனநாயகப் போக்கை அழித்துவிடும் என்று கருதுகிறேன். மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களைக் கலைப்பதற்கு இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று அறிவிப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவர்களுடைய ஸ்வரங்கள், வேகங்கள், இதனால் குறைந்து இருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுடைய அணுகுமுறை நல்ல அணுகு முறையாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



தமிழ்நாட்டில் பிற்பட்டோருக்குச் சலுகை அளிப்பதற்கு 9,000 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டதை கைவிட்டுவிட்டு, அதை 50 சதவிகிதம் என்று உயர்த்தியிருக்கிறீர்கள். அத்தகைய ஒரு அறிவிப்பைக் கொடுத்ததற்காக, பிற்பட்ட சமுதாயத்திற்காக பாடுபடுகின்ற அனைத்துக் கட்சிகளும் வரவேற்று இருக்க வேண்டும். இந்த அரசைப் பாராட்டுகின்றேம். ஆனால் சிலர் வரவேற்கவில்லை மாறாக வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள். அப்படி மாற்றுக் கருத்துக்களைச் சொல்லுகிறவர்களுக்கு குறிப்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இங்கே எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக-காங்கிரஸ் கட்சி கூட்டணி ஆட்சிதான் பாண்டிச்சேரியில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. பாண்டிச்சேரி கவர்னரைச் சந்தித்து பின்தங்கிய மக்களுக்காக ஒதுக்கீடு, ரிசர்வேஷன் செய்ய வேண்டும் என்று எங்களுடைய உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் மனு கொடுத்து இருக்கிறோம், மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பின் தங்கியோர் குழுவும் அங்கே வந்தபோது, பின்தங்கிய மக்களுக்கு ரிசர்வேஷன் செய்து தர வேண்டும் என்று கேட்டோம், அவர்களும் தருவோம் என்று அறிவித்து விட்டுச் சென்றார்கள். ஆனால் இப்போது திராவிட முன்னேற்றக் கழகம்-காங்கிரஸ் கூட்டணி ஆட்சி பாண்டிச்சேரியில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த ஆட்சி அமைந்த உடனே பின்தங்கியவர்களுக்காக ரிசர்வேஷன் கொடுக்க வேண்டும் என்று சட்டம் அமைச்சரவை முன் தாக்கல் செய்யப்பட்டபோது, அது மறுக்கப்பட்டு இருக்கிறது. இங்கே நாம் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் போராடுகிறோம் என்று சொல்லுகின்ற தி.மு.க.வினர் அங்கே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை வருகிறபோது அதை நிராகரித்திருக்கிறார்கள். இதற்குரிய பதிலையும் விளக்கத்தையும் எதிர்க் கட்சித் தலைவரிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன். அதே நேரத்தில் தமிழகத்தில் 18% தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு என்று ஒதுக்கியிருப்பதை, பின்தங்கிய மக்களுக்கு 31% என்று ஒதுக்கியிருப்பதை 50% என்று உயர்த்தியிருப்பதுபோல் உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் பாண்டிச்சேரியில் நடைபெறுவது உங்களுடைய ஆட்சிதானே. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதானே அங்கே நடக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக

பரிந்து கொண்டு பேசுகின்றீர்கள் இங்கே. ஆனால் பாண்டிச்சேரி மந்திரி சபையிலே ஒரு அரிசன் கூட அமைச்சராக இடம் பெற வில்லை: மந்திரியாகவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

இந்த மன்றத்திலே இன்றைக்கு அரிசனங்களுக்கு கொடுமைகள் விளைவிக்கப்பட்டிருக்கின்றன என்று பரவலாகப் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் அரசாங்கத்தில் வெளி யிடப்பட்டிருக்கிற அறிக்கை ஒன்று இருக்கிறது. அதைப் பார்த்தால் அரிசன மக்களுக்காக என்னென்ன நன்மைகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். அதிலே தெளிவாக எல்லாம் தந்திருக்கிறார்கள். ஆகவே, பிரச்சனைகளைப் பெரிதாக்கி, பின்தங்கிய சமுதாயத்தையும் அரிசன சமுதாயத்தையும் மூட்ட விட்டு சமுதாயக் கலவரங்களைத் தூண்டிவிட வேண்டாம்: தமிழ்நாட்டிலே வகுப்புக் கலவரத்தை ஏற்படுத்த வழிவகுக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பின்தங்கிய சமுதாயத்திலே, கீழ்மட்டத்திலே இருக்கிற மக்களுக்கு 'ரெப்பிரசென்டேஷன்' கொடுக்க வேண்டு மென்ற நல்ல எண்ணத்தில் எப்படி பின்தங்கிய சமுதாயத்திற்கு 9,000 ரூபாய் வரம்பை நிர்ணயித்தீர்களோ அதேப்போல உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி கேட்டுக் கொண்டிருப்பதற்கு இணங்க, மிகப் பின்தங்கியோர் பட்டியலை அங்கீகரித்து, அதற்கு 20 சதவீதம் விழுக்காடு ஒதுக்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிகப் பின்தங்கிய மக்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று, கருதி இதை ஒரு வேண்டுகோளாக விடுகிறேன். மிகப் பின்தங்கியோர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களுக்கு என்று ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: அவர்கள் வேறு பிரச்சனைக்குப் போக இருக்கிற காரணத்தால் ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன். புதுவை மாநில அரசில் பிற்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று எப்போது கேட்கப்பட்டது? அது எப்போது நிராகரிக்கப்பட்டது?

திரு. ரா. மார்க்கபந்து: இரண்டு மாத காலத்திற்கு முன்னால், பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியினர் புதுவை மாநிலத்தில் பிற்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று மனுக் கொடுத்து இருந்தோம். அதே நேரத்தில் திரு. பி.பி.மண்டல் அவர்கள் பாண்டிச்சேரிக்குச் சென்றபோது அங்கே பின் தங்கிய மக்களுக்கு



இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்தார். அது வானொலியிலும் வந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே இப்போது வந்திருக்கிற அரசு, தி.மு.க. பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை அமைச்சரவை முன்னால் வந்தபோது, அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு மகஜர் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள், அப்போது புதுவையில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி அரசு அமையவில்லை. இப்போது நிராகரிக்கப்பட்டது என்று சொன்னார்கள். எந்த நிலையில், யார் நிராகரித்தார்கள்?

திரு. ரா. மார்க்கபந்து: நாங்கள் மகஜர் கொடுக்கும்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இல்லை. அதனால் கவர்னரிடத்தில் கொடுத்தோம். இந்த ஆட்சி வந்த பிறகு அது மறுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்கிறேன். நாங்கள் மகஜர் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அல்ல.

*திரு. மு. கருணாநிதி: ஆனால் தாங்கள் பேசும்போது பன்னிப்பன்னி சொன்னீர்கள்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மறுத்துவிட்டது, மறுத்து விட்டது என்று. நான் விளக்கம் கேட்ட பிறகு ஆளுநரிடம் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள். இப்போது என்ன காரணம் சொல்லி மறுத்திருக்கிறார்கள்? என்றைக்கு மறுத்தார்கள்?

திரு. ரா. மார்க்கபந்து: எந்தக் காரணத்தையும் சொல்லாமல் மறுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன். பாண்டிச்சேரியில் இந்த அரசு ஆரம்பிக்கப்பட்ட பிறகு அவையில் தாக்கல் செய்யப்பட்டு மறுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, ஒழுங்குப் பிரச்சனை— பாண்டிச்சேரியில் நடைபெற வேண்டிய விவாதம். அதை தமிழ்நாட்டு சட்ட மன்றத்தில் விவாதம் பண்ணி அதற்காக இங்கே முடிவு எடுக்க வேண்டிய அவசியம் உண்டா? (குறுக்கீடு).

திரு. மு. கருணாநிதி: நண்பர் திரு. எஸ். ஆர். இராதா அவர்களின் வாதம் ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. பாண்டிச்சேரி பற்றி பேசியதே அவர்கள் தான். அப்போது திரு. இராதா இங்கே இல்லையோ அல்லது அவருடைய கவனம் இங்கே இல்லையோ தெரியாது. அதற்குத்தான் விளக்கம் கேட்டேன். எப்போது தாக்கல் செய்யப்பட்டது? எப்போது மறுக்கப்பட்டது என்றுதான் கேட்டேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, திரு. மார்க்கபந்து அவர்கள் பேசியதைவிட அதிகமாக நான் எடுத்துக் கொள்ள வில்லை. திரு. மார்க்கபந்து பேசியதை, கலைஞர் அவர்கள் சென்னைக்கு இருக்க வேண்டியவர் : பாண்டிச்சேரிக்கு அழைத்துப் போகிறார் என்பதால் நான் வருத்தப்பட்டுக் கேட்டேன். கலைஞர் பாண்டிச்சேரிக்குப் போயிருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கவலை.

திரு. மு. கருணாநிதி : பாண்டிச்சேரி உங்களுக்கே சொந்த மான இடம். பாவம், இப்போது பூஜ்யமாகிவிட்டீர்கள். அதனால் ரொம்பக் கவலைப்படுகிறீர்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : இது மாறி, மாறி வரக்கூடிய ஒன்றுதானே தவிர யாருக்கும் சொந்தமாக எதுவும் என்றைக்கும் இருக்காது ; சொந்தத்தை விட்டுவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய கவலை.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இன்றைக்குத் தமிழ் நாட்டில் மாநில சுயாட்சி வரவேண்டும் என்பதற்காகவும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்பதற் காகவும் நாம் பல்லாண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அந்த மாநில சுயாட்சி என்பதை உயிர்மூச்சுக் கொள்கை யாக ஏற்றுக்கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு கூட்டணி சேர்ந்திருக்கிறவர்கள் காங்கிரஸ்காரர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையிலே ஒரு அறிவிப்பு விட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11–10]

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது பாதகமானது என்கிற ஒரு அறிவிப்பு தரப்பட்டிருக்கின்றது. அது பத்திரிகை யிலேயும் வந்திருக்கிறது. ஆனால் இங்கே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற கட்சிக்காரர்கள் அதுபற்றி இதுவரைக்கும் தங்களின் பத்திரிகைகள் மூலமாகவோ அல்லது வேறு எந்தவிதமான அறிவிப்புக்கள் மூலமாகவோ அந்தக் கருத்தினை மறுத்து அறிக்கைகள் வெளியிடவில்லை. ஆகவே நாம் கொண்ட கொள்கையிலே உறுதியாக இருக்கிறோம் என்று காட்ட மறுப்புத் தெரிவிக்க வேண்டாமா என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகள் பிரச்சினை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே விவசாயிகள் ஒரு போராட்டத்தையே நடத்தியிருக்கிறார்கள். நான் இந்த அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்துக்கொள்கிறேன். மின்சார பாக்கியானது ஏறக்குறைய இரண்டு ஆண்டுக் காலமாகவே



கட்டப்படவில்லை. எனக்குத்தெரிந்தவரையில் 13 கோடி ரூபாய் விவசாயிகள் பயன்படுத்திய மின்சாரத்திற்குப் பாக்கியாக வரவேண்டி இருக்கிறது என்று கருதுகிறேன். அந்த மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறபோது ஆங்காங்கே போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொண்டிருக்கிறோம். ஆகவே அதுகுறித்து இந்த அரசாங்கத்திடம் ஒரு வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் கூட மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்கள் ஒன்று சொல்லி இருக்கிறார்கள். அதாவது தக்காவிக் கடன்களையும் மற்ற சிறு விவசாயிகளுக்கு இருக்கின்ற கடன்களையும் ரத்து செய்வதற்குத் தயாராக இருக்கிறோம், அந்தக் கடன்களை ரத்து செய்வது குறித்து மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தி னுடைய உதவியைக்கேட்குமானால் அந்த விவசாயக் கடன்களை ரத்து செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த முறையில் இந்த அரசாங்கம் மத்திய அரசினை அணுகி விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தக்காவிக் கடன்களைத் தள்ளுபடி செய்வதாக தமிழக அரசு அறிவித்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் தமிழக அரசிற்கு இன்னொரு வேண்டுகோளும் விடுத்துக்கொள்கிறேன். அந்த விவசாயிகள் கட்ட வேண்டும் என்று சொல்லப்படுகின்ற மின்சார பாக்கியான 13 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்து அந்த மக்களுக்கு ஒரு பாதுகாப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பம்ப் செட் ஒன்றுக்கு 10 ரூபாய் என்று ஏற்கெனவே போடப்பட்டிருந்தது. அது இந்த ஆட்சியிலே 5 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதுவும் கூட வேண்டாம் என்று கோரிக்கை மக்களிடத்திலே இருந்து வந்து கொண் டிருக்கிறது. ஆகவே அவ்வாறு 5 ரூபாய் பம்ப் செட்டுக்கு என்று இருப்பதையும் இந்த அரசாங்கம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் தங்கள் போராட்டங்களிலே வைத்திருக்கின்ற கோரிக்கை தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குச் சரியான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது. அவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களுக்கு விலையினை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாத நிலை இருக்கின்றது. அந்த அதிகாரம் சென்ட்ரல் லிஸ்டிலே இருக்கின்றது. ஆனால் அந்த விலை

நிர்ணயத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசுதான் காரணம் என்று குற்றச்சாட்டுக்கள் இருக்கின்ற காரணத்தால் நான் இந்த அரசாங்கத்தை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்தவர்கள் என்று சேர்த்து இருக்கின்ற அரசியல் சிக்கல்களை மத்திய அரசுக்கு விளக்கி விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற உணவுப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

இந்த அரசாங்கம் கூட குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் நிர்ணயித்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதுபற்றியும் கூட விவசாயப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பயிர் இன்சூரன்ஸ் திட்டம் இரண்டொரு தாலுக்காக்களிலே மட்டும் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதனை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமீபத்திலே கெரோசினுக்கும், சர்க்கரைக்கும் குடும்பக் கார்டுகள் விநியோகிக்கப்பட்டு அதன் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடும்பக் கார்டு வழங்கப்படுவது கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்குச் செல்லவில்லை. அதனால்தான் பெருவாரியான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த அரசு புரிந்துகொண்டாக வேண்டும். (மணியடிக்கப்பட்டது) ஆகவே உடனடியாக கிராமங்களில் உள்ள எல்லா குடும்பத்தினருக்கும் குடும்பக் கார்டுகள் கொடுப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போலீஸ்காரர்களுக்கு சங்கம் வைப்பதற்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. அவ்வாறு சங்கம் வைப்பதற்கு அளிக்கப் பட்ட உரிமை நியாயமா, தவறா என்பது பற்றி யோசிப்பதற்கு முன்னதாக அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பதவிக் குறைப்புகளை நிவர்த்திக்க வேண்டும். அடுத்தபடியாக சட்டமன்றத்திலே.... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: கொஞ்சம் சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.



திரு. ரா. மார்க்கபந்து: இன்னும் ஒரே ஒரு பாயிண்ட். இந்தச் சட்டமன்றத்திலே சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கான மசோதாக்களை தாக்கல் செய்கிறார்கள். உடனே அவைகள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு அப்படியே சட்டமாக நிறைவேற்றப்படுகின்றன. அப்படி அவசரமாக நிறைவேற்றப் படுகின்ற சூழ்நிலையில்தான் மதுவிலக்குச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. சென்ற முறை அந்த மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தம் (அமெண்ட்மெண்ட்) கொண்டு வரப்பட்டு, அதைப்பற்றி இங்கே பேசப்பட்டு பின்னர் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகு அது மிகக் கடுமையான பின் விளைவுகளை உண்டாக்கியிருக்கிறது என்று தெரிந்து பின்பு இந்த மதுவிலக்கு கொள்கையை தளர்த்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. நான் அரசுக்கு இதை ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், அவற்றிற்கு எதிர் வாதம் இருந்தாலும் சரியான கருத்துக்களாக இருக்குமே யானால் அவைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒட்டுமொத்தமாக அறிமுகம் செய்து, விவாதம் முடிந்த உடனே நிறைவேற்றி விடக் கூடாது. வாதங்களையும் கருத்துக்களையும் சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தி அதையும் திருத்தமாக ஏற்று பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கிறேன் (மணியடிக்கப்பட்டது,

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் பேரில் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். இந்தப் பேரவைக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னாலே, நாட்டிலே தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. நாட்டு மக்கள் ஜனநாயக முறையிலே அவர்களுக்குத் தேவையான அவர்களுக்கு நம்பிக்கையான ஆட்சி என்ற முறையில் காங்கிரஸ் ஆட்சியை, இந்திரா காந்தியினுடைய தலைமையிலே ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்திராகாந்தி அம்மையார் டில்லியிலே ஆட்சி அமைத்திருக்கிறார்கள். ஆகவே மக்கள் தங்களுடைய வாக்குரிமையின் மூலம் பெறும் மாற்றத்தை இந்த நாட்டிலே செய்ய முடியும் என்பதை ஜனநாயக முறையில நிரூபித்திருக் றார்கள்.

இந்திரா காந்தி அம்மையாரை ஆட்சிக்கு வர விடக் கூடாது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரக் கூடாது என்ற முறையில் எவ்வளவு கடுமையான எதிர்ப் பிரச்சாரம் செய்யப்பட்டாலும் கூட மக்கள் அதை எல்லாம் புறக்கணித்து, இந்தியாவிலே நிலையாக இருக்கக் கூடிய ஆட்சி, மக்களுக்கு தேவையான பொருளாதார திட்டங்களை வகுக்கக்கூடிய ஆட்சி காங்கிரஸ் ஆட்சியும், இந்திரா காந்தியும் தான் என்ற நம்பிக்கையை, உறுதிப்பாட்டை தங்கள் தீர்ப்பின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எதிர் தரப்பிலே சொல்லப் பட்ட தவறான கருத்துக்களை எல்லாம் மக்கள் புறக்கணித்துக்

திருக்கிறார்கள். இன்றைக்கு திரும்பவும் இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிக்கு வந்தால் சர்வாதிகாரமாகத்தான் ஆட்சி இருக்கும். ஏதேச்சாதிகாரமாகத்தான் இருக்கும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆட்சிக்கு வந்த பிறகும் ஏதேச்சாதிகாரம் ஆட்சிக்கு வந்துவிட்டது என்று சில நபர்கள் சொல்கிறார்கள். முன்னாலே கடந்த சில ஆண்டுகளாக எவ்வளவோ கூறியும் எடுத்து கொள்ளாது புறக்கணித்த மக்கள், திரும்பவும் அதைக் கூறுவதினால் ஏற்றுக் கொண்டு விட மாட்டார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு மிகப் பெரிய பிரச்னை இந்திய நாடு பூராவிலும் இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11.20)

காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களைக் கலைக்கப் போகிறார்கள். கலைக்கக் கூடாது என்பது ஒரு வாதம். நான் அதுசம்பந்தமான தீர்ப்பை இன்றைக்குச் சொல்வதற்கான இடத்தில் இல்லை. மத்திய அரசு முடிவு எடுக்க வேண்டும். ஆனால் அதில் இருக்கிற உண்மைகளை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். 1977-ம் ஆண்டு ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தலைவர் அவர்களே, இந்தப் பாராளுமன்ற அமைப்பு முறையிலே ஏதாவது கருத்து மாறுபாடுகள் வந்தால் முன்னாலே எப்படி நடந்திருக்கிறது என்பதைத்தான் நாம் பார்க்கிறோம். மதர் ஆப் பார்லிமென்ட் என்ன சொல்லியிருக்கிறது என்பதை எடுத்துக் கொள்கிறோம். கோர்ட்டுகளிலே வாதாடுகிறபோது முன்மாதிரியை எடுத்து வைத்து வாதாடுகிறார்கள். அது மாதிரி இன்றைக்கு ஏதோ கலைத்துவிட வேண்டும் என்ற முறையில் சொல்லவில்லை. முன்மாதிரி இருக்கிறது. அதை மத்திய அரசு யோசிக்கவேண்டும். மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் இதை மிகத் தீவிரமாக எதிர்த்துப் பேசினார்கள். ஆனால் அன்றைய தினம் மாநில அரசுகளை, ஒன்பது மாநில அரசுகளைக் கலைக்கிறபோது அதை ஆதரித்து அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

ஆனால் ஐந்தாண்டுகள் நிறைவுபெற்ற மாநிலங்களில் உள்ள அரசுகளைத்தான் கலைத்தார்கள்

என்று சொல்லலாம். ஆனால் ஐந்தாண்டுகள் நிறைவுராத உத்தர பிரதேசம், ஒரிஸா போன்ற மாநிலங்களில் இந்த நடவடிக்கை எடுத்ததையாவது அவர்கள் அன்றையதினம் கண்டித்திருக்க வேண்டும்.



ஆக, நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த முடிவு அரசியல் ரீதியாக எடுக்கப்பட வேண்டிய ஒரு முடிவு. வருகிற கட்சி தங்களுடைய கொள்கை களை நிறைவேற்று வதற்காக, தங்களுடைய அரசியல் நிலையை வலுப்படுத்திக் கொள்வதற்காகத்தான் முடிவுகள் எல்லாம் எடுத்துக் கொண்டு வருகிறதே தவிர வெறும் சட்டத்தை மாத்திரம் வைத்து வேறு ஏதோ ஒன்றைக் கருத்தில் வைத்துச் செய்வதல்ல. இதைத்தான் இன்றைக்கு நான் மார்க்சிஸ்ட் கட்சி தோழர்கள் கூறியதற்குக்நான் கூற முடியும். அவரவர்கள் நிலையில் தனக்கு எது நல்லது என்று பார்த்துத்தான் முடிவு எடுக்கவேண்டிய நிலையில் நாட்டில் இருக்கிற சில கட்சிகள் இன்று இருக்கின்றன.

லோக்தாள் தலைவர் மதிப்பிற்குரிய முன்னாள்பிரதமர், காபந்து அரசாங்கத்தின் பிரதமர் சரண்சிங் அவர்கள் ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டார்கள். தடுப்புக் காவல் சட்டம் ப்ரவென்டீவ் டிட்டென்ஷன் ஆக்ட். அவர்கள் போட்டச் சட்டத்தை இன்று பாராளுமன்றத்தில் அவர்களே எதிர்க்கிறார்கள். இது அன்றைக்கு நாட்டிலே ஒவ்வொரு கட்சிக்கும் ஏற்பட்டிருக்கிற சங்கடமான நிலை. எதிர் தரப்பில் இன்று வந்துவிட்டோம், காங்கிரஸ் ஆட்சி அதைத் தவறாக பயன்படுத்திவிடலாம் என்று சொல்கிறார்கள். அன்று அவர்கள் மட்டும் தவறாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆகவே இன்று இந்தியநாட்டிலே இருக்கிற அரசியல் கட்சிகள் ஒரு முடிவை எடுக்கிறபோது அவர்களுடைய நலன்கள், அவர்களுடைய கட்சியின் நலன்களைக் காப்பாற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைக் கண்ணோட்டமாக வைத்துத்தான் ஒரு முடிவு எடுக்கப்படுகிறது. ஆகவே கலைப்பதா இல்லையா என்பதை மத்திய அரசு தன்னுடைய நலன்களை வைத்து முடிவு எடுக்கும் என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

ஒன்றை நான் எதிர்கட்சித் தோழர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியை எதிர்க்கின்ற கட்சித் தோழர்களுக்கு, காங்கிரஸ் ஆட்சியை எதிர்க்கின்றவர்களுக்கு நான் கூறிக்கொள்வது என்னவென்றால், காங்கிரஸ் காரர்கள்பேரில், காங்கிரஸ் ஆட்சியின் பேரில் குற்றங் குறைகள் சொல்ல வேண்டும் என்பதற்காக ஒரு அக்னியாஸ்திரத்தை நீங்கள் விடுவீர்களானால் நாங்கள் ஒரு வர்ணாஸ்திரத்தை விடவேண்டும். அக்னியாஸ்திரத்தை விட்டால் நாங்கள் அதை முறியடிப்பதற்கான காரியங்களைச் செய்தாக வேண்டும். இது அரசியல் ரீதியாக எடுக்க வேண்டிய ஒரு முடிவு. அக்கினி வந்தால் தண்ணீரைக் கொட்டி அணைப்பது.

அடுத்து, இங்கே ஜனதா, இடதுசாரி சக்திகள் ஒன்றுசேர வேண்டும், காங்கிரஸ் கட்சி இங்கே ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது, அதை எதிர்த்து முறியடிப்பதற்கு நாமெல்லாம் ஒன்று சேர வேண்டும் என்று ஒரு கருத்து இங்கே பேசப்பட்டது. ஜனதா, இடதுசாரி சக்திகள் எது எது என்பதைப் பற்றி நாம் முதலில் முடிவுக்கு வந்தாக வேண்டும். ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கின்ற எந்தச் சக்தியாக இருந்தாலும், அது இடதுசாரியாக இருக்க முடியாது. சமீபத்திலே, மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதுவும் தேர்தல் நடந்து முடிந்த பிறகு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஜனதா, லோக் தாள், இடது சாரி ஆகியோர் சேர்ந்த ஐக்கிய முன்னணி ஏற்படுத்தியிருக் கிறார்கள். ஜனதா, லோக்தள் எப்படி இடதுசாரி கட்சியாக இருக்க முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை. இன்றைக்கு ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சி இடதுசாரி கட்சி. இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிக்கு வந்தவுடனேயே, ஒரு முடிவு எடுத்தார் கள். ஆப்கானிஸ்தான் சம்பவம் பற்றி ஒரு முடிவு எடுத்தார்கள். சோஷலிச நாட்டின் பக்கத்திலே இந்தியா இருக்கிறது என்பதைக் காண்பித்திருக்கிறார்கள். அதே சமயத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு எண்ணத்தை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கட்சியை ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கின்ற உணர்வு கொண்டவர்களோடு சேர்ந்து கொண்டு, ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தி காங்கிரஸ் கட்சியை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணம் சரியானது தானா என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உங்களுடைய எண்ணம், கருத்து கொள்கை எல்லாம் எப்படி இருக்கின்றது என்று பார்த்தால், காங்கிரசை எதிர்க்க வேண்டும், இந்திரா காந்தி அம்மையார் கட்சி ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்பதாக இருக்கின்றதே தவிர, கொள்கை களை மட்டும் அடிப்படையாக வைத்து, அந்தக் கொள்கையை நீங்கள் வகுக்க வில்லை. தமிழகத்திலே காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்துவிடப் போகிறது என்று மதிப்பிற்குரிய நமது உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ரொம்பப் பதறினார்கள். அண்ணா தி. மு. க., தி. மு. க. நாம் எல்லாம் ஒன்று சேர்ந்து காங்கிரஸ் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே 10 என்று இருந்தது, 15, 20 என்றாகி விட்டது. எனவே, நாம் எல்லாம் ஒன்றுசேர வேண்டும் என்றார்கள்.

நான் ஒன்றைக் கூறிக் கொள்கிறேன். தமிழகத்திலே இருக் கின்ற மக்கள், அவர்களைவிட காங்கிரஸ் கட்சியின் மீது அதிக பற்று வைத்திருக்கிறார்கள். ஆதரவு வைத்திருக்கிறார்கள். கடந்த தேர்தலிலே நமக்குத் தெரியும், மக்கள் எந்த அளவுக்கு



காங்கிரஸ் கட்சியை ஆதரித்திருக்கிறார்கள் என்பது. ஆகவே, நான் ஒன்றைக் கூறிக் கொள்வேன். இன்றைய நிலைமையிலே பார்த்தால், மார்க்சிஸ்ட் என்பவர்கள் மெடீரியலிஸ்ட்ஸ. யதார்த்த வாதிகள். ஆனால், நாம் 'ரியாலிடி' யைக் கணக்கில் வைத்து, முடிவெடுக்க வேண்டும். இன்றைக்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று சேர வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அது சாத்தியமா? அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்வேன். இரண்டு கட்சி களையும் ஒன்றுபடுத்த முடியுமா?

திரு. ரா. மார்க்கபந்து : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரி பிகேஷன்'. தலைவர் அவர்களே, திரு. மாரிமுத்து அவர்கள் பேசுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளைவிட காங்கிரஸ் கட்சியின மீது தமிழக மக்கள் அதிக பற்று வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தமிழகத்திலே இந்திரா காங்கிரஸ் அரசாங்கம் அமைத்து விடலாம் என்று அவர்கள் கருதுகிறார் களா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தயவுசெய்து திசை திருப்ப வேண்டாம். காங்கிரஸ் அணி என்றுதான் நான் சொன்னேன். ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஒன்றுபடுத்த உங்களால் இயலாது. அதே சந்தர்ப்பத்தில், காங்கிரஸ் கட்சி ஆட்சி ஏற்படுவதை தடுத்து நிறுத்தவும் உங்களால் முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1967க்குப் பிறகு மத்தியிலே ஒரு கட்சியும், மாநிலத்திலே ஒரு கட்சியும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆட்சியில் இருந்து வந்திருக்கின்றன. மத்தியிலே அங்கே காங்கிரஸ் ஆட்சி இருந்த போது, இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. அதேபோல், அதற்குப் பிறகு அங்கே ஜனதா ஆட்சியில் இருந்த போது, இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி யில் இருந்து வந்திருக்கிறது. இரண்டு இடங்களிலும் ஒரே கட்சி ஆட்சியில் இல்லை.

[முற்பகல் 11–30]

அதே நேரத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—ஜனதா அங்கே இருந்தபோது — இந்திரா காங்கிரஸை எல்லா வகையிலும் ஆதரித்து இருக்கிறது என்பதையும் அவர்கள் புரிந்துகொண்டு பேசுவார்கள் என்று நம்புகிறேன். மீண்டும் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி வருவதற்கு வாய்ப்பில்லை என்பதையும் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய டாக்டர் சமரசம் அவர்கள் ரொம்ப நீளமாகச் சொன்னதால் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மறுபடியும் சொல்ல வேண்டாம், நேரமாகிறது. இப்போது தமிழகத்திலே ஆண்டு கொண்டிருக் கின்ற அண்ணா தி. மு. க. தனக்கு என ஒரு பார்வையை, கொள்கையை வைத்துக் கொள்ளவில்லை என்பது என்னுடைய கருத்து. காங்கிரஸ் கட்சியோடு உறவு வைத்திருந்த காலத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய பார்வையை நீங்கள் பிரதிபலித்திர் கள். 20 அம்சத் திட்டம் வேண்டும் என்றும், இந்திரா காந்திதான் இந்த நாட்டிலே தகுதியான தலைவர், அவர்தான் ஆளுவதற்குத் தகுதியானவர், ஜனதா கட்சி ஆளுவதற்கு முடியாத நிலையில் இருக்கிறது, இந்திரா காந்திதான் ஜனநாயகவாதி என்றெல்லாம் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். அவர்கள் கருத்து மாறுபட்டு எதிர்க்கருத்து வருகிறபோது, அவர்கள் ஜனதா கட்சியோடு உறவு வைத்தார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோடு உறவு வைத்தார்கள். இந்த அணியோடு இருந்த உறவு மாறுகிறபோது அவர்களுடைய பார்வையிலேயும் மாறுபாடு, அவர்கள் சேர்ந்த அணிக்குத் தகுந்தவாறு ஏற்பட்டது. இந்திரா காந்தி சர்வாதிகாரி, இந்திரா காந்தி ஆட்சிக்கு வந்தால் எதுவும் இருக்காது, உங்களுக்கு மீண்டும் ஒரு தேர்தல் வர வேண்டுமானால் காங்கிரஸ் அணிக்கு வோட்டுப் போடாதீர்கள். இந்திரா அம்மையாரை ஆட்சி பீடத்திலே ஏற்றாதீர்கள், இப்போது 5 ஆண்டுகளுக்கொரு முறையாவது வாக்குச்சீட்டு கிடைத்தது, இனிமேல் அதுவும் கிடைக்காத நிலை வந்துவிடும் என்ற ஒரு பார்வையிலே மதிப்பிற் குரிய நம்முடைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசினார் கள். அந்தக் கருத்துத்தான் பரவலாக அந்தக் கட்சியிலிருக்கிற எல்லோராலும் பேசப்பட்டது. அப்படியென்றால் என்ன அர்த்தம்? தனக்கு என்று ஒரு கொள்கை இல்லாமல், தனிப் பார்வை இல்லாமல் யாருடன் சேருகிறார்களோ அவர்களுடைய கருத்தைப் பிரதிபலித்துப் பேசுகின்ற நிலையை அனைத்திந்திய அண்ணா தி. மு. க. எடுத்திருக்கிறதே தவிர ஒரு உறுதியான கொள்கையை வகுத்துக் கொண்டு, அந்தக் கொள்கையில் நின்று செயல்பட வில்லை என்பது யதார்த்தமான உண்மை, ஆகவே எப்படியிருந் தாலும் காலத்திற்கு ஏற்றபடி மாற்றிக்கொண்டு, ஆப்பு இல்லாத தேராகத்தான் அசைந்து கொண்டிருக்கிறீர்கள், உறுதியான தேராக, உறுதியான இடத்திலே நீங்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலையில் அந்தத் தேர்தல் முடிந்தவுடன், இந்திரா காந்தி அம்மையாரை ஆட்சியிலே அமர்த்த வேண்டுமென்று....

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** ** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பத்திரிகையிலே முதலமைச்சர் பேசினார் என்று பார்த்தேன். பத்திரிகையிலே வந்த செய்தி. அது பேசப்பட்டது. மாநில அரசுக்கு எதிராக வாக்களிக்க வில்லை என்பது அவர்களுடைய அடுத்த வாதம். இங்கே பேசு கின்றபோது அது பாராளுமன்றத் தேர்தல் தான், பாராளுமன்றத் தேர்தலுக்காகப் போடப்பட்ட வாக்கு, மாநிலஅரசை எதிர்த்துப் போடப்பட்டதாகக் கொள்ளக்கூடாது என்பது ஒரு வாதம். மாநில அரசை ஆளும் கட்சி தன்னுடைய வேட்பாளர்கள் 24 பேர்களை நிறுத்தியது. மாநில அரசு ஆட்சிக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் கூறினார்கள், மத்தியிலே இருபது ஆண்டுக் காலத்திற்கு ஒரு கட்சி ஆட்சி இருக்காது, ஆகவே எங்களுடைய கட்சிக்கு வாக்களிப்பீர்களானால் எங்களுடைய ஒத்துழைப்பின் பேரில்தான் மத்தியிலே ஆட்சி அமையும் என்று சொன்னார்கள் அப்படி அமைகின்றபொழுது இந்த மாநில அரசுக்கு மத்திய ஆட்சியில் பங்கிருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் அங்கே இருப்பார்கள், அதன் மூலம் தமிழ் நாட்டிற்கு, உங்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய முடியும். இதுதான் நீங்கள் சொன்ன ஒரு கொள்கை. ஆகவே, இந்தக் கொள்கைக்குப் புறம்பாக எதிர்த்து வாக்களித்திருக்கி றார்கள் என்ற உண்மையை மறுத்துவிடக் கூடாது, மறந்து விடவும் முடியாது. உங்களுக்கே தெரிகிறது. நம்மை எதிர்த்து ஓட்டு விழுந்து விட்டது; நம்முடைய கருத்துக்கு, நம்முடைய சொல்லுக்கு மாறாக மக்கள் நம்மை எதிர்த்து வாக்களித்திருக் கிறார்கள் என்ற உணர்வும் உங்களுக்கு இருக்கிறது. ஆனால் அதை இந்த அவையிலே பகிரங்கமாக உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி ஏற்றுக் கொண்டால் அது வேறு திசைாகப் போய்விடும். எனவே அதை ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்; ஆனால் உண்மை அதுதான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்திரா காந்தி ஆட்சிக்கு வரவேண்டுமென்ற கொள்கை பிரதிபலித்திருந்தாலும், மாநில அரசின் கொள்கை தவறானது என்ற கருத்தும் அதில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த இரண்டரை ஆண்டுக் கால தமிழக ஆட்சியிலே பெரிய திட்டங்களை, பெரிய கொள்கைகளை நிறைவேற்ற முடியாத நிலையிலே இருந்த ஒரு ஆட்சி, இன்றைக்கு மக்களின் ஆதரவை இழந்துவிட்டிருக்கிறது என்றால் என்ன காரணம் என்பதை, என்ன செய்வது என்ற முடிவை நீங்கள்தான் எடுக்க வேண்டும். ஆகவேதான் சொல்கிறோம், அரசின் போக்குகளில், தேர்தல் முடிந்த பிறகு தடுமாற்றத்தைப் பார்க்கிறோம். தேர்தல்

முடிந்தவுடனே ஒரு அறிவிப்பு வந்தது. அது இந்தத் தடுமாற்றத்தின் விளைவுதான். மக்கள் ஏன் எதிராக வாக்களித்திருக்கிறார்கள் என்று திடீரென்று யோசனை வந்திருக்கிறது. மதுவிலக்கைக் கடுமையாக்கி விட்டோம்' அதனால்தான் ஓட்டுப்போடவில்லை போல் இருக்கிறது. அதனால் ரத்து செய்வோம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள். பர்மிட் கொடுக்கிறோம், வீட்டிலே சாப்பிடலாம், போலீஸ் பிடிக்காது என்று அவசர நிலையிலே ஒரு முடிவெடுக்கப்பட்டது. எந்த நிலையில்? அதைத்தான் நான் கேட்கிறேன். மதிப்பிற்குரிய நமது முதலமைச்சரவர்கள் மதுவிலக்கிலே மிகுந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். மிகக் கடுமையாகச் சட்டத்தைப் போட்டு மது குடிக்கும் பழக்கத்தை, மது காய்ச்சும் பழக்கத்தைத் தமிழகத்தை விட்டே எடுக்கிறேன் என்று உறுதி பூண்டார்கள். ஆனால் தேர்தல் முடிந்தவுடன் என்ன நிலை? மதுவிலக்குச் சட்டத்தையே ரத்து செய்து விட்டது. ரத்து செய்யவில்லை என்று அவர்கள் கூறினாலும், உண்மையிலேயே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு விட்டது இந்த உத்தரவின் மூலமாக. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் மத்திய சர்க்காரிலே, பாராளுமன்றத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பேசிய பேச்சைப் பற்றி இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஜனதாக் கட்சி ஆட்சியிலிருந்தபொழுது மத்திய அரசு ஒரு கொள்கையை அறிவித்தது, மதிப்பிற்குரிய மொரார்ஜி தேசாய் அவர்கள் ஒரு கொள்கையை அறிவித்தார்கள், குறுகிய காலத்திலே மாநிலங்களெல்லாம் மதுவிலக்குத் திட்டத்தை அமலாக்க வேண்டும், அதற்கான நஷ்ட ஈட்டில் பாதியை மத்திய அரசு கொடுக்கும் என்று அறிவித்தார்கள். புதிய அரசு ஒரு கொள்கையை அறிவித்தார்கள். ஆகையால் எங்கே மதுவிலக்கு அமலில் இருக்கிறதோ அதை ரத்து செய்துவிட வேண்டுமென்று அவர் அறிவித்ததாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆகவே, நீங்கள் போட்ட கடுமையான சட்டத்தின் நிலையைத் தளர்த்தி பழைய நிலையிலேயாவது கொண்டு வந்திருக்கலாம். அதை விட்டுவிட்டு, அடியோடு ரத்து செய்த கொள்கை மிகத் தவறானது. உங்களுக்கு தேர்தலின் மூலமாக ஏற்பட்ட ஒரு மோசமான நிலைக்கு என்ன காரணம் என்று புரிந்து கொள்ள முடியாத நிலையிலே இந்தக் காரியங்களை நீங்கள் செய்திருக்கிறீர்கள்.

அடுத்து, பிற்பட்டோருக்காக ஒதுக்கீடு. பிற்பட்டோருக்கான ஒதுக்கீடு பற்றி மிக அதிகமாகப் பத்திரிகைகளிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையிலேயும் விவாதிக்கப்பட்டிருக்கிறது, வெளியிலேயும் விவாதிக்கப்பட்டிருக்கிறது, மதிப்பிற்குரிய நமது முதலமைச்சரவர்கள், பொருளாதார ரீதியில் பலவீனமான



மக்களுக்கு நலன் செய்வதற்காக இதைச் செய்கிறேன் என்று கூறினார்கள். கொள்கை ரீதியிலே, பார்வையிலே இது சரியானது என்பது என்னுடைய சொந்தக் கருத்து. எங்கள் கட்சிக் கருத்து அல்ல இது, கட்சி முடிவாக கருத்தை அறிவிக்கவில்லை. ஆனால் இதை அமலாக்குவதாலே பல சிரமங்கள் இருக்கின்றன. அமல்படுத்த முடியாது என்பது என்னுடைய கருத்து. ஆகையால், அமலாக்க முடியாத ஒரு முடிவு முடிவா இருக்க முடியாது.

[முற்பகல் 11-40]

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் இங்கே உரையாற்றுகின்றபோது கூறியதை தங்களுடைய கட்சியின் கருத்து அல்ல, சொந்தக் கருத்து என்று சொன்னார்கள். ஒரு கட்சியின் தலைவராக இருக்கிறவர்கள், இங்கே பேசிக் கொண்டிருக்கிறவர்கள் கட்சியின் கருத்துக்கு விரோதமாகக் கூறுவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கட்சியின் கருத்துக்கு மாறாகப் பேசினால்தான் தப்பு. கட்சி இது சம்பந்தமாக கருத்து எதுவும் சொல்லவில்லை. ஆகவே 31%—ல் பொருளாதாரத்தில் பலவீனமாக இருப்பவர்களுக்கு ஒதுக்கினால், அவர்களுக்கும் நியாயம் சரிவர நிறைவேற்ற முடியாது. ஆகவே இது தவறு, ரத்து செய்யப்பட வேண்டும் என்று மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவரும் அவர்களுடைய கட்சியினர் பல பேர்களும் போராட்டத்தைத் தொடங்கினார்கள். ஆனால் அதைச் செய்யவே முடியாது பரிசீலனை செய்ய முடியாது என்று பேசிக் கொண்டு வந்த முதலமைச்சர் அவர்கள் தேர்தல் முடிந்த உடனே 50% இடத்தை பிற்பட்ட மக்களுக்கு ஒதுக்குகின்றோம் என்று அறிவித்தார்கள். 50% ஒதுக்கியது பற்றி யாரும் எதிர்த்துப் பேசவில்லை. 50% ஒதுக்கியதற்கு மகிழ்ச்சி, ஆனால் நீங்கள் இதுவரையிலும் பேசிக்கொண்டு வந்த, வாதாடிக் கொண்டு வந்த பொருளாதாரத்தில் பலவீனமாக இருக்கிறவர்களை உடனடியாகக் கைவிட்டு விட்டீர்களே, கீழே தள்ளிவிட்டீர்களே, இது என்ன நியாயம், அவர்களுக்கு பாதுகாப்பு என்ன, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு செய்யப் போகிறேன் என்று சொன்ன கருத்தை விட்டுவிட்டு அவர்களுக்கு 19% அதிகமாக இன்றைக்கு உத்தரவு போட்டிருக்கிறீர்கள். என்ன காரணம். ஆத்திரத்தில் அலசிப் பார்க்காமல், ஆராய்ந்து பார்க்காமல்—என்ன தேர்தலிலே மக்கள் இப்படிச் செய்து விட்டார்களே என்ற அந்தக் கருத்திலே செய்திருக்கிறீர்கள். இந்தக் கொள்கை முடிவை எடுப்பதற்கு முன்னாலே தீர்க்கமாக

தாக்கீது போட்டார்கள். அப்படித் தாக்கீது போடுகிறபோது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தது. அந்தத் தாக்கீதின்படி இங்கே 2 முறை விவசாயம் செய்வதற்கு ஏக்கருக்கு 15ரூ. ஒருமுறை விவசாயம் செய்வதற்கு ஏக்கருக்கு 10 ரூ. சாதாரண நிலங்களுக்கு ரூ. 10, 8 என்று போட்டு இருந்தார்கள். அதைத்தான் இன்று தள்ளுபடி செய்து இருக்கிறோம் என்று சொன்னேன். தள்ளுபடி செய்கிற சட்டம் நாளையோ, மறுநாளோ இங்கே வர இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தள்ளுபடி செய்ததை வரவேற்கிறேன். ஆனால் வசூல் செய்யாமல் இருக்கிறபோதே 20 கோடி ரூபாய் தள்ளுபடி என்று சொல்கிறீர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

அடுத்து, 20 அம்சத் திட்டத்தை வரவேற்றுக் கூறியிருக்கிறீர்கள். ரொம்ப மகிழ்ச்சி. இதிலே 20 அம்சத் திட்டத்தை ஆட்சிக்கு வருவதற்கு முன்பே ஆதரித்தீர்கள் என்பது உண்மை, உங்களிடத்தில் அதிகாரம் இல்லாதபோது ஆதரித்து வந்தீர்கள், ஆனால் அதிகாரம் வந்த பிறகு 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக்கொண்ட மும்முரமான திட்டம் என்ன? அதிகாரம் இல்லாதபோது ஆதரித்தவர்கள், அதிகாரம் வந்த பிறகு அதை நிறைவேற்ற முயற்சி எடுத்து இருந்தால் இதைக் கூறுவதில் அதிகப் பெருமை வந்து இருக்க முடியும். ஆனால் மத்தியில் 20 அம்சத் திட்டம் கொண்டு வரப்போகிறோம் மீண்டும் என்று சொன்னவுடனே நாங்களும் அதை ஆதரிக்கிறோம் என்று சொன்னதால் ஒரு பெரிய பெருமை உங்களுக்கு வந்து விட முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.50]

அடுத்து நிலச் சீர்திருத்தம். நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாகப் பார்த்தால் முன்னால் இருந்த நிலையிலிருந்து ஒரு அடி கூட நீங்கள் எடுத்துவைக்கவில்லை. வருவாய்த்துறை அமைச்சரவர்கள் பினாமி நிலங்களை எல்லாம் எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன்; அத்தனை பேர்களும் வரவேற்றார்கள். ஆனால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியாது. அதற்கான விவரங்களைக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அல்லது எடுக்கப் போகிறது என்று சொல்லவில்லை.

குத்தகை நிலங்கள் 5 ஏக்கர் இருந்தால் அதை 3 ஏக்கராகக் குறைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சில விவரங்களைத் தரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட நிலச் சீர்திருத்தம் வருவதற்கு முன்னால் தஞ்சை மாவட்டத்தில் இருந்த மாவட்டத் தலைவர் திரு. கிருஷ்ணசாமி வாண்டையார் முன்மொழிந்து. சிவகங்கை இராஜா அதை வழிமொழிந்து, அந்தத் தீர்மானத்தைப் போட்டு 3 வருஷம் கழித்துத்தான் இங்கே சட்டசபைக்கு அது வந்திருக்கிறது. ஆகவேதான் இந்த பினாமி நிலங்கள் உருவாக வழி ஏற்பட்டது. இங்கே நாளை அல்லது மறுநாள் அதுபற்றிய சட்டம் வரும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அந்த 'உறிஸ்டரியை' சொல்ல வேண்டாம்; அது எல்லோருக்கும் தெரியும். சட்டம் வந்து, ஏமாற்றியிருக்கிறார்கள். ஏமாற்றியவர்கள் யாராக இருந்தாலும் அதில் தாட்சணியம் காட்ட வேண்டியதில்லை. பினாமி நிலங்களை யார் வைத்திருந்தாலும் தயவு தாட்சணியம் காட்டாமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்,

இப்போது குத்தகை நிலங்களுக்கு வந்திருக்கிறீர்கள். 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது தமிழ்நாட்டில் ஒரு பெரிய வருவாய் உள்ள சொத்து அல்ல. தஞ்சை மாவட்டத்தில் 5 ஏக்கர் குத்தகை நிலம் வைத்திருப்பவர்களுக்கு, கால நிலை சரியாக இருந்தால் 1000 அல்லது 1,500 ரூபாய் வரும். அது ஒரு பெரிய வருமானம் அல்ல. அந்த 5 ஏக்கரை 3 ஆக குறைத்து விட்டால் அது வறுமையை பங்கு போடுவதாக அமையுமே அல்லாமல் வாழ்வுக்கு வழி வகுத்ததாக ஆகாது. மேலும் அதை அமுல்படுத்துவது மிகவும் சிரமம். 1,000 அல்லது 1,500 ரூபாய் வருமானத்தில் நீண்டநாள் வாழ்க்கை நடத்தி பழக்கப்பட்டவர்களிடமிருந்து இரண்டு ஏக்கர் நிலத்தை எடுக்க முயற்சி செய்வது அவ்வளவு நல்லதாகத் தோன்றவில்லை; அதனால் பெரிய பயன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. இந்த முயற்சி ஒரு ரூபாய் செலவு செய்து கால் ரூபாய் பெறுவதைப்போன்றுதான் இருக்கும். ஆகவே இது ஒரு நல்ல நடவடிக்கை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: குத்தகைச் சட்டத்தை பூராவும் படிக்கவில்லை என்பதால் தவறாகச் சொல்லக் கூடாது. குத்தகைச் சட்டத்தின்கீழ் இரண்டு வகை நிலம் இருக்கிறது. ஒன்று அரசுப் பொறுப்பு கழகத்திற்கு சொந்தமானது; இன்னொன்று தனியாருக்குச் சொந்தமானது. அரசு பொறுப்பு கழகத்திற்குச் சொந்தமான நிலத்தில் 5 ஏக்கருக்குமேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்று இருக்கிறது. நேற்றுகூட அதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு பொறுப்புக் கழகம் அல்லாத தனியார் நிலத்தை ஒருவர்

வைத்திருந்தால் சாதாரணமாக உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் ஒருவர் அதாவது ஒரு குடும்பம்—ஒரு குடும்பம் என்பது 3லிருந்து 5 உறுப்பினர்கள் வரை—15 ஸ்டான்டர்டு ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம். 5-க்கு மேல் போனால் ஒவ்வொரு வருக்கும் 5 ஸ்டான்டர்டு என்ற அளவுக்கு உட்பட்டு 30 ஸ்டான்டர்டு ஏக்கர் வரையில் வைத்துக்கொள்ளலாம். இதுதான் இன்றைக்கு இருக்கிற அரசு பொறுப்புக் கழகம் இல்லாத மற்றவர்கள் நிலத்தை வைத்துக்கொள்வது பற்றிய குத்தகைச் சட்டத்தின் அடிப்படையாக இருக்கிறது. இந்த அடிப்படையிலே பார்த்தால் ஒரு குடும்பம் என்ற பெயரால் 30 ஏக்கர், 60 ஏக்கர், 90 ஏக்கர் என்று ஒரு தனி குத்தகைக்காரர் ஒரு பண்ணையே வைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த மசோதா வருகிறபோது, படித்துவிட்டு விவரமாக பேசுகிறேன், இப்போது 5 ஏக்கராக இருப்பதைக் குறைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் கூறுகிறேன்.

அடுத்தபடியாக வீடு கட்டும் திட்டம். 30,000 வீடுகளுக்கு கடன் உதவி வழங்க முயற்சி செய்து, முடிவு செய்யப்பட்டு, இன்றைக்கு 38,000 வீடுகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்: கடன் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் எத்தனை வீடு கட்டப்பட்டது? கட்டிய வீடுகள் எத்தனை என்பதைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால் மிகக் குறைந்த அளவில்தான் வீடுகள் கட்டப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கு ரோடு வசதி, தண்ணீர் வசதி செய்துதர வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறீர்கள்; ஏற்றுக் கொள்கிறேன். இன்னும் பல காலனிகள் எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கின்றன. நீங்கள் சொல்லுகின்ற இந்தத் திட்டம் இப்போது மாநகரில் 'ஸ்லம் இம்ப்ருவ்மென்ட் ஸ்கீம்' இருக்கிறதே, அதைப்போல ஆகிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்லம் கிளியரன்ஸ் என்பதற்குப் பதிலாக ஸ்லம் இம்ப்ருவ்மென்ட் என்று வந்திருக்கிறது. அந்த ஸ்லம் இம்ப்ருவ்மென்ட் ஒரு இம்ப்ருவ்மென்டும் இல்லாமல் இருக்கிறது இந்த மாநகரத்திலே. அதே சூழ்நிலை கிராமங்களிலும் உள்ள அரிசன காலனிகளிலும் ஏற்பட்டுவிடாமல் அவை ஒழுங்காக நிறைவேற்றப்படக்கூடிய அளவுக்குச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து போர்ட் ஆப் ரெவின்யூவைக் கலைத்துவிடுகிறோம் என்று கூறியிருக்கிறீர்கள். இவ்வாறு கலைப்பதனால் என்ன லாபம் நமக்கு வந்துவிடப் போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. செகரட்டேரியட் என்பது வேறு, டைரக்டரேட் என்பது வேறு, செகரட்டேரியட்டிலே ஒரு பாலிசி, ஒரு கொள்கை பற்றிய முடிவினை எடுக்கிறோம். அதனை டைரக்டரேட் அமல்படுத்துகிறது. அதேபோன்று ரெவின்யூ சம்பந்தப்பட்ட வரையில் ஒரு போர்டு வைத்திருக்கிறோம். அரசாங்கம் எடுக்கக்கூடிய முடிவுகளை அமலாக்கக் கூடிய ஒரு டைரக்டரேட் அது. அதிலே 6 பேர் இப்போது மெம்பர்களாக இருக்கிறார்கள். விற்பனை வரி, மோட்டார் வெஹிக்கில்ஸ் வரி, மற்றும் ட்ரான்ஸ்போர்ட் வரி போன்றவற்றை அந்த போர்டு கவனித்து வந்தது. ஆனால் இந்த போர்டைக் கலைத்துவடுவதன் மூலம் என்ன புதிய பலன் இந்த அரசுக்கு வரப்போகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அங்கே இதுவரையிலும் 6 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சுயேச்சையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறையை ஒழுங்காக நேரடியாக நடவடிக்கை எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சில பிரச்சினைகள் வரும்போது மட்டும், அதாவது கொள்கைப் பிரச்சினைகள் என்று வரும்போது அவர்கள் 6 பேர்களும் சேர்ந்து உட்கார்ந்து முடிவு செய்கிறார்கள். ஆனால் அந்த போர்டைக் கலைப்பதன் மூலம் நீங்கள் அந்த வாய்ப்பையே இழந்துவிட்டீர்கள். ஆகவே அவ்வாறு கலைப்பதனால் நமக்கு நட்டம் தானேயொழிய லாபம் ஒன்றும் கிடையாது. அவர்கள் சுயேச்சையாக இன்றைக்கு இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாளை அதற்கென்று தனிக் கமிஷனர் அமைத்தாலும் அவர்களும் அதேபோலத்தான் செய்யப்போகிறார்கள், ஆனால் சில முக்கியமான கொள்கை பற்றிய முடிவுகளை எடுக்கின்றபோது அந்த 6 பேரும் சேர்ந்து உட்கார்ந்து முடிவு எடுக்கின்ற அந்த வாய்ப்பை இல்லாமல் செய்துவிட்டீர்கள். ஆகவே அந்த ரெவின்யு போர்டைக் கலைப்பதனால் மக்களுக்கு பெரிய நலன் ஏற்பட்டுவிடாது. தனியான முடிவுகளை விட 6 பேர் சேர்ந்து முடிவு எடுப்பது சிறப்பாக இருக்கும்.

அடுத்து இந்த ஆளுநர் அவர்களது உரையிலே தொழில் வளத்தைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு முந்தைய காலகட்டத்தை விட இப்போது குறைவாக தமிழ்நாட்டில் முதலீடு செய்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது முன்பு 8 சதவீதம் முதலீடு செய்யப்பட்டிருந்தது, இப்போது 4 சதவீதம் தான் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். உண்மையிலே தொழில் வளத்தைப் பெருக்கு

வதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? மத்திய அரசின் தொழில்கள் தமிழகத்திற்கு வரவேண்டும் என்று நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன? இவ்வாறு குறைவாக தமிழ் நாட்டில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வதால் மட்டும் பலன் வந்துவிடும் என்று நினைத்தால் அது தவறு. கடந்த இரண்டரை ஆண்டுக் காலமாக நமது மாநிலத்திலே தொழில் வளம் ஏற்படுவதற்கு இந்த அரசு எந்த முயற்சியையும் செய்தது கிடையாது.

அடுத்து சிறு தொழில் துறையிலேயும் சரி, கூட்டுறவுத் துறையிலேயும் சரி புதிய தொழில்களை ஆரம்பிக்கவே இல்லை.

மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே ரொம்ப அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது என்னவென்றால் முசுக்கொட்டை செடியை அதிகமாக நாங்கள் தயாரித்திருக்கிறோம் என்பதே. முசுக்கொட்டை செடியை அதிகமாகப் பயிரிடுங்கள்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதை வளர்ப்பதோடு தொழில் துறையிலேயும் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சர்க்கரை உற்பத்தியைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு தமிழ்நாட்டிலே பல ஆலைகளிலே......

[நண்பகல் 12-00]

## 5. அறிவிப்பு

### அவைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மணிமாறன் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் பேரவையின் நடவடிக்கை குறிப்பில் இருக்க வேண்டுமா என்று திரு. மாரிமுத்து கேட்டதற்கு நான் ஆய்ந்து பார்த்துவிட்டுப் பிறகு சொல்கிறேன் என்று சொன்னேன்.

"மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள்*** என்று ஆரம்பித்து***" என்று சொன்னது வரை பேரவையின் குறிப்பிலிருந்து நீக்கப்பெற வேண்டும் என்று உத்தரவிடுகிறேன். திரு. ஏ. ஆர். மாரிமுத்து தொடர்ந்து பேசட்டும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



(4) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம் (தொடர்ச்சி.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அடுத்து தமிழ்நாட்டிலே சர்க்கரை உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி உற்பத்தி குறைவாக இருப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன? நெல்லிக்குப்பத்தை எடுத்துக் கொண்டால், அந்த ஆலையில் இப்போது சமரசம் ஆகிவிட்டது. திறக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். கரும்பு பயிரிடுவதற்கு 125 ரூபாய்க்கு மேல் கொடுக்க முடியாது என்று ஆலை நிர்வாகம் கூறுகிறது. ஆகவே விவசாயிகள் அந்த 125 ரூபாய்க்குக் கொடுக்க எங்களுக்குக் கட்டுப்படியாகாது என்று கூறி 10,000 ஏக்கர் கரும்பு சாகுபடி செய்திருக்க வேண்டிய இடத்திலே ஆயிரம் ஏக்கருக்கும் குறைவாகத்தான் கரும்பு பயிரிடப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழகத்திலே போதிய கவனம், அரசு செலுத்தி கரும்பு உற்பத்திக் குறையாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11-க்கு ஆரம்பித்தீர்கள். இப்போது 12 ஆகிறது. நீங்கள் 1 மணி நேரம் கேட்டிருக்கிறீர்கள். ஏதாவது கொஞ்சம் நேரம் குறைத்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தங்களுக்குத் தொல்லை தராத வகையில் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். அடுத்து அத்தியாவசியமான பண்டங்கள் போதிய அளவு கிடைப்பதில்லை, அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்தில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. சர்க்கரை ஒரு பக்கம் இருக்கிறது. டீசல் கிடைக்காதது பெரிய பிரதானமாக இருக்கிறது. கிராமப் புறங்களிலே டீசல் கிடைக்கவில்லை என்று சொன்னால் எப்படி விவசாயம் பாதிக்காமல் இருக்கும்? எப்படி அவர்களது பம்பு செட்டுகள் ஓடும்? எப்படி விவசாயம் செய்வார்கள்? உங்களுக்கு கடந்த 1 வாரத்திற்கு முன்பே தெரியும் டீசலுக்கு தட்டுப்பாடு வரப்போகிறது என்று. தட்டுப்பாடு என்று கூட சொல்லக் கூடாது. சரியான முறையிலே விநியோகம் செய்யப்படுவதில்லை. டீசல் விநியோகம் செய்பவர்கள் சரியாகச் செய்யாமல், கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள் என்ற குற்றச் சாட்டு சொல்லப்படுகிறது. அதைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுத்து டீசல் எண்ணெய் பரவலாக நியாயமான அளவுக்குக் கிடைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்ய நியாய விலைக் கடைகள் எல்லா இடங்களிலும் திறந்திருக்கிறோம் என்று சொல்லப்பட்ட போதிலும், அந்தப் பண்டங்கள் கிடைக்க வில்லை. அவைகள் தடையில்லாமல் கிடைப்பதற்கு ஏற்பாடு களை அரசு செய்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலைமையை பாதுகாப் பதற்காக 100 கோடி ரூபாய் செலவில் பெரிய திட்டம் போடப் பட்டிருப்பதாக சொல்கிறார்கள். 100 கோடி ரூபாய் என்று சொன்னாலே விவசாயிகள் எல்லாம் நமக்காக 100 கோடி ரூபாய் செலவா என்று நினைப்பார்கள். ஆனால் எத்தனை ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்? 50 ஆண்டு களிலா, 15 ஆண்டுகளிலா? எப்படி இந்த 100 கோடி ரூபாயைச் செலவு செய்யப் போகிறார்கள்? அவர்களுக்கு ரோடுகள் போடப் போகிறார்களா? அந்தக் காரணங்களை யெல்லாம் சொல்ல வில்லை. விளை பொருள்களைக் கொண்டு செல்ல சரியான சாலை வசதிகள் இல்லை கிராமப்புறங்களிலே. அப்படி ரூரலாக உள்ள ஏரியாக்களுக்கு ரோடுகள் போட்டு சாலைகளைச் செப்பனிட்டு போதிய நடவடிக்கைகளை எடுக்காத காரணத் தினால் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் நின்றிருக் கின்றன. இந்தத் திட்டம் உண்மையிலேயே பயன் உள்ளதாக இருக்கலாம். ஆனால் அவை உரிய காலத்திலேயே நிறை வேற்றப்பட வேண்டும், அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையங்களைப் பாதுகாத்து மேம்படுத்தப் போகிறோம் என்று அறநிலையத்துறை அமைச்சர் கூறியிருக்கிறார்கள், ஆனால் அறநிலையங்களில் போடுகிற அறங்காவலர்களை எல்லாம் எப்படிப் பார்த்து போடுகிறார்கள் என்றால், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களைத்தான் போடுகிறீர்கள். அதை ஒன்றும் சொல்லவில்லை; போட்டுக் கொள்ளுங்கள். நிர்வாகம் பண்ணுகிற தகுதியில்லாத ஆட்களாகப் பார்த்து போடுகிறீர்கள். பல்வேறு இடங்களிலே எம். ஜி. ஆர். மன்றங்களிலே உள்ளவர் களையெல்லாம் போடுகிறீர்கள். இப்படிச் செய்வது அறநிலை யங்களில் அறத்தைக் காப்பதற்குப் பயன்படாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தகுதி உள்ள ஆட்களை அதற்கு நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்வீஸ் கமிஷனிலே 1977 ஆம் ஆண்டிலே தேர்வு செய்யப் பட்டவர்களுக்கு இதுவரையிலும் வேலை கொடுக்கவில்லை. இவர்கள் வேலையில் இருந்து 1 ஆண்டு, 2 ஆண்டுகள் வேலையில் இருந்த பின்னர் (ஊஸ்ட்) பதவி விலக்கம் செய்யப்பட்டவர்கள், அவர்கள் தனியாக தேர்வு எழுதி, தேர்வு செய்யப்பட்டவர்கள்,



அப்படித் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இந்த நிலைமை எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இது சென்ற பட்ஜெட் தொடரிலேயே பேசப்பட்டது. பேசி இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்கவில்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கிற நிலை.

மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் இவர்களுக்கு உதவித் தொகை ரூ. 115 கொடுப்ப தாக அரசாங்கம் அறிவித்தது. இரண்டு ஆண்டுகளாகியும் மாணவர்களுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை யென்று மாணவர்களிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு அரசாங்கம் அறிவித்து இரண்டு ஆண்டுகள் கழிந்தும்கூட அந்த உதவித் தொகை கொடுக்கப்படவில்லை என்றால் அந்த மாணவன் எப்படிப் படிப்பான்? அவன் படிக்க வேண்டிய புத்தகங்களை எப்படி வாங்குவான்? பள்ளிக்கூடத்திற்கு உரிய கட்டணத்தை அவன் எப்படிக் கட்டுவான்? இது குறித்து ரொம்பவும் மனம் வெதும்பி நேற்றைய தினம் எனக்கு எழுதியிருக்கிறார்கள். ஆகவே இதில் கவனம் செலுத்தி பிற்பட்டோர் நலத்துறை உடனடியாக அந்த மாணவர்களுக் கெல்லாம் உதவித் தொகை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

தர்மபுரி ஜில்லாவில் மேல்நிலைப் பள்ளியில் தெலுங்கைப் பாடமாகக் கொண்டு படித்த மாணவர்களுக்குப் பரீட்சை நேரத் தில் இங்கிலீஷில் பேப்பர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் படித்து பரீட்சை எழுத முடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது. எந்த மொழியில் பாடம் படித்தானோ அந்த மொழியில் கேள்வித்தாள்கள் கொடுத்தால் தான் எழுத முடியும். இது தர்மபுரி ஜில்லாவில் ஹோசூர், டெங்கினிக் கோட்டையில் நடந்திருப்பதாகத் தகவல் வந்திருக் கிறது. நிர்வாகத்தில் எவ்வளவு பெரிய தவறுகள் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தேர்தலுக்குப் பிறகு பலயிடங்களில் சண்டைகள், வம்புகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அவை குறித்து போலீஸ் சரியான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. அந்தப் புகார்கள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு நடவடிக்கை கள் எடுக்கப்பட வேண்டும். முதுகளத்தூர் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களால் அடிக்கப்பட்டு

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1980 பிப்ரவரி 6

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். போலீஸுக்கு புகார் கொடுக்கப்பட்டும் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று தந்தி வந்திருக்கிறது.

இந்த மாதிரியான நிலைமையில் நிர்வாகத்தில் ஒரு ஸ்தம்பிதம் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகள், என்ன ஆகப்போகிறது என்ற கருத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ, சரியான நடவடிக்கைகள் எங்கும் இல்லை. அரசாங்கத் துறையைச் சார்ந்த ஊழியர்களாக இருந்தாலும் சரி, காவல் துறையைச் சேர்ந்த ஊழியர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, எல்லாத் தரப்பினரிடையேயும் அவர்களை விரோதப்படுத்தக்கூடிய ஒரு கொள்கையை அரசாங்கம் கடைபிடித்து வந்ததால் உங்கள் நிர்வாகத் திறன் குறைந்து மிகச் சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சலவைத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்வோம். நமக்கு சலவை பண்ண வேண்டும். சலவைத் தொழிலாளர்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களான சோப், சோடா, நீலம் போன்றவை கிடைப்பது கிடையாது. ப்ளாக் மார்க்கட்டில்தான் அவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. வெளிமார்க்கட்டில் அவர்களுக்கு இவையெல்லாம் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழகத்தில் இருக்கிற சலவைத் தொழிலாளர்கள் எல்லாம் மாநாடு நடத்தி தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பொருள்கள் அவர்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை. தூத்துக்குடியில் 342 பேர்கள் உண்ணாவிரதம் இருந்து அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படித் தெரிவித்திருந்தும் கூட அரசாங்கம் அதிலே போதிய அக்கறை செலுத்தவில்லை.

சென்னையில் உள்ள பரங்கிமலைப் பகுதியில் முத்துரங்க நகரில் அரசாங்கப் புறம்போக்கு நிலத்தில் இந்திய தேசீய காங்கிரஸ் சேவா சங்கம் என்ற பெயரில பத்து வருடங்களாக ஒரு கொட்டகை போட்டு சங்கம் அமைத்து நடத்திக் கொண்டு வந்தார்கள். சென்ற ஆண்டு அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இரவில் சென்று அந்தக் கொட்டகையை ஆக்கிரமித்துக் கொண்டு என் கொட்டகை என்று சொல்கிறார்கள். அது சம்பந்தமாக இந்த அவையில் பேசப்பட்டது. முதல் அமைச்சர் அவர்களிடம் புகார் எழுதிக் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினோம். வேலியே பயிரை மேய்ந்த சமாசாரம் நடந்திருக்கிறது என்று சொன்னால் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த சப்-இன்ஸ்பெக்டர் பெயர் ப்ரான்ஸிஸ்.



1980 பிப்ரவரி 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து[

அடுத்து கும்முடிப்பூண்டி வட்டத்தில் பாதிரிவேடு மாதர்பாக்கத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளி 1 ஆண்டு 7 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு இதுவரையில் பத்து ஆசிரியர்கள் போடாத நிலையில் அந்தப் பள்ளிக்கூடம் நடக்குமானால் அந்த மாணவர்கள் தரம் என்னாவது? அந்த மாணவர்களின் கதி என்ன? இதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் தாமதம் என்றால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் பள்ளிக்கூடம் ஆரம்பித்து 20 மாதங்கள் ஆகியும்கூட அங்கு படிக்கிற மாணவர்களுக்கு போதிய ஆசிரியர்கள் இல்லை என்ற நிலை இருந்தால் என்னாவது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

(பிற்பகல் 12-10)

கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் குறைகளை வைத்து சென்ற ஆண்டு பெரிய போராட்டம் நடத்தினார்கள். அரசாங்கத்தோடு பேசி, மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்களோடு பேசி, ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அரசு நிறைவேற்றுவதாக ஒத்துக்கொண்டு, பலவற்றை இன்னும் நிறைவேற்றவில்லை. தற்காலிகமானவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது அவர்கள் கோரிக்கை. உதவிப் பேராசிரியர்களின் பதவியை மேம்படுத்துதல். இம்மாதிரி சில கோரிக்கைகள் இன்னும் அரசால் நிறைவேற்றப்படவில்லை. அரசு உறுதி கூறியும், அவைகளை நிறைவேற்றுவதற்கு முன்வரவில்லை. இதையெல்லாம் செய்வதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டும். இதையெல்லாம் செய்யாமல், அரசு கொள்கை ரீதியாக தெளிவு இல்லாத நிலையில் நடந்திருக்கின்றது என்ற குற்றச்சாட்டுகளின் காரணமாக, மக்கள் உங்களை நிராகரித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை என்று கூறி, நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. சௌந்திரராசன்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30 ஆம் தேதி இந்த மன்றத்தில் கவர்னர் அவர்களாலே படிக்கப்பட்ட உரையின் மீது, அந்த உரையை ஆதரித்து, எங்கள் இயக்கத்தின் தோழர் மதிப்பிற்குரிய திரு. பாண்டியன் அவர்கள் கூறிய கருத்தை ஆதரித்து, நான் சில கருத்துக்களை உங்கள் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்த கவர்னர் அவர்கள் உரையின்மீது மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே சில நேரங்களில் பேசுகின்றபோது, இந்த உரையை வரிந்து கட்டிக் கொண்டு, பத்திரிகைகளிலே தலைப்புகளாகக் காட்டுகின்ற வகையில் பல்வேறு சொற்றொடர்களைக் கூறி, தொடர்ந்து பேசியிருக்கிறார்கள். நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புவது

எல்லாம், கடந்த 1977 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு வந்திருக்கின்ற நம்மை, இந்த நாட்டிலிருக்கின்ற மக்கள் 5 ஆண்டு காலம் ஆட்சி நடத்துவதற்கு சட்ட ரீதியாக அனுமதித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தும் கூட, இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை, டெல்லித் தீர்ப்பை மனதிலே வைத்துக்கொண்டு, அதை தமிழகத் தீர்ப்பாக பல்வேறு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம், இன்றைய தினம் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் டெல்லியிலே பிரதமராக இருப்பதற்கு நாட்டிலே இருக்கின்ற மக்கள் அனுமதித்திருக்கிறார்கள். ஆனால், இங்கே இந்த இயக்கத்தோடு இணைந்து தேர்தலிலே போட்டியிட்டவர்கள், இன்றைய தினம் பரமசிவன் கழுத்தில் உள்ள பாம்பைப்போல கருதிக்கொண்டு, கருடா, என்ன சவுக்கியமா? என்று கேட்பது போல், எங்களைப் பார்த்து ராஜிநாமா செய்யவேண்டும். மானம் இருந்தால் செய்யவேண்டும், உங்களுக்கு இரத்தம் இருந்தால் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். இவைகள் எல்லாம் ஒரு வேளை மாலைப் பத்திரிகையிலே தலைப்பாக வருவதற்கு பயன்படலாமே தவிர, அதிலே என்ன நியாயம் இருக்கின்றது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் நம்முடைய அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் உண்மையிலேயே மற்றவர்களைப் போல பேசுவதில், இமிடேஷன் செய்வதில் அவருக்கு நிகராக யாரும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட அருமை நண்பர், இன்றைய தினம் பேசுகின்ற நேரத்தில், இங்கே ஏதோ பேச வேண்டும் என்று கருதிக்கொண்டு, பல்வேறு கருத்துக்களை எடுத்துவைக்கின்ற நேரத்தில், இந்தத் தமிழக அரசு ராஜிநாமாச் செய்யவேண்டும் என்பதற்காக, காரண காரியங்களைக் கூறி, ஏதேதோ பேசினார்கள். இன்றைய தினம் தமிழகத்தில் தேர்தல் முடிந்ததற்குப் பின்னால், இந்தத் தேர்தலின் விளைவாக, இங்கே யாவது ஆட்சியை கலைத்துவிடலாமே, அதற்குரிய வாய்ப்புகளை கொடுப்போமா என்பதை மனதில் வைத்துக்கொண்டு, முதலிலே உறுப்பினர்களை விலை பேசி, அப்படி விலை பேசுகின்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுவிட்டு, அதிலே சோர்வு அடைந்ததன் காரணமாக ஏப்படியாவது இந்த ஆட்சியைக் கலைத்துவிடுவது, நாம் அந்த இடத்தில் உட்கார முடியுமா என்பதற்காகப் பேசியிருக்கிறார்கள். ஆனால், ஒன்றை நான் தெளிவாக்கிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் பேசுகின்ற போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் 'நாங்கள் திராவிட பாரம்பரியத்தில் இருந்து வந்தவர்கள், இங்கே வாருங்கள்' என்று சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே தெளிவாகக் கேட்டுக்





கொள்கிறேன். நீங்கள் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறீர்கள், திராவிட பாரம்பரியத்திலிருந்து விலகி, யாருக்குக் பின்னாலோ தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். யாருக்கு மகுடம் சூட்டுவதற்கு நீங்கள் தயார் படுத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

நீங்கள் பேசுகின்ற நேரத்திலே சென்னையிலே பல்வேறு கொலைகள் நடைபெற்றன என்று சொன்னீர்கள். அவைகளைக் கண்டு பிடிக்கமுடியவில்லை என்றும் சொன்னீர்கள். நான் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு ஆட்சி நடக்கிறபோது நடைபெறுகின்ற கொலைகளைக் கண்டுபிடிப்பதற்கு அங்கே காவல்துறை இருக்கிறது. சில கொலைகளில், சில நேரங்களிலே, கண்டுபிடிப்பதற்குத் தாமதம் ஏற்படுகிறது, தாமதமாகக் கண்டுபிடிக்கப்படுகின்றன. கடந்த காலத்திலே, அருமை நண்பர் எடுத்துச் சொன்னதுபோல், விஷ ஊசி வழக்கு சம்பந்தமாகப் பார்த்தால் பல கொலைகள் நடந்த பிறகு தான் ஒரு ஆண்டுக்குப் பின்னால்தான் துப்புகூடக் கிடைத்திருக்கிறது. மலேஷியா மகாலிங்கம் கொலை போன்ற கொலைகள் இந்த நாட்டிலே நடந்து இருக்கின்றன, கண்டு பிடிக்க முடியாமல் மறைத்திருக்கிறார்கள். இராணி ஆறுமுகம் கொலை வழக்கு என்ன ஆயிற்று என்றே எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்றைய தினம் மக்களுடைய மறதியை மூலதனமாக வைத்துக்கொண்டு, மக்கள் அதையெல்லாம் மறந்துவிட்டார்கள் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு, இந்த மன்றத்திலே பேசுகின்றபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன, கண்டுபிடிக்க முடியவில்லை, ஆட்சியிலிருந்து இறங்க வேண்டுமென்று அலங்கார சொற்றொடர்களை அள்ளி வீசினார்கள். அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்திலே என்ன என்ன தவறுகள் நடைபெற்றன என்பதையும், அவைகளுக்கு எல்லாம் யார் காரணம் என்பதையும் அந்தத் தவறுகள் மறைக்கப் படுவதற்கு எப்படிப்பட்ட சூழ்நிலைகள் காரணமாக இருந்தன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திண்டுக்கல் தேர்தலில் தோல்வியுற்றபோது நீங்கள் ராஜிநாமாச் செய்யச் சொல்லவில்லையா என்று கேட்டார்கள். திண்டுக்கல் தேர்தலுக்கு முன்னாலே பாராளுமன்றத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் தேர்தல் நடந்த காலத்திலே நாம் எல்லாம் ஒன்றாக இருந்தவர்கள். 1971 ஆம் ஆண்டு நடந்த அந்தத் தேர்தலில் தேர்தல் வெற்றிக்காக நாங்கள் அரும்பாடு பட்டவாகள். அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர்கள் என்ற உரிமை இருக்கிற காரணத்தினாலேயும்,

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிரிவினை ஏற்பட்டு தொண்டர்களும், கழகத்திற்காக உழைத்த புரட்சித் தலைவர் அவர்களும் வெளியேறியதற்குப் பின்னாலே திண்டுக்கல்லிலே ஏற்பட்ட தோல்வியின் காரணமாக நீங்கள் ஆள்வதற்குத் தகுதியில்லை என்று மக்கள் சொல்லிவிட்டார்கள் என்றுதான் நாங்கள் சொன்னோமே தவிர அன்றைக்கு இருந்த சூழ்நிலை இன்றைக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திண்டுக்கல் தேர்தலுக்கு இருந்த அந்த அடிப்படை இதிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் வெங்காயம் விலையேறிவிட்டது, தாலிக்குத் தங்கம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். படியரிசி ஒரு ரூபாய்க்கு இந்த நாட்டிலே விற்ற நேரத்திலே மூட்டை நெல் 40 ரூபாய்க்கு விற்றபோது இரண்டே நாட்களில் மாயா பஜார் வேலைகள் நடத்திய பாவிகளே பதில் சொல்வதற்கு தயாராகுங்கள், இந்த நாட்டிலே படியரிசி 10 ரூபாய்க்கு விற்றதற்கு யார் காரணம் என்று சொல்வதற்குத் தயாராக இருங்கள். இன்றைக்கு இந்திரா காந்தியின் பின்னாலே நின்றுகொண்டு நீங்கள் புனிதர்கள் போல, புத்தர்கள் போல நீங்கள் நாடக வசனம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் சொல்கிறீர்கள், மக்கள் உங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று. ஆனால் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே 48 இலட்சம் வாக்குகள் பெற்று இருக்கிறோம் என்பதை நான் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முதலிலே நான் குறிப்பிட்டேன், கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே எத்தனை கொலைகள் நடந்திருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குமாரபாளையத்திலே பாத்திமா என்ற முஸ்லீம் பெண் எந்த அளவிற்கு கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள் என்பதையும், தஞ்சாவூரிலே ஜமீலா என்ற பெண் எந்த அளவிற்கு கொலை செய்யப்பட்டாள் என்பதையும் இந்த நேரத்திலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)*

[பிற்பகல் 12.20]

அதைப் போலவே இன்றைய தினம் சொல்லுகிறார்கள்—விழுப்புரம் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்கள். நான் அவர்களுக்குக் கவனப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சில நேரங்





களில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்று விடுகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மை ஆளாக்கியவர்கள். அவர்கள் இருந்த காலத்தில் வெண்மணி நிகழ்ச்சி நடந்துவிடவில்லையா என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். விழுப்புரத்தைப் பற்றிச் சொல்லுகிற நீங்கள் வெண்மணி நிகழ்ச்சிக்கு அண்ணா தான் பொறுப்பு என்ற குற்றச்சாட்டைச் சுமத்தத் தயாராக இருக்கிறீர்களா என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அதைப் போலவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் அன்றைய தினம் நம்முடைய சென்னை கடற்கரையிலே மிகப் பெரிய கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. அந்தக் கூட்டத்தை இந்திரா காங்கிரஸ் நடத்துவதாக இருந்தார்கள். அப்போது ஜெயப்பிரகாஷ் நாராயணன் வந்தார். அவர் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி தந்துவிட்டு இந்தக் கூட்டத்திற்கு அனுமதியை ரத்து செய்து விட்டார்கள். அந்தக் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி தரப்பட்ட சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டியதற்கு எந்த அளவுக்குத் தாக்கப்பட்டார்கள், அடிக்கப்பட்டார்கள், அவர்களுடைய ரத்தம் பரிமாறப்பட்டது என்பதை நான் இந்த நேரத்தில் கவனப்படுத்த விரும்புகிறேன். அதற்காக கண்ணப்பர் திடலில் புரட்சித் தலைவர் பெரிய கூட்டத்தை நடத்தி அதற்குப் பின்னால் அமைச்சர்கள் வருகிற நேரத்தில் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டுமென்று சொன்னதன்பேரில் அன்றைய தினம் பொருளாளராக இருந்த மதிப்பிற்குரிய சட்டமன்றத்தின் செவ்விய முதுபெரும் உறுப்பினர் திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக இருபது முப்பது ஆண்டுக் காலமாகப் பாடுபட்டு வருபவர், செங்கல்பட்டிலே கொடியைக்கூட கம்பிலே கட்டாமல் கையிலே கறுப்புத் துணியை வைத்துக் கொண்டிருந்த அவர்களை எந்த அளவுக்கு அடித்து நொறுக்கி அவர் குற்றுயிராக விழுந்து மருத்துவ மனையில் இருந்த நேரத்தில் அவரை 300 நாட்கள் சுமந்து பெற்றெடுத்த தாய் பார்ப்பதற்காக அனுமதி கேட்டபோது அனுமதிக்கப்படாத சூழ்நிலை இவர்களுடைய ஆட்சியிலே ஏற்பட்டிருந்தது என்பதை இந்த நேரத்தில் கவனப்படுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இவைகளை எல்லாம் எதற்காகக் கூறுகிறேன் என்று சொன்னால், இன்றைய தினம் குற்றச்சாட்டு சுமத்துபவர்கள், இவைகளுக்கெல்லாம் மூலகாரணமாக தங்களைத் தாங்களே ஆளாக்கிக் கொண்டவர்கள் இயற்கையாக நடைபெற்ற கொலை

நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். இவர்கள் ஆட்சிக் காலத்தில் முதல்வரும், அமைச்சர்களும் வெளியே செல்லுகிறபோது திட்டமிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார்கள். இங்கே உறுப்பினராக இருக்கக்கூடிய நம்முடைய ராதா அவர்களுடைய அச்சகம் எந்தக் காரணத்திற்காகத் தாக்கப்பட்டது என்பதை இங்கே இருப்பவர்கள் நன்றாக அறிவார்கள். அதைப் போலவே இன்னும் பல நிகழ்ச்சிகளை என்னால் எடுத்துச் சொல்ல முடியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான், படிப்பதற்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற மாணவன் எங்கள் தோழன் கூறு கூறாக வெட்டிப் போடப்பட்டான். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல. டாக்டர் பட்டம் பெறுவதற்காக ஒரு உதயகுமாரைத் தூக்கி அடித்து தண்ணீரில் போட்டவர்கள்தான் இன்றைய தினம் தத்துவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே கிளைவ் ஹாஸ்டலில் பச்சிளம் குழந்தைகள் ஏழு எட்டு வயது மாணவர்களின் ரத்தத்தை உறிஞ்சியவர்கள்தான் மானம் இருக்கிறதா, உங்களுக்கு மக்களிடத்தில் நம்பிக்கை இல்லை என்றெல்லாம் எடுத்துச் சொல்லுகிறார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். கடந்த கால வரலாற்றை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்தால் கடந்த கால சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் புரட்டிப் பார்த்தால் ஒவ்வொரு ஏடும் கறை படிந்த ஏடாகக் காட்சியளிக்கும். அதற்குக் காரண மானவர்கள்தான் இன்றைய தினம் திரு. துரைமுருகன் சார்ந் திருக்கும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட கொடுமைகளை எல்லாம் செய்தவர்கள், நடந்து முடிந்த தேர்தலில் பெற்ற வெற்றியைக் கொண்டு மக்களிடம் ஏற்பட்டிருக்கிற மறதியை மூலதனமாக வைத்துக் கொண்டு தாங்கள் பெரிய கோட்டையைக் கட்டப் போவதாக நினைத்துக் கொண்டு பாளையங்கோட்டை எங்கே, அருப்புக் கோட்டை எங்கே என்று சொல்லி மனக்கோட்டை கட்டினால் அது நிச்சயமாகத் தூள் தூளாகிவிடும், தூள் தூளாக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த அரசுக்கு மக்கள் அளித்திருக்கும் ஆதரவு இன்னும் இரண்டரை ஆண்டுக் காலத்திற்கு இருக்கிறது. ஐந்து ஆண்டுக் காலத்திற்கு சட்ட ரீதியாக இந்த ஆட்சியை நடத்துவதற்கு மக்கள் அனுமதித் திருக்கிறார்கள். அந்த அனுமதியைப் பெற்ற இந்த அரசை இன்றைய தினம் கலைத்து விடுவதற்கான முயற்சியில் ஈடுபடுவா



களானால் இந்த முன்மாதிரிகள் எதிர்காலத்தில் இரண்டாண்டுக்கு ஒரு தேர்தல், ஒவ்வொரு ஆண்டும் ஒரு தேர்தல் வரும் சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்கிவிடும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட எண்ணங்களை மனதில் வைத்துக் கொண்டிருப்பவர்கள், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள், ஆளும் கட்சியாக ஆகும் வாய்ப்பை இழந்தவர்கள் ஒரு ஆட்சி நடைபெற வேண்டுமானால், அந்த ஆட்சிக்கு உறுதுணையாக, அவர்கள் தவறு செய்கிறபோது சுட்டிக் காட்டலாம். குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லலாம். அதை விட்டுவிட்டு ஏதோ விரோத உள்ளத்தோடு நீங்கள் இப்படிப் போவீர்கள், அப்படிப் போவீர்கள் என்று அர்ச்சனை செய்யும் காட்சியைத்தான் பார்க்கிறோம்.

இன்றையதினம் புதிய உறவை வைத்துக் கொண்டிருப் பவர்கள் கடந்த காலத்தில் இந்திரா காந்தி அம்மையாரைப் பற்றி என்னென்ன எழுதியிருக்கிறார்கள், என்னென்ன பேசி யிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மதுரை சம்பவத்தை இன்னும் மறந்து விட முடியவில்லையே. தஞ்சாவூருக்கு இந்திரா காந்தி வந்தால் என்ன ஆவார் என்று கர்ஜித்ததை இன்னமும் மறந்து விட முடியவில்லையே. இவைகளை எல்லாம் தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாக மறந்து விடுவார்கள். அந்த மறதியில் காலம் ஓட்டலாம் என்று அருமை நண்பர் துரை முருகன் அவர்கள் கருதுவார்களானால் நிச்சயமாக அவர்களுடைய மனக்கோட்டை தூள் தூள் ஆகி விடும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து இந்த கவர்னர் உரையை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :</u> தலைவரவர்களே, ஆளுநர் உரையின்பேரில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி தந்ததற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரை என்பது சில கொள்கை விளக்கங்களைச் சுட்டிக்காட்டவும், எதிர்காலப் பணிகளை உள்ளடக்கியும் இருக்கும் என்பது நாம் கண்டு வந்திருக்கின்ற மரபாகும். ஆனால் இந்த ஆளுநர் உரையில் கொள்கை விளக்கங்களைக் காண முடியவில்லை. ஏற்கனவே அறிவித்த திட்டங்களைத் தொகுத்துச் சொல்லியிருக்கிறார்களே தவிர, புதிய திட்டங்களையோ அல்லது அடுத்த பட்ஜெட்டிலே சுட்டிக் காட்டப்பட வேண்டிய திட்டங்களைப் பற்றியோ எந்த விதமான அறிப்பும் வரவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1980 பிப்ரவரி 6

இன்றைக்கு மிக முக்கியமாக விவாதிக்கப்படுகின்ற பிரச்னை, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் ஆகும். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலைப்பொறுத்த வரையிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற முடிவுகளைப்பற்றி விமர்சனம் செய்யும்பொழுது இங்கேயிருக்கின்ற பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கருததுத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆட்சி மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கிறது. இந்த ஆட்சி தொடர்ந்து இருப்பதற்கு, நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதைப்போல் ''மாரல் அத்தாரிட்டி'' இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்தத் தேர்தலுக்குப் பிறகு இன்றைக்கு ஒரு நிலையற்ற தன்மை உருவாகி இருப்பததை யாரும் மறுத்துவிட முடியாது. ''நெபுலஸ் ஸ்டேஜ்'' என்று சொல்வதைப்போல உறுதியற்ற, நிலையற்ற தன்மை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையற்ற தன்மையின் காரணமாக இன்றைக்கு நிர்வாகம் ஸ்தம்பித்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நாம் பார்த்தோம். இந்த அரசாங்கத்திலேயுள்ள சில அதிகாரிகளை, நம்முடைய அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களுடைய விலகலைத் தொடர்ந்து மாற்றம் செய்தார்கள். அப்படி அந்த அதிகாரிகளை மாற்றியஉத்தரவுகளை உடனடியாக இரண்டு நாட்களுக்குள்ளாக ரத்து செய்தார்கள். இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது இந்த அரசாங்கம் இப்பொழுது ''டெஸ்பரேட்'' ஆக ஒரு முடிவுக்கு வந்து விட்ட நிலைமையைத்தான் பார்க்கிறோம். காலையிலே மாற்றல் உத்தரவு போடுவது, மாலையிலே ரத்து செய்வது போன்ற காரியங்களைப் பார்க்கும்பொழுது இன்றைக்கு இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில் ஒரு 'மிட் சம்மர் மேட்னெஸ்' என்று சொன்னாலும் பொறுத்தமாக இருக்கும். அதுபோன்ற காரியங்களைச் செய்து வருவதை நாம் பார்க்கிறோம்.

இன்றைக்கு இருக்கின்ற பிரச்னையை உண்மையாக இவர்கள் உணர்கிறார்களா இல்லையா என்பதைவிட, நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற வதந்தியே கொன்றுவிடும் போல் இருக்கிறது. ரூமர், வதந்திகள் இன்றைக்குப் பெருவாரியாக இருந்து வருகிறது. நண்பர்கள்கூட வெளியே சொல்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய ஆளுங்கட்சி எம். எல். ஏக்கள் முதலமைச்சரவர்களின் தலைமையில் கூடுவதாகச் சொல்கிறார்கள். அதில் சில முடிவுகள் எடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அது நல்ல முடிவாக, ஜனநாயகத்தை மதிக்கும் முடிவாக எடுக்கப்பட



1980 பிப்ரவரி 6] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

வேண்டும். ஆளுங்கட்சி நண்பர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பதவியை விட்டு விலகுவது என்பது அவ்வளவு சீக்கிரமாக யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாதுதான். ஆனால் பதவி விலகுவது என்பது என்றால், அதற்கும் தைரியம் வேண்டும். தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியும், ஆனால் பதவி சுகத்தை அனுபவித்து விட்டு, அந்தப் பதவியை விட்டு விலகுவது எனபது அவ்வளவு ''ஈசி'' அல்ல, அதற்கும் தைரியம் வேண்டும். ஜனநாயக அடிப்படையில் அந்தக் காரியம் நடைபெறும் என்று நான் நம்புகிறேன். இன்று மாலையில் முடிவு செய்வதாகச் சொல்லப்படுகிறது, அது எந்த அளவிற்கு இருக்கும் என்று தெரியவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், சென்னையைப் பொறுத்த வரையில் சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது. நான் இப்பொழுது பட்டினப்பாக்கத்திலே குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கின்ற பகுதிக்குப் பின்னால் 'லோ இன்கம் க்ரூப்'–இல் உள்ள 'எம்' பிளாக்கிலே ஒரு அரசாங்க ஊழியரது மனைவி பட்டப் பகலிலே கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை சம்பந்தமாக துப்பு இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கொலையும், கொள்ளையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

[பிற்பகல் 12.30]

இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் அவர்கள், தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நிலைமைகளை நாம் பார்க்கும்பொழுது தேர்தல் அமைதியாக நடைபெற்றதாகத் தெரியவில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாயவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களைப்பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் எவ்வளவு அமைதியானவர், எவ்வளவு சாந்தமானவர், அண்ணாவின் கொள்கைகளை, பெரியாரின் கொள்கைகளைத் திடமாகப் பின்பற்றக் கூடிய ஒரு நண்பர், அவரைத் தாக்கியிருக்கிறார்கள். பெரியாரின் பேரால் அமைந்திருக்கின்ற—அண்ணா மன்றத்திலே அவர் அமர்ந்திருக்கும்போது ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 3 மணி நேரம் கல்மாறி பொழிந்திருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. தேர்தலுக்கு வேலை செய்த பாண்டியன் என்ற கழகத் தொண்டனை கொலை செய்திருக்கிறார்கள். முதலமைச்சர் வருகின்ற காலத்திலே இதுபோன்ற சம்பவம் நடைபெற்று இருக்கிறது. 22 வயது மதிக்கத்தக்க பாண்டியன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறான். இந்தப் படுகொலையைப் பற்றி இது வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

மாதவரம் ஒன்றியத்திலே புள்ளி என்கிற கழகத் தொண்டரை 13-1-80 அன்று கொலை செய்திருக்கிறார்கள். கோவிந்தசாமி என்பவர் மகன் அன்பு என்பவரைக் கொலை செய்திருக்கிறார்கள். இந்தக் கொலையைப் பற்றிப் புகார் கொடுத்தும் கூட இது வரையிலும் போலீஸ் தரப்பிலே நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். போலீசார் இது போன்ற வழக்குகளில் விசாரணை செய்யாத நிலைமையில் இருப்பதைப் பார்க்கும்போது சட்டம்–ஒழுங்கு செயல்படுகிறதா என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அரசாங்கத்திற்கு வருமானம் வரத்தக்க ஒரு வழியாக 'சுகர் கேன் பர்ச்சேஸ் டாக்ஸ்' இருக்கிறது. அந்த சுகர்கேன் பர்ச்சேஸ் டாக்சின் மூலமாக சில கோடி ரூபாய்கள் அரசாங்கத்திற்கு வருகிறது. எனக்குக் கிடைத்த தகவலின்படி ஏதோ சிலர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சு வார்த்தை மூலமாக நான் கடுமையான வார்த்தைகளைச் சொல்ல விரும்பவில்லை— பேரங்களின் மூலமாக அந்த பர்ச்சேஸ் டாக்சை தள்ளுபடி செய்வதாகப் பேசப்பட்டு அந்த பர்சேஸ் டாக்ஸை தள்ளுபடி செய்வதற்கு அரசாங்க அதிகாரிகள் மூலமாக பைல்கள் நகர்த்தப்படுவதாக நான் அறிகிறேன். அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது இந்த பர்ச்சேஸ் டாக்ஸ் மூலமாக அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானத்திற்குத் தடை செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அறிவுரையைச் சொல்ல விரும்புகிறேன்

அடுத்து, வியாபாரிசளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அவரை வியாபாரிகள் சந்திக்க வில்லை என்று. பிப்ரவரி 1ஆம் தேதி நடைபெற்ற அர்த்தால் என்னை சந்தித்திருந்தால் நடந்திருக்காது என்று சொன்னார்கள். சென்னையில் நடைபெற்ற மாநாட்டுக்கு நானும் போயிருந்தேன். அமைச்சர்கள் 3 பேர்கள்—வருவாய்த் துறை அமைச்சர், உணவு அமைச்சர், நிதி அமைச்சர்—வருவதாக விளம்பரங்கள் செய்யப்பட்டு இருந்தது. ஆனால் அந்த அமைச்சர்கள் அங்கு வரவில்லை. அவர்கள் வந்திருந்தால் நிச்சயமாக அந்தப் பிரச்சினையை அறிந்திருக்க முடியும். அந்த அர்த்தாலைத் தடுத்திருக்க முடியும். ஆனால் அந்த மாநாட்டுக்கு வராமல் ஒரு போட்டி மாநாட்டைக் கும்பகோணத்தில் ஏற்பாடு செய்து அந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இது முறைதானா என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, இங்கே சட்டம்–ஒழுங்கு சீர்கேட்டைந்ததைப் பற்றிச் சொன்னேன். சட்டத்தை நீதிமன்றத்திலே நிறைவேற்றுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்டு உள்ளவர்கள் வழக்கறிஞர்கள் என்று சொன்னால் மிகையாகாது. சென்னை சட்டக் கல்லூரி 100 ஆண்டுகளுக்கு மேல் புகழ் வாய்ந்த ஒரு கல்லூரி. மிகப்



பெரிய புகழ்வாய்ந்தவர்கள் எல்லாம், அறிஞர்கள் எல்லாம் தலைவராக இருந்திருக்கிறார்கள். கிருஷ்ணமேனன், கோவிந்த ராஜுலு நாயுடு, கடைசியாக இருந்த பழனிச்சாமி வரையில் இந்தக் கல்லூரி முதல்வராக இருந்தார்கள். அந்த டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸ் பதவியில் இருந்த பழனிச்சாமி இறந்து 2, 3 ஆண்டுகள் ஆகின்றன. அந்த டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீசுக்கு ஒருவர் நியமனம் செய்யப்படுகிறார். அவருக்கு அந்த குவாலிபிகேஷன் இல்லை. அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட குவாலிபிகேஷன் இல்லாத ஒருவரை அரசாங்கம் அங்கு நியமிக்கிறார்கள். ஹை கோர்ட்டுக்கு வழக்குப் போகிறது. ஹைகோர்ட்டிலே வழக்கு செல்லுகிறபோது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரிகிறது, இந்த டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸ் போதுமான குவாலிபிகேஷன் இல்லாதவர் என்று. அதை அறிந்த அட்வகேட்–ஜெனரல் அவரை மாற்றி குவாலிபிகேஷன் உள்ள ஒருவரைப் போடுவோம் என்று சொல்லிவிட்டு வருகிறார். ஆனால் இன்னமும் போடவில்லை. ஆண்டு தோறும் ஜுன் மாதமே தொடங்கக் கூடிய சட்டக் கல்லூரி இதுவரையில் தொடங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அரசாங்கம் செய்தது தவறானது என்று அந்தத் தவறைச் சுட்டிக் காட்டினாலும், நீதிமன்றம் சுட்டிக்காட்டினாலும் கூட, அந்தத் தவறைத் திருத்திக்கொள்ள மாட்டேன் என்று சொல்வது கண்டனத்திற்குரியது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் பிரச்னை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சேஷசாயி ஆலை தொழிலாளர்கள் பிரச்னை பற்றி நாம் எல்லோரும் அறிவோம். 120 நாட்களுக்கு மேல் அங்கே ஸ்ட்ரைக் நடைபெற்றது. அந்த ஸ்ட்ரைக்கில் ஈடுபட்ட தொழிலாளர்களை வேலைக்குச் செல்ல வேண்டும் என்றும், தான் அவர்கள் பிரச்னையை முன் நின்று தீர்த்து வைக்கிறேன் என்றும் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையில் அந்தப் பிரச்னை தீர்ந்தபாடில்லை. இன்றைக்கும் அந்தத் தொழிலாளர்கள் வெளியே தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். சேஷசாயி பிரச்னையைத்தான் தீர்க்கவில்லை, வேறு எதாவது பிரச்னையைத் தீர்த்து இருக்கிறதா என்று பார்த்தால், எந்தப் பிரச்னைக்கும் தீர்வு, பரிகாரம் கண்டதாகத் தெரியவில்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் 'நெஞ்சுக்கு நீதி' என்ற ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகம் இன்று பல நூலகங்களில் அனுமதிக்கப்பட்டு வாங்கப் பட்டு இருக்கிறது. இப்போது இந்த அரசாங்கத்தின் மூலமாக டைரக்டர் ஆப் லைப்ரரீஸ் ஒரு ரகசிய சுற்றறிக்கை அனுப்பி

இருப்பதாக அறிகிறேன். 'நெஞ்சுக்குநீதி' புத்தகத்தை நூலகங்களில் அனுமதிக்கக் கூடாது என்றும், அந்தப் புத்தகங்களை வாபஸ் பெறவேண்டும் என்று உத்தரவிட்டு இருப்பதாகத் தெரியவருகிறது. ஜனநாய நாட்டிலே எல்லாவிதமான கருத்துக்களையும் தெரிந்து கொள்ளவேண்டிய பொதுமக்களுக்கு இந்தப் புத்தகத்தால் நன்மை உண்டு என்று கருதிய காரணத்தால் தான் அன்றைக்கு அது அனுமதிக்கப்பட்டு வாங்கப்பட்டது. அதை வாபஸ் வாங்குவது முறையல்ல என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் கல்லூரிப் பேராசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய நண்பர் மாரிமுத்து அவர்கள் அழகாகச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் சில வாக்குறுதிகளைக் கொடுக்கிறது. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதால் மீண்டும் போராட்டத்தைச் சந்திக்கிறது. இன்றைக்கு எங்கே பார்த்தாலும் பேராசிரியர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், மாணவியர் போராட்டம் என்று நடத்திக் கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். எந்தப் பிரச்னையும் தீர்ந்தபாடில்லை. எந்தப் பிரச்னையையும் தீர்த்து வைக்காது தொடர்ந்து பதவியில் இருப்பது பொருத்தம் இல்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், சுகாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு எழுதினால் கூட நடவடிக்கை எடுப்பது இல்லை. குறிப்பாக குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் மிகுந்த அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். கொசுக்கடி பொறுக்க முடியவில்லை. வசதியான இடங்களிலேயே கொசுக்கடி தாங்க முடியவில்லை என்றால், சாதாரண ஏழை எளிய மக்கள் தொழிலாளர்கள் வாழும் பகுதியில் கொசுக்கடி எந்த அளவிற்கு இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதிகாரிகள் இதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. சுகாதாரக் கேடு, மின்சார விளக்கு இல்லாத நிலை, ரோடு வசதி இல்லை என்கிற நிலைமைகளைப் பார்க்கிறபோது இங்கே நிர்வாகம் நடைபெறுகிறதா என்று கேட்கிற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அரசு, மாநகராட்சி மன்றத்தின் அதிகாரிகள் இது போன்ற குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கடுமையான உத்தரவு போடவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்





அடுத்து, விவசாயிகளைப் பொறுத்தவரையில் பார்த்தால் எந்தவிதமான அறிக்கையும் இல்லை. விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்து எந்த விதமான அறிவிப்பும் இங்கே கொடுக்கப்படவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்து இருக்கிறார்கள், விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள எல்லா வழக்குகளும் வாபஸ் வாங்கப்படும் என்று. நான் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், உடனடியாக விவசாயிகள் மீது தொடரப்பட்ட வழக்குகளை, விவசாய சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது போட்டப்பட்ட வழக்குகளை, தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறவேண்டும் என்கிற என்னுடைய எண்ணத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது, கவர்னர் அறிக்கையில் திட்டவட்டமான அறிவிப்புகள் கிடையாது. கொள்கை விளக்கங்கள் கிடையாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மெத்தனமாக இருப்பதைத்தான் பார்க்கிறோம். ஒரு ஸ்டாக்னென்ட் பொசிஷன் ஏற்பட்டு இருக்கிறது, ஒரு நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டு இருக்கிறது. இது தொடர்ந்து இருப்பதால் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பு இல்லை, வழியில்லை என்பதைத் தெரிவித்து கவர்னர் உரைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.40]

<u>திரு. கே. ஜே. சுப்பிரமணியம் :</u> பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைமீதான விவாதத்தில் என்னைப் பேச அழைத்ததற்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே கவர்னர் உரைமீது விளக்கம் கொடுக்கும்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டது; இராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். இந்த அரசு எப்படி தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். இந்த அரசு தேர்தலை சந்தித்து, நான்குமுனைப் போட்டியில் வெற்றி பெற்று, அமைக்கப்பட்டதாகும் என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. கே. ஜே. சுப்ரமணியம்] [1980 பிப்ரவரி 6

மேலும், நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க் கட்சிக்காரர்கள் எப்படி பொய்ப் பிரச்சாரங்களைக் கூறி ஓட்டு வாங்கினார்கள் என்று மக்களுக்குத் தெரியும். ஏனென்றால் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது எம். ஜி. ஆர். ஆட்சியிலே தங்கம் விலை ஏறிவிட்டது; வெங்காயம். விலை ஏறிவிட்டது என்று கூறித்தான் ஓட்டுக் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்திருக்கின்ற அணிக்கு ஓட்டுப் போட்டால் சவரன் 300 ரூபாய்க்குக்கிடைக்கும் என்று பிரச்சாரம் செய்தார்கள். அந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் சொன்ன வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றினார்களா என்றால் நிச்சயமாக இல்லை. தங்கம் 300 ரூபாய்க்கு விற்றால்—நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்—300 ரூபாய் ஏன், நீங்கள் கூறியபடி இல்லாவிட்டாலும் 600 ரூபாய்க்கு விற்றால் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு மக்களிடம் நம்பிக்கை இருக்கு மானால் அதைச் செய்யுங்கள். அதைவிட்டுவிட்டு அரசை இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது என்பதை பிரதான எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், தமிழக முதலமைச்சரைப் பார்த்து எதிர்க்கட்சியினர் கர்னாடக முதலமைச்சர் அர்ஸ் இராஜிநாமா செய்ததைப்போல தமிழக முதலமைச்சரும் இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். கர்னாடக முதலமைச்சர் அர்ஸ் அரசு அமைத்தார் என்பதை உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும். கர்னாடக மாநிலத்தில் இந்திராகாந்தி அம்மையாரின் உழைப் பினால் அமைக்கப்பட்ட ஆட்சியாகும் அர்ஸ் ஆட்சி. ஆனால் இந்த அரசு புரட்சித் தலைவரின் உழைப்பினால் அமைக்கப்பட்ட தாகும். இதைப்பற்றித் தெரியாத பிரதான எதிர்க்கட்சிக் காரர்கள் தமிழக முதலமைச்சரைப் பார்த்து இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்பது எந்த விதத்தில் பொருந்தும் என்பது எனக்கும் புரியவில்லை என்று அவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய பாரதப் பிரதமர் அவர்கள் அன்று பாரத பெண் மணியாக தமிழகம் வந்தபோது இன்று வீறாப்பு பேசும் தி.மு.க. வினர் அன்று என்ன செய்தார்கள் என்பதை இந்த நாடு மறக்க வில்லை என்பதை இந்த மன்றம் அறியும். அப்போதே எங்கள் புரட்சித் தலைவரவர்கள் ஒரு பெண்ணை எதிர்க்க இத்தனை வீரர்களா என்று கேட்டார்கள். அம்மையாருக்கு தக்க பாது காப்புக் கொடுத்து, உதவி புரிந்தார்கள். நீங்கள் பதவிக்குத் தான் துணை புரிந்தீர்கள். ஆனால் எங்கள் புரட்சித் தலைவர் இன்றைய பாரதப் பிரதமரின் உயிருக்கு துணை புரிந்தார்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்



1980 பிப்ரவரி 6] [திரு. கே. ஜே. சுப்ரமணியம்]

எங்கள் தலைவர் அன்றே சொன்னார்கள்? இன்றும் சொல் கிறார்கள், நிலையான அரசுக்கு எங்கள் ஆதரவு உண்டு என்று. அந்த அடிப்படையில்தான் இப்போது இராஜ்ய சபையில் நடை பெற்ற தடுப்புக்காவல் சட்டத்தில் ஆளும் கட்சியான இந்திரா அம்மையாருக்கு நாங்கள் வாக்களித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்..

இந்த அரசு பின்தங்கிய மக்களுக்கு, பிற்பட்ட வகுப்பினருக்கு கல்வித் துறையிலும் உத்தியோகத்திலும் 31 சதவீதம் என்று இருந்ததை 50 சதவீதமாக மாற்றியமைத்ததற்கு, துணிச்சலான இந்தக் காரியத்திற்கு மக்கள் பாராட்டுத் தெரிவிக்காமல் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

மேலும் இந்த அரசு உத்தியோகத்தில் 'சி' அண்டு 'டி, பிரிவுக்கு 26 வயது என்று இருந்ததை 28 வயதாகவும், பட்ட தாரிகளுக்கு 30 வயது என்றிருந்ததை 33 வயதாகவும் மாற்றியிருப்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய தமிழ்நாட்டு நிர்வாகத்தைப் பற்றி எதிர்க் கட்சியினர் ஒட்டுமொத்தமாக கூறிய குற்றச் சாட்டுக்களைப் பார்க்கும்போது அவர்கள் தமிழக மக்களுடைய எண்ணத்தை ஒட்டிப் பேசவில்லை என்பதை இந்த மாமன்றம் அறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் பிரச்சினையைப் பற்றி இங்கே என்னுடைய அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். என் தொகுதியில் குறிப்பாக கேளூர், ஆத்துவாம்பாடி, துருஞ்சுக்குப்பம், கட்டுப்பூண்டி, விளாங்குப்பம், கல்வாசல் ஆகிய கிராமங்களில் விவசாயிகள் போராட்டம் நடந்தபோது அப் போராட்டத்தில் விவசாய சங்கத்தைச் சேர்ந்த பெரும்புள்ளிகளின் தூண்டுதலின் பேரினால் ஒன்றும் அறியாத அப்பாவி விவசாயிகள் மீதும், போராட்டத்தில் ஈடுபடாத, சங்கத்தில் இல்லாத, நலிந்துபோன, நிலம் இல்லாத அப்பாவி விவசாயிகள் மீதும் வழக்குகள் போடப் பட்டுள்ளன. அரசு அதை ஆராய்ந்து பார்த்து அப்படி போடப் பட்ட வழக்குகளிலிருந்து அவர்களை விடுவிக்க ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நெற்றையதினம் எங்களுடைய தொகுதியைச் சேர்ந்த செண்பகத் தோப்பு அணை கட்டுவது பற்றி இங்கே நமது முன்னாள் பேரவைத் தலைவரவர்கள் ஒரு கருத்தினைக் கூறினார்கள். அதாவது அந்த அணை கட்டினால் செய்யாற்றுக்கு தண்ணீர் வருவது தடுக்கப்படுவதாகவும், ஆகவே அந்தத்

திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் இங்கே குறிப்பிட்டதை நான் அவர்களுக்கு நினைவுப் படுத்தக கடமைப்பட்டிருக்கிறேன். செண்பகத்தோப்பிலே அணை கட்டப்படவேண்டும் என்ற கோரிக்கை இந்த மாமன்றத்திலே பல ஆண்டுகளாக வைக்கப் பட்டு வந்தது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே இருந்து கேட்கப் பட்டிருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் அந்தக் திட்டம் பரிசீலனையில் இருந்தது என்பதையும் இந்த மாமன்றம் அறியும். அந்தத் திட்டம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடம் ஏறியவுடன் 3 கோடியே 55 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட இருந்தது. அந்தத் திட்டம் என்ன காரணத்தால் நின்றுவிட்டது என்பதைப் பற்றி இந்த மாமன்றத்தில் பலமுறை எங்களுடைய பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, 12 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசனவசதி அளிக்கக்கூடிய அந்த அணையைக் கட்டினால் மிக்க பலனுள்ளதாக அமையும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இங்கே மதுராந்தகம் திரு. ஆறுமுகம் அவர்களும், முன்னால் சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்களும் அந்த அணையைக் கட்டக் கூடாது என்று நேற்று வாதாடி இருக்கிறார்கள். அது எந்த விதத்திலே பொருந்தும் என்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் நேரத்தில் அவர்கள் ஓட்டு கேட்கச் சென்ற நேரத்தில் தங்களது கட்சி செண்பகத்தோப்பு அணையைக் கட்டுவதற்கு ஆதரவளிக்கும் என்று கூறியிருக்கிறார்கள். ஒரு வேளை ஓட்டு வாங்க வேண்டும் என்று அப்படிப் பேசினார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இங்கே சட்டமன்றத்தில் பேசும்போது அதைக் கட்டக் கூடாது என்று சொல்கிறார்கள். அது எந்தவித்த்திலே பொருந்தும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கட்சியினுடைய தலைவர் என்னுடைய தொகுதியாகிய போளூரிலே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள், அதாவது நாங்கள் அந்த அணையைக் கட்டி முடிக்க எந்த நேரத்திலேயும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தலைவருக்குக் கட்டுப்படாமல் உறுப்பினர்கள் சிலர் அந்த அணையைக் கட்ட வேண்டும் என்றும் சிலர் கட்ட வேண்டாம் என்றும் கூறுவது எந்தவகையிலே பொருந்தும் என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே இந்தத் திட்டத்தை நல்லமுறையிலே ஏற்படுத்தி நடத்துவதற்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தருகின்ற வகையிலே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தான் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தாற்போல என்னுடைய போளூர் தொகுதியிலே எந்த விதமான தொழில்களும் இல்லாமல் வேலைவாய்ப்பு இல்லாமல் விவசாயிகள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும் என்று பலமுறை கேட்டிருக்கிறேன். அங்கே என்ன தொழிலை ஏற்படுத்த முடியும் என்பது பற்றி அதிகாரிகள் பரிசீலனை செய்து தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் சந்தன மரங்கள் நிறையக் கிடைக்கின்றன. ஆகவே அங்கே ஒரு சந்தன மரத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அங்கே தொழிற்சாலை அமைப்பதன் மூலம் எங்களுடைய பகுதியிலே இருக்கின்ற மக்களின் குறைகளைத் தீர்க்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாற்றுத் தலைவரவர்கக்ளுகு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[பிற்பகல் 12.50]

*திரு. கு. வடிவேல்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதலிலே நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் உரையிலே பேசுகிற நேரத்திலே கிட்டத்தட்ட நிறைய உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பேசியவர்கள் கவர்னர் உரையை விட்டுவிட்டு வேறு பாதையிலே சென்று பேசியிருக்கிறார்கள். ஆனால் நான் கவர்னர் உரையின்மீது பேசுகின்ற நேரத்திலே சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசிய நேரத்தில் நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா அம்மையாரை சர்வாதிகாரி என்று பேசியதாகச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு மிகப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். இதுவரையிலும் எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், எங்களுடைய அணியைச் சேர்ந்தவர்கள் இந்திரா அம்மையாரைப் பொறுத்தவரையில் தவறாக எதுவுமே பேசவில்லை. அதை நான் ஆதாரத்தோடு சொல்ல முடியும். குறிப்பாக கரூரிலே ஒரு பொதுக் கூட்டத்திலே பேசிய நேரத்திலே கூட எங்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் இந்திரா அம்மையாரைப்பற்றி, தவறாகக்கூட இல்லை, கொஞ்சம் வேகமாக பேசிவிட்டார். அதற்காக உடனே எங்களுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்திரா அம்மையாரை நாங்கள் அன்றும் மதித்தோம், இன்றும் மதிக்கிறோம், நாளையும் மதிப்போம்.

அதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது என்பதை தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் நிச்சயமாக அவரை சர்வாதிகாரி என்றும் சொல்லவில்லை. சேலை கட்டிய ஹிட்லர் என்றும் சொல்லவில்லை, ரத்தக் காட்டேரி என்று சொல்லவில்லை. இப்படி இன்னும் எத்தனையோ சொன்னவர்களோடு தான் அவர்கள் போய் சேர்ந்திருக்கிறார்களே என்று நினைக்கும்போது தான் மனம் வேதனைப்படுகிறது. அதை விட இன்னும் சொல்லப் போனால்......

*சென்னை திரு. மு. அரங்கநாதன் : இடையிலே ஒரு விளக்கம், அனுமதிக்க வேண்டும். நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் இந்திராகாந்தியை சர்வாதிகாரி என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் நாங்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். தென்னகம் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் இங்கே கூட்டுறவு அமைச்சராக உட்கார்ந்திருக்கிறார். அவருடைய பத்திரிகையிலே இந்திரா காந்தி அம்மையாரை பத்திரகாளிபோல் 20 கைகளோடு போட்டு கையில் கத்தி கபடா எல்லாம் போட்டு, பெரிய சித்திரம் வரைந்து மகிஷாசுர மர்த்தினி இப்படி அவதாரம் எடுத்திருக்கிறார்கள் என்றெல்லாம் தலைப்பு போட்டிருக்கிறார்கள். அதனை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. கு. வடிவேல் : தலைவர் அவர்களே, இன்னும் நான் சொல்லிக்கொள்வது எல்லாம் இத்தனையும் பேசிவிட்டு, அந்த அம்மையாரை கொலை செய்ய முயற்சி செய்தவர்களோடு கூட்டணி சேர்ந்திருக்கிறார்களே, அதை நினைக்கும்போதுதான் உண்மையிலேயே மனம் வேதனைப்படுகிறது. அதை விட இன்னொன்றைச் சொல்கிறேன்.

20 அம்ச திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்த 20 அம்ச திட்டத்தை நாங்கள் அன்றும் ஆதரித்தோம், இன்றும் ஆதரிக்கிறோம், நாளையும் ஆதரிப்போம். ஆனால் அதை விட்டு விட்டு அவர் ஒரு திட்டம் கொண்டு வந்தார் 21 அம்ச திட்டம் என்ற பெயரில். அந்த 21 வது அம்ச திட்டம் என்ன என்பதை பற்றி, அது உங்களுக்குத்தான் தெரியும், எங்களுக்குத் தெரியாது. அப்படிப்பட்டவர்களோடு கூட்டு சேர்ந்து விட்டார்களே என்பதுதான் எங்களுக்கு மன வேதனையாக இருக்கிறது. வெற்றி பெற்று விட்டார்கள். உண்மைதான். இந்திரா அம்மையாரின் ஆட்சி நல்ல ஆட்சி, நிலையான ஆட்சி, அது மத்தியிலே இருக்கட்டும் என்று மக்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நாங்கள் வாழ்த்துகிறோம். தேர்தல் நேரத்திலே என்ன சொன்னார்கள்? தங்கத்தின் விலை எங்கே



போய் விட்டது. மலையிலே ஏறிவிட்டது. தாலிக்கு தங்கம் இல்லை என்று சொன்னார்களே, இன்றையதினமும் தங்கத்தின் விலை 1052 ரூபாய், குறையக்கூட இல்லை. அந்தத் தங்கத்தின் விலையை 500 ஆக்கினால் நிச்சயமாக நாங்கள் உங்களுக்கு என்றென்றும் எங்களுடைய தார்மீக ஆதரவைக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். அது மட்டும் அல்ல, இன்னொன்றையும் சொல்கிறேன்.

விவசாயிகளுக்காக, விவசாயிகளுடைய பிரச்னையைப் பற்றி பலர் தெளிவாகப் பேசினார்கள். இந்தச் சட்டமன்றத்திலே கூட மதிப்பிற்குரிய உறுப்பினர் துரை இராமசாமி அவர்கள்கூட விவசாயப் பிரச்னையைப் பற்றி தெளிவாக பேசினார்கள். அதிலே எங்களுடைய அரசாங்கம் சரியாக அணுகவில்லை என்பதை நானும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் நல்ல முறையில் இந்த பிரச்சனையை அணுகியிருக்க வேண்டும், அணுகத் தவறிவிட்டது என்பதை சொல்லிக் கொள்கிறேன். காரணம் விவசாயிகள் பிரச்னை என்பது மிகப் பெரிய பிரச்னை. அவர்களுடைய கோரிக்கை என்ன என்று விவசாயச் சங்கத் தலைவரை அழைத்துப் பேசி அந்த பிரச்னையை தீர்க்க வேண்டும். ஆனால், உண்மையிலேயே அவர்களுடைய பிரச்சனைக்கு காரணம் என்னவென்று சொன்னால், அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட பல சிக்கல்கள் தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விவசாயக் கடன்களை, ஒரு ஆண்டு, 2 ஆண்டு, 3 ஆண்டுகள் என்று தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தார்கள். அதனால் வட்டி எறி, வட்டிக்கு குட்டி சேர்ந்து விவசாயிகளின் தலையிலே பயங்கரமான ஒரு பெரியகடன் சுமையை ஏற்படுத்தியிருக்கிறது.

அதேபோலத்தான் பாண்டிச்சேரியிலே இருக்கிற ஆட்சி, அதாவது திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து ஆட்சி நடத்தக்கூடிய அந்த அரசாங்கத்திலே கூட 2, 3 தினங்களுக்கு முன்பு விவசாயக் கடன்களை கட்டுவதற்கு 1 ஆண்டு கால தவணை போட்டு தள்ளிவைத்திருக்கிறார்கள். இப்படி தள்ளிக்கொண்டு போகப்போகத்தான் வட்டி சுமை மேலே ஏறுகிறது. விவசாயிகள் அந்தச் சுமையைத் தாங்க முடியாமல் கஷ்டப்படக்கூடிய அந்தப் பிரச்னையை வளர்த்தவர்கள் நீங்கள். ஆனால், இதுவரை எங்கள் தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேயில்லை விவசாயிகள் மீது. இங்கே ஒன்றைச் சொன்னார்கள். மத்தியில் அவர்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் விவசாயிகள் பிரச்னைகளைத் தீர்ப்போம் என்று சொன்னார்கள். உண்மையில் விவசாயிகள் பிரச்னையை நீங்கள் நல்ல முறையில் தீர்ப்பீர்களே

யானால் உங்களுக்கு என்றென்றும் எங்கள் ஆதரவும் சரி, பாராட்டும் காத்துக்கொண்டிருக்கும். விவசாயிகள் பிரச்னையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்:

சிறிய விவசாயிகள் என்று பிரித்து ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கருக்குக் குறைவாக உள்ள விவசாயிகளுக்கு கடன்களை ரத்து செய்யவேண்டும். ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து அசலை மட்டும் வசூல் செய்யலாம். பெரிய விவசாயிகள் சிறிய விவசாயிகளைச் சேர்த்துக் கொண்டு பாதைகளில் பஸ்களை செல்லவிடாது, லாரிகளுக்குத் தீ வைப்பது, கேணிகளில் பாலிடால் ஊற்றுதல் இதுபோன்ற அக்கிரமச் செயல்களைச் செய்துவரும் பெரிய விவசாயிகளுக்கு நான் என்ன சொல்கிறேன் என்றால் அவர்களுக்கு வட்டியை மட்டும் தள்ளுபடி செய்துவிட்டு அவர்களிடமிருந்து அசலை வசூல் செய்யலாம். சிறிய விவசாயிகள், ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கருக்கு குறைவாக உள்ள விவசாயிகள் அத்தனை பேர்களுக்கும் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல.

இந்தச் சிறிய விவசாயிகளுக்கு இனாமாக ரூ. 5000 கூட கொடுக்கலாம், அதிலே தவறு என்ன இருக்கிறது? அப்படிச் செய்தால் நிச்சயமாக விவசாயிகளுக்கு நல்லதொரு நன்மையைச் செய்த காரியமாக அது இருக்கும். அதுமட்டுமல்ல. இந்த விவசாயிகள் பிரச்னையில், என் தொகுதி கரூரில் கிட்டத்தட்ட மூவாயிரம் வண்டிகள் வைத்து ஊர்வலம் நடத்தினார்கள். விவசாயிகள் பிரச்னையை மாநில சர்க்கார் ஒன்றினால் மட்டும் தீர்க்க முடியாது. மாநில சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்த ஒன்பது அம்சக் கோரிக்கையில் எந்தெந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியுமோ அதை ஏற்று மற்றவைகளை மத்திய அரசிடம் விடவேண்டும். மத்திய அரசின் பொறுப்பேற்று நல்லதொரு அமைச்சரவையை அமைத்திருக்கக்கூடிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மீது விவசாயிகள் நல்ல நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அம்மையார் மனது வைத்து விவசாயிகள் கடன்களை ரத்து செய்ய மத்திய அரசு அனுமதி கொடுத்து அதற்கு ரிசர்வ் பாங்க் ஒப்புதல் கொடுக்க வேண்டும். மாநில அரசு பார்த்து விவசாயிகள் கடன்களை ரத்து செய்ய முடியாது. அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும். ரிசர்வ் பாங்க் அனுமதி வேண்டும். இதை தெளிவாகச் சொல்லியும் தேர்தல் நேரத்தில் தவறுதலான பிரச்சாரம் செய்தார்கள். எப்படியோ பிரச்சாரம் செய்து பூவோடு சேர்ந்து நாரும் மணக்கும் என்பதுபோல் பூவாகிய காங்கிரஸ்காரர்களோடு நார் என்ற திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து வெற்றி பெற்றுவிட்டது என்பதைக் கூறும்போது ஒன்றை மட்டும் குறிப்பிட்டுத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



மானம்' இல்லை என்று சொன்னார்கள். மானத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மூன்று கட்சிகளும் தமிழ்நாட்டில் தனித்தனியாக நின்று பார்ப்போம். சந்திக்கத் தயாரா? நான் தெளிவாகக் கேட்கிறேன். கூட்டணி என்று சேர்ந்துவிட்ட பிறகு பார்ப்போம், பார்ப்போம் என்று சொல்கிறீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸும் திராவிட முன்னேற்றக் கழகமும் மூன்றும் தனித்தனியாக நின்று பார்த்தால் அப்போது தெரியும் யாருடைய செல்வாக்கு எங்கே இருக்கிறது என்று, மக்கள் யார் பக்கம் இருக்கிறார்கள் என்பது தெரியும். மக்கள் எந்தக் கட்சி பக்கம் இருக்கிறது என்பது அப்போது தெரியும். ஏதோ வந்தது, ஒரு காற்று வீசிவிட்டது. அந்தக் காற்றில் வந்துவிட்டார்கள். இந்திர காந்தி அம்மையார் மட்டும் இல்லை என்று சொன்னால் 16 அங்கே இருக்காது அந்த 6ஐ எடுத்துவிட்டால் ஒன்றுதான் இருக்கும். எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் ஆதரவு இன்றும் இருக்கிறது, நேற்றும் இருந்தது, நாளையும் இருக்கும், அதிலே சந்தேகம் வேண்டாம்.

இந்த ஆட்சியைக் கலைப்போம் என்று சொல்கிறார்கள், கலைக்கட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆட்சியை இன்று கலைத்தாலும்சரி நாளை கலைத்தாலும் சரி அல்லது அடுத்தநாள் கலைத்தாலும் சரி கலைக்கட்டும். மக்களைச் சந்திக்க நாங்கள் தயாரயிருக்கிறோம். பயந்து நாங்கள் பின்வாங்கவில்லை. எப்போதும் மக்களைச் சந்திக்கத் தயாராயிருக்கிறோம். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

இன்னும் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்றதெல்லாம் பஞ்ச நிவாரணம், புரட்சித் தலைவர் ஆட்சியில் வெள்ள நிவாரணம் என்றால் இதை விட நல்ல ஆட்சிக்கு வேறு சான்று வேண்டுமா? இன்னும் சொல்லப் போனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கண்ணொளித் திட்டம் என்று சொல்லி தமிழ்நாட்டு மக்களுக்கு கண்வலித் திட்டத்தைக் கொடுத்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மின் ஒளித் திட்டம் என்று சொல்லி பட்டி தொட்டிகளுக்கெல்லாம் குடிசைகள் அனைத்திற்கும் மின் ஒளி தரப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதை யாராலும் மறுக்க முடியாது.

நல்ல பல 'திட்டங்களைச் செய்திருக்கக்கூடிய' புரட்சித் தலைவர் அவர்கள் போர்ட் ஆப் ரெவன்யூ-வை ஒழிக்க வேண்டும் என்று —அபாலிஷ் செய்யவேண்டுமென்று— ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டுவந்துள்ளார்கள். அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஒரு அமைப்பு இருந்த காரணத்தால் டிலே என்று சொல்வார்களே, ரெட்டேப்பிஸம்

[திரு. கு. வடிவேல்] [1980 பிப்ரவரி 6

இருந்தது, அந்த அமைப்பை ஒழிப்பதை பாராட்டக், கடமைப் பட்டிருக்கிறோம். காரைக்குடியில் ஒரு பல்கலைக்கழகம்; அதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதோடுகூட, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் நல்ல முறையில் வேலைகள் நடைபெற்று, சாலைகள் செப்பனிடப்பட்டு பட்டிதொட்டிகளில் எல்லாம் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது.

(பிற்பகல் 1.00)

அதையடுத்து நான் ஒரு கேள்வி கேட்கின்ற நேரத்தில், திருச்சி நகராட்சியிலுள்ள சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால், நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 2½ ஆண்டுக் காலமாகிவிட்டது. சாலைகளைச் செப்பனிடுவதற்கு அங்கே டெண்டர் எடுப்பதற்கு யாரும் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். காரணம் கேட்டால், பழைய ரேட்டே இருக்கிறது; அந்த ரேட் கட்டுப்படியாகவில்லை, அதனால் வர மாட்டேன் என்கிறார்கள். ஜல்லியின் விலை தாரின் விலை இப்போது ஏறிவிட்டது, எனவே ரேட்டை ரிவைஸ்ட் செய்தால் ஒழிய கட்டுப்படியாகாது என்று சொல்லப்படுகிறது. என்னுடைய கரூர் நகராட்சியை எடுத்துக் கொண்டால், அங்குள்ள எல்லா சாலைகளும், யானை பிடிக்கும் பள்ளங்களாக இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவ மனைக்கு செல்லவேண்டிய நேரத்தில் ஆட்டோவில் சென்றால், அந்த ஆட்டோவிலேயே பிரசவமாகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டும். இப்படிப் பட்ட நிலைமை இன்றைக்கு தமிழகம் பூராவும் இருக்கின்றது. இந்த நிலைமைகளைக் குறிப்பாக நாம் கரூரிலும் பார்த்திருக்கிறேன், திருச்சியிலும் பார்த்திருக்கிறேன். இவைகளை எல்லாம் நிவர்த்திக்காமல், சும்மா உட்கார்ந்திருப்பதில் பிரயோஜனம் இல்லை. அவைகளையெல்லாம் நல்ல முறையில் செப்பனிட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து, எனக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. வி. கொ. சின்னசாமி : சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப் படுகிறேன். ஒரு வார காலமாக, சட்டமன்றக் கூட்டத்தில் கவர்னர் உரையைப் பற்றி பேசிய நேரத்தில், கவர்னர் உரையை விட எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதெல்லாம், இந்தச் சட்டமன்றம் நடைபெற வேண்டுமா, மேலவை இருக்க வேண்டுமா என்ற எண்ணத்தில்தான்



1980 பிப்ரவரி 6] [திரு. வி. கோ. சின்னசாமி]

அதிக ஆர்வம் காட்டினார்களே தவிர, கவர்னர் உரையில் ஆர்வம் செலுத்தவில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறோம். ஆனால், நடைபெற்ற நாடாளும் மன்றத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அதனுடைய கூட்டணிக்கு ஏற்பட்ட சோதனை, பட்டுச் சட்டையிலே விழுந்த ஒரு கீறலே தவிர, அது எங்களுக்கு ஏற்பட்ட ஒரு தோல்வி அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனாலும். இப்போது நடைபெற்ற தேர்தலில் டெல்லியில் யார் ஆட்சி அமைப்பது என்ற போராட்டமே தவிர, தமிழ் நாட்டில் யார் மந்திரிசபை நடத்திச் செல்வது என்ற ஒரு போராட்டம் இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தாக வேண்டும், தமிழக சட்ட மன்றத்திற்கு தேர்தல் நடந்து, நாம் எல்லாம் அதில் சட்டமன்ற உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிறோம், இது மக்களாகப் பார்த்துக் கொடுத்த ஒரு தீர்ப்பு. அப்படி அமைந்த ஒரு தீர்ப்பை ஒத்துக் கொள்ள வேண்டும்; எண்ணிப் பார்க்க வேண்டும். ஐந்தாண்டு காலத்திற்கு நம்மை தமிழக சட்டமன்ற உறுப்பினர்களாக மக்கள் அனுமதித்திருக்கிறார்கள். ஆனால், இடையிலே பேசுகின்ற ஒவ்வொருவரும், எதிர்க் கட்சியிலே உள்ள சில நண்பர்கள், நீங்கள் சட்டசபையைக் கலைத்து விட்டு, ராஜினாமா செய்யச் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இது எந்த அளவிற்கு ஜனநாயக உரிமையை கட்டிக் காக்கப் பயன்படும் என்பது, எங்களைப்போன்ற இளைஞர்களுக்கு புதியதாக சட்ட மன்றத்திற்கு வந்திருக்கின்ற எங்களுக்கெல்லாம் கொஞ்சம் புதிராக தென்படுகிறது. காரணம், நாங்கள் தேர்தல் முடிந்து தொகுதிக்குச் சென்ற நேரத்தில், மக்கள் எங்களைச் சந்தித்துக் கேட்கிறார்கள். இப்போது இந்தச் சட்டமன்றக் கூட்டத்திற்கு இடையில் நான் ஊருக்குச் சென்றிருந்த போது, சில பேர்கள் கேட்டார்கள். அவர்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல. பொதுமக்கள்தான் கேட்டார்கள். சட்ட மன்றத்தில் ஆளுநர் அவர்கள் உரையின் மீது விவாதம் நடைபெறுகின்றதா, பாராளுமன்றத் தேர்தல் நடந்ததே, அதன் வெற்றி வாய்ப்பைப் பற்றி விவாதம் நடைபெறுகின்றதா என்ற கேள்வியை என்னிடம் கேட்டார்கள். அதற்கு நாங்கள் சொன்னோம், நாங்கள் எல்லாம் ஆளுநர் அவர்கள் உரையின் மீது விவாதம் நடைபெறுவதாக கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எதிர்க் கட்சியில் சில நண்பர்கள் சொன்னார்கள். ஆட்சியில் இரண்டாண்டு காலம் அனுபவித்து விட்டீர்கள், நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து இறங்குவதற்கு உங்களுக்கு கொஞ்சம் தயக்கமாக இருக்கின்றது என்றார்கள் என்பதாக. இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள், எப்படியெல்லாம் அனுபவித்து இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

ஆனால் இரண்டரை ஆண்டு காலமாக நாங்கள் என்ன அனுபவித்திருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். எந்தவித லாபத்தையும் கருதவில்லை. அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஆடம்பரமாக வாழ்க்கை நடத்த வேண்டுமென்று எண்ணிக்கொண்டு ஆட்சி நடத்தவில்லை. தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சர் பதவியில் இருப்பதைவிட தான் சினிமாவல் நடித்துக் கொண்டிருந்த நேரத்தில். அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து பணியாற்றிய நேரத்தில் இதைவிட சுகமாக இருந்தார்கள். இன்று இருப்பதை விட சுகத்தை அனுபவித்தவர்கள் அவர்கள். இன்று மக்களுடைய குறைகளைப் போக்குகின்ற முறையில் இரவு பகல் பாராமல், உறக்கமின்றி, சில நேரங்களில் உணவு கூட இல்லாமல் மக்களுக்காகப் பாடுபட்டு வருகிறார் என்பதைக் குறிப்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்தக் கட்சியும் யாருடன் வேண்டுமானாலும் கூட்டுச் சேரலாம் என்ற அளவுக்கு ஜனநாயகத்தில் மரபுகள் மாறிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இங்கிருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக் கொள்வது, நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தற்சமயம் கூட்டணி மெம்பர்களாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். முன்னாலே எங்களோடு பல தேர்தல்களில் கூட்டணியாக இருந்து பல வெற்றிகளை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அன்றைய தினம் இன்று உங்களோடு கூட்டணியாக இருப்பவர்கள் உங்களைப் பற்றி என்ன பேசினார்கள். நாங்கள் என்ன பேசினோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் காங்கிரஸ் கட்சியை எப்படியெல்லாம் தாக்கிப் பேசியிருக்கிறார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்வியமைச்சர் அவர்கள் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தல்களைக் கவனித்து வந்தார்கள். அவர்கள் பேச்சில் எந்தவிதமான அசம்பாவிதமாகவும் பேசவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் முன்னாலே இந்திரா காந்தி அவர்களைப் பற்றியும் இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பற்றியும் என்னென்ன பேசினார்கள் என்பதைத்தான் சொன்னார்களே தவிர வேறு எதுவும் பேசவில்லை.

தேர்தல் நடந்து முடிந்தது. குறிப்பாகக் கேரளாவைப் பார்த்தால் நாடாளுமன்றத் தேர்தலில் ஐந்து தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு 15 நாட்கள் கழித்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சுமார் 15



இடங்களைத்தான் காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தல் முடிவின்படி பார்த்தால் ஏறத்தாழ 35 இடங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் குறைந்திருக்கிறது என்று பார்க்கும் போது மக்கள் தீர்ப்பு பாராளுமன்றத்திற்கு ஒரு விதமாகவும், சட்டமன்றத்திற்கு ஒருவிதமாகவும் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

திண்டுக்கல் தேர்தலைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் திண்டுக்கல் இடைத் தேர்தல் வந்தது. அந்த நேரத்திலே நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றார்கள். அதற்குப் பின்னால் மந்திரி சபை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கோரினோம். காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் அமருவதற்குக் காரணமாக இருந்தவர் அன்றைய தினம் பொருளாளராக இருந்த எம். ஜி. ஆர். அவர்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் ஒரே அணியில் இருந்த நேரத்தில் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு தனித் தனியாகப் பிரிந்த பிறகு தேர்தலில் நின்று யாருக்குச் செல்வாக்கு தமிழகத்தில் என்ற போட்டி நடந்த நேரத்தில் எங்கள் அணி வெற்றி பெற்றது, ஆகையால்தான் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கோரினோமே தவிர வேறல்ல. நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களை பொய்ப் பிரசாரத்தின் மூலம் மக்களைத் திசை திருப்பும் வகையில் பேசி வெற்றி பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்தில் முதலமைச்சர் அவர்கள் சில சட்டங்களைக் கடுமையாக்குவதும் பின்னால் அந்தச் சட்டங்களைத் தாமாகவே வாபஸ்பெறுவதுமான சூழ்நிலை இருக்கிறது என்று சில பேர் குறிப்பிட்டார்கள். நாங்கள் சட்டத்தை மக்களுக்காகக் கொண்டு வருகிறோம். மக்கள் மத்தியில் அதற்கு வரவேற்பு இல்லையென்றால் மக்கள் அந்தச் சட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அந்தச் சட்டத்தை திரும்பப் பெற்றுக் கொள்வதில் யாரும் தயக்கம் காட்டக் கூடாது என்ற அடிப்படையில் தான் சில சட்டங்களை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். •

[பிற்பகல் 1—10]

அதே நேரத்திலே இங்கே திரு மார்க்கபந்து அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 50 சதவீதம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள், அதே நேரத்திலே மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினர்

பற்றி ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் திரு எட்மண்ட் அவர்கள் சட்டசபையிலே குறிப்பிட்டதைப் போல அவர்களுக்கு சில சதவீதம் என்ற அளவிலே சில சலுகைகள் ஒதுக்குவதற்கு அரசு முயற்சித்து வருகிறது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே திரு மார்க்கபந்து அவர்களும் இங்கே கேட்டார்கள். நானும் தெரிவித்துக் கொள்கிறேன். பின்தங்கியவர்கள் மிகவும் பின்தங்கியவர்கள் என்று ஒட்டு மொத்தமாக இரண்டு பிரிவினரையும் சேர்த்து எத்தனை சதவீதம் இருக்கிறார்கள் என்று பார்த்து, பின்தங்கியவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள் எவ்வளவு என்று தனித்தனியாகப் பிரித்துப் பார்த்து மக்கள் தொகையின் கணக்குப்படி விகிதாசாரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டித் தொகுதியிலிருந்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி பெறவில்லையே என்று குறிப்பிட்டார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள், கடந்த 30 ஆண்டுக்காலமாக உசிலம்பட்டி தொகுதி பார்வர்ட் பிளாக் இயக்கத்திற்குத் தான் வெற்றி தேடித் தந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். 30 ஆண்டுக் காலமாக ஒரு கட்சிக்கு வெற்றி வாய்ப்புக் தந்திருக்கிறது என்றால் சமுதாயத்தின் அடிப்படையிலே வெற்றி பெறுகிற தொகுதி தான் அது என்பதைத்தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாள் அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் இங்கே இல்லை. (மணியடிக்கப்பட்டது).

* திரு. க. அன்பழகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது எனது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு பாண்டியன் அவர்கள் கொடுத்திருக்கும் நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை வரவேற்றுப் பாராட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏழை எளிய மக்களின் நம்பிக்கைகளை, கோரிக்கைகளை, நிறைவேற்றுவதற்குத்தான் ஒரு அரசு இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் அரசின் திட்டங்களை விளக்குகின்ற வகையிலும், செயல்படுத்துகின்ற வகையிலும் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

இதற்கு முன்பு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அரசு என்ன செய்தது என்று கேட்டார்கள். இந்த ஆட்சியில் அனைத்து மட்டத்திலும் போராடாமல் இருந்ததில்லை என்று



சொன்னார்கள். நான் கேட்கிறேன், நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு நீங்கள் ஆக்கப்பூர்வமாக எதிர்க்கட்சி என்ற முறையிலே என்ன யோசனை சொல்லி இருக்கிறீர்கள்? எதிர்க் கட்சியாகச் செயல்பட வேண்டிய நீங்கள் எதிரிக்கட்சியாகத்தானே செயல்பட்டீர்கள். அதை நாட்டு மக்கள் மறக்கவில்லை. அண்ணாவின் கொள்கையிலிருந்து தடம்மாறி தடுமாறி இடம்மாறி இருக்கிற நீங்கள் எங்களை ஆளவும் விடவில்லை. மக்களை வாழவும் விடவில்லை. ஆட்சிப் பொறுப்பிலே நீங்கள் இருந்த நேரத்திலே செய்யத் தவறிய, நிறைவேற்ற மறுத்த காரியங்களை, கொள்கைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு. எங்களுக்கு அன்றைய சூழ்நிலை எப்படியிருந்தது என்பதைச் சொல்லியாக வேண்டும். நீங்கள் ஆட்சியிலே இருந்து விலகிய நேரத்திலேயும், அதற்குப்பிறகு இந்த நாட்டிலே அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும், தமிழகத்திலே உள்ள சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளிலும் பல சிக்கல்கள் இருந்தன என்பதை மறந்து விடக் கூடாது. ஆசிரியர்களானாலும் சரி, மாணவர்கள் ஆனாலும் சரி, போலீஸ் துறையாக இருந்தாலும் சரி, தொழிலாளர் பிரச்னையாக இருந்தாலும் சரி, அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் அன்றைய தினம் அடக்கி வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தக் கோரிக்கைகள் போராட்டங்களாக மாறின. ஆனால் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து நிறைவேற்றத் தவறியவர்கள், இதே போன்ற நிலைமைகளுக்கு அவர்களை ஆளாக்கியவர்கள். இப்பொழுது அந்தப் பிரிவினர்கள் நடத்திய போராட்டங்களுக்கெல்லாம் ஊன்றுகோலாக தூண்டுகோலாக நின்று இந்த அரசுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்திக் கொண்டு வந்தார்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த அரசு நடைபெறுவதற்கு எந்த வகையிலே நீங்கள் உதவி செய்தீர்கள் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். எதிரிப் படைகளால் வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட பாதைகளைச் சீர் செய்து முன்னேறி வருகின்ற இராணுவ வீரர்களைப் போலத் தான் தமிழக அரசு பணி செய்து வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிலும் அனைத்துக் கோரிக்கைகளுக்கும், அனைத்துப் பிரச்னைகளுக்கும் இந்த அரசு தீர்வு கண்டு பல அரிய சாதனைகளைச் செய்திருப்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இந்த அரசு விவசாயிகளுக்கு எதையுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக, அந்தக் கோரிக்கைகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு

[திரு. தி. அன்பழகன்] [1980 பிப்ரவரி 6

ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்தோம். அதன் வாயிலாக அவர்களின் பிரச்னைகளிலே பலவற்றைத் தீர்த்து வைத்திருக்கிறோம். தமிழக அரசின் சரித்திரத்தில் எந்த அரசும் செய்யாத அளவிற்கு 40 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம்.

மின் கட்டணச் சலுகையாக, பம்பு செட்டுகளுக்கு 12 காசாகக் குறைத்திருக்கிறோம். கரும்பு, நெல் போன்ற அத்தியாவசிய விளை பொருட்களுக்கு விலையேற்றத்தை அளித்திருக்கிறோம். அதன் காரணமாகத் தான் தமிழ்நாட்டிலே உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்று ஏறக்குறைய பத்து இலட்சம் டன்கள் அதிக உணவு உற்பத்தி செய்து காட்டியிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆளுநர் உரையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாய விலை கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு 100 கோடி ரூபாய் செலவிலான சிறப்பான திட்டத்தை வகுத்திருப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அரசு எல்லாத் துறைகளிலும் பல நன்மைகள் செய்திருப்பதைச் சொல்லியாக வேண்டும். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு தக்காவிக் கடன்களுக்கு ஏக் குறைய 8.51 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பயனடையும் அளவிற்குப் பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறது.

இன்றைக்கு விவசாயிகள் கடன்களைக் கட்டிவிட்டு மீண்டும் கடனைப் பெறாத நிலையில் இருப்பவர்களுக்கு அந்த நிலைமைகளைத் தவிர்க்கும் அளவிற்கு மீண்டும் கடன் பெற இந்த அரசு ஒன்பது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்காக மொத்தம் 27.5 கோடி ரூபாய் ஒதுக்கி அவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறது.

அதே போல் மின் துறையில் உற்பத்திச் சாதனையை, அரசு பொறுப்பேற்ற பிறகு உயர்த்தியிருக்கிறோம். ஏழை எளியவர்கள் பயன் அடையும் வகையில் ஒரு புதிய சரித்திரத்தை உருவாக்கி, குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தை—அரிய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.

இங்கே எதிர்த்தரப்பிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு குடிநீர்ப் பிரச்னைக்கு எதுவுமே



1980 பிப்ரவரி 6] [திரு. தி. அன்பழகன்]

செய்யவில்லை என்று. நான் பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிந்த ஐந்தாண்டுக் காலத்திற்கு கிராமக் குடிநீர்த் திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை 13.36 கோடி. ஆனால் தமிழக அரசு, புரட்சித் தலைவர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இரண்டாண்டுக் காலத்தில் கிராமக் குடிநீர்த் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகை 15.36 கோடி. 1979–80ஆம் ஆண்டிலே 16 கோடி ரூபாய் இந்தக் கிராமக் குடிநீர்ப் பிரச்னைக்காக அரசாங்கம் செலவு செய்து சாதனை புரிந்திருக்கிறது.

அதைப் போல, போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏழரை ஆண்டுக் காலத்தில் அவர்கள் எவ்வளவு பேருந்துகளை விட்டார்களோ அதைவிட அதிகமாக இரண்டரை ஆண்டுக்காலத்தில் புதிய பேருந்துகளை விட்டிருக்கிறோம். இன்றைய தினம் கிராமப் புறங்களில் எல்லாக் கிராமங்களுக்கும் பஸ் ஓடுகின்ற புதிய சகாப்தத்தை உருவாக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை மறந்து விடக்கூடாது.

அதைப்போல, கிராம மக்களுடைய அடிப்படைத் தேவைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையில் ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுச் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப் பட்டதைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை விரிவாக்கி அடுத்த ஆண்டு மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த அரசு முனைந்து கொண்டிருக்கிறது.

[பிற்பகல் 1-20]

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அனாலும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று சொன்ன ஒருவர் ஆளும் கட்சியில் இருந்து இன்று பிரதான எதிர் கட்சியில் சென்று அமர்ந்திருக்கின்ற ஒருவர்—அவர் சொல்லுகிறார் இந்த அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று. நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று மாண்புமிகு பிரதான எதிர்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் உங்களுக்கு மானம் இருக்கிறதா, சூடு இருக்கிறதா என்று கேட்கிறார்கள். உங்கள் உடலிலே ரத்தம் ஓடுகிறதா என்றும் கேட்கிறார்கள். அதைப் போல நான் கேட்க விரும்பவில்லை. உங்களுக்கு மனிதாபிமானம் இருந்தால், அதைச் சொல்வதற்கு

உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எல்லாக் கோட்டையையும் நீங்கள் விட்டுவிட்டீர்கள். அடுத்து வங்கக் கடலிலேதான் நிற்கப் போகிறீர்கள் என்று சொன்னார்கள். நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் வங்கக் கடலின் ஓரம் நீங்காத் துயில் கொள்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆசியோடு மக்கள் மன்றத்திலே நின்று மீண்டும் இந்த சென்னைக் கோட்டையை நாங்கள் பிடிக்கப் போகிறோம் தமிழக மக்கள் எங்களுக்கு மீண்டும் ஆதரவு தரப் போகிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. இந்த அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று சொல்வது நிறை ஒளி சிந்திடும் நிலவுக்குத் திரையிட்டு விடுவதாலே நட்சத்திரங்கள் நிலவு ஆகிவிடாது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதே போல வைரம் மறைக்கப்படுவதாலே கூழாங்கற்கள் வைரமாகி விடாது என்பதை நீங்கள் மனதிலே கொண்டு இந்த அரசு மக்களுக்காக இருக்கிற அரசு, மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு என்பதை எடுத்துச் சொல்லி ஆளுநர் உரையை வரவேற்று, பாராட்டி விடைபெறுகின்றேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என் கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே தயாரித்துத் தரப்பட்டிருக்கிற ஆளுநர் உரை ஏழை மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. தொழிலாளர்கள், விவசாயிகள் மாணவர்கள், அத்தனை வர்க்கத்தின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அமைந்திருப்பதற்கு தமிழக அரசுக்கு உளமார நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், அரசில் பணியாற்றுகிறவர்களுக்கு இதுவரையில் 31% ஆக இருந்ததை மாற்றி 50% ஆக உயர்த்தி பிற்பட்டவர்கள் நல்வாழ்வு துவங்க மனமுவந்து முன்வந்த புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்வது என் கடமை. பல்வேறு போராட்டங்கள் அவ்வப்போது இருந்த அரசில் நடைபெற்று அவ்வப்போது இருந்த அரசுகளாலே தகர்க்கப்பட்டு வந்தது உண்மை. அதைப் போல இந்த அரசும் தகர்த்திருக்கிறது என்பது மறுக்க முடியாது. ஆனால் கடந்த காலத்திலே நடந்த போராட்டங்களை இரும்புக் கரத்தால் அடக்குவோம் என்று ஆணவத்தாலும் ஆவேசமாகவும் பேசியவர்களை மாற்றி அமைத்து, இப்போது அவர்களிடத்தில் அனுதாபமாக அவர்களுக்குத் தரவேண்டிய வாய்ப்புகள் எல்லாம் தந்து, அந்தப் போராட்டங்களை எல்லாம் பிசுபிசுக்கச் செய்து அதற்குப் பிறகு





தான் இந்த அரசு அந்தப் போராட்டங்களை சமாளித்தது என்பதை மாற்றுக் கட்சி நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றும், வேலையின்றித் தவிக்கும் காவல்காரர்களுக்கு வேலை வழங்கும்படி மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இதற்கு முன்பாகப் போடப்பட்ட திட்டங்களுக்கும் இந்த அரசு போடுகின்ற திட்டங்களுக்கும் இருக்கிற மாறுபாட்டை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். போடப்படுகின்ற திட்டங்கள் மக்களுடைய நன்மைக்காகப் போடப்படுகின்ற திட்டங்களாக இருக்கிற காரணத்தால் செவ்வனே பணி புரியக் கூடிய நிலையில் இன்றையதினம் இருக்கிறது. திட்டங்கள், புள்ளவிவரங்களை நிரப்புவதற்காகவோ அல்லது அங்கங்கே அலங்காரத்திற்காகப் போடப்பட்ட திட்டங்களாகவோ இல்லாமல் இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நடந்து முடிந்த தேர்தல்கள் எதைக் காட்டுகின்றன என்று கேட்டார்கள். தேர்தல் முடிவிற்காக இந்த அரசு ராஜினாமாச் செய்ய வேண்டாமா என்றெல்லாம் கேட்டார்கள். திண்டுக்கல்லை சுட்டிக் காட்டினார்களே என்று கேட்டார்கள்; நான் ஒன்றை பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் அன்றைய தினம் திண்டுக்கல்லைப் பற்றி நாங்கள் சொல்கிறபோது மத்தியில் நிலையான ஆட்சி இருந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் நிலைமை அப்படி அல்ல. நடந்து முடிந்த தேர்தல், மத்தியில் எந்த அரசு இருக்கவேண்டும் என்ற கேள்வியை மக்கள் மத்தியிலே வைத்து அந்தக் கேள்விக்கு விடை அளிக்கும் வகையில் நடந்தது என்பதைஇந்த மன்றத்தின் தோழர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று வாக்குப் பதிவு நடந்தபோது சட்டம் ஒழுங்கு கெடாமல் அமைதியாக நடந்ததை நான் சுட்டிக் காட்டுகின்ற நேரத்தில் எங்கே கெடவில்லை என்று கேட்கிறார்கள். மதுரை சம்பவத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள்- மதுரையிலே நடந்த துப்பாக்கிச் சூட்டை பற்றி சுட்டிக் காட்டினார்கள். நான் சொல்வதெல்லாம் அந்தச் சம்பவம் புதிதாகத் தோன்றிய சம்பவங்கள் அல்ல. தேர்தலுக்கு முன்பாகவே ஆரம்பக் காலத்திலேயே நடந்ததாகும். எங்களுடைய தோழர்கள் சாதாரண பொதுக் கூட்டத்திற்காக போஸ்டர் ஒட்டுவதற்காக வடசென்னையில் சென்றபோது எங்கள் கட்சித் தொண்டன் தமிழ்வாணன் சாகடிக்கப்பட்டதை இந்த மாமன்றம் மறந்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் அப்போதே உருவாக்கப்பட்டன. அதற்குப் பிறகு, தேர்தலுக்குப் பிறகு கூட அவர்களுக்கு மனச்சாந்தி வரவில்லை. தேர்தலுக்கு முன்பே கொன்றோம். இப்போது விட்டு விடலாம் என்று நினைத்தார்களா என்றால் கிடையாது. எம். ஜி. ஆர். நகரில் நடந்த மிகப் பெரிய கொலையை இங்கேயுள்ள நண்பர்கள் அனுதாபத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். குப்பன் கொலை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெண் என்றால் பேய் கூட இரங்கும் என்பார்கள். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பெண் பேச்சாளர்கள் கடுமையான முறையில் அடிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சி நிர்வாகத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். கப்பல் கப்பல் என்று சொல்லி இந்த நாட்டு மக்களை நீங்கள் ஏமாற்றி விட முடியாது. உங்களுடைய மானம் கப்பல் ஏறப் போகிறது. ஒருகால் மானம் உங்களுக்கு தொடர்ந்து இருக்குமானால் நிச்சயமாக அது கப்பல் ஏற இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

18 வயது வந்தவர்களுக்கு பஞ்சாயத்துத் தேர்தலில் ஓட்டளிக்க உரிமை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னவுடனே உங்களுக்கு ஏன் அச்சம் வரவேண்டும். தேர்தலைத் தள்ளி வைப்பதற்காகத் தான் இதைக் கொண்டு வருகிறோம் என்று ஏன் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பற்றிக் குற்றச்சாட்டு சொன்னார்கள். இந்த ஆட்சி வந்த பிறகு மின்சாரம் முறையாக தேவையான பகுதிகளுக்கு இணைத்துத் தரப்படவில்லை என்று சொன்னார்கள். நான் மெத்தப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில், மின்சாரம் வழங்குவது ரெமியூனரேடிவ் பகுதிகளில் தான் இருந்தது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் ஆட்சி வந்த பிறகு லாப நஷ்டம் பார்க்காமல் யார் முன்னதாக அப்ளை செய்து இருக்கிறார்களோ அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதன் காரணமாக திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட கிட்டத்திட்ட 3 லட்சம் பம்ப்செட் மனுக்களுக்கு வரிசைக்கிரமமாக மின்சாரம் வழங்கும் நிலை மேற்கொள்ளப்பட்டது. 1972—ம் ஆண்டில் பெறப் பெற்ற விண்ணப்பங்களுக்கு இப்போது தான் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இத்தகைய ஒரு நல்ல செயலைச் செய்த இந்த அரசுக்கு புரட்சித் தலைவருக்கு, மதிப்பிற்குரிய கலைஞர் உட்பட அனைவரும் நன்றி சொல்ல வேண்டும். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட மனுக்களுக்கு இன்றைக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சிந்தித்துப்





பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் நீங்கள் எங்களுக்கு நன்றி சொல்லக் கட்மைப்பட்டு இருக்கிறீர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து சொன்னார், இந்த அரசு வந்த பிறகு மிகப் பெரிய குற்றங்கள் நடைபெற்று இருக்கின்றன. இந்திரா நகர் கொலை வழக்கு, பெசன்ட் நகர் கொலை வழக்கு என்று அடுக்கடுக்காகச் சொன்னார்கள். நாம் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தக் கொலை வழக்குகள் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள். இவைகளைக் குறித்து தொடர்ந்து எடுத்துச் சொல்லி, இந்த அரசில் இருப்பவர்கள் இந்த நாட்டிலே நிர்வாகம் சரியாகச் செய் த் தெரியாதவர்கள் என்ற ஒரு எண்ணத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள். ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். உங்களுடைய ஆட்சி காலத்தில் தான் விஷ ஊசி கொலை வழக்கு நடந்தது. மறந்து விட்டீர்களா? ராணி ஆறுமுகம் கொலையைக் கண்டுபிடித்தீர்களா? பூலாவாரி சுகுமாரன் அவர் தந்தை கொலை கண்டுபிடிக்கப்பட்டதா? அன்பில் கிராமத்தில் நடந்த கொலை கண்டுபிடிக்கப்பட்டதா? இன்று வரையில் அவற்றிற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் போய் விட்டது. அப்படியானால் உங்கள் ஆட்சி காலத்தில் நிர்வாகம் சரியல்ல என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட தவறுகள் தொடர்ந்து நடந்த காரணத்தால் நாம் ஒன்றை ஒப்புக் கொள்ள வேண்டும். இவைகள் எல்லாம் சாதாரணமாக நடக்கும் அன்றாட சம்பவங்கள். இல்லை என்று சொன்னால், அன்றைக்கு நடந்த நிர்வாகம் சரியல்ல என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். நீங்கள் அதைச் சொல்லத் தயாராக இல்லை. கலைஞர் ஆட்சி செவ்வனே நடைபெற்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இது எப்படிப்பட்ட முரண்பாடு என்பதைத் தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1—30]

ஆதாரம் இருக்கிறது என்று சொன்னால் தயவு செய்து அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திரு. ரகுமான்கான் அவர்கள் இந்த அரசுக்கு உதவி செய்திருந்தால் ஒரு கொலைக் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்.

இறுதியாக அரசு ஊழியர்களைப் பற்றிச் சொன்னார்கள். காவல் துறையினருக்கு நிம்மதி இல்லை; என். ஜி. ஓ. வினருக்கு நிம்மதி இல்லை என்று சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை

ஏற்றவுடன் 6 நாட்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போது அவர்கள் முன் வைத்த பிரச்சனை எந்த ஆட்சியில் தொடங்கப் பட்டது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

எதுவுமில்லை.

123040

D

Y211,31 N80

N80-32.4 F5

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

## IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathanilatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 40D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennur High Road, Truchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.